சட்டக்கதிர்

சட்ட மாத இதழ்

SATTAKADIR TAMIL MONTHLY

25 Silver Jubilee 1992-2016-17 வெள்ளி விழா ஆண்டு

''உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அறங்கூறாயங்கள் அறமே செய்யட்டும்''

அக்டோபர் 2026 | ஐப்பசித் திங்களிதழ் | விலை ரூ.75/-

Vol - 34 | October - 2026 | Issue - 12 | Price Rs.75/-

Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026

SATTAKADIR



மொரீசியஸ் நாட்டில் நடைபெற்ற 13ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டில் மொரீசியஸ் குடியரசு தலைவர் **மேதகு திரு.தரம்பீர் கோகுல், G.C.S.K.**, மாநாட்டு நிறைவுரையாற்றி விருதுகள் வழங்கினார். உடன் மொரீஷியஸ் மேனாள் துணைக் குடியரசுத் தலைவர் **டாக்டர் பரமசிவம் பிள்ளை வையாபுரி,** தமிழ்நாட்டின் அமைச்சர் **மாண்புமிகு ஆ.ராஜ்மோகன்,** மொரீசியஸ் துணை அமைச்சர் **டாக்டர் ராஜன் நரசிங்கன்,** விஜடி பல்கலைக்கழக வேந்தர் **டாக்டர் ஜி.விஸ்வநாதன்,**மாநாட்டுத் தலைவர் **டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத்** சிறப்பு விருந்தினர்கள் மற்றும் விருதாளர்கள். **தனிநபர் விருது: டாக்டர் சேகர் விஸ்வநாதன்** (இணை வேந்தர், விஜடி மொரீசியஸ், துணை தலைவர், விஜடி பல்கலைக்கழகம், இந்தியா), **திரு.சாந்தா நாயுடு** (தலைவர், சாந்தா நாயுடு குழுமம், தென்னாப்பிரிக்கா), **திரு.ஜென்சன் டெய்லமாய்** (மேலாண்மை இயக்குநர், டிஸ்ட்டிரி–ட்டி டிரேடிங், மொரீசியஸ்), **டாக்டர் டி.எம்.கே.ஆர்.கே. ராமகிருஷ்ணன் பிள்ளை** (தலைவர், பிள்ளை ஆர்.குழுமம், மாஹி, சீசெல்ஸ்), **திருமதி கிருஷ்ணா ராதா கிருஷ்ணன்** (நிறுவனர் மற்றும் தலைவர், தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் நல சங்கம், சென்னை) **திரு.ஜோயல் நாராயண்** (வணிகத் தலைவர், ரீயூனியன் தீவு, பிரான்ஸ்), **நிறுவன விருது: மொரீசியஸ் தமிழ்கோயில்கள் கூட்டிணைப்பு,** (திரு.தர்சன் கங்காடு, மொரீசியஸ்) **தமிழ் லீக், மொரீசியஸ்** (திரு.டி.வினைதீர்த்தான், மொரீசியஸ்) **இந்திய வணிக கவுன்சில், மொரீசியஸ்** (திரு.ஜெயசங்கர், மொரீசியஸ்) **தமிழ் வணிக போராளிகள், தென்னாப்பிரிக்கா** (தலைவர், திரு. கார்த்தி முத்துசாமி)

முக்கிய தீர்ப்புகள் - சட்ட விளக்கங்கள்

ஆசிரியர் : டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத், எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

www.sattakadir.com http://epaper.sattakadir.com


VIT®
Vellore Institute of Technology
(Deemed to be University under section 3 of UGC Act, 1956)
FIND YOUR FUTURE
Education opens up the mind and allows you to improve your life in so many ways.
At VIT, we believe it is crucial to provide students with an environment that positively influences their thoughts, stimulates their interest and encourages learning in different settings. Our programmes are structured in line with the changing times. Our faculty and infrastructure are geared to be future ready. And, our students learn and imbibe lifelong values that equip them to be futuristic.
VIT
VELLORE INSTITUTE OF TECHNOLOGY
www.vit.ac.in vituniversity VIT_univ vellore-institute-of-technology vellore_vit VITUniversityVellore

சட்டக்கதிர்

தமிழ்நாடு அரசு விருது பெற்ற இதழ்

அக்டோபர் 2026 http://epaper.sattakadir.com ஐப்பசித் திங்கள் இதழ் 2026

பொருளடக்கம்

1. தமிழ்நாட்டில் பல்கலைக் கழகங்கள்: மறுசீரமைப்புத் தேவை
– தலையங்கம் 5

2. குற்றவியல் வழக்கு நிலுவையில் இருப்பது ஓர் அரசு ஊழியரை பணியிலிருந்து நீக்குவதற்கான அடிப்படையாகாது
– இந்திய உச்சநீதிமன்றம் 8

3. கல்வியுரிமைச் சட்டம் கீழான பங்களிப்பை மத்திய அரசு செலுத்துலில் தேசியக் கல்வி கொள்கை இணைக்கப்பட தேவையில்லை.
– சென்னை உயர்நீதிமன்றம் 15

4. உரிமையியல் பல்வகை மேல்முறையீடு பொதுவர் மற்றும் சமரச சட்ட வழக்கு
– சென்னை உயர்நீதிமன்றம் 23

5. இறந்தவருக்கு எதிராக இயற்றப்படும் தீர்ப்பாணை இல்லாநிலையதாகக் கருதப்படும்
– சென்னை உயர்நீதிமன்றம் 31

6. திருமணம் செய்துகொள்ளும் உரிமை ஒரு மனித உரிமை: தரப்பினர் முன்னிலை யாகாததால் மேல்முறையீடு தள்ளுபடியானால், விவாகரத்திற்குப் பிந்தைய திருமணம் சட்டப்படிச் செல்லுபடியாகும்
– சென்னை உயர்நீதிமன்றம் – மதுரை அமர்வு 34

7. நிலம் தொடர்பாக வெவ்வேறு சட்டங்களின் செயற்பாடு
– சென்னை உயர்நீதிமன்றம் – மதுரை நீதியர் ஆயம் 40

8. 'அரசு வழக்கறிஞர்களுக்குத் தவறான தகவல்களை அளிக்கும் அரசு அதிகாரிகள் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைக்கு ஆளாவார்கள்'
– சென்னை உயர்நீதிமன்றம் – மதுரை அமர்வு 45

9. நடைமுறைச் சட்டத்தின் பொருந்தும் நிலை
– சென்னை உயர்நீதிமன்றம் – மதுரை நீதியர் ஆயம் 47

10. விற்பனை ஒப்பந்தத்தின் உண்மைத்தன்மை மற்றும் பணப் பரிமாற்றம் நிரூபிக்கப்படாததால் மேல்முறையீடு தள்ளுபடி
– சென்னை உயர்நீதிமன்றம் – மதுரை அமர்வு 53

11. 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம்.
– தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 60

12.13வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு 2026, மொரீசியஸ் மாநாட்டு செய்திக் குறிப்பு. 79

13. சென்னை உயர்நீதிமன்றத்தில் முதன்மை மொழி தமிழ், பேரவையில் தீர்மானம் நிறைவேற்றம் 82

சட்டக்கதிர்

ஆசிரியர் வெளியிடுபவர்:
முனைவர் வே.இரா.சே.சம்பத்

சிறப்பு ஆலோசனைக் குழு:
மூத்த வழக்கறிஞர்கள்:
திரு.ஆர்.காந்தி, திரு.ஆர்.விடுதலை
திரு.ஆர். சண்முகசுந்தரம்,
டாக்டர் எ. தியாகராஜன்

சட்ட/தமிழ் வல்லுநர்கள்:
டாக்டர் ஆர். மீனாட்சி சுந்தரம்
முனைவர் மு. முத்துவேலு

வழக்கறிஞர்கள்:
திரு. டி.வீரசேகரன், திரு.வி.இரவி
திரு. சரவணன் தனபால், திரு.எஸ். நாகநாதன்
திருமதி ஆதிலட்சுமி லோகமூர்த்தி
திருமதி டி. ஸ்ரீதேவி, திரு. எஸ். பாலமுருகன்

சென்னை உயர்நீதிமன்றத் தொடர்பாளர்:
திரு.ஏ.என்.புருஷோத்தம், வழக்கறிஞர்

டெல்லி உச்சநீதிமன்றத் தொடர்பாளர்:
திருமதி இந்திரா, வழக்கறிஞர்

மொழி பெயர்ப்பாளர் குழு:
திருமதி ஓ.பா.சாந்தி, மதுரை திரு.எஸ்.சம்பத்
திரு.து. முத்துசாமி, வழக்கறிஞர்
திரு.பா.ஞானசேகரன், திரு.மா.வெற்றிவேல்

அலுவலகப் பணிக்குழு:
முனைவர் ச. அரவிந்தன்
முனைவர் ச. அழகிரி
திரு. டி.கே.எஸ். மணிவண்ணன்
திரு. கதிரவன் வெங்கடேசன்

வடிவமைப்பு: வாசன் அச்சகம், சென்னை

சந்தா விவரம்	*உள்நாடு*	*வெளிநாடு*
தனி இதழ்	₹ 75	US $ 3
ஆண்டுச் சந்தா	₹ 900	US $ 25
வாழ்நாள் சந்தா	₹ 10,000	US $ 250
காப்பாளர் சந்தா	₹ 25,000	US $ 500

சந்தாத் தொகையைச் ''சட்டக்கதிர்'' என்ற பெயருக்குக் காசோலை **(Cheque),** வங்கி வரைவுக் கேட்போலை **(DD)** மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சந்தாத் தொகையைப் பணவிடை **(Money Order)** மூலமாக அனுப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

விளம்பரத்திற்கான விவரத்தையும் தொகையையும் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்க.

சட்டக்கதிர்
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600 028.
தொலைபேசி 91-44-24953915 / 24620198
தொலைநகல் 91-44-24959515
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com

சட்டக்கதிர் வெளியீடுகள்

சட்டக்கதிர் ஆண்டுத் தொகுப்பு (12 இதழ்களைக் கொண்ட தொகுப்பு)	ரூ.1200/-
நீதிமன்றங்களில் தமிழ்	ரூ.500/-
தமிழ்நாட்டில் நீதிமுறைகள்	ரூ.500/-
அறிஞர்களின் பார்வையில் அண்ணா	ரூ.500/-
தமிழர் தமிழ்நாடு சமூக பொருளாதார வளர்ச்சி	ரூ.500/-
சட்டமும் சமுதாயமும் (அச்சில்)	ரூ.150/-
சென்னையிலிருந்து உலகை நோக்கி	ரூ.200/-
உன்னுள் என்னைப் பார்	ரூ.150/-
உலகெங்கும் கலைஞர்	ரூ.300/-
"International Conference of Tsunami, Disaster Management and Coastal Development Report" (English)	Rs.500/-

''சட்டக்கதிர்'' என்ற பெயருக்குக் காசோலை **(Cheque),** வங்கி வரைவுக் கேட்போலை **(DD)** மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி நூல்களைப் பெற்றுக் கொள்ளவும்.

சட்டக்கதிர்
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-600 028.
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com



சட்டக்கதிர் QR CODE ஸ்கேன் செய்து சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தலாம். சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தி தடங்கலின்றி இதழ்கள் கிடைக்கப் பெறுவீர்!

சட்டக்கதிர்

"முன்னேற்றமே எங்கள் பேச்சு – உயர்
முத்தமிழே எங்கள் மூச்சு"

ஐப்பசித் திங்கள் இதழ்

சட்டம் – 34 அக்டோபர் 2026 கதிர் – 12

தமிழ்நாட்டில் பல்கலைக் கழகங்கள்: மறுசீரமைப்புத் தேவை

சென்னைப் பல்கலைக்கழகம் ஒன்றே தமிழ்நாடு முழுவதற்குமாக உயர்கல்விச் சேவையினை ஒரு காலகட்டம் வரை செய்து வந்தது. பிறகு மதுரை பல்கலைக்கழகம், திருச்சிப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் பல்கலைக்கழகம் ஆகியவை உருவாயின. அதனைத் தொடர்ந்து திருநெல்வேலி பல்கலைக்கழகம், காரைக்குடி பல்கலைக்கழகம், சேலம் பல்கலைக்கழகம், வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் போன்றவை உருவாயின. இதுமட்டுமல்லாது தொழில்நுட்பக் கல்விக்கென அண்ணா பல்கலைக்கழகமும் உருவானது. மருத்துவக் கல்விக்கென டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகம் உருவானது. விவசாயக் கல்விக்கென தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் கோவையில் உருவானது. கால்நடை மருத்துவ கல்விக்கென தனிப் பல்கலைக்கழகம் சென்னையில் உருவானது. தமிழ்மொழி இலக்கியம் மற்றும் தமிழ்வழிக் கல்விக்கென தஞ்சைத் தமிழ் பல்கலைக் கழகம் உருவானது. சட்டத் துறைக்கென டாக்டர் அம்பேத்கார் சட்டப்பல்கலைக் கழகம் உருவானது. இவை தவிர அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கடந்த ९० ஆண்டு காலமாக சிதம்பரத்தில் இயங்கி வருகிறது.

இந்தப் பல்கலைக்கழகங்கள் எவ்வாறு இயங்குகின்றன. இவற்றின் எல்லைகள் என்ன. இவை என்னென்ன பாடங்களைக் கற்பித்தது உயர்கல்வித் துறையில் பட்டங்கள் வழங்குகின்றன. இவையெல்லாம் தரமுடன் இருக்கின்றனவா என்பன போன்ற பல கேள்விகள் இன்றைக்கு எழுந்துள்ளன.

சென்னைப் பல்கலைக்கழகம் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மருத்துவம், தொழில்நுட்பம், சட்டம், கால்நடை, விவசாயம் ஆகிய துறைகள் நீங்கலாக மற்ற அனைத்திற்கும் பட்டம் வழங்குகிறது. இதேபோல திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களை எல்லையாகக் கொண்டுள்ளது. பெரியார் பல்கலைக்கழகம், சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. கோவை பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி பணியாற்றி வருகின்றது. திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கரூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தேனி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. காரைக்குடி பல்கலைக்கழகம் சிவகங்கை மாவட்டத்தையும், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி இயங்கி வருகின்றன.

அண்ணா பல்கலைக்கழகம் தமிழ்நாடு முழுவதுமான பொறியியல் கல்லூரிகளை ஒருங்கிணைத்து பணியாற்றி வருகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தமிழ்நாடு முழுவதுமான வேளாண்மைக் கல்லூரிகளை ஒருங்கிணைத்துப் பணியாற்றி வருகிறது. தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் தமிழ்நாடு முழுவதுமான மருத்துவக் கல்லூரிகளை ஒருங்கிணைத்து பணியாற்றி வருகிறது. தமிழ்நாடு அம்பேத்கார் சட்டப் பல்கலைக்கழகம் தமிழ்நாடு முழுவதுமான சட்டக் கல்லூரிகளை ஒருங்கிணைத்து பணியாற்றி வருகிறது. தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் தமிழ்நாடு முழுவதுமுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரிகளை உள்ளடக்கி பணியாற்றி வருகிறது. இது தவிர தஞ்சாவூரில் உள்ள தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழ் வளர்ச்சியை முன்வைத்து பணியாற்றி வருகிறது.

இந்த அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையேயும் உயர்கல்வி குறித்து விரிவான கலந்துரையாடல் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தப் பல்கலைக்கழகங்களுடைய நிருவாகம் மற்றும் துணைவேந்தர் தேர்வு, பேராசிரியர் நியமணம், மாணவர் சேர்க்கை, பல்கலைக்கழக எல்லை. அஞ்சல் வழிக் கல்வி போன்றவை குறித்து பல முற்போக்குச் சிந்தனைகள் இப்போது மாணவர் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் நிலவுகின்றன.

எடுத்துக்காட்டாக, அண்ணா பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது, மூன்று கல்லூரிகளை உள்ளடக்கி அது தொடங்கப்பட்டது. இன்றைக்கு 250 பொறியியல் கல்லூரிகளை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைத்த காரணத்தினால் நிர்வாகச் சீர்கேடு, நேரடி மேற்பார்வையின்மை, பல்கலைக்கழகத்துடன் மாணவர்கள் தொடர்பு அற்ற சூழ்நிலை, பல்கலைக்கழக வசதிகளை மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் பயன்படுத்திக் கொள்ள முடியாத சூழ்நிலை முதலியவை உள்ளன. ஒரு காலத்தில் இந்தியாவிலேயே முதல் நிலையில் இருந்த அண்ணா பல்கலைக்கழகம் இன்று பின்தங்கி காணப்படுகிறது. சமீபத்தில் நான் London School of Economic என்ற கல்வி நிறுவனத்தில் ஒரு குறுகிய கால பயிற்சி முகாமில் கலந்து கொள்ள விண்ணப்பித்திருந்தேன். அவர்கள் குறைந்தபட்சமாக 12, அதிகபட்சமாக 20 நபர்களை சேர்ப்பது என்று முடிவெடுத்துவிட்டார்கள். இப்படி ஒரு வகுப்பில் சேர்ப்பதிலிருந்து நிருவாகம் வரையில் இப்படித்தான் கல்வித்துறையில் இருக்க வேண்டும் என்பதை உலகம் முழுவதும் வரையறுத்திக் கொண்டுதான் பணியாற்றுகிறார்கள்.

நாகர்கோவிலிலுள்ள பொறியியல் கல்லூரியில் படிக்கின்ற மாணவர் ஒரு சான்றிதழ் பெறவும், பல்கலைக்கழக நூலகத்தைப் பயன்படுத்தவும், பல்கலைக்கழக கருத்தரங்களில் கலந்து கொள்ளவும், சென்னைக்கு வரவேண்டியுள்ளது. இந்தச் சங்கடங்களை அந்த மாணவன் சந்திக்க வேண்டுமா? அருகாமையிலேயே திருநெல்வேலிப் பல்கலைக்கழகம் இருக்கின்றவோது அந்த மாணவன் எதற்கு சென்னை வரவேண்டும். இதே போல்தான் தஞ்சாவூரில் உள்ள மருத்துவப் பல்கலைக்கழக மாணவர்கள் பக்கத்தில் உள்ள திருச்சி பல்கலைக்கழகத்திற்கு செல்ல முடியாது. சென்னையில் உள்ள தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்திற்குதான் வரவேண்டும்.

பல மாற்றங்கள் நடந்து வரும் 21ஆம் நூற்றாண்டில் இப்படி ஒரு நிலை இருக்கலாமா? தமிழகப் பல்கலைக்கழகங்களில் மறு சீரமைப்பு செய்ய வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம்.

சென்னை மாநகரத்திலுள்ள கலைக்கல்லூரிகள், சட்டக்கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து சென்னைப் பல்கலைக்கழக பொறுப்பில் விடவேண்டும். திருவள்ளூர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள கல்லூரிகளை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைத்துவிட வேண்டும்.

விழுப்புரம், கடலூர் மாவட்டங்களிலுள்ள அனைத்துக் கல்லூரிகளையும் டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்துன் இணைத்துவிட வேண்டும். இப்போது உள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழக கட்டிடத்தை உயர்நிலை ஆராய்ச்சி மருத்துவமனையாக மாற்றிவிட வேண்டும். (டெல்லியில் உள்ள SIMS மருத்துவமனையைப்போல), திருச்சி, சேலம், கோவை, மதுரை, திருநெல்வேலி போன்ற அந்தந்தப் பல்கலைக்கழகங்களுடன் இணைத்துவிட வேண்டும். அப்போதுதான் சுலபமாக மாணவர்கள் பலன் பெற முடியும். சமச்சீர்நிலை என்பதற்கும் ஒரு பொருள் இருக்கும். தமிழ்நாட்டில் உயர்கல்வியில் குழப்பம் இல்லாமல் வெற்றி நடைபோட மேற்கண்ட யோசனைகள் பெரிய அளவில் உதவும்.

இதேபோல அஞ்சல் வழிக் கல்வித்துறையிலும் அந்தந்தப் பல்கலைக்கழக எல்லைக்குள் மட்டுமே இயங்கவும், வகுப்புகள் நடத்தவும், தேர்வுகள் அனுமதிக்கப்படவேண்டும். எடுத்துக்காட்டிற்கு சென்னைப் பல்கலைக்கழகம் மதுரையிலோ, மதுரை பல்கலைக்கழகம் திருச்சியிலோ, திருச்சி பல்கலைக்கழகம் சேலத்திலோ எல்லைக்கு அப்பால் கல்வித்துறையில் இலாப நோக்குடன் இயங்கக்கூடாது. இதனால் அந்தந்தப் பகுதி மாணவர்கள் அந்தந்தப் பகுதியில் உயர்கல்வி பயிலவும், பல்கலைக்கழகத்தை பயன்படுத்தவும் பெரிதும் உதவியாக இருக்கும். வகுப்புகள் அந்தந்த பகுதியிலேயே அமைய வேண்டும்.

துணைவேந்தர் தேர்வில் ஓர் தெளிவான வழிகாட்டுதல் நெறியினை பின்பற்ற வேண்டும். ஓய்வு பெறும் வயதில் உள்ளவர்தான் துணைவேந்தராக நியமிக்கப்பட வேண்டும். அதேபோல பதிவாளர் பணிக்கும் ஓய்வு பெறும் வயதில் உள்ளவர்தான் நியமிக்கப்பட வேண்டும். பேராசிரியர் தேர்வு உடனுக்குடன் நடக்க வேண்டும். நிர்வாக அலுவலர்கள் பதவிக்கும் உடனுக்குடன் தேர்வு நடக்கவேண்டும். மாணவர் நலத்துறையை கவனிக்க மாணவர் நல அதிகாரி (Student Welfare Officer) ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் மற்றும் ஒவ்வொரு கல்லூரிகளிலும் நியமித்திட வேண்டும். மாணவர் பேரவைத் தேர்தல் அனைத்துப் பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளிலும் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 30-க்குள் நடத்தப்பட வேண்டும்.

நிகர்நிலை பல்கலைகழகங்கள் அனைத்திற்கும் கல்விச் செயலாளர், மாவட்ட நீதிபதி போன்றவர்களே வேந்தராக நியமிக்கப்பட வேண்டும். வேந்தர் நியமனம் ஆளுநரின் ஒப்புதலுடன் இருக்க வேண்டும். இணைவேந்தர், கல்வி நிறுவன நிர்வாகியாக இருக்கலாம். துணைவேந்தர் கல்வியாளராக இருக்கலாம். நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் கல்விச் செயலாளர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், நிர்வாக உறுப்பினராக இருக்க வேண்டும். கல்வி பொதுப்பட்டியலில் உள்ளதால் மாநில அரசு இது குறித்துச் சட்டம் இயற்றலாம். இதுபோன்ற பல பயனுள்ள மாற்றங்களை மிக விரைவில் கொண்டுவர வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு பல்கலைக்கழக மேம்பாட்டிற்கும் 10 கோடி சிறப்பு நிதியாக வழங்கிட வேண்டும்.

உலகப் பல்கலைக்கழக சேவை நிலையம், வெங்கடேஸ்வரா மாணவர் விடுதி, விக்டோரியா மாணவர் விடுதி போன்ற தமிழ்நாடு முழுவதும் உள்ள மாணவர் அமைப்புகள் ஒழுங்காக நடைபெறவில்லை. நிர்வாகம் செம்மையாக செயல்படவில்லை. இதிலும் அரசு உடனே கவனம் செலுத்த வேண்டும். இந்த மாற்றங்கள் எல்லாம் வரும் நன்னாளையே மாணவச் செல்வங்கள் ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கிறார்கள்.

– ஆசிரியர்

குற்றவியல் வழக்கு நிலுவையில் இருப்பது ஓர் அரசு ஊழியரை பணியிலிருந்து நீக்குவதற்கான அடிப்படையாகாது

இந்திய உச்ச நீதிமன்றம்
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி தீபங்கர் தத்தா
உரிமையியல் மேல்முறையீட்டு எண் 9749/2016
ஆகஸ்ட் 04, 2026.
2026 Livelaw(SC)845

எஸ்.பி.ஓ/காவலர் ஐ.ஆர்.பி சத்பால் சிங் ...மேல்முறையீட்டாளர்

–எதிர்–

பஞ்சாப் மாநிலம் மற்றும் பலர் ...பிரதிவாதிகள்

தீர்ப்பு

நீதிபதி தீபங்கர் தத்தா

1. முதல் மேல்முறையீட்டில் அசல் தீர்ப்பாணை ரத்து செய்யப்பட்டு, அறிவிக்கை மற்றும் கட்டாய உறுத்துக்கட்டளைக்கான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்தும், அந்த முடிவு சண்டிகரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றத்தால் இரண்டாவது மேல்முறையீட்டில் உறுதி செய்யப்பட்டதை எதிர்த்தும் இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. செப்டம்பர் 23, 2016 அன்று வழங்கப் பட்ட சிறப்பு அனுமதி மூலம் தாக்கல் செய்யப் பட்டுள்ள இந்த உரிமையியல் மேல்முறையீடு, விசாரணை நீதிமன்றத்தில் வாதியாக வழக்கை (C.S.No.189/2008) வெற்றிகரமாக தொடர்ந்த மேல்முறையீட்டாளரால் கொண்டு வரப் பட்டுள்ளது. அவர், இந்திய ரிசர்வ் பட்டாலி யனில் காவலராக தன்னை சேர அனுமதிக்காத 3–வது பிரதிவாதியின் செயலும், பட்டாலா மாவட்டத்தில் சிறப்பு காவல் அதிகாரி யாக தன்னைச் சேர அனுமதிக்காத 2–வது பிரதிவாதி யின் செயலும் சட்டவிரோதமானவை, செல்லாதவை மற்றும் இரத்து செய்யப்பட வேண்டியவை என்றும்; சூழலுக்கேற்ப தான் காவலராகவோ அல்லது சிறப்புக் காவல் அதிகாரியாகவோ சேர தகுதியுடையவர் என்றும் அறிவிக்கக் கோரி வழக்கு தொடர்ந்தார். மேலும், பணியிலிருந்து நீக்கப்பட்ட தேதியிலிருந்து மீண்டும் பணியில் சேரும் வரையிலான இடைப்பட்ட காலத்தை பணிபுரிந்த காலமாகக் கருதி, அனைத்து சேவைப் பலன்களுடன் தன்னைப் பணியில் சேர அனுமதிக்க பிரதிவாதிகளுக்கு ஆணையிடக் கோரும் கட்டாய உறுத்துக்கட்டளை நிவாரணத்தையும் அவர் கோரியிருந்தார். விசாரணை நீதிமன்றம் டிசம்பர் 2, 2011 அன்று இவ்வழக்கில் தீர்ப்பளித்தது. மூன்று மாதங்களுக்குள் மேல்முறையீட்டாள ருக்கு தொடர்ச்சியான பணி மற்றும் பிற அனைத்து தொடர்ச்சியான பலன்களுடன் மீண்டும் பணி வழங்க 1 மற்றும் 2–வது பிரதி வாதிகளுக்கு உத்தரவிடப்பட்டது; இருப்பினும், அவர் பணியிலிருந்து நீக்கப்பட்ட தேதியிலிருந்து மீண்டும் பணியில் சேரும் வரையிலான காலத் திற்கு ஊதியம் பெற மேல்முறையீட்டாளருக்கு உரிமை இல்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

3. இந்த வழக்கின் பிரதிவாதிகள், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து குர்தாஸ்பூர் மாவட்ட நீதிபதியிடம் மேல்முறையீடு (C.A. No. 20 of 2012) செய்தனர். அவர்கள் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வெற்றி பெற்றனர்; மேல்முறை யீட்டு நீதிமன்றம் மே 21, 2014 தேதியிட்ட தனது தீர்ப்பு மற்றும் ஆணை மூலம், சவாலுக்குள்ளான விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்து மேல்முறையீட்டாளரின் வழக்கைத் தள்ளுபடி செய்தது.

4. அசல் தீர்ப்பால் முற்றிலும் அதிருப்தி யடைந்த மேல்முறையீட்டாளர், 1908 ஆம் ஆண்டின் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின்

100-வது பிரிவின் கீழ் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு (R.S.A. No. 4771 of 2014 (O&M)) செய்தார். உயர்நீதிமன்றம் மே 12, 2016 தேதியிட்ட தனது தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் மூலம் அந்த மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்தது. அந்தத் தீர்ப்பே இந்த மேல்முறை யீட்டில் பிரச்சனைக்குரியதாக எதிர்கொள்ளப் பட்டுள்ளது.

5. முடிவெடுப்பதற்காக இங்கு எழும் சுருக்க மான கேள்வி என்னவென்றால், விசாரணை நீதிமன்றத்தால் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப் பட்ட நிவாரணத்தை மறுக்கும் வகையில் அசல் தீர்ப்பாணை ரத்து செய்யப்பட்டதில், நீதிமன்றம் தலையிட ஏதேனும் பிழை உள்ளதா என்பதே யாகும்.

6. இந்தக் கேள்விக்கு பதிலளிக்க, மேல் முறையீட்டாளரின் பணி நீக்கத்திற்குக் காரண மான உண்மைகளை நாம் சுருக்கமாகக் கவனிக்க வேண்டும். பணி நீக்க ஆணை ஆவணங்களில் இல்லை. மேலும் மேல்முறை யீட்டாளர் பணிநீக்கம் செய்யப்பட்டாரா அல்லது பணியிலிருந்து அகற்றப்பட்டாரா என்பது அவ்வளவு தெளிவாக இல்லை. இருப்பினும், பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதன் மூலமே இந்த பணிநீக்கம் கொண்டுவரப்பட்டது என்பதை ஆவணங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

7. அக்டோபர் 17, 1991 அன்று படாலா காவல் மாவட்டத்தில் சிறப்புக் காவல் அதிகாரி யாக தான் நியமிக்கப்பட்டதாக மேல்முறை யீட்டாளர் தனது வழக்கில் வாதிட்டார். தனது அலுவல் முறையான கடமையைத் திறமை யாகவும் எவ்வித குறையுமின்றியும் செய்து வரும்போது, ஆகஸ்ட் 27, 2002 தேதியிட்ட கடிதத்தின் மூலம் பாட்டியாலாவில் உள்ள முதல் ஐ.ஆர்.பி-யில் காவலராக நியமிக்கப்படுவதற்காக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆகஸ்ட் 30, 2002 அன்று பாட்டியாலா ஐ.ஆர்.பி. கமாண்டன்ட் அலுவலகத்தில் பணியில் சேரச் சென்ற போதிலும், அவர் மீது ஒரு குற்றவியல் வழக்கு நிலுவையில் இருப்பதைக் காரணமாகக் கூறி அவரை பணியில் சேர அனுமதிக்க மறுத்து விட்டனர். தற்செயலாக, அந்த நேரத்தில், பதான்கோட் சதர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட 1860 ஆம் ஆண்டின் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 324/326/34 ஆகிய பிரிவுகளின் கீழான ஜூலை 20, 2001 தேதி யிட்ட முதல் தகவல் அறிக்கை எண் 159-ல் மேல்முறையீட்டாளர் ஒரு குற்றவாளியாக இருந்தார். அவர் நடுவரால் விசாரிக்கப்பட்டார். விசாரணையின் முடிவில், ஏப்ரல் 21, 2006 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவின் மூலம், ஐ.பி.சி பிரிவு 324 மற்றும் 326-இன் கீழ் மேல்முறையீட்டாளர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு, முறையே 2 (இரண்டு) மற்றும் 3 (மூன்று) ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். மேல்முறையீட்டில், மேல் முறையீட்டு நீதிமன்றம் ஆகஸ்ட் 27, 2007 தேதியிட்ட தீர்ப்பின் மூலம் ஐ.பி.சி பிரிவு 324-இன் கீழான தண்டனையை உறுதி செய்தது, ஆனால் பிரிவு 326-இன் படியென தண்டனையை இரத்து செய்தது. தண்டனை மீதான ஆணையின் தொடர்புடைய பகுதிகளைக் கீழே அப்படியே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என நாங்கள் கருதுகிறோம்:

''ம குற்றம் சாட்டப்பட்டவர் முதன்முறையாக குற்றம் செய்தவர் ஆவார், மேலும் 2001 முதல் எந்தவொரு குற்றச் செயலிலும் அவர் மீண்டும் ஈடுபடவில்லை; இது குற்றம் சாட்டப் பட்டவரை நன்னடத்தை அடிப்படையில் (proba-tion) விடுவிப்பதற்குக் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலையாகும். எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்ட தேதி 24.08.2001 என்பதற்கும், ஆறு ஆண்டுகளுக்கும் மேல் கடந்துவிட்ட இக்காலத்தில் குற்றம் சாட்டப்பட்ட சத்பால் வழக்கின் விசாரணையின் வேதனையை அனுபவித்து வருகிறார் என்பதற்கும் இது சான்றாக உள்ளது. ...எனவே, ரூ.10,000/- பிணைப்பத்திரம் (probation bond) வழங்குவதன் அடிப்படையில் இரண்டு ஆண்டுகளுக்கு நன்னடத்தையின்பேரில் குற்றம் சாட்டப்பட்ட வரை விடுவிக்க ஆணையிடப்படுகிறது. வழக்குச் செலவாக ரூ.3,000/- மதிப்பிடப்படுகிறது, அதில் அவர் ஏற்கனவே செலுத்திய ரூ.500/- அபராதம் கழிக்கப்பட்டு, மீதமுள்ள ரூ.2,500/ -ஐ அவர் இப்போது செலுத்த வேண்டும் என்று

அறிவுறுத்தப்படுகிறது. ...குற்றவாளி என நிரூபிக்கப்பட்டதால் குற்றம் சாட்டப்பட்டவர் சமூகத்தில் தனது நன்மதிப்பை இழந்துவிட்டார், மேலும் இந்தத் தண்டனை அவரது பணிக் காலத்தைப் பாதிக்காது என்ற கூடுதல் வழிகாட்டுதலுடன் நன்னடத்தையின் அடிப்படை யில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்த நீதிமன்றத்தின் கருத்து, ஜஸ்வந்த் சிங் எதிர் பஞ்சாப் மாநிலம் [1989 (2) RCR 162] வழக்கில் நமது மாண்புமிகு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆணை தீர்ப்பின் ஒரு பகுதியாக அமையும், இப்போது கோப்பு ஆவண அறைக்கு (record & room) அனுப்பி வைக்கப்படும்.''

8. ஜனவரி 14, 2003 அன்று, மேல்முறை யீட்டாளர் மீது நிலுவையில் உள்ள குற்றவியல் நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு அவர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். இது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் உண்மையாகும்.

9. மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் திரு. குப்தா வாதிடுகை யில், குற்றவியல் வழக்கு நிலுவையில் இருந்த ஒரு காலக்கட்டத்தில் அவரைப் பணியிலிருந்து விடுவித்ததில் பிரதிவாதி சட்டவிரோதமாகச் செயல் பட்டுள்ளார் என்றார். மேல்முறையீட்டாளர் மீது எந்தவொரு குற்றவாளி என்ற தீர்ப்பும் பதிவு செய்யப்படாத நிலையில், ஒரு குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்பது மட்டுமே அவரது பணியை முடிவுக்குக் கொண்டுவர பிரதிவாதிகளுக்கு அதிகாரமளிக்காது.

10. அடுத்து, மேல்முறையீட்டாளரை நன்னடத்தையின் பேரில் விடுவிக்கும் போது, ஐ.பி.சி பிரிவு 324-இன் கீழான அவரது தண்டனை அவரது பணிக்காலத்தை பாதிக்காது என்பதைக் கூடுதல் அமர்வு நீதிபதி தெளிவு படுத்தியுள்ளார் என்று திரு.குப்தா வாதிட்டார். பிரதிவாதிகள் கூடுதல் அமர்வு நீதிபதியின் உத்தரவைச் சவாலுக்கு உட்படுத்தவில்லை, எனவே அது இறுதித்தன்மையை அடைந்தது. இந்த விஷயத்தின் கண்ணோட்டத்தில், குறிப்பாக 1958ஆம் ஆண்டின் குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டத்தின் பிரிவு 12-ஐக் கருத்தில் கொண்டு, பிரதிவாதிகள் மேல்முறையீட்டாளரை மீண்டும் பணியில் சேர்ப்பார்கள் என்று நியாயமாக எதிர்பார்க்கப் பட்டது; அப்படி செய்யாததால், பிரதிவாதிகள் தன்னிச்சையான முறையில் செயல்பட்டதாக கருதப்பட வேண்டும்.

11. பின்னர், பிரதிவாதிகள் இயற்கை நீதித் தத்துவங்களை அப்பட்டமாக மீறி செயல்பட்ட தாக திரு.குப்தா வாதிட்டார். பணியிலிருந்து விடுவிப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படுவ தற்கு முன்பு மேல்முறையீட்டாளருக்கு எந்த முன்னறிவிப்பும் வழங்கப்படவில்லை, அவரது தரப்பு நியாயமும் கேட்கப்படவில்லை; மேலும் இது நிலைமையை சரிசெய்ய மேல்முறை யீட்டாளருக்கு ஆதரவாக இந்த நீதிமன்றத்தின் தலையீட்டை நியாயப்படுத்தும் ஒரு சரியான அடிப்படையாகும்.

12. ஜனவரி 14, 2003 தேதியிட்ட மேல் முறையீட்டாளரை பணியிலிருந்து விடுவித்த உத்தரவு கேள்விக்கு உள்ளாக்கப்படவில்லை என்பதையும், இவ்வளவு நீண்ட காலத்திற்குப் பிறகு அவரை மீண்டும் பணியில் சேர்ப்பது பொருத்தமாக இருக்காது என்பதையும் ஒப்புக் கொண்ட அதே வேளையில், பிரதிவாதிகளால் செய்யப்பட்ட தவறான பணிநீக்கத்திற்காக மேல்முறையீட்டாளருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று திரு.குப்தா நீதிமன்றத்தை மன்றாடிக் கேட்டுக் கொண்டார்.

13. இதற்கு மாறாக, பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கரண் சர்மா, இந்த மேல்முறையீட்டில் எந்தவிதமான முகாந்திரமும்/தகுதியும் இல்லை என்று வாதிட்டார். உயர்நீதிமன்றத்தின் பரிசீலனைக் காக வைக்கப்பட்ட இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டி, இந்த மேல்முறையீடு உடனடியாக தள்ளுபடி செய்யப்படுவதற்குத் தகுதியானது என்று அவர் வலியுறுத்தினார்.

14. இரு தரப்புக் கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களையும் நாங்கள் கேட்ட றிந்தோம்; மேலும் ஆவணங்களில் உள்ள ஆதாரங்களை யும், நீதிமன்றத்தில் மேற்கோள் காட்டப்பட்ட தீர்ப்புகளையும் கவனமாகப் பரிசீலித்தோம்.

15. திரு.குப்தாவின் வாதத்தின் முக்கிய அம்சம், ஐ.பி.சி. பிரிவு 324-இன் கீழான தண்டனை மேல்முறையீட்டாளரின் பணிக் காலத்தைப் பாதிக்காது என்று குர்தாஸ்பூர் கூடுதல் அமர்வு நீதிபதி தெரிவித்த கருத்தை அடிப்படை யாகக் கொண்டுள்ளது. அவரது கூற்றுப்படி, இந்த முடிவு இறுதித்தன்மையை அடைந்து விட்டதால், தண்டனை உட்பட வேறு எதுவும் மேல்முறையீட்டாளரை மீண்டும் பணியில் சேர்ப்பதிலிருந்து பிரதிவாதிகளைத் தடுக்க முடியாது.

15. அமர்வு நீதிபதி, ஜஸ்வந்த் சிங் -எதிர்- பஞ்சாப் மாநிலம் [(1989) 2 RCR (Cri) 162 = 1989 SCC OnLine P&H 290] வழக்கில் உயர் நீதிமன்றத்தின் தனி நீதிபதி வழங்கிய தீர்ப்பிலிருந்து ஈர்க்கப் பட்டதாகத் தெரிகிறது. பிரதிவாதிகளால் சவாலுக்கு உட்படுத்தப்படாவிட்டாலும், இத்தகைய கருத்து, இந்த நீதிமன்றத்தின் தொடர்ச்சியான பல தீர்ப்புகளுக்கு முரணாக அமைந்துள்ளது என்பதைப் பதிவு செய்ய நாங்கள் தயங்கவில்லை; ஒருவேளை அந்தத் தீர்ப்புகள் அமர்வு நீதிபதி யின் முன் சுட்டிக்காட்டப்படாமல் இருந்தி ருக்கலாம்.

16. சதர்ன் ரயில்வே -எதிர்- டி.ஆர். செல்லப்பன் [(1976) 3 SCC 190], த்ரிகா ராம் -எதிர்- வி.கே.சேத் [1987 Suppl. SCC 39], இந்திய ஒன்றியம் -எதிர்- பக்ஷி ராம் [(1990) 2 SCC 426], கரம் சிங் -எதிர்- பஞ்சாப் மாநிலம் [(1996) 7 SCC 748] மற்றும் டி.ஐ.ஜி ஆஃப் போலீஸ் -எதிர்- பி.ஆர்.கே. மோகன் [(1997) 11 SCC 571] ஆகியவை கூடுதல் அமர்வு நீதிபதியின் தீர்ப்பிற்கு முந்தைய அதிகாரப்பூர்வ தீர்ப்புகளாகும். 1958 சட்டத்தின் கீழ் ஒரு குற்றவாளியை நன்னடத்தையின் பேரில் விடுவிப்பது மட்டுமே அவரது குற்றத்தை துடைத்து விடாது என்றும், 1958 சட்டத்தின் கீழ் சலுகை வழங்கப்பட்டாலும், குற்றவாளி என நிரூபிக்கப்பட்டதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஒரு நபரைப் பணியிலிருந்து நீக்க முடியும் என்ற சட்டக் கோட்பாட்டை இந்தத் தீர்ப்புகள் தொடர்ந்து நிலைநிறுத்துகின்றன. இந்த அனைத்துத் தீர்ப்புகளும், சங்கர் தாஸ் -எதிர்- இந்திய ஒன்றியம் [(1985) 2 SCC 358], உத்தரப் பிரதேச மாநிலம் -எதிர்- ரஞ்சித் சிங் [(1999) 2 SCC 617] மற்றும் பஞ்சாப் குடிநீர் வழங்கல் கழிவுநீர் வாரியம் -எதிர்- ராம் சஜீவன் [(2007) 9 SCC 86] ஆகிய வழக்குகளின் தீர்ப்புகளுடன் சேர்த்து, சுஷில் குமார் சிங்கால் எதிர் பஞ்சாப் நேஷனல் வங்கி [(2010) 8 SCC 573] என்ற பிற்காலத் தீர்ப்பில் கவனத்தில் கொள்ளப் பட்டன. அதில் மாண்புமிகு நீதிபதி பி.எஸ். சவுகான் அவர்கள் மூலம் இந்த நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது:

''18. மேற்கூறியவற்றின் அடிப்படையில், இந்தப் பிரச்சினையில் உள்ள சட்டத்தைப் பின் வருமாறு சுருக்கமாகக் கூறலாம்: ஒரு ஊழியர் குற்றவாளி என நிரூபிக்கப்படுவது, ஒழுங்குமுறை அதிகாரி அவர் மீது ஒழுங்கு நடவடிக்கையைத் தொடங்கவோ அல்லது அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அவரை பணிநீக்கம் செய்ய/பணி யிலிருந்து அகற்ற தகுந்த நடவடிக்கை களை எடுக்கவோ அனுமதிக்கிறது. 1958 சட்டத்தின் 12-வது பிரிவில் உள்ள 'தகுதியின்மை' என்ற சொல் மற்ற சட்டங்களில் வழங்கப்பட்டுள்ள தகுதியின்மையைக் குறிக்கிறது என்று மேற் கண்ட வழக்குகளில் இந்த நீதிமன்றம் விளக்கி யுள்ளது. மேலும், 1958 சட்டத்தின்படி தனக்கு நன்னடத்தைச் சலுகை வழங்கப்பட்டுள்ளது என்ற காரணத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, ஒரு ஊழியர் தொடர்ந்து பணியில் இருக்க உரிமை கோர முடியாது. (எழுத்துரு எங்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது)''

18. மேற்கோள் காட்டப்பட்ட முந்தைய தீர்ப்பு களுக்கு நாங்கள் மதிப்பளிக்கிறோம். ஜஸ்வந்த் சிங் (மேலே கூறப்பட்டது) வழக்கின் தீர்ப்பு, அதற்கு முந்தைய காலத்தில் வழங்கப்பட்ட டி.ஆர்.செல்லப்பன் (மேலே கூறப்பட்டது) மற்றும் த்ரிகா ராம் (மேலே கூறப்பட்டது) ஆகிய வழக்குகளின் தீர்ப்புகளை கவனத்தில் கொள்ள வில்லை. எனவே, ஜஸ்வந்த் சிங் (மேலே கூறப் பட்டது) வழக்கு சரியான சட்டத்தை வகுக்க வில்லை என்று தீர்மானிக்கப்பட வேண்டும். இந்திய ஒன்றியம் -எதிர்- துளசிராம் படேல் [(1985) 3 SCC 398] வழக்கு, டி.ஆர். செல்லப்பன் (மேலே கூறப்பட்டது) தீர்ப்பை ஒருபகுதி ரத்து

செய்திருந்தாலும், இந்த மேல்முறையீட்டு முடிவுக்குத் தொடர்புடைய கருத்துகள் எதுவும் அதில் மாற்றப்படவில்லை என்பதை நாங்கள் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

19. அது எப்படியாயினும், நன்னடத்தையின்பேரில் விடுவிக்கப்பட்ட ஒரு குற்றவாளி –ஊழியரின் பணிக்கால பாதிப்பைப் பொறுத்தவரை, 1958 சட்டத்தின் 12–வது பிரிவு அவருக்குப் பாதுகாப்பாக அமையாது என்ற எங்கள் முடிவை வலியுறுத்தும் வகையில், கூடுதல் காரணங்களை வழங்க நாங்கள் விரும்புகிறோம்.

20. 1958 சட்டத்தின் 12–வது பிரிவு என்ன கூறுகிறது என்பதைக் கவனத்தில் கொள்வது பயனுள்ளதாக இருக்கும். அது பின்வருமாறு:

12. தண்டனையுடன் தொடர்புடைய தகுதியின்மையை அகற்றுதல் வேறு எந்தச் சட்டத்திலும் முரண்பாடாக என்ன கூறப்பட்டிருந்தாலும், ஒரு குற்றத்திற்காக குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு, 3–வது பிரிவு அல்லது 4–வது பிரிவின் விதிகளின்படி கையாளப்படும் ஒரு நபர், அத்தகைய சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்திற்கான தண்டனையுடன் தொடர்புடைய தகுதியின்மை ஏதேனும் இருந்தால் அதற்கு ஆளாகமாட்டார்:

வரம்புரை: 4–வது பிரிவின் கீழ் விடுவிக்கப்பட்ட பின்னர், தனது மூல குற்றத்திற்காக பின்னர் மீண்டும் தண்டிக்கப்படும் ஒரு நபருக்கு இந்தப் பிரிவில் உள்ள எதுவும் பொருந்தாது.

21. சுஷில் குமார் சிங்கால் (மேலே கூறப்பட்டது) வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள முந்தைய தீர்ப்புகள், 1958 சட்டத்தின் 12–வது பிரிவை, அதாவது ஒரு தடையற்ற கூறினை, சற்று விரிவாக ஆராய்ந்துள்ளன. 12–வது பிரிவைப் பற்றிய நமது புரிதல் இதுதான். அதனைச் சாதாரணமாகப் படிக்கும்போதே அதில் இரண்டு கூறுகள் உள்ளன என்பது தெளிவாகிறது, அதில் இரண்டாவது கூறு முதலாவது கூறினை விளக்குகிறது: (i) பிரிவு 3 அல்லது 4–இன் கீழ் நன்னடத்தையின்பேரில் விடுவிக்கப்படும் ஒரு குற்றவாளி, ஒரு சட்டம் அவரது தகுதியின்மைக்கு வழிவகை செய்திருந்தாலும், அவர் எந்தவொரு தகுதியின்மைக்கும் ஆளாகமாட்டார்; ஆனால் (ii) அந்தத் தகுதியின்மை என்பது, அந்தச் சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட குற்றத்திற்கான அத்தகைய தண்டனையுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும். 'அத்தகையச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்திற்கான தண்டனையுடன் தொடர்புடைய தகுதியின்மை ஏதேனும் இருந்தால், அதற்கு ஆளாகமாட்டார்' என்ற வார்த்தைகள் முக்கியமானவை. அரசியலமைப்பின் 311–வது உறுபின் விதிகள் பொருந்தக்கூடிய ஒரு குற்றவாளி அரசுப் பணியில் இருந்தால், அவரைப் பணியிலிருந்து நீக்குவதற்கு நன்னடத்தையின்பேரில் விடுவிப்பது ஒரு தடையாகச் செயல்படும் என்று பொருள்கொள்ளும் வகையில் அதனை நீட்டிக்க முடியாது. நன்னடத்தையின்பேரில் விடுவிப்பது குற்றத்தை அழித்துவிடாது. சிறை வாழ்க்கையின் தீய விளைவுகளுக்கு ஒரு குற்றவாளியை உட்படுத்தாமல், அவரை சமுதாயத்தில் பயனுள்ள மற்றும் தற்சார்புடைய உறுப்பினராக சீர்திருத்துவதும் மறுவாழ்வு அளிப்பதுமே அவரை நன்னடத்தையின்பேரில் விடுவிப்பதன் முதன்மை நோக்கமாகும். எவ்வாறாயினும், நன்னடத்தையின்பேரில் அவர் விடுவிக்கப்பட்டிருந்தாலும், அவர் மீதான குற்றவியல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுவதற்கு வழிவகுத்த அவரது நடத்தையின் அடிப்படையில், மாநிலத்தின் கீழ் ஒரு சிவில் பதவியை வகிக்கும் அவர் மீது 311–வது உறுப்பின் (2) உட்பிரிவின் இரண்டாவது வரம்புரையின்படி நடவடிக்கை எடுக்கலாம்; மேலும் எவ்வித விசாரணையுமின்றி அவரைப் பணிநீக்கம் செய்யலாம். பணியிலிருந்து அகற்றலாம் அல்லது பதவியிறக்கம் செய்யலாம். அவ்வாறு பணிநீக்கம் செய்யப்பட்டாலோ அல்லது அகற்றப்பட்டாலோ, தண்டனையின் காரணமான அத்தகைய பணிநீக்கம், மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாவது வரம்புரையின் அடிப்படையில் தண்டனையுடன் தொடர்புடைய ஒன்றாகவே பார்க்கப்படும். இருப்பினும், 12–வது பிரிவில் பயன்படுத்தப்பட்டுள்ள 'சட்டம்' என்ற சொல், பாராளுமன்றம்/சட்டமன்றங்கள் இயற்ற அரசியலமைப்பு அதிகாரமளிக்கும் ஒரு பொது அல்லது சிறப்பு சட்டத்தையே குறிக்கிறது. மேலும் அது (பிரிவு 12) தனது உருவாக்கத்திற்குக் காரணமான அரசியலமைப்பையே தனக்குள் கொண்டுவர முடியாது மற்றும்

அவ்வாறு செய்யவுமில்லை. 'எந்தவொரு தகுதி யின்மை' என்ற வார்த்தைகள், பணிநீக்கம் செய்யப்படும் ஒரு வழக்கையும் உள்ளடக்கும் அளவுக்கு பரந்ததாகப் பார்க்கப்பட்டாலும், அரசியலமைப்பு விதியின் செயல்பாட்டை விலக்காத தடையற்ற கூறின் சூழலில் இந்த வார்த்தைகளின் வரம்பை விளக்க வேண்டியது அவசியமாகும்.

22. இருப்பினும், மேல்முறையீட்டாளரின் நியமனத்தின் தன்மை குறித்து நாங்கள் முழுமையாக உறுதியாக இல்லாததால், இந்த அடிப்படையில் திரு.குப்தாவின் வாதத்தை நிராகரிப்பதைத் தவிர்க்கிறோம். ஆனால் மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து முந்தைய தீர்ப்பு களின் அடிப்படையிலும், மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக நாங்கள் தீர்ப்பளிக்க வேண்டும் என்று திரு. குப்தா வலியுறுத்தும் விதத்திலான விளக்கத்தை 1958 சட்டத்தின் 12-வது பிரிவுக்கு அளிக்க இயலாது என்று நாங்கள் கருதுகிறோம்.

23. அவ்வாறு முடிவு செய்துள்ள நிலையில், திரு.குப்தா எழுப்பிய மற்ற கருத்துகளை நாங்கள் பரிசீலிக்கத் தொடங்குகிறோம்.

24. இந்த மேல்முறையீடு ஒரு ரிட் மனுவி லிருந்து உருவாகவில்லை. மாறாக ஒரு உரிமை யியல் வழக்கிலிருந்து உருவானது. உரிமை யியல் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் ரிட் நீதிமன்றத்தின் அதிகாரங்களைப் போல பரந்தவை அல்ல; எனவே, மேல்முறையீட்டாளர் நடைமுறை விதிகளுக்கு கட்டுப்பட்டவர், அதாவது உரிமையியல் நடைமுறைச் சட்டத்திற்கு கட்டுப் பட்டவர் என்று கருதப்பட வேண்டும். வழக்கின் தொடர்ச்சியான இந்த மேல்முறையீடு, வாதுரைகள், அளிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் கோரப்பட்ட நிவாரணம் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும். வழக்குரை மற்றும் எதிர்வாதுரை மற்றும் சான்றுகள் ஆவணங் களில் இல்லை. உண்மைகள் குறித்த நமது விவரிப்பு கீழமை நீதிமன்றங்களின் தீர்ப்புகளி லிருந்தே பெறப்படுகிறது. மூன்று தீர்ப்புகளில் எங்கும் மேல்முறையீட்டாளரின் நியமன ஆணை பற்றிய குறிப்பு இல்லை. இது அவரது நியமனத்தின் துல்லியமான தன்மையைக் கண்டறிவதில் நமக்கு இயலாமையை ஏற்படுத்தி யுள்ளது. பணியில் மீண்டும் சேர வேண்டும் என்று கோரிய அதே வேளையில், பணியி லிருந்து விடுவிப்பதற்கான உத்தரவை மேல் முறையீட்டாளர் ஒருபோதும் கேள்விக்கு உட்படுத்த வில்லை என்பது கவனிக்கத்தக்க முக்கிய அம்சமாகும். CPC-இன் ஆணை VI விதி 17-இன் கீழ் வழக்குரையை திருத்துவதற் கான எந்தவொரு கோரிக்கையோ அல்லது அதன் ஆணை XLI விதி 27-இன் கீழ் கூடுதல் சான்றுகளை சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பமோ இல்லாத நிலையில், ஆவணங்களில் உள்ள ஆதாரங்களுக்குள் மட்டுமே நமது ஆய்வை வரம்பிற்குட்படுத்துவதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. இந்தக் குறைகள் அனைத்தையும் மீறி, மேல்முறையீட்டாளர் மீது குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்ற காரணத்திற் காக மட்டுமே அவரைப் பணிலிருந்து விடுவித்ததன் மூலம் அவர் முற்றிலும் நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டுள்ளார் என்பதை நாங்கள் எந்தச் சந்தேகமுமின்றி கூற முடியும். கூறப்பட்ட காரணத்தின் அடிப்படையில் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட உண்மையை பிரதிவாதிகள் ஒப்புக் கொள்கின்றனர். மேல்முறையீட்டாளர் பின்னர் இ.த.ச. பிரிவு 324-இன் கீழ் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டார் என்பது, பணியிலிருந்து விடுவிப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட போது அதனைச் செல்லாததாக்கிய சட்ட விரோதத்தைச் சரிசெய்ய முடியாது. தவறான ஆலோசனையின் காரணமாக, வழக்கின் கட்ட மைப்புச் சரியாக இல்லாமல் இருந்திருக்கலாம். ஜனவரி 14, 2003 தேதியிட்ட பணியிலிருந்து விடுவிப்பதற்கான உத்தரவை மேல்முறை யீட்டாளர் எதிர்க்கவில்லை. அவரது கோரிக்கை களும் குறைபாடுடையவையாகவே இருந்தன. 1963 ஆம் ஆண்டின் குறிப்பிட்ட நிவாரணச் சட்டத்தின் 14-வது பிரிவின்படி, மீண்டும் பணி யில் சேர்ப்பதற்கான நிவாரணத்தை உரிமை யியல் நீதிமன்றம் வழங்கியிருக்க முடியாது. மேல்முறையீட்டாளர் இழப்பீடுகளை மட்டுமே கோரியிருக்க முடியும் மற்றும் அதுவே அவருக்கு வழங்கப்பட்டிருக்க முடியும். இந்த நிலையை திரு.குப்தா மறுக்கவில்லை.

25. ஆனால், மேலே சுட்டிக்காட்டப்பட்ட இத்தகைய குறைபாடுகள், பிரதிவாதிகள் செய்த சட்டவிரோதமான மற்றும் தன்னிச்சையான செயலால் எழும் விளைவுகளிலிருந்து அவர் களை முழுமையாக விடுவிக்க முடியுமா அல்லது விடுவிக்க வேண்டுமா? இதற்கான பதில் 'இல்லை' என்பதாகவே இருக்க வேண்டும்.

26. குற்றவியல் வழக்கில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டதால் அல்லாமல், குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்ற காரணத்திற் காக மட்டுமே மேல்முறையீட்டாளர் பணியி லிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு தனது தற்காப்பு வாதத்தை முன்வைக்க எந்த வாய்ப்பும் வழங்கப்படவில்லை. ஒரு தசாப்தத்திற்கும் மேலாக காவல் துறையில் பணியாற்றிய ஒரு ஊழியரை, குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்ற காரணத்திற்காக மட்டுமே பணி நீக்கம் செய்யவோ அல்லது பணியிலிருந்து அகற்றவோ அரசுத் தரப்புக்கு (பொதுத்துறை வேலைவாய்ப்பளிப்பவருக்கு) அதிகாரம் அளிக்கும் எந்தவொரு சட்டமும் எங்கள் முன் காட்டப்படவில்லை. இந்தச் சூழ்நிலைகளில், அவரைப் பணியிலிருந்து நீக்கிய செயலை நியாயப்படுத்த முடியாது.

27. இரு தரப்பினருக்கும் இடையே முழுமை யான நீதியை நிலைநாட்ட, அரசியலமைப்பின் 142-வது உறுபின் கீழான எங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி, இத்தேதியிலிருந்து 3 (மூன்று) மாதங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) இழப்பீடாக வழங்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுகிறோம். இன்னும் அதிகத் தொகையை வழங்கியிருக்க முடியும். ஆனால் மேலே சுட்டிக்காட்டப்பட்டபடி முக்கியமான அம்சங்கள் குறித்த தகவல்கள் இல்லாததால் தான் அவ்வாறு செய்யப்படவில்லை; இதற்கான பழியிலிருந்து மேல்முறையீட்டாளரும் தப்ப முடியாது.

28. அதன்படி, இந்த உரிமையியல் மேல் முறையீடு மேற்கண்ட நிபந்தனைகளுடன் முடித்து வைக்கப்படுகிறது.

29. இதனுடன் தொடர்புடைய மனுக்கள் ஏதேனும் இருந்தால், அவையும் முடித்து வைக்கப்படுகின்றன.

மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை

மதுப் பழக்கத்தை காட்டி காப்பீட்டுத் தொகையை நிராகரிக்க முடியாது; நுகர்வோர் ஆணையம் தீர்ப்பு

மதுப்பழக்கத்தை காரணமாகக் காட்டி இறந்து போனவருக்கான காப்பீட்டுத் தொகையை அவர் களின் குடும்பத்தினருக்கு வழங்காமல் காப்பீட்டு நிறுவனங்கள் நிராகரிக்க முடியாது என்று நாகபுரி நுகர்வோர் ஆணையம் தீர்ப்பு அளித்துள்ளது. மகாராஷ்டிரத்தை சேர்ந்த பெண் ஒருவர் நாகபுரி மாவட்ட நுகர்வோர் ஆணையம் தீர்ப்பு அளித்துள்ளது. மகாராஷ்டிரத்தை சேர்ந்த பெண் ஒருவர், நாகபுரி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வழக்குத் தொடுத்திருந்தார். அதில், தனது கணவர் 2021-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எடல்வைஸ் டோக்கியோ லைஃப் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு வாங்கியதாகவும், 2023-ஆம் ஆண்டில் அவர் திடீரென உயிரிழந்த நிலையில் தான் காப்பீட்டுத் தொகை கோரி விண்ணப்பித்ததாகவும் கூறி யுள்ளார். ஆனால் தனது மனுவைத் தொடர்ந்து நிராகரித்த அந்தக் காப்பீட்டு நிறுவனம் காப்பீட்டு பிரீயமாக செலுத்திய ரூ.18,713க்கான காசோலையைத் திருப்பி அளித்து விட்டதாகவும், ஆதலால் காப்பீட்டுத் தொகையுடன் சேர்த்து தனக்கு மனரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியதற்கான இழப்பீட்டுத் தொகையைம் வழங்க உத்தரவிட வேண்டும் என்று அவர் கோரியிருந்தார்.

வழக்கு விசாரணையின்போது காப்பீட்டு நிறுவனம் தரப்பில், காப்பீட்டுதாரர் (பெண்ணின் கணவர்) நீண்ட காலம் மதுப்பழக்கம், உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் ஆகிய இருந்ததை மறைத்து விட்டதாகவும் இது முழுமையான நல்லெண்ணத்தை மீறும் செயல் என்றும் தெரிவிக்கப் பட்டது. இந்த வாதத்தைக் கேட்ட ஆணையம், காப்பீடு எடுக்கும் முன்பு காப்பீட்டுதாரரிடம் நடத்திய மருத்துவப் பரிசோதனையில், அவர் 15 ஆண்டு களாக மாதத்துக்கு இரு முறை 90 மில்லி விஸ்கி மது அருந்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள தாகவும், அப்படியிருக்கையில் காப்பீட்டுத் தொகையை காப்பீடுதாரரின் குடும்பத்துக்கு சட்டப்படி வழங்காமல் காப்பீட்டு நிறுவனம் வேண்டுமென்றே நிராகரித்தது தெளிவாகிறது என்றும் கூறியது. அத்துடன் காப்பீடு தாரரின் மனைவிக்கு ரூ.50 லட்சம் காப்பீட்டுத் தொகையையும், 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் தேதி முதல் கணக்கிட்டு அந்தத் தொகைக்கு 9 சதவீத வட்டியையும் சேர்த்து அளிக்க வேண்டும் என்றும் ஆணையம் உத்தரவிட்டது.

மேலும், காப்பீடுதாரரின் மனைவிக்கு மன ரீதியிலும், உடல்ரீதியிலும் பாதிப்பை ஏற்படுத்தி யதற்கு இழப்பீடாக ரூ.10,000 வழக்கு நடத்திய தற்கான செலவுகளுக்காக ரூ.10,000 அளிக்கும் படியும் நாகபுரி மாவட்ட நுகர்வோர் குறைநீர் நுகர்வோர் ஆணையம் உத்தரவிட்டது.

நன்றி: தினமணி 5.9.2026

கல்வியுரிமைச் சட்டம் கீழான பங்களிப்பை மத்திய அரசு செலுத்துலில் தேசியக் கல்வி கொள்கை இணைக்கப்பட தேவையில்லை.

சென்னை உயர்நீதிமன்றம்
முன்னிலை : மாண்புமிகு நீதிபதி ஜி.ஆர்.சுவாமினாதன்
மாண்புமிகு நீதிபதி வி.லக்சுமி நாராயணன்
நீ.பே.ம. எண் 18427/2025
2025 (4) CTC 813

வி.ஈஸ்வரன் ...மனுதாரர்

–எதிர்–

1. தமிழ் நாடு அரசு, சார்: அரசு செயலர்,
பள்ளி கல்வி துறை, தமிழ் நாடு அரசு,
செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை–600009.

2. தன்பியார் பள்ளிகள் இயக்குனர்,
தமிழ் நாடு அரசு, டி.பி.ஐ. வளாகம்,
கல்லூரி சாலை,
சென்னை 600006.

3. அரசு செயலர், இந்திய ஒன்றியம்,
பள்ளிக் கல்வி மற்றும் கற்றல் துறை,
கல்வி அமைச்சகம், புது டில்லி 110 001 ...எதிர்மனுதாரர்கள்

திரு.என்.பொன்ராஜ்,
மனுதாரரது வழக்குரைஞர்

திரு.ஜே.ரவீந்திரன்,
கூடுதல் தலைமை வழக்குரைஞர்,
சிறப்பு அரசு வழக்குரைஞர்
திரு யு.எம்.ரவிசந்திரன் உதவியுடன்
1–2வது எதிர்மனுதாரர்கள் சார்பில்

திரு. ஏ.ஆர்.எல்.சுந்தரேசன் இந்தியாவின் தலைமை அரசு வழக்குரைஞர், முதுநிலை பட்டியல் வழக்குரைஞர் முனைவர் ஜி.பாபு உதவியுடன்

கோருகை: மனுதாரரது 2.4.2025, 30.4.2025 மற்றும் 8.5.2025 தேதிய முறையீடுகளை பரிசீலித்துக் கொண்டு 2025–2026 கல்வியாண்டுக்காக 2009இன் கல்வியுரிமை சட்டம் கீழ் சேர்க்கை நடவடிக்கைகளை துவக்கு மாறு எதிர்மனுதாரர்களைப் பணிக்கும் செயலுறுத்து நீதிப்பேராணை இயற்றலுக்காக இந்திய அரசமைப்பு சாசன உறுப்பு 226 கீழ் நீதிப்பேராணை மனு தாக்கலானது.

23.5.2025 அன்று தள்ளிவைப்பான தீர்ப்புரை 10.6.2025 அன்று வழங்கப்பட்டது.

ஆணை

நீதிபதி ஜி.ஆர்.சுவாமினாதன்

''இன்று அரசின் மிகமிக முக்கிமான அலுவலாக கல்வி உள்ளது. நல்ல குடியாண்மைக்கு இது அடித்தளமாக விளங்கு கிறது. பண்பாடு விழுமியங்களுக்கு குழந்தையை அறிமுகப்படுத்தலும் பின்வரும் தொழில் முறை பயிற்சிக்கும் அவனை ஆயத்தப்படுத்த லிலும் அவனது சூழலுக்கு இசைந்திடலுக்கு அவனுக்கு உதவலிலும் அது முதன்மையான சாதனமாகும். இன்னாட்களில் கல்வி அவனுக்கு மறுக்கப்படுமானால் வாழ்வில் குழந்தை வெற்றி யடைவான் எதிர்பார்க்கப்பட் முடியுமா என்பது சந்தேகமே. அதனை வழங்க அரசு பொறுப் பேற்றிருக்கும்போது அத்தகைய சந்தர்ப்பம் சம விதிமுறைகளில் அனைவருக்கும் கிட்ட வைக்கப் பட வேண்டும். வாரன்பிரபு, த.நீ. பிரவுன் –எதிர்– கல்வி வாரியம் 98 Lawyers Ed.873 வழக்கில்

2. இந்த நீதிப்பேராணை மனு பொது நலனுக்காக தாக்கலாகியுள்ளது. 2009இன் இலவச மற்றும் கட்டாய கல்விக்கான குழந்தை யின் உரிமை சட்டம் கீழான சேர்க்கை செயல் முறை குறித்த சமயத்தில் துவங்கவில்லை என்பது மனுதாரரால் சுட்டப்படும் கேள்வியாகும். கல்வியாண்டு துவக்கு முன் குழந்தைகள் சேர்கை நடைபெற வேண்டும் என்றிருந்தாலும் சட்டம் கீழான சேர்க்கைக்காக இணையவழியில் விண்ணப்பங்களைப் பெற நடவடிக்கைகள் மே 2025 இரண்டாவது வாரம் வரையில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2024-25 கல்வியாண்டுக்கான சேர்க்கை செயல்பாடை துவக்குமாறு அதிகாரிகளை பணித்தலுக்காக மட்டுமே நீதிப்பேராணை கோருகை அமைகிறது. இது பொது நல வழக்காக இருக்கையில் நீதிப்பேராணை கோருகையுடன் மட்டுமே நாங்கள் வரம்பிட்டுக் கொள்ள முடியாது. உடனே அனைத்து எழு வினாக்களையும் பற்றி நாங்கள் பேச வேண்டியது. முக்கியமான பொது பிரச்சனை களை கைக்கொள்ளும் நீதிப்பேராணை நீதிமன்றம் பரிகாரங்களை வடிவமைத்து முழுமையான நீதிப்பரிபாலனத்துக்கு உகந்த பணித்தலையும் இயற்றவியலும். தனியார் நலனுரிமைகள் சம்பந்தப்படும் விஷயங்களை ஆராய்தலுக்கு பழக்கமானதை காட்டிலும் பொது நலத்தை மேம்படுத்தலில் பரிகாரத்தை வழங்கவும் நிறுத்திவைக்கவும் நேர்மைநெறி நீதிமன்றங் களால் இயலலாம் மற்றும் இயல்கிறது. [காண்க சிவ் சங்கர் ஆலைகள் -எதிர்- ஹரியானா மாநிலம் (1980) 2 SCC 437]

4. தனியார் பள்ளி நிர்வாகங்களால் செய்யப் படும் செலவினங்களை திருப்பிசெலுத்தல் பற்றி பேசிட இந்த நீதிப்பேராணை மனுவின் குறியெல்லையை நாங்கள் விசாலப்படுத்த வேண்டியுள்ளது. குறித்த காலத்தில் கல்வி துறை திருப்பிசெலுத்தல்கள் செய்வதில்லை என்பதை நாங்கள் நீதிய கவனத்தில் கொள்றோம் இந்த கூறை ஆராய்தலுக்கான சந்தர்ப்பம் தாளாளர், கிருஷ்ணம்மாள் ராமசுப்பயர் -எதிர்- தமிழ்நாடு மாநிலம் வழக்கில் எங்களில் ஒருவருக்கு [ஜி.ஆர்.சு. நீசி கிட்டியது. [நீபேம(எம்டி) எண் 10952/2021 இல் 14.7.2022 தேதியது]

5. திருப்பி செலுத்துவதற்கு தனியார் பள்ளி நிர்வாகங்களுக்கு பாத்தியதை உண்டு என்பதை மாநில அரசுக்காக முன்னிலையான கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞர் ஏற்றுக் கொண்டிருக்கையில் இந்தப் பொறுப்பு மாநிலங் களாலும் நடுவணரசாலும் பகிரப்பட வேண்டிய தாகும் என வாதிட்டார். துரதிர்ஷ்டவசமாக அதன் சட்டப்படியான உரித்தங்கள் மாநில அரசுக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் அதன் விளைவாக குறித்த காலத்தில் பள்ளி நிர்வாகங்களுக்கு திருப்பிச் செலுத்த செய்ய மாநில அரசால் இயலவில்லை எனவும் அவர் கூடுதலாகக் கூறினார். இது தொடர்பாக அலுவலர்கள் கூட்டத்தை பள்ளி கல்வித் துறை முதன்மை அரசு செயலர் கூட்டியிருந்தார் என அவர் எங்களிடம் தெரிவித்தார். கூட்ட நிகழ்வு குறிப்புகளை அவர் பின்னர் சுற்றுக்கு விட்டார். ஒன்றிய அரசிலிருந்து நிதி விடுவிக்கப் பெறாமை யால், சட்டப் பிரிவு 12(1)(சி) கீழ் பள்ளிகளுக்கு க.உ. திருப்பிச் செலுத்தலுக்குள்ள 2022-23 வருடத்திய செலவினமாக ரூ.188.99 கோடி தொகை மாநில அரசால் முழுமையாக ஏற்கப்பட்டது என்பது அவரது நிலைப்பாடாகும். ஒன்றிய அரசுக்கு எதிராக முவ நாட்குறிப்பு எண் 28793/2025 இல் இந்திய அரசமைப்பு சாசன உறுப்பு 131 கீழ் வழக்கு தாக்கலிட்டுக் கொண்டு உச்ச நீதிமன்றத்தை பின்னராக தமிழ்நாடு அரசு நாடியுள்ளது. நிதியாண்டு 2024-25 திட்ட ஒப்புதல் வாரியத்தால் ஒப்புதலான சமக்ரா சிக்ஷா திட்டத்துக்கான அதன் 60% பங்க ளிப்பான ரூ.2151.69 கோடி தொகையை செலுத்தலுக்காக ஒன்றிய அரசுக்கு எதிரான பணிப்புரையை மாநிலம் கோரியிருக்கிறது. குறைந்தபட்சமாக கஉ. பாத்தியத்தையான நிதியை உடனடியாக விடுவிக்குமாறு ஒன்றிய அரசுக்கு முறையீடு வைக்க தமிழ்நாடு அரசு கருதி உள்ளது. கடந்த ஈராண்டுகளுக்கு திருப்பி செலுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதைக் கூடுதல் தலைமை வழக்குரைஞரும் நேர்மையாக ஏற்றுக் கொண்டார்.

6.ஒன்றிய அரசின் பங்கும் பொறுப்பும் கூடுதல் தலைமை வழக்குரைஞரால் அடிக்கோடிடப் பட்டதால் நாங்கள் வழக்கில் ஒன்றிய அரசை தன்னிச்சையாக இணைத்தோம்.ஒவ்வொரு குழ்ந்தைக்கும் கல்வியை உறுதிப்படுத்தலில் ஒன்றிய அரசின் உள்ளார்ந்த ஈடுபாடை இந்திய அரசு தலைமை வழக்குரைஞர் ஏற்றுக் கொண்டி ருக்கையில் கூட முன்பருவக் கல்வியிலிருந்து 12வது வகுப்பு வரையில் தொடர்ச்சியான கல்வியை எதிர் நோக்கும் திட்டமாக சம்கரா ஷிக்சா திட்டம் உள்ளது எனவும் திட்டம் 2020இன் தேககொ வகையங்களுடன் ஒருங்கமைப்பானது எனவும் பணிந்திட்டார். 2009இன் தேகொ திட்டத்துடன் மாநில அரசு இணங்காதிருப்பதால் நிதிப் பகிர்மானம் தொடர் பாக சில பிரச்னைகள் உள்ளன. சட்ட பிரிவு 7 (5) இன் பரிசீலனையில் க.உ. சட்டத்தை செயல் படுத்தலுக்கான முதன்மை பொறுப்பு மாநில அரசை சேரும் என அவர் சுட்டிக் கட்டினார்.

7.எதிரெதிர் வாதங்களை நாங்கள் கவனமாக பரிசீலித்து பதிவாவண பொருட்பாடுகளையும் ஆராய்ந்தோம்.

8.6-14 வயதுள்ள அனைத்து குழந்தை களுக்கும் இலவச மற்றும் கட்டாய கல்வி வழங்குவதை உறுதிப்படுத்திட 2009இன் 35வது சட்டத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றியது. இவ்வாறு அரசைமைப்பு சட்ட உறுப்பு 21ஏ உ/வா உறுப்பு 45இல் வகுக்கப்பட்ட அரசமைப்பு சட்ட குறிக்கோளை சட்டம் பூர்த்தியாக்கி திறனுற்ற தாக்குகிறது. சட்டத்தின் தொடர்புறு வகையங்களில் சில கீழே பொழிப்பாகின்றன. சட்டத்தின் பிரிவு 2(ஏ) கீழ்வருமாறு வாசிப்பாகிறது.

உசிதமான அரசு என்பதாவது

(i) நடுவணரசால் அல்லது நடுவணரசு அல்லது சட்டப்பேரவையில்லா ஒன்றிய நில எல்லைகளில் நிர்வாகத்தரால் தோற்றுவிக்கப் பட்டு சொந்தம் கொண்டாடப்பட்டு கட்டுப்படுத்தப் படும் பள்ளி தொடர்பில் நடுவணரசு

(ii) உட்சரத்து(i) இல் குறிப்பாட்டானது விடுத்து மாநிலத்தின் நிலவெல்லையில் தோற்றுவிக்கப் பட்ட பள்ளி தொடர்பில் மாநில அரசு பி சட்ட பேரவையுள்ள ஒன்றிய நிலவெல்லையில் அந்த நிலவெல்லையில் உள்ள அரசு

சட்டப் பிரிவு 2இன் என் கீழ்வருமாறு வாசிப்பாகிறது,

''(ஏன்) தொடக்க கல்வி கற்பித்துக் கொண்டு கீழ்வருவனவற்றை உட்படுத்தும் அங்கீகரிக்கப் பட்ட பள்ளி எதுவும் என பள்ளி அர்த்தமாகும்.

(i) உகந்த அரசால் அல்லது உள்ளாட்சி மன்றத்தால் ஸ்தாபிக்கப்பட்டு சொந்தமாகும் அல்லது கட்டுபடுத்தப்படும் பள்ளி

(ii) உகந்த அரசிடமிருந்து அல்லது உள்ளாட்சி மன்றத்திலிருந்து அதன் செலவினங்களில் முழுமையில் அல்லது பகுதியை பெற்றடைய உதவி அல்லது மான்யம் பெறும் பள்ளி

(iii) குறிப்பிடப்பட்ட பிரிவுச் சொந்தமான பள்ளி மற்றும்

(iv) உகந்த அரசிடமிருந்து அல்லது உள்ளாட்சி மன்றத்திலிருந்து அதன் செலவினங்களில் முழுமையில் அல்லது பகுதியைப் பெற்றடைய உதவி அல்லது மான்யம் பெறாத பள்ளி

சட்டப் பிரிவு 3 (1) மற்றும் (i) 2 கீழ்வருமாறு

''3.இலவச மற்றும் கட்டாய கல்விக்கும் குழந்தைக்குள்ள உரிமை

(1) பிரிவு 2இன் சரத்து(i)இல் அல்லது சரத்து Cஇல் குறிப்பாடாகும் குழந்தைகள் உட்பட அவனது அல்லது அவளது தொடக்க கல்வி முடியும் வரையில் அருகிலிலுள்ள பள்ளி யில் இலவச மற்றும் கட்டாய உரிமையை 6 இலிருந்து பதினான்கு ஆண்டுகள் வரை யிலான குழந்தை ஒவ்வொன்றும் பெற்றடைய வேண்டும்.

(2) உட்பிரிவு 1இன் நோக்கங்களில் தொடக்கக் கல்வியை தொடர்வதிலிருந்தும் முடிப்பதிலிருந்தும் அவனை அல்லது அவளை தடுக்கக் கூடிய எந்த வகையான கட்டத்தை அல்லது செலவுகள் செலுத்தலுக்கான பொறுப்பு குழந்தை எதற்கும் இருக்கக் கூடாது.

(3) உசிதமான அரசுகளது மற்றும் உள்ளாட்சி அதிகாரிகளை கடமைகளை சட்ட அத்தியாயம் 3 வகைப்படுத்துகிறது. பள்ளிகளுக்கு சில பொறுப்படைவுகளைச் சட்டத்தின் 4வது அத்தியாயத்தில் உள்ள பிரிவு 12 வைக்கிறது. பிரிவு 12(1) கீழ் வருமாறு வாசிப்பாகிறது.

''12. இலவச மற்றும் கட்டாய கல்விக்கும் ஆன பள்ளியின் பொறுப்பளவு

(1) இந்த சட்டத்தின் நோக்கத்துக்காக

(ஏ) பிரிவு 2ன் என இன் உட்பிரிவில்(ii)இல் குறிப்பாடாகும் பள்ளி அதில் சேர்க்கப்படும் அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச மற்ற கட்டாயக் கல்வியை வழங்கிட வேண்டும்.

(பி) குறைந்தது 25 சதவீதத்துக்கு உட்பட்டு அதன் வருடாந்திர தொடரும் செலவினங் களுக்கு ஒத்திசையும் உதவிக்கு அல்லது, மான்யத்துக்கு ஏற்ப அங்கு சேர்க்கப்பட்ட குழந்தைகளது விகிதாச்சாரத்தில் இலவச மற்றும் கட்டாயக் கல்வியை பிரிவு 2இன் சரத்து என உட்பிரிவு(ii)இல் குறிப்பாடாகும் பள்ளி வழங்கிட வேண்டும்.

(சி) பிரிவு 2இன் பிரிவுகள் என உட் பிரிவுகள்(iii)(iv)இல் குறிப்பாகும் பள்ளி, வகுப்பு 1இல் அந்த வகுப்பில் குறைந்தபட்ச 25 சதவீத அளவுக்கு உட்பட்டு அருகிலிலுள்ள நலிந்த பிரிவினரையும் பின்தங்கிய குழுவினரையும் சேர்ந்த குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாய தொடக்க கல்வியை அதன் இறுதி வரை வழங்கிட வேண்டும்.

வரம்புரை: பிரிவு என இன் சரத்து 2 இல் குறிப்பாடாகும் பள்ளி பாலர் கல்வியை அளிக்கும் போது சரத்துகள் ஏ-சி இவற்றின் வகையங்கள் அத்தகைய பாலர் கல்விக்கும் பொருந்திட வேண்டும்.

பள்ளியால் செய்யப்படும் செலவினங்களை திருப்பிச் செலுத்தலுக்கு சட்டப் பிரிவு 12இன் உட்பிரிவு 2 வகைசெய்கிறது.

பிரிவு 1உன் உட்பிரிவு Cஇல் சொல்லப் பட்டவாறு கட்டாய மற்றும் இலவச கல்வியை வழங்கிடும் பிரிவு 2இன் பிரிவு என உட்பிரிவு (5)இல் உள்ள பள்ளிக்கு நிர்ணயிக்கப்பட்ட அத்தகைய முறையில் அரசால் ஒரு குழந்தைக்குச் செய்யப்பட்ட செலவினம் அல்லது குழந்தை யிடம் வசூலிக்கப்பட்ட அசல் கட்டணம் இவற்றில் குறைந்தது அதனால் செய்யப்பட்ட செலவினம் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

வரம்புரை: பிரிவு 2 இன் சரத்து என இன் உட்பிரிவு (i)இல் குறிப்பாடாகும் பள்ளியில் செய்யப்பட்ட ஒரு குழந்தைக்கான செலவினத்துக்கு மிகுதியாக் திருப்பிச் செலுத்தல் இருக்கக் கூடாது

9. சட்ட பிரிவு 12(1)(சி)இல் வகுக்கப்பட்ட வலியுறுத்து காரணமாக கட்டணம் வசூலிக்காது ஆரம்ப நிலை எண்ணிக்கையில் 25 சதவீத அளவுக்கு பொருளாதார ரீதியாக வலிவற்ற பிரிவினர்களிடமிருந்தும் பின்தங்கிய பிரிவினர் களை சேர்ந்த குழந்தைகளைத் தனியார் பள்ளிகள் அனுமதி கொண்டிருந்தும் கல்வி அளித்துக் கொண்டும் இருக்கின்றன. சட்டப் பிரிவு 12இன் வலியுறுத்துப்படி அவற்றை திருப்பிச் செலுத்தும் கடப்பாடு மாநில அரசுக்கு உண்டாகும். திருப்பிச் செலுத்தல்களின் அளவு சட்டப் பிரிவு 12(2)இல் வரையானவாறு இருக்கவேண்டியதானாலும் குறிப்பிடப்பிட்ட தொகையை திருப்பிச் செலுத்தல் தொகையாக மாநில அரசு நிருணயித்து கொண்டிருந்துள்ளது.

10. சட்டப் பிரிவு 7 பின்வருமாறு வாசிப்பாகிறது.

7. நிதிசார் மற்றும் இதர பொறுப்புகள் பகிர்தல்

(1) இந்த சட்ட வகையங்களை நிறை வேற்றலுக்கான நிதியளித்தற்கும் ஒருங்கியல் வான பொறுப்பு மத்திய அரசுக்கும் மாநில அரசுகளும் இருத்தல் வேண்டும்.

(2) சட்ட வகையங்களை செயல்படுத்த்லுக்கு மூலதன் மற்றும் தொடரும் செலவினங்கள் பற்றிய மதிப்பீடுகளை மத்திய அரசு தயாரிக்க வேண்டும்.

(3) மாநில அரசுடன் ஆலோசனைப்படி அது அவ்வப்போது தீர்மானிக்க கூடியவாறு உட்பிரிவு 2இல் குறிப்பாடாகும் அத்தகைய செலவின விகிதாசாரத்தை மத்திய அரசு வருவாய் மானிய உதவிகளாக மாநில அரசுகளுக்கு வழங்கிட வேண்டும்.

4. சட்ட வகையங்களைச் செயல்படுத்தலுக் காக அதன் நிதிப் பங்களிப்பைச் சொன்ன மாநில அரசு அளிக்க இயலும் வகையில் மாநில அரசு எதனுக்கும் வழங்கபடவுள்ள கூடுதல்

ஆதாரங்கள் தேவையை ஆராய்தலுக்காக மத்திய அரசு உறுப்பு 280இன் சரத்து 3இன் உட்சரத்து (i) கீழ் நிதி குழுவுக்கு குறித்தனுப்பு மாறு குடியரசு தலைவருக்கு ஒரு வேண்டு கோளை மத்திய அரசு வைக்கலாம்.

(5) உட்பிரிவு 4இல் உள்ளடங்குவது எதுவாக இருந்தாலும் பிரிவு 3 கீழ் மத்திய அரசால் வழங்கப்படும் தொகைகளையும் அதன் ஆதாரங்களையும் பரிசீலனையில் கொண்டு, சட்ட வகையங்களைச் செயல்படுத்தலுக்கு மாநில அரசு பொறுப்பாதல் வேண்டும்.

11. எம்.சுவீதன் –எதிர்– மாநில ஆணையும் வழக்கு 18.4.2023 தேதிய நீபேமஎண் 4615/2022இல் இந்த நீதிமன்றத்தின் தனி நீதிபதியால் மாநில அரசு பொறுப்பு பற்றி பேசப்பட்டது. நீதிபதி கீழ்வருமாறு தீர்ப்பிட்டி ருந்தார்.

''23. பிரிவுகள் 8 மற்றும் 9 கீழ் இலவச கல்வி அளித்தலில் மாநில உள்ளாட்சி அதிகாரி களின் சேரந்த கடமையுடன் பிரிவு 12(2) ஐ ஆழ்ந்து வாசித்தலிலிருந்து 25 சதவீத ஒதுக்கீடு கீழ் சேர்க்கப்பட்ட குழந்தை தொடர்பில் பள்ளி யால் செய்யப்பட்ட செலவினம் அரசால் ஒரு குழந்தைக்குள்ள செலவினம் அல்லது குழந்தை யிடம் வசூலான கட்டணம் இதில் குறைவானது அளவில் பள்ளிக்குத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்பது தெளிகிறது.

24. இந்தப் பொருள் அவ்வாறிருக்கையில் சமுகத்தின் வலுவற்ற பின்தங்கிய குழுமங் களைச் சேர்ந்த குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி அளிக்கும் நோக்கத்துக்காக மத்திய அரசு ஆலோசனையுடன் செலவினத்தை பகிர்தல் மாநிலத்தின் கடமையாகும்.''

நீதிபதியின் ஆணைக்கு சவால் நீபேமே எண் 1819/2023இல் இரு நீதியர் அமர்விடம் வைக்கப்பட்டது. தனி நீதிபதியின் உத்தரவை இரு நீதியர் அமர்வு அதன் 6.11.2024 தேதிய ஆணையில் கீழ்வருமாறு திருத்தியது;

''சட்டப் பிரிவு 12(2)இல் நம்புகை வைத்து கொண்டு, ஒவ்வொரு நேர்விலும் தனியார் பள்ளிகளால் செய்யப்பட்ட செலவினங்களை திரிப்பில் செலுத்தல் அல்லாது குழந்தையிடம் பெறப்பட்ட கட்டணம் அல்லது ஒரு குழந்தைக்கு மாநிலத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் இதில் குறைவானதைத் திருப்பிச் செலுத்தல் அரசின் பொறுப்பாகும் என கூடுதல் அரசு தலைமை வழக்குரைஞர் பணிந்திட்டார். எனவே சட்டம் கீழ் வனையப்பட்ட விதிகளில் விதி 12 உடன் வாசிப்பாகும் பிரிவு 12(2)இக்கு முரணாக தனி நீதிபதியின் ஆணை பத்தி 36இல் உள்ள பணித்தல் உள்ளது.

6. மேலுள்ளதன் பரிசீலனையில் சட்ட விதி கூ12 உடன் வாசிப்பாகும் பிரிவு 12(2)இன் விதிமுறைகளுக்கு ஏற்ப அரசின் பொறுப்ப டைவுக்கு வரம்பிடும் தனி நீதிபதியின் ஆணையை இந்த நீதிமன்றம் திருத்துகிறது. வேறு சொற் களில் சட்டப் பிரிவு 12 கீழ் சிந்திப்பான வாறு சேர்க்கப்பட்ட மாணவர்களுக்குச் சீருடை யும் குறிப்பேடுகளும் பாடபுத்தகங்களும் வழங்கு மாறு பணிக்கப்படும் 3வது எதிர்மனுதாரர் பள்ளி மாநிலத்தால் ஒரு குழந்தைக்கு செய்யப்படும் செலவினம் அளவுக்கு அல்லது இதர குழந்தை களுக்கு விதிக்கப்படும் நிஜத் தொகை இதில் குறைவானதை திருப்பிச் செலுத்த கோருவதற்கு உரிமையுள்ளதாகும்.

12. ஒன்றிய அரசிடமிருந்து நிதி வராமையை காட்டிக் கொண்டு அதன் சட்டமுறை மற்றும் அரசமைப்பு சாசன கடமையிலிருந்துது மாநில அரசு பிறழ முடியுமா என்பதை நாங்கள் பரிசீலித்தல் விவாதத்துக்குரிய கேள்வியாகும். இந்தக் கருத்து இனிமேலும் முன் தீர்ப்பிலாத தாக இருக்கவில்லை அனைவருக்கும் நீதி –எதிர்– டில்லி என்.சி.அரசு (AIR Online 2020 Del 1282) வழக்கில் டில்லி உயர்நீதிமன்றத்தின் இரு நீதியர் அமர்வு தீர்ப்பிட்டதாவது.

''166. கல்விக்காக 1வது எதிர்மனுதாரர் –ஜி.என்.சி.டி.டியிடமிருந்து 4.4% மட்டுமே நடுவணரசு செலவழிப்பதால், க.உ. சட்டப் பிரிவு 7 கீழ் நடுவண அரசிடமிருந்து கூடுதல் நிதி/நிதி ஆதாரம் இல்லாமையால் நிதிநிலை அறிக்கை யில் 26%ஐ வழங்கியிருந்தபோதிலும் க.உ

சட்டம் கீழான கடப்பாடுகளை அது முழுமையாக நிறைவேற்றியிருக்க்வில்லை என்பது 1வது எதிர்மனுதாரர் மாநில/ஜி.எமன்.சி.டி.டி நிலைப் பாடாக இருந்தாலும், நிதிப்பொறுப்புகளை பகிர்தலில் குழந்தைகளது உரிமை பாதிப்புறக் கூட்டது எனவும் மாநில/ஜி.என்.சி.டி.டி நிதி வழங்கலுக்கு பொறுப்புதல் வேண்டும் னவும் 2009இன் கல்வியுரிமை சட்டப் பிரிவு 7(5). வகைச் செய்கிறது என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

நடுவணம் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான நிதி சம்பந்தமான தாவாவில் தீர்வுறுதியாக்க நீதிமன்றம் மறுத்தது.

13. இளவர் பி.எ.கவின் நிலவன் –எதிர்– இந்திய ஒன்றியம் வழக்கில் தனி நீதிபதி தீர்ப்பிட்டதாவது.

ஆகையால் கல்வியுரிமைச் சட்ட வகையங் களுக்கு இசைவாக இந்திய அரசமைப்புச் சட்ட உறுப்பு 21ஏஇல் உருவமைக்கப்பட்ட அடிப்படைக் குழந்தையுரிமையைச் செயல்படுத்தலுக்கான சட்டபூர்வ கடப்பாடை மாநில அரசுக்கு ஏற்றகிற தால் குறித்த காலத்தில் திருப்பிசெலுத்தி அதன் கடமையை எழுத்திலும் தாத்பரியத்திலும் நிறைவேற்றல் மாநில அரசின் கட்டுறுத்தான கடமையாகும். திருப்பிச் செலுத்தலில் தாமதம் அல்லது அத்தகைய கடப்பாடை மீறுதல் ஏதும் திட்டத்தின் நோக்கத்தை பாழாக்கி சிதைக்கும், மத்திய மாநில அரசுகளுக்குள் தகராறு உள்ள போதும் சொன்ன சட்டத்தை நிறைவேற்றலுக்கு மாநில அரசு முதலாவதாக பொறுப்பாதல் வேண்டும் எனவும் அதற்கேற்ப இது வகையான தாமதம் தவிர்க்கப்படும் வகையில் நிதி நிலை அறிக்கையில் போதிய நிதிக்கு அவர்கள் வகைசெய்ய வேண்டும் எனவும் க.உ. சட்ட பிரிவு 7(5) நிபந்தணையாக்கும்போது. அது இன்னும் கூடுதலாகிறது. ஆகையால் முதலாவதாக திருப்பிச் செலுத்தல் மாநில அரசின் பொறுப்பாகும்.''

14. நீபேம (ஏம்டி) எண் 10952/2021– தாளாளர், ராமசுப்பயர் கிருஷ்ணம்மாள் ராமா சுப்பய்யர் பள்ளி –எதிர்– தமிழ் நாடு மாநிலம் வழக்கில் கீழ்வருமாறு தீர்மானிக்கப்பட்டது.

9.பள்ளி இணைந்துள்ள கல்வி வாரியம் எதுவாக இருந்தாலும் திருப்பிச் செலுத்தலுக் கான பொறுப்பு மாநில அரசுக்கு உள்ளதாகும். முன்சொன்ன சட்டமுறை திட்டம் கீழ் மாநில அரசால் சட்டமுறையாக அனுமானமாகும் கடப்பாடு கடத்தப்பட முடியாது. க.உ.சட்டம் கீழ் சமூக கடப்பாடு பள்ளி நிர்வாகிகளுக்கு விதிகப் பட்டுள்ளது. இந்த சமூக கடப்பாடை தேவையாக நிறைவேற்றலுக்கான பொறுப்பை பள்ளி நிர்வாகங்கள் கொண்டிருக்கையில் அதை அவர்கள் இலவசமாக செய்ய எதிர்பார்க்கப்பட முடியாது. பள்ளி நிர்வாகங்களால் நிஜமாக செய்யப்பட செலவினத்துடன் மாநில அரசால் செய்யப்படும் திருப்பிச் செலுத்தல் அரிதாக ஒத்திசைவாகிறது என்ற பொருண்மையை நான் நீதியை கவனத்தில் கொள்கிறேன.

12. க.உ. சட்டம் கீழான கடப்பாடிலிருந்து மனுதாரர் பள்ளி விடுவிக்கப்பட வேண்டும் அல்லது ஒவ்வொரு குழந்தைக்கும் செய்யப் பட்ட செலவைத் திருப்பிச் செலுத்தலுக்கான பொறுப்பை எதிர்மனுதாரர்கள் ஏற்க வேண்டும். க.உ. கடப்பாடு நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய பின்பு அரசு திருப்பிச் செலுத்தலை மறுக்க முடியாது. அத்தகைய நிலைப்பாடு அப்பட்டமாக நியாயமற்றதாகவும் அரசமைப்பு சாசன உறுப்பு 14ஜ மீறுவதாகவும் இருக்கும். க.உ. சட்டம் கீழ் மாணவர்களை சேர்த்தலுக்கான பள்ளிகளது கடமையும் அதை திருப்பிச் செலுத்தலுக்கு அரசின் கடமையும் இரட்டை குழந்தைகள் போன்றவையாகும். ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிக்கப்பட முடியாது. அவை ஒன்றாக இயங்க வேண்டியத தாகும். இயற்றல் சட்டத்தால் அமைக்கப் பட்டுள்ள இந்த ஏற்பாடை கலைத்தலுக்கு அதிகாரிக்கு சுதந்திரம் கிடையாது.

இணைப்பு மாற்றலையும் பள்ளி சி.பி.எஸ்.இ கல்வி நிலையமாதலையும் காட்டிக் கொண்டு துறை திருப்பிசெலுத்தல் மறுத்தல் தருவாயில் மேலுள்ள முடிவு அளிக்கப்பட்டது.

15.2011இன் தமிழ்நாடு குழந்தைகளது இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகளில் விதி 9 வருமாறு

"9. பிரிவு 12, உட்பிரிவு 2இன் நோக்கத்துக் காக ஒரு குழந்தைக்கான செலவினம் மாநில அரசால் திருப்பி செலுத்தப்படுதல்;

(1) ஒவ்வொரு குழந்தைக்கும் மாநில அரசால் தரப்படும் திருப்பிச் செலுத்துகை;

ஒரு குழந்தைக்கான செலவினம் அரசு பள்ளியில் மாநில அரசால் செய்யப்படும் செலவீனம் அல்லது சேர்க்கப்படும் பள்ளி தொடர்பாக 2009 இன் பள்ளிகள் (கட்டண வசூல் ஒழுங்குமுறை) சட்டம் (2009இன் தமிழ்நாட்டின் சட்டம் 22) கீழ் அமைக்கப்பட்ட குழுவினால் நிருணயிக்கப்பட்ட கட்டணம் இவற்றில் எது குறைவோ அது ஒரு குழந்தைக்கான செலவின மாக இருத்தல் வேண்டும்.

(2) (ஏ) பிரிவு 2இன் சரத்து என உட்பிரிவு (iv) சொல்லப்படும் பள்ளி, ஒரு குழந்தைக்காக மாநில அரசால் செய்யப்படும் திருப்பிச் செலுத்தல் பள்ளியின் அனுமதிக்கப் பட்ட இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிப்பாகும் மாணவர்கள் பட்டியலை ஜூலை மாதத்தில் உள்ளாட்சி அதிகாரிக்கு அனுப்பி வேண்டும்.

(பி) முப்பது நாட்களுக்கு மிகுதியாக ஒரு குழந்தை விடுப்பெடுத்தால் அல்லது வராதி ருந்தால் அல்லது கல்வியாண்டு மத்தியில் பள்ளியிலிருந்து அகன்றால் அது உள்ளாட்சி அதிகாரிக்கு தெரிவிக்கப்பட வேண்டியதாகி அதற்கேற்ப கோருகை செய்யப்பட வேண்டிய தாகும்.

(3) ஒவ்வொரு கல்வியாண்டுக்கான திருப்பிச் செலுத்துகை தொகையை, செப்டம்பர், மார்ச் ஆகும். இரு தவணைகளில், பள்ளியில் மாணவர்கள் சேர்க்கையை சரிபார்த்து அல்லது சரிபார்க்க ஏற்பாடு செய்த பின்பு உள்ளாட்சி அதிகாரி திருப்பிச் செலுத்தல் செய்ய வேண்டும்.

(4) பிரிவு 2இன் உட்பிரிவு (iv)இல் குறிப்பிடப்படும் ஒவ்வொரு பள்ளியும் பிரிவு 12இன் உட்பிரிவு (2) கீழ் திருப்பிச் செலுத்தலாக வரப்பெற்ற தொகை தொடர்பாக தனி வங்கி கணக்கை பராமரிக்க வேண்டும்.

(5) பிரிவு 8இன் பிரிவு (a)இன் வரம்புரை யிலும் பிரிவு 9இன் பிரிவு (a)லும் உள்ளடங்கும் வகையங்களுக்கு உட்பட்டு, அந்த நோக்கத்துக்காக பள்ளியால் பராமரிக்கப் படும் தனி வங்கி கணக்கில் மின்னணு செலுத்தல் முறையில் திருப்பிச் செலுத்துகை செலுத்தப்பட வேண்டும்."

16. RTE சட்டப் பிரிவு 15 பின்வருமாறு வாசிப்பாகிறது

"15. சேர்க்கை மறுத்தல் கூடாது: கல்வி யாண்டு துவக்கத்தில் அல்லது விதிக்கப்பட்டவாறு நீட்டிக்கப் பட்ட காலவரைக்குள் ஒரு குழந்தை பள்ளியில் அனுமதிக்கப்பட வேண்டும்.

நிபந்தனை: நீட்டிக்கப்பட்ட காலவரம்புக்கு பின்னராக சேர்க்கை கோரப்படுமானால் எந்த குழந்தைக்கும் சேர்க்கை மறுக்கப்பட க் கூடாது.

கூடுதல் நிபந்தனை: நீட்டிக்கப்பட்ட கால அளவுக்கு பின்னராக சேர்க்கப்பட்ட எந்த குழந்தை யும் உகுந்த அரசால் நிர்ணயிக்கப்பட்டவாறுள்ள முறையில் அவனது படிப்பை முடிக்க வேண்டும்.

கல்வியாண்டு துவக்கத்திலேயே அருகிலுள்ள அந்தந்த பள்ளிகளில் இந்த ஒதுக்கீடு கீழ் சேர்க்கப் படும் குழந்தைகள் சேர்வதை ஏதுவாக்கலுக்கு ஆர்ச்ச் கீழ் சேர்க்கை செயல்பாடை குறித்த காலத்தில் துவக்கலுக்கான கடப்பாடு மாநில அரசுக்கு உண்டு என்ற மறுக்கவியலாத முடிவுக்கு பல்வேறு முன்னுதாரண பின்னொளி யில் சட்டமுறை வகையங்களை ஆழ்ந்து வாசித்தல் இட்டுச் செல்கிறது சட்ட வகையங் களை நிறைவேற்றலுலுக்கான, முதன்மை பொறுப்பு அரசுக்கு பிரிவு 7(5) கீழ் உள்ளது. ஆகையால் இயற்றல் சட்டத்தில் சொல்லப்படும் கால்க்கெடுவுக்கு ஏற்ப திருப்பிச் செலுத்துகை செய்யுமாறு மாநில அரசு பணிக்கப்படுகிறது. திருப்பிச் செலுத்தல் அளவு தன்னிச்சையான தாக இருக்க இயலாது. அது 2011இன் தமிழ் நாடு குழந்தைகள் இலவச மற்றும் கட்டாய கல்வியுரிமை விதிகளில் விதி 9 r/w பிரிவு12(2)ன்படி அது இருக்க வேண்டிய தாகும். உதவிபெறா தனியார் பள்ளிகளுக்கு தடுத்து நிறுத்தப்படவியலாத கடப்பாடை மாநில

அரசு கொண்டுள்ளது. இந்தச் சட்டப்படியான கடப்பாடிலிருந்து நழுவிட ஒன்றியத்திலிருந்து நிதிவராமை காரணமாகக் காட்ட முடியாது,

17. மேலுள்ள பணித்தலை மாநில அரசுக்கு இயற்றயிருக்கும் நிலையில் சட்டம் கீழான கடப்பாடுகளை நிறைவேற்றுமாறு நடுவணரசை நாங்கள் வேண்டுகிறோம். திட்டம் தேககொ020 உடன் ஒன்றிணைகிறது என்பது மெய்யே. ஆனால் க.உ. கீழான கடப்பாடு தன்னிலையில் சுதந்திர மானது. சட்ட வகையங்களை நிறைவேற்றலில் மாநில அரசுக்கும் நடுவணரசுக்கும் ஒருங்கியல் வான பொறுப்பு உண்டு எனப் பிரிவு 7 கூறுகிறது. மாநில அரசு ஆலோசனையில் அவ்வப்போது அது தீர்மானிக்கக் கூடியவாறு உட்பிரிவு 2இல் குறிப்பிடப்படும் செலவின சதவிகிதத்தை வருவாய் மானிய உதவியாக மாநில அரசுக்கு மத்திய அரசு வழங்கிட வேண்டும் என்பதை பிரிவு 7(3) வலியுறுத்தாக்குகிறது. ஆகையால் க.உ கடபபாடுகளை நிறைவேற்றலில் மத்திய அரசின் பகிர்வை சார்பாற்றும் தொகையை மாநில அரசுக்கு வழங்கிட வேண்டும் என்பது தேககொ உடன் இணைக்கப்பட தேவையில்லை. மாநில அரசு உச்ச நீதிமன்றத்தில் ஏற்கனவே வழக்கு தொடுத்திருந்ததால் அது குறித்து கட்டுப்படுத்தும் பணிப்புரையை எங்களால் வழங்க வியலாது. 2024-25 நிதியாண்டு திருப்பிச் செலுத்தல் தொகை மொத்த தொகை ரூ3585.99 கோடி ஆகும். நடுவணரசின் பங்கு ரூ.2159.59 கோடி ஆகும் என சொல்லப் படுகிறது. ஆர க.உ உட்கூறு ரூ.200 கோடிக்குக் குறையாதிருக்க வேண்டும். இந்த தலைப்பு கீழ் நடுவணரசின் பங்குகளை விடுவித்தலில் இடர்பாடு ஏதும் இருத்தல் கூடாது. ஆகையால் SSSஇன் RTEகூறை துண்டிப்பதை பரிசீலிக்கு மாறும் நிதியை அதேற்கேற்ப செலுத்துமாறு மத்திய அரசை நாங்கள் அறிவுறுத்துகிறோம்.

18. அதற்கிணங்க இந்த நீதிப்பேராணை மனு தீர்வாக்கப்படுகிறது.

மொழியாக்கம்: பா.ஞானசேகரன்

சட்ட சொற்களஞ்சியத்தை உருவாக்க வேண்டும் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி

தமிழில் சட்ட சொற்களஞ்சியத்தை உருவாக்கினால் தான் சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை முதன்மை மொழியாக்க உச்சநீதிமன்ற அனுமதி கிடைக்கும் என்று திமுக முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

பேரவையில் அவர் பேசியதாவது:

முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆட்சியில் தான் 2006இல் ஆட்சிமொழியாக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆளுநர், குடியரசுத் தலைவர், மத்திய அரசு மூலமாக உச்சநீதிமன்ற கொலீஜியத்துக்கு அனுப்பப்பட்டது. அப்போது, தமிழ் சட்ட சொற்களஞ்சியம் உருவாக்கினால் அனுமதி தருவதாக தெரிவிக்கப்பட்டு நிறுத்தப்பட்டது. எனவே, தமிழ் சட்ட சொற்களஞ்சியம் உருவாக்கினால் அனுமதி தருவாக தெரிவிக்கப்பட்டு நிறுத்தப்பட்டது. எனவே, தமிழ் சட்ட சொற்களஞ்சியத்தை உருவாக்கி னால் மட்டுமே தமிழை சென்னை உயர் நீதிமன்றத்தில் முதன்மை மொழியாக்க முடியும்.

அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் தில்லியில் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகள் பங்கேற்ற மாநாட்டில் தமிழை சென்னை உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாக அங்கீகரிக்க வேண்டும் என்று முன்னாள் முதல்வர் ஜெ.ஜெய லலிதா வலியுறுத்தினார். மேலும் பிரதமர்களை நேரில் சந்திக்கும்போதெல்லாம் வலியுறுத்தினார்.

உத்தரபிரதேசம், பீகார், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மாநில உயர்நீதிமன்றங்களில் ஹிந்தி வழக்காடு மொழியாக உள்ளது. வடக்கு தெற்கு எனப் பிரித்து பார்ப்பதால் தான் தமிழகத்துக்கு அநீதி ஏற்படுகிறது.

குஜராத், சத்தீஸ்கர், கர்நாடக மாநிலங்களும் இப்போது தங்களது தாய்மொழியை அவர்களது உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாக அங்கீகரிக்க கோரிக்கை வைத்துள்ளனர். எனவே, இந்தத் தீர்மானத்தை பிரதமரிடம், முதல்வர் விஜய் நேரடியாக விளக்கி தமிழை சென்னை உயர் நீதிமன்ற வழக்காடு மொழியாக ஆக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முன்னாள் அமைச்சர் எ.வ. வேலு சென்னை உயர்நீதிமன்றத்தை தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என பெயர் மாற்றும் வகையில் தீர்மானத்தில் திருத்தம் செய்ய வேண்டும்.

நன்றி: தினமணி 4.9.2026

உரிமையியல் பல்வகை மேல்முறையீடும் பொதுவர் மற்றும் சமரச சட்ட வழக்கு

சென்னை உயர்நீதிமன்றம்
முன்னிலை: மாண்புமிகு நீதியரசர் பி.வேல்முருகன்,
மாண்புமிகு நீதியரசர் கே.கோவிந்தராஜன், மாண்புமிகு நீதியரசர் திலகவதி
உ.ப.ம. எண் 232/2024 மற்றும் உ.ப.ம.எண் 2398/2024
30.4.2026
2026 (3) CTC 463

1. விஜயலஷ்மி, பொறியாளர்கள் பணி வரையறுக்கப்பட்டது
(முன்பு விஜயலஷ்மி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்,
என்ஜிஜிஓ காலனி அஞ்சல், கோயம்புத்தூர் ...மேல்முறையீட்டாளர்
–எதிர்–
ஜி.டி.என். நிறுவனம் வரையறுக்கப்பட்டது. (முன்பு பாக்ஓர்த் உத்யோக் லிமிடெட் என்று அறியப்பட்டது) 3ஆம் தளம், பாலால் டவர், எம்.ஜி.ரோடு, ரவிபுரம், கொச்சி–628 016 அலுவலகம் தாராபுரம் சாலை, இந்திரா நகர், துங்கவி அஞ்சல், உடுமலைபேட்டை – 642 203. ...மனுதாரர்(கள்)

கோரிக்கை: இந்த உரிமையியல் பல்வகை மேல்முறையீடு பொதுவர் மற்றும் சமரச சட்டம், 1996இன் 37ஆம் பிரிவின்படி, உ/ப. 2015, வணிக நீதிமன்றங்கள் சட்டத்தின் பிரிவு 13(1)(அ)இன்படி இந்த மேல்முறையீடு, முன்னிடப்படுகிறது. தனிப் பொதுவரால் பிறப்பிக்கப் பட்ட 18.12.2017 தேதியிடப்பட்ட தீர்வினைத் தள்ளுபடி செய்யக் கோரியும் அதன் விளைவான A.O.T. எண் 148/2023 கோயம்புத்தூர் வணிக நீதிமன்றங்கள் நீதிமன்றத்தின் கோப்பில் உள்ள 21.8.2023 தேதியிடப்பட்ட ஆணையைத் தள்ளுபடி செய்யக் கோரியும் முன்னிடப் பட்டுள்ளது.

1.4.2026 அன்றைக்கு தீர்ப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டு 30.4.2026 அன்று பிறப்பிக்கப் பட்டது.

தீர்ப்பு

நீதிபதி டி.கே. கோவிந்தராஜன்,
நீதிபதி திலகவதி

1. இந்த மேல்முறையீடு, A.O.P. எண் 148/2023–இல் பிறப்பிக்கப்பட்ட 21.8.2023 தேதியிடப்பட்ட ஆணையைத் தள்ளுபடி செய்ய மாவட்ட நீதிபதி கோயம்புத்தூரில் செய்யப் படுகிறது மற்றும் இதன் விளைவாக 18.12.2017 தேதியிட்ட பொதுவரின் தீர்வை யும் தள்ளுபடி செய்யக் கோரப்பட்டது.

2. திரு.பி.ஆர்.ராமகிருஷ்ணன் மேல்முறை யீட்டாளர் சார்பாக முன்னிலையான வழக்கறிஞரும் மற்றும் திரு.ராகுல் பாலாஜி தனி எதிர் வழக்கீட்டாளர் சார்பாக முன்னிலையாகிறவரும் நாங்கள் கேட்டறிந்துள்ளோம்.

3. தனிப் பொதுவர், பொதுவர் தீர்ப்பை 13.3.2019 அன்று தேதியில் பிறப்பித்துள்ளார். அதில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது (அ) எதிர்வழக்கீட்டாளர் அவரது தரப்பினருக்கு (ரூ.325, 65,000 தொகையை 9 வேலை யாட்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட தொகையாக செலுத்தப்பட்ட வரைக்கட்டுக்காக செய்யப்பட்ட தொகையைத் திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) தரப்பினர் ரூ.25,65,000 பணத்திற்கு 8.9.2026 முதல் தீர்வுத் தேதி வரையில் 9 சதவீதம் வட்டி ஆண்டுக்கு என்னும் விகிதத் திலும் பின்னர் அதன் பின்னர் 12 சதவீதம் ஆண்டுக்கு என்ற வீதத்திலும் வட்டி செலுத்தப் படுதல் வேண்டும்.

(இ) தரப்பினர்கள் தங்களது செலவுத் தொகையினை ஏற்பது.

4. சுருக்கமாக கூறுவதாவது: 18.12.2017 தேதியிடப்பட்ட ஆணை மு.ம.எண் 533/ 2014இல் பிறப்பிக்கப்பட்டது.இந்த நீதிமன்ற கோப்பில் உள்ளது. தனிப் பொதுவர் இந்த கட்டுரையில்பேரில் அமர்த்தப்பட்டார் மற்றும் இவர்களிடையேயான பூசல்களை சாதிப்பதற் காக, கோரிக்கை விவர உரையில், வாதிடப் பட்டதாவது மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர் வழக்கீட்டாளர், பருத்தி இழைத் தயாரித்தலில் ஈடுபட்டுள்ளனர். அவர்களது அலுவலரின் போது, அவர்கள் 22.12.2004 தேதியிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தக் குறிப்பாணையை ஏற்படுத்தியுள்ளனர். இதன் வரையுரைகளின் மேல்முறையீட்டாளர், உடுமலைப்பேட்டையில் உள்ள நூற்பாலை முழுவதையும் விற்க உடன் பட்டுள்ளார். அதாவது தால்லி ரோட்டில் உள்ளதை அதாவது தொடர்புடைய எதிர் வழக்கீட்டாளருக்கு மற்றும் அவர்களிடையே விற்பனை உடன்படிக்கை இவர்களிடையே ஏற்பட்டது. 19.1.2005 அன்று, அதாவது உடுமலைப்பேட்டையில் உள்ள சொத்தினை விற்பதற்காக, மேலும், இதில் வாதிடப்பட்டதாவது, மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர் வழக்கீட்டாளர் விற்பனை உடன்படிக்கை 31.12.2005 தேதி யிட்டதை ஏற்படுத்தியுள்ளனர். இதன் மூலம், மேல்முறையீட்டாளர் நூற்பாலையை விற்றுள்ளார். அதாவது நன்கு இயங்கி வந்ததை அதன் நிலங்கள், தொழிற்சாலை மற்றும் பிற கட்டிடங்களுடன் மொத்தமாக, ரூ.6.50 கோடிக்கு விற்பனை மறுபயனாக விற்க முன்வந்துள்ளார். பின்னர், அந்த பிரிவின் கையுடைமை எதிர் வழக்கீட்டாளருக்கு 31.1.2005 அன்று ஒப்படைக்கப்பட்டது மற்றும் 31.1.2005 அன்று தரப்பினர்களிடையே ஈட்டுறுதி ஆவணம் ஏற்படுத்தப் பட்டது.

5. இதில் வாதிடப்பட்டதாவது மேல்முறை யீட்டாளர், 12.9.2003 அன்று பன்னிரெண்டு வேலையாட்களின் பணியை முடிவுறுத்தியுள்ளார் மற்றும் இந்த விற்பனை நடைமுறையி லிருக்கையில் பணி முடிவுறுத்து ஆணை பிறப்பிக்கப்பட்டதை எதிர்த்து தொழில்துறைப் பூசல் எழுப்பப்பட்டது. இதில் வாதிடப்பட்டதாவது, 22.12.2004 தேதியிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த குறிப்பாணையின் கூறு 12இன் வரையுரைகளின்படியும் மற்றும் 31.1.2005 தேதியிடப்பட்ட விற்பனை உடன்படிக்கையின் கூறு 11 காரணமாகவும், 31.1.2005 தேதியிடப் பட்ட ஈட்டுறுதி ஆவணத்தில் கூறு 2 காரணமாக மேல்முறையீட்டாளர் நடப்பில் உள்ள பூசல்கள்/ கொடுபட உள்ளவற்றை அந்தப் பிரிவு தொடர்பாக. அவற்றை எதிர்வழக்கீட்டாளருக்கு உரிமை மற்றும் செய்யப்படுவதற்கு முன்னர் சரி செய்ய உடன்பட்டார்.

6. மேலும், 27.11.2012 தேதியிட்ட ஒரு பொதுத் தீர்வு மூலம் தொழிலாளர் நீதிமன்றம் கோயம்புத்தூர் ஒன்பது வேலையாட்களின் பணி முடிவுறுத்து ஆணையைத் தள்ளுபடி செய்து, எதிர்வழக்கீட்டாளர் அவர்களை மீண்டும் பணிய மர்த்தப் பணித்தது. அதாவது பணி தொடரும் வகையிலும், குழு பின் தேதியிட்ட ஊதியத்துடன் பிற வேறு நலப்பயன்களையும் வழங்கிடப் பணித்தது. இதனைத் தொடர்ந்து, எதிர்வழக் கீட்டாளர், கோரிக்கைகளை மேல்முறையீட்டாளரிடம் வைத்துள்ளார். அதாவது 19.8.2013இல் பணி முடிவுறுத்தப்பட்ட வேலையாட்களின் கோரிக்கை களைச் சரி செய்வது தொடர்பாக.

7. தரப்பினரின்றி, கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றம், பிறப்பித்த தீர்வு காரணமாக, எதிர் வழக்கீட்டாளர், தரப்பின்றி, பிறப்பிக்கப்பட்ட தீர்வை தள்ளுபடி செய்யப்பட்டது. இதற்கு எதிராக எதிர்வழக்கீட்டாளர் நீதிப்பேராணை மனு ஒன்றை இந்த நீதிமன்றத்தின் முன்பு முன்னிட்டு உள்ளார் மற்றும் 11.8.2015 தேதியிட்ட ஆணை மூலமாக பின் தேதியிட்ட ஊதியத்தின் 50 சதவீதத்தினை எட்டு வாரங்களுக்குள் வைப்பீடு செய்யக் கோரி இடைக்கால இருத்தி வைப்புக்கு நிபந்தனை விதித்து வழங்கியது. சொல்லப்பட்ட ஆணை மேல்முறையீட்டாளருக்கு தெரியப்படுத்தப்பட்டது. கடிதங்கள் 17.8.2015 24.8.2025 மூலமாக இவை உரியவாறு மேல்

முறையீட்டாளரால் பதிலளிக்கப்பட்டன. இதில் மேலும் வாதிடப்பட்டதாவது மேல்முறையீட்டாளர் நிறுமத்தின் துணைத் தலைவர், வாதிட்டதாவது 12.10.2015 அன்று எதிர்வழக்கீட்டாளர் நீதிமன்றத்தின் வெளியே இந்தப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளலாம் என்பது மற்றும் இதனையொட்டி எதிர்வழக்கீட்டாளர் ரூ.32,00,000 (ரூபாய் முப்பத்து இரண்டு லட்சம்) தொகையினை செலுத்தியுள்ளார். அதாவது 9 வேலையாட்களுக்கு சொல்லப்பட்ட தொகை ரூ.32,00,000 இனை பு.ஒ.கு. வரைவுரைகளின்படியும் அதாவது விற்பனை உடன்படிக்கை மற்றும் ஈட்டுறுதி ஆவணம்படியும் கேட்டபோது மேல்முறையீட்டாளர் 1947 தொழில்துறை பூசல்கள் சட்டத்தின் பிரிவு 25SS கருத்துப்படி, கடப்பாட்டினை மறுத்துள்ளார். எனவே, மேல்முறையீட்டாளரை ரூ.32,00,000 தொகையினை 18 சதவீதம் ஆண்டு வட்டியுடன் 22.10.2015 முதல் 17.3.2018 காலத்திற்கானதை அளிக்கப் பணிக்குமாறு கோரப்பட்டது.

8. மறுவகையில், மேல்முறையீட்டாளர், இதில் எதிர்வழக்கீட்டாளராக பொதுவர் தீர்ப்பாயத்தின் முன்பு, எதிர்ப்பு பற்றிய விவர உரையினை முன்னிட்டுள்ளார் மற்றும் கூடுதல் மற்றும் கூடுதல் விவர உரை. இவை நிலை எதிர்ப்பு தொடர்பான வாதங்கள் அதாவது பூசலின் நுதல் பொருள் பொதுவர் தீர்ப்புக்கு உட்படாதது. ஏனெனில் சட்டத்திற்கு வெளியே ஒப்பந்தப் படுவதை இயல்விக்க முடியாதது மற்றும் தகுவதி வாய்ந்த தொழிலாளர் நீதிமன்றத் தீர்வு அறுதியானது. இது பொதுவர் தீர்ப்பாயத்தின் முன்பு விசாரணைக்கான நுதல் பொருளாக முடியாது. இதில் வாதிடப்பட்டதாவது, எதிர்வழக்கீட்டாளர், தொழிலாளர் நீதிமன்றத்தின் முன்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியுள்ளார் என்பது. அதனால் தரப்பினரின்றித் தீர்வு அளிக்கப்பட்டது. இதனால் எதிரான ஆணை பெறப்பட்டது. தரப்பினரின்றி தீர்வு அளிக்கப்பட்டதை எதிர்த்தால் மனுவிலும் காலத்தாழ்வு மன்னிப்பதற்கான விண்ணப்படும் 383 நாட்காலத் தாழ்வில் செய்யப்பட்டுள்ளது. எதிர்வழக்கீட்டாளர், போதிய விழிப்புணர்வுடன் இல்லை மற்றும் அவரது வழக்கை நடத்துவதில் அசட்டையாக இருந்துள்ளார் மற்றும் இவர் இப்பழியை மேல்முறையீட்டாளர் மீது சுமத்த முடியாது. இவரது தவறை காரணமாக உள்ளபோது, பொருண்மையின்படி, தரப்பினர்கள் பொதுவர் கூறுக்கு மேலாகப் பயணித்து, இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 62ஆம் பிரிவின் காரணமாக, எதிர்வழக்கீட்டாளர் சொல்லப்பட்ட கூறினை தேர்வு செய்யவில்லை. எனவே, எதிர்வழக்கீட்டாளர் பொதுவர் கூற்றினை செயற்படுத்த உரிமை உடையவர் ஆகார். மேல்முறையீட்டாளர் மேலும் வாதிட்டதாவது அந்த அவரு ஒரு நடத்தப்பட்ட நிலையில் மட்டுமே உரிமை மாற்றம் செய்யப்பட்டது. உரிமை மாற்றம் பெற்றவர்கள் உரிமை மாற்றும் செய்யப்பட்டவரின் மூலம் மாற்றப்பட்ட பணியாளர்கள் தொழில்துறைப் பூசல்கள் சட்டத்தின் பிரிவு 25FFஇன் படி எதிர்வழக்கீட்டாளர் அனைத்துப் பணியாளர்களுக்கும் அதாவது எதிர்வழக்கீட்டாளர் நிறுமத்தில் பணிபுரிய முற்பட்ட பணியாளர்கள் அனைவருக்கும் கடப்பாடுடைய வராவார்.

9. மேலும், பொதுத் தீர்ப்பாயம் தொழிலாளர், தீர்ப்பாயத்தின் தீர்வினை இல்லாததாக்க எந்த அதிகாரத்தையோ அல்லது அதிகார வரம்பையோ கொண்டிருக்காது. இது அறுதி நிலையைப் பொருண்மைப்படி எட்டியுள்ளது. எதிர்வழக் கீட்டாளரின் கோரிக்கை 1996 பொதுவர் மற்றும் இணக்கத் தீர்வும் சட்டத்தின் 43ஆம் பிரிவின்படி நம்பிக்கைக்கிடமின்றி தடை செய்யப் படுகிறது மற்றும் கூறப்பட்ட இழப்பீடுகள் அனைத்தையும் சரி செய்கிற வகையில், இது நீட்டிக்கப்பட பொதுவர் கூறில் வீச்செய் இல்லை. எனவே, கோரிக்கை மனு தள்ளுபடி செய்யக் கோரப்பட்டது.

10. தனிப் பொதுவர் 13.3.2019 தேதியிட்ட தீர்வினை பிறப்பித்தார். அதில் மேல்முறையீட்டாளர் ரூ.25,65,000 தொகையினை செலுத்துமாறு பணித்தார். அத்துடன் 9 சதவீதம் வட்டி ஆண்டுக்கு என்று 8.9.2016 முதல் தீர்வுத் தேதி வரையிலும் மற்றும் அதன் பின்னர், 12 சதவீதம் ஆண்டுக்கான வட்டியுடன்.

11. இதனால், குறையுற்றவர், தற்போதைய மேல்முறையீட்டை செய்துள்ளார்.

12. மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் பணிந்தளிப்பது, பொதுவர், கோரிக்கை மனுவை ஏற்பதற்கு அதிகார வரம்பு கொண்டிருக்க வில்லை என்பது மற்றும் இந்தத் தீர்வில் பிறப்பிக்கப்பட்டதே, ஊடகத்தின்படி மற்றும் இதில், எந்த உறுதியூட்டும் சான்றும் இல்லை. அதாவது கோரிக்கையை ஆதரிக்கத்தக்கதாக. எனவே மேல்முறையீட்டாளர் மனுவினை முன்னிட வற்புறுத்தப்பட்டுள்ளார். ஏ.ஓ.பி.என். 148/2023இன் முன்னிட்டுள்ளார். இது கோயம்புத்தூர் வணிக நீதிமன்றத்தின் கோப்பில் உள்ளது. வணிக நீதிபதி தவறுதலாக மனு வினைத் தள்ளுபடி செய்துள்ளார். தனிப் பொதுவரின் தீர்வினை உறுதி செய்துள்ளார். 21.8.2023 தேதியிட்ட ஓர் ஆணை மூலமாக இதற்கு எதிராக மேல்முறையீட்டாளர், தற்போதைய மேல்முறையீட்டை முன்னிட்டுள்ளார். அவர் மேலும் பணிந்தளிப்பது தனிப்பொதுவர் மற்றும் வணிக நீதிமன்ற நீதிபதி தொழில்துறை பூசல்கள் தொடர்பாக. தொழில்துறை நீதிமன்றத்திற்கு மட்டுமே. தனிப்பட்ட அதிகார வரம்பு உள்ளது மற்றும் தொழில்துறை நீதிமன்றம் ஒப்பந்த வரையுரைகள் மூலமாகக் கட்டுப்படுத்தப்பட முடியாது. எனவே, இந்த பூசல் பொதுவர் மூலம் தீர்க்க இயலாது. இவரது வாதத்திற்கு ஆதாரமாக இவர் பின்வரும் தீர்ப்புகளை ஆதாரமாகக் காட்டியுள்ளார்.

(i) துஷ்யந் ஜன்பந்த் –எதிர்– ஹுண்டாய் ஆட்டோஎவர் இந்தியா பிரைவேட் லிமிடெட், 2024 உச்.நீ.வ. வலைதளம் உச்.நீ. 3691: 2024 (12) SCR 492.

(ii) வித்யா டிரோலியா –எதிர்– துர்கா டிரேடிங் கார்ப்பரேஷன், 2021 (2) CTC 673 (SC) : 2021(2) உச்.நீ.வ. 1

(iii) விமல் கிஷோர் ஷா மற்றும் பிறர் –எதிர்– ஜெயேஷ் தினேஷ் ஷா மற்றும் பிறர், 2016 (5) சிடிசி 722 (உச்நீ.) : 2016 (6) உச்.நீ.வ. 788.

(iv) கிங்பிஷர் ஏர்லைன்ஸ் லிமிடெட் –எதிர்– கேப்டன் பிரித்வி மல்ஹோத்ரா, 2012 (5) LLN 632 (Bom.) : 2013 (1) (AIR) Bom. R2

(v) பூஸ் ஆலென் அண்டு ஹமில்டன் இங்க், –எதிர்– எஸ்.பி.ஐ. ஹோம் பைனான்ஸ் லிமிடெட்., 2011 (5) உச்.நீ.வ. 532.

13. மாறாக, எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் வாதிட்டதாவது, பொதுவர் தீர்வு சட்டத்தின்படி செல்லத்தக்கது. தீர்ப்பாயத்தின் முன்பான கோரிக்கையில் கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட தீர்வினை எதிர்க்கிற மீண்டும் கிளர்ச்சி செய்யும் ஒன்று. பொதுவர் தீர்ப்பாயத்தின் முன்பான பூசல் ஒப்பந்தத் தன்மையை மட்டுமே கொண்டுள்ளது. இது பு.ஒ.கு.யின் வரையுரைகளை மேல்முறை யீட்டாளர் செயற்பாட்டினால் மீறுகைகள் செய்யப் பட்டுள்ளதால் எழுவன. மொத்த விற்பனை உடன்படிக்கை மற்றும் ஈட்டுறுதி ஆவணம் தொடர்பானது. அவர் மேலும் பணிந்தளிப்ப தாவது, பிரிவு 34இன்படி சட்டப்படியான செயற்பாடு பொதுவர் மற்றும் இணக்கத் தீர்வு சட்டத்தின் எல்லைகளுக்கு உட்பட்டு விரிவாகவே விளக்கப்பட்டுள்ளன. பல்வேறு அதிகார அமைப்பு களால், அதுவும் குறிப்பாக (0 எண் 5383/ 2024 (இந்திய உச்சநீதிமன்றம்) இந்த நெறிமுறை பிரிவு 34இன்படியானச் சட்ட செயற்பாடு சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ள தாவது, இது ஒரு மேல்முறையீடு அல்ல, ஒரு சீராய்வுமல்ல. இது ஒரு தீர்வுக்கு எதிரான செயற்பாடு. அதுவும் சட்டத்தின் பிரிவு 34இன் குறிப்பிட்ட வாறான செயற்பாடு அந்தப் பிரிவிலேயே அளிக்கப்பட்டுள்ளவாறு. இதில் மனுதாரர் நீதிமன்றத்தின் முன்பு, அவர் தனது கோரிக்கையினை பிரிவு 34க்குள் அடக்க முடியுமானால் அவர் அந்த பொதுவர் தீர்வினை விட்டு விட உரிமை பெறுவார் என்பது. அந்த பொதுவர் தீர்வினை விட்டு விட உரிமை பெறுவார் என்பது. வேறுவகையில், நீதிமன்ற மானது பொதுவர் தீர்வினைக் காரணமின்றி நீதி முறையில் இடையீடு செய்ய முன் வராது. அவர் மேலும் பணிந்தளிப்பதாவது பிரிவு 25SS

தவறுதலாக ஆதாரமாக மேல்முறை யீட்டாளரால் கொள்ளப்பட்டுள்ளது. அதாவது கடப்பாடுகளில் இருந்து தப்பிப்பதற்காக.

14. இரு தரப்பினர்களும் கேட்டறியப்பட்டு பதிவேடுகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன.

15. தற்போதைய வழக்கில், இதில் பூசல் இல்லை அதாவது மேல்முறையீட்டாளர் 12.9.2003 அன்று 12 பணியாளர்களின் பணியினை முடிவுறுத்தியுள்ளார் என்பது மற்றும் வேலையாட்களால் தொழில் துறை பூசல் எழுப்பப்பட்டுள்ளது. அதாவது பணி முடிவுறுத்தப் பட்ட ஆணையை எதிர்த்து 27.11.2012 தேதியிடப்பட்ட ஒரு பொது தீர்வின் மூலம் கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றம் 9 வேலை யாட்களின் பணி முடிவுறுத்த ஆணையைத் தள்ளுபடி செய்துள்ளது மேல்முறை யீட்டாளரை அவர்களைப் பணியில் மீண்டும் சேர்க்குமாறும் அவர்களுக்கு பணித் தொடர்ச்சியுடன் பின் தேதியிட்ட ஊதியத்தையும் பிற நலப்பயன் களையும் அளிக்குமாறு பணித்துள்ளது.

16. எதிர்வழக்கீட்டாளருக்கிணங்க, ரூ.32,00,000 தொகையானது, வேலையாட்களுக்கு அளிக்கப் பட்டுள்ளது என்பது. அதாவது நீதிமன்றத்துக்கு வெளியே எதிர்வழக்கீட்டாளரால், 12.10.2015 அன்று மேல்முறையீட்டாளர், நிறுமத்தால் கூறப்பட்டவாறு, பு.ஒ.கு.இன் வரையுரைகளின் படி, ரூ.32,00,000 தொகை எதிர்வழக்கீட்டாள ரால், கோரப்பட்டபோது, எதிர்வழக்கீட்டாளர், விற்பனை உடன்படிக்கை மற்றும் ஈட்டுறுதி ஆவணத்தின்பேரில் சொல்லப்பட்ட கடப்பாட்டினை மறுத்துள்ளார். எனவே, எதிர்வழக்கீட்டாளர் பொதுவர் தீர்ப்பாயத்தின் முன்பு கோரிக்கை மனுவை முன்னிடும் நிலைக்குக் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளார்.

17. இந்த மேல்முறையீட்டில் உள்ளடங்கி யுள்ள பிரச்சினைகளை வகை செய்வதற்கு முன்னர், நாம் முரண்பாடாக உள்ள முக்கிய குறிப்பினை முதலில் தீர்மானிப்போம். அதாவது இந்த பூசல் பொதுவர் தீர்ப்பு முறையில் தீர்க்கக் கூடியதா அதாவது தொழிலாளர் நீதிமன்றத்தி னால் பிறப்பிக்கப்பட்ட தீர்வினை செயற் படுத்துவது தொடர்பாக பூசல்களை சட்டத்தின் வகைமுறைகளின்படி அதிகாரங்களை செயற் படுத்துவது தொடர்பான பூசல்களைப் பொதுவர் தீர்ப்பின் மூலம் சரி செய்ய இயலுமா? அதுவும் தொழிலாளர் நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட்ட பின்னர் இதனை செயற்படுத்துவது செல்லத் தக்கதா.

18. உச்சநீதிமன்றம், போஸ் ஆவன் மற்றும் ஹமில்டன் காப்பீடு –எதிர்– பாஸ் வ. வீட்டு நிதி வசதி வரையறுக். 2015 (5) உச்.நீ.வ. 532 கூறியதாவது. தனிப்பட்ட உரிமைகள் தொடர்பான மேலும் பூசல்கள் பொதுவர் தீர்ப்புக்கு செல்லத் தக்கவை. ஆனால் சட்டப்படியான உரிமைகளை உள்ளடக்கி யுள்ள பூசல்கள் மற்றும் பொது பூசல்கள் அவ்வாறில்லை.

19. மேலும், வித்யா, ட்ரோலியா –எதிர்– துர்கா டிரேடிங் கார்ப்பரேஷன், 2021 (2) த.த.வ. 673 (உச்.நீ.) 2021 (2) உச்.நீ.வ. (1). உச்சநீதிமன்றம் தெளிவாக்கியதாவது, பொதுவர் தீர்ப்பில் தீர்க்கப்பட முடியாதவை பற்றி வகைப்படுத்தியது. அதாவது சிறப்பு சட்டங் களால் ஆளப்படுகிற பொருட்பாடுகள் உள்ளடங் கலாக, மற்றும் தீர்ப்பாயங்களின் தனிப்பட்ட அதிகார வரம்பை உள்ளடக்கியவை. அனைத்துத் தொழில்துறைப் பூசல்களும் 1947 தொழில் துறைப் பூசல்கள் சட்டத்தின் நோக்கெல்லைக்குள் வருபவையே. இந்தச் சட்டம், தொழிலாளர் நீதிமன்றங்கள்/தொழில்துறை தீர்ப்பாயங் களின் சிறப்பு விசாரணைக்கு வகை செய்கிறது. அதாவது மீண்டும் பணியில் சேர்த்தல். அதாவது ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே அமையாதவை பற்றியவை. ஒருமுறை பூசல் ஒன்று, தொழிலாளர் நீதிமன்றத்திற்கு சுட்டப்பட்டு தீர்மானிக்கப்படும் போது, அந்த தீர்வு இறுதி நிலையை அடையும் மற்றும் தரப்பினர்கள் அதனை மீண்டும் பூசலாக்க இயலாது. அதுவும் அதே பிரச்சினையைத் தனியார் பொதுவர் தீர்ப்புக்கு உட்படுத்த இயலாது.

20. எனவே, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்வு பொதுவாகவே, பொதுவர் தீர்வினை மேலோங்கி நிற்கும். இதில் நேரடியாக இவற்றில் முரண்பாடு எழும் நேர்வில், அதாவது சட்டப்படியான பணி உரிமைகள் தொடர்பாக. 1996 பொதுவர் தீர்ப்பு மற்றும் இணக்க உடன்படிக்கைகள் சட்டம் தானே முற்பட்ட பொதுவர் தீர்ப்பினை ஆளுகை செய்யும் 1947 தொழில்துறைப் பூசல்கள் சட்டம் ஒரு சிறப்பு சமூக சட்டம் இது வேலையாட்களைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட ஒன்று மற்றும் இது ஒரு கட்டாய நடைமுறையைக் கொண்டது. இது தனிப்பட்ட உடன்படிக்கைகளை இதன் மீதூர்ந்து இயங்க முடியாது. சட்டப்படியான பாதுகாப்புகள் அதாவது தவறாக பணி முடிவுறுத்தம் செய்தல், ஊதியம், மறுபணியமர்த்தம் மற்றும் நியாயமற்ற தொழிலாளர் நடைமுறைகள் ஒருவரது உரிமைகளை பாதிப்பவை. (இது பொதுவாக பணிபுரியும் பொது மக்களை பாதிக்கக் கூடியது) மற்றும் பொதுவாக பொதுவர் தீர்ப்பிற்கு உட்பட்டதல்ல. பணி பெறுபவர் தனிப்பட்ட பொதுவர் கூறினை பயன்படுத்த முயற்சிப்பாரானால், அதுவும் தொ.பூ.சட்டத்தின்படியான தொழிலாளர் நீதிமன்ற கட்டாய அதிகார வரம்பினை நீக்க முயற்சிப்பாரானால், நீதிமன்றங்கள், கூறியுள்ள தாவது, சட்ட அமைப்புகளின் (தொழிலாளர் நீதிமன்ற) முடிவு மேலோங்கியிருக்கும்.

21. மேலும், 1947 தொழில்துறை பூசல்கள் சட்டம் ஒப்பந்தப்படியான பொதுவர் தீர்ப்பு சட்டப்படியான உரிமைகளை மேலோங்க முயற்சிக்கும்போது, இதுவே செயற்படும். வேற சொற்களில், தொழிலாளர் நீதிமன்றத்தின் அல்லது தொழில்துறை தீர்ப்பாயத்தின் முடிபே கட்டாயமானதாகும். அதுவே முந்தி நிற்கும். ஏனெனில் அது, சட்டப்படியான அதிகாத்தின்படி தொழில்துறை அமைதியை நிலைபெறச் செய்யும். இது தனியார் ஒப்பந்தப் பூசல்களிலிருந்து வேறுபட்டது. மேலானது.

22. இந்தியாவின் உச்சநீதிமன்றம் துஷ்யந்த் ஜன்பத் -எதிர்- ஹுண்டாய் ஆட்டோஎவர் இந்தியா லிமிடெட், 2024 (12) SCR 492. இதில் ஒரு முக்கியமான விதியினைக் கூறியுள்ளது. அதாவது ஒப்பந்த வரையுரைகள் மற்றும் சட்ட உரிமை தொடர்பான இடைநிலைச் செயற்பாடு. இந்த வழக்கில் சட்ட உரிமைகள் பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அதுவும் குறிப்பாக ஊதியங்கள் தொடர்பானவையும் பணியாளர் பூசல்கள் தொடர்பானவையும் இவை முன்னுரிமை பெறும். அதாவது பணியமர்த்துபவர்களின் ஒப்பந்தங் களின் பொதுவர் தீர்ப்பு என்பதற்கும் மேலாக.

23. எனவே, சட்ட உரிமைகள் உள்ளடக்கப் பட்டுள்ளன பூசல்கள், அதாவது தவறான பணி நீக்கம் அல்லது வேலையாட்களின் ஊதிய கோரிக்கை போன்றவை. அடிக்கடி சிறப்பு தொழிலாளர் நீதிமன்றங்களுக்காக ஒதுக்கப் படுபவை. இவை மூலம் சட்டப் பாதுகாப்பு பெறப்படுகிறது. (மனு பணியமர்த்தம பின் தேதியிட்ட ஊதியம்) இவற்றை தனியார் பொதுவர்கள் வழங்க அதிகாரம் கொண்டிருக்க மாட்டார்கள். இதில் தொழிலாளர் நீதிமன்றம் தனிப்பட்ட அதிகார வரம்பு கொண்டிருக்கும் அதாவது ஒரு நுதல் பொருள் தொடர்பாக அதாவது சட்டப்படி தொ.மு. சட்டத்தின்படி பெற வேண்டிய உரிமைகள் தொடர்பாக. அதன் தீர்வுகள் தனியார் பொதுவர் தீர்ப்புடன் முரண்பாடு இருப்பின் மீதூர்ந்து இயங்கும்.

24. தற்போதைய வழக்கில், 12.9.2003 அன்று 12 வேலையாட்கள் தொழில் துறை பூசல்களை எழுப்பினர். தொழிலாளர் நீதிமன்றத்தின் முன்பு, கோயம்புத்தூரில் தங்களை மீண்டும் பணியில் சேர்க்க கோரினார். இதில் பூசலில்லாதது. பு.ஒ.கு.இன் 12ஆம் கூறின்படி கூறு 11 விற்பனை உடன்படிக்கை மற்றும் ஈட்டுறுதியும் ஆவணம், மேல்முறையீட்டாளர், அனைத்து நடப்பில் உள்ள பூசல்களையும் தீர்க்க உடன்படுகிறார். அதாவது பூசல்கள் கடன்கள், கடப்பாடுகள், கோரிக்கைகள், வெளிப்படையாக உள்ள இழப்பு மற்றும் செலவுகள் தொடர்பாக. அவ்வாறு இருக்கையில், தொழிலாளர் நீதிமன்றம் கோயம்புத்தூரில் தரப்பினரின்றி ஆணை 27.11.2012 அன்று பிறப்பிக்கப் பட்டது. இதன் மூலம், 9 வேலையாட்களின் பணி

முடிவுறுத்தும் தள்ளுபடி செய்யப்பட்டது மற்றும் எதிர்வழக்கீட்டாளர்களுக்கு 1947 தொழில் துறைப் பூசல்கள் சட்டத்தின் பிரிவு 25FF பிரிவினை செயற்படுத்தி மீண்டும் பணியமர்த்தி பின் தேதியிட்ட ஊதியத்தினையும் வழங்குமாறு பணிக்கப்பட்டது.

25. எதிர்வழக்கீட்டாளர், தொழிலாளர் நீதிமன்றத்திற்கு முன்பு, விண்ணப்பம் ஒன்றினை முன்னிட்டார். அதாவது தரப்பினரின்றி பிறப்பிக்கப் பட்ட ஆணையைத் தள்ளுபடி செய்யக் கோரினார். அது 6.9.2015 அன்று தள்ளுபடி செய்யப் பட்டது. அதன் பின்னர், எதிர்வழக்கீட்டாளர், நீதிப் பேராணை மனு ஒன்றை இந்த நீதிமன்றத்தின் முன்பு முன்னிட்டார் மற்றும் 11.8.2015 தேதியிட்ட ஆணையின் மூலம் இந்த நீதிமன்றம், எதிர்வழக்கீட்டாளருக்குப் பணிப்புரை வழங்கியது. அதாவது பின் தேதியிட்ட ஊதியத்தில் 50 சதவீதம் வைப்பீடு செய்யுமாறு பணித்தது. 12.10.2015 அன்று, எதிர்வழக்கீட்டாளர், நீதிப்பேராணை மனுவை, மீளப் பெற்றார் மற்றும் ரூ.32,00,000த்தினை 9 வேலையாட் களுக்கும் அளித்துள்ளார். எதிர் வழக்கீட்டாளர் அதன் பின்னர் ஒரு கேட்பு அறிவிப்பினை 8.9.2016 அன்று மேல்முறை யீட்டாளருக்கு அனுப்பியுள்ளார். அதாவது இந்தக் கடப் பாட்டினை மறுத்துள்ளார். எனவே எதிர் வழக்கீட்டாளர் மு.ம.எண் 533/2017இனை பொதுவர் தீர்ப்பு மற்றும் சமரச உடன்படிக்கைச் சட்டத்தின் 11ஆம் பிரிவின்படி முன்னிட்டு ள்ளார். அது 18.12.2017 அன்று அனுமதிக்கப் பட்டது. இதன் மூலம் ஒரு பொதுவர் அமர்த்தப் பட்டுள்ளார். மேல்முறையீட்டாளர் வழக்கறிஞ ரால் சரியாக குறிப்பிடப்பட்டவாறு எதிர்வழக் கீட்டாளரால் மீளப்பெறக் கருதியது. ஊதியங்கள் அல்லது மேல்முறையீட்டாளருக்கும் எதிர்வழக் கீட்டாளருக்கும் இடையே ஏற்படுத்தப் பட்ட ஒப்பந்தப்படியானது. இது ஒரு இழப்பீடு மட்டுமே. அதாவது தொழிலாளர் நீதிமன்றத்தி னால் ஆணையிடப்பட்டவாறு பணியில் மறு அமர்த்தால் என்பது. பொருண்மையின்படி எதிர்வழக்கீட்டாளர் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்வுக்கு இணங்கி செயற்படவில்லை. மேலும், வேலையாட்களை மீண்டும் பணிக்கு அமர்த்துதல் என்பது, ஒப்பந்தத்தின்படி எதிர்பார்க்கப்படாத ஒன்று, மற்றும் அத்தகைய இழப்பீடு, ஒப்பந்தத் திற்கு வெளியே, ஏனெனில் இது தரப்பினர் களிடையே ஒப்பந்தத்திற்கு வெளியே செய்யப் பட்ட ஒன்று.

26. எனவே, நமது கருத்துப்படித் தொழில் துறை பூசல்கள் சட்டம் பொருத்துவது, அதாவது பூசலில் உள்ள பொருட்பாடு தொடர்பாக. 27.11.2015 தேதியிட்ட தீர்வுடன் முடிவடைந்து விடவில்லை. இதில் பொதுவர் கூறு இருந்த போதிலும், இது சட்டப்படியான தீருதவியினை மீதூர்ந்து இயங்காது. மேலும், தரப்பினர்கள் பு.ஒ.கு.க்கு வெளியே பயணித்துள்ளனர் மற்றும் எதிர்வழக்கீட்டாளர்கள் இதில் பணிந்தளித்து உள்ளது. தொழிலாளர் நீதிமன்ற அதிகார வரம்பிற்குச் சட்டம், 1947 தொழில்துறை பூசல்கள் சட்டத்தின் வகைமுறைகளின்படி தீர்வினைக் கோரியுள்ளார் மற்றும் இவர்கள், அந்தத் தீர்வினை, சட்டத்தினால் அறியப்பட்ட வகையில், எதிர்க்கத் தவறியுள்ளனர். பொதுவர் தீர்ப்பாயத்தினால், பிறப்பிக்கப்பட்ட தீர்வு, நிலைபெறத் தக்கதல்ல. அது இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு மீறுகையாக உள்ளது. தனி பொதுவர், தரப்பினர்களின் பூசல் களின் வீச்சினைக் கருதுகை செய்யாது. 13.3.2019 அன்று தவறுதலாகவே, தீர்வு ஒன்றினால் பிறப்பித்துள்ளார். இதில் மேல் முறையீட்டாளர் ரூ.25,65,000 தொகையினை செலுத்தப் பணிந்துள்ளார். அத்துடன் 9 சதவீதம் வட்டியையும் ஆண்டுக்கு 8.9.2016இல் இருந்து தீர்வுத் தேதி வரை செலுத்தப் பணிந்துள்ளார் மற்றும் அதன் பின்னர், 12 சதவீதம் விழுக்காடு வட்டி ஆண்டுக்கு என்று செலுத்தவும் பணித்துள்ளார். இதன் நற்குறிப்பின் பேரில் தனிப்பொதுவரால் பிறப்பிக்கப்பட்ட தீர்வு நிலைபெறத் தக்கதல்ல. ஏனெனில் உரிமை மாற்றம் செய்த பணியமர்த்துபவர்கள் உரிமை

மாற்றம் பெற்ற பகுதியா மாற்றப்பட்டுள்ளது. அதாவது 1947 தொழில்துறைப் பூசல்கள் சட்டத்தின் பிரிவு 25()இன்படி மற்றும் எதிர்வழக்கீட்டாளர்கள் நிறுமத்தில் தங்களது பணிகளை தொடர முற்பட்ட அனைத்து வேலை யாட்களுக்கும் கடப்பாடுடையவர் ஆவர். பொதுவர் தீர்ப்பாயம், தொழிலாளர் நீதிமன்ற தீர்வினை இல்லாததாக்க எந்த அதிகார வரம்பும் கொண்டிருக்கவில்லை. அது அறுதி நிலையை எட்டியுள்ளது மற்றும் பொதுவர் கூற்றின் வீச்சு வேலையாட்களுக்கு செலுத்தத்தக்க சரியீட்டினைக் கொண்டுள்ளதாக அதன் வீச்செல்லை நீட்டிக்கப்பட முடியாத நிலை.

27. பொதுவர் தீர்ப்பு மற்றும் சமரச உடன் படிக்கைச் சட்டத்தின் பிரிவு 34(2)இன்படி அந்தத் தீர்வினை இடையீடு செய்ய நீதிமன்றத்தால் இயலும். அதாவது அது ஏதேனும் சட்டத்தின் வகைமுறைகளுக்கு மீறுகையாக இருக்குமானால் மற்றும் அது தள்ளுபடி செய்யப்படலாம். இந்தப் பொதுவர் தனது அதிகார வரம்பிற்கு மீறுகையாகச் செயற்பட்டுள்ளார் மற்றும் தீர்வைப் பிறப்பித்து ள்ளார். இது சட்டப்படிச் செல்லாததாகும். வணிக நீதிமன்ற நீதிபதி இந்தத் தீர்வினை இறுத்தி வைத்து, தவறினை இழைத்துள்ளார்.

28. மேற்சொல்லப்பட்ட கருத்தில், நாம் உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டை அனுமதிக்கவும் 21.8.2023 தேதியிட்ட ஆணையைத் தள்ளுபடி செய்ய இருக்கிறோம். அதாவது A.O.P. எண் 148/2023இல் பிறப்பிக்கப் பட்ட கோயம்புத்தூர் வணிக நீதிமன்றத்தின் கோப்பில் உள்ளதை இதன் விளைவாக, 18.12.2017 பிறப்பிக்கப்பட்ட தனிப்பொதுவரின் தீர்வு தள்ளுபடி செய்யப்படுகிறது. இரு தரப்பினர் களும் முறையே சுதந்திரமாக சட்டத்திற்கிணங்க அவரவர்களது தீருதவியை பெறக் கோரப்படுகிறது. செலவுத் தொகையின்றி. இதன் விளைவாக தொடர்புடைய பல்வகை மனு முடிக்கப்படுகிறது.

மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி

மாவட்ட நீதிபதிகளின் ஓய்வு வயது 62; தமிழ்நாடு உள்பட 7 மாநிலங்கள் ஒப்புதல்

மாவட்ட நீதிபதிகளின் ஓய்வு வயது 62 ஆக அதிகரிக்க தமிழ்நாடு உள்பட 7 மாநிலங்கள் ஒப்புக் கொண்டிருக்கின்றன.

நாடு முழுவதும் மாவட்ட நீதிபதிகள் ஓய்வு பெறும் வயதை 60இல் இருந்து 62 ஆக அதிகரிக்க வலியுறுத்தி உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு தலைமை நீதிபதி சூர்யகாந்த் நீதிபதிகள் ஜயமால்ய பாக்கி, வி.மோகனா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக அண்மையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள் அமர்வு கூறியதாவது சத்தீஸ்கர், கர்நாடகம், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், சிக்கிம், தமிழ்நாடு, மேற்கு வங்கம், ஆகிய 7 மாநிலங்கள் மாவட்ட நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 60இல் 62ஆக அதிகரிக்க ஒப்புக் கொண்டிருக்கின்றன.

இதன்படி, சம்பந்தப்பட்ட மாவட்ட நீதிபதி 60 வயதை அடையும்போது அந்தப் பணியைத் தொடர, அவர் தகுதியானவரா என்பதை உயர்நீதிமன்றம் மதிப்பீடு செய்யும். அப்போது அவர் தகுதியானவர் என்று கருதப்பட்டால் அவர் ஓய்வு பெறும் வயது 62ஆக அதிகரிக்கப்படும்.

இதற்காக பணி விதிமுறைகளில் 7 மாநிலங்களும் திருத்தம் மேற்கொள்ள வேண்டும். இந்தத் திருத்தங்களை முடிந்தவரை 2 மாதங்களில் விரைவாக செய்து மாவட்ட நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை முறைப்படி 62ஆக அதிகரிக்க வேண்டும்.

விதிமுறைகளில் திருத்தம் மேற்கொள்ளப்படும் நிலையில், இந்த 7 மாநிலங்களில் ஏற்கனவே 60 வயதை எட்டியுள்ள மாவட்ட நீதிபதிகள் 62 வயதாகும் வரை ஓய்வு பெறக் கூடாது.

இந்த 7 மாநிலங்களில் கடந்த மார்ச் 31 அல்லது அதன் பின்னர் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதிகள், மீண்டும் பணியில் சேர வாய்ப்பளிக்கலாம். அவர்கள் வேறு வேலையில் சேராமல் இருந்தால், அந்த வாய்ப்பை அவர்களுக்கு வழங்கலாம்.

மாவட்ட நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 62 ஆக அதிகரிப்பது குறித்து பிற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் 2 வாரங்களில் உரிய முடிவு எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

நன்றி: தினமணி 5.9.2026

இறந்தவருக்கு எதிராக இயற்றப்படும் தீர்ப்பாணை இல்லாநிலையதாகக் கருதப்படும்

சென்னை உயர்நீதிமன்றம்
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி பி.பி.பாலாஜி
உசீம எண் 57/2025 மற்றும் உபம எண் 517/2025
2025(4) CTC 810

பி.குமரேசன் ...மனுதாரர்

–எதிர்–

1. பி.ரவி
2. சங்கு பாய்
3. வசந்தி தேவி
4. யமுனா தேவி ...எதிர்மனுதாரர்கள்

திரு.ஆர்.சிவகுமார்

மனுதாரரது வழக்குரைஞர்

திரு.ஜே.ராம்,

எதிர்மனுதாரர்களது வாக்குரைஞர்

கோருகை: கீழமை நீதிமன்ற பதிவாவணங் களை வரவழைத்து காஞ்சிபுரம் முதன்மை சார் நீதிமன்ற கோப்பிலான முவ எண் 8/2013இல் நி.ம.எண் 215/2018இல் இயற்றப்பட்ட 25.9.2024 தேதிய ஆணையை நீக்கறவாக்கி டலுக்காக இந்திய அரசமைப்பு சட்ட உறுப்பு 227 கீழ் உரிமையியல் சீராய்வு மனு தாக்கலானது

19.6.2025 அன்று தள்ளி வைப்பான தீர்ப்புரை 27.6.2025 அன்று பகரப்பட்டது

ஆணை

நீதிபதி பி.பி.பாலாஜி

1. மனுதாரர் முவ எண் 8/2013இல் தீர்ப்புரை கடனாளி ஆவார். மனுதாரரது சொத்தை பற்றுகையாக்கும் நிறைவேற்றல் நீதிமன்றத்தின் 25.9.2024 தேதிய ஆணையை மனுதாரர் எதிர்க்கிறார்.

2. மனுதாரரது வழக்குரைஞர் திரு. ஆர்.சிவ குமாரையும் எதிர்மனுதாரர்களுக்காக திரு.ஜே.ராமை யும் நான் கேட்டறிந்துள்ளன.

3. அசல் தொகை ரூ.300000 [ரூபாய் மூன்று லட்சம் மட்டும்]ஐ வட்டியுடன் ரூ.507800 [ரூபாய் ஐந்து லட்சம் ஏழாயிரத்து எண்ணூறு மட்டும்] தொகையை வசூலிக்க தீர்ப்பாணை பெற்றவரால்/1வது எதிர்மனுதாரரால் வழக்கு தொடுக்கப்பட்டது என மனுதாரரது வழக்குரைஞர் திரு.ஆர்.சிவகுமார் பணிந்திட்டார்.

4. காஞ்சிபுரம் முதன்மை சார் நீதிமன்றத்தி லிருந்த முவ எண் 8/2013இல் ஒரே எதிர்வாதி யான திரு.பாலசுந்தரம் அவரது எழுத்திலான விளக்கவுரையை தாக்கலிடவில்லை. ஆகவே அவர் 18.6.2014 அன்று ஒருதலையாக்கப் பட்டார். எனினும் அதன் பின்பு 28.6.2014 அன்று ஒரே எதிர்வாதி இறந்தார். ஒரே எதிர் வாதியின் மரணம் பற்றி தீர்ப்பாணை பெற்றவர் அறிவார் எனவும் நீதிமன்றத்தின் அல்லது இறந்தவரது சட்டப்பூர்வ வாரிசுகளின் கவனத்துக்கு அதை தீர்ப்பாணை பெற்றவர் கொணரவில்லை எனவும் தற்போது நிறைவேற்றப்பட கோரலாகும் ஒருதலையான தீர்ப்பாணையைப் பெற மேல்முறையீடு தொடர்ந்தார் எதுவும் சொல்லப்படுகிறது. ஒரே எதிர்வாதியின் மரண நிகழ்வில் சட்டபூர்வ வாரிசு களை பதிவாவணத்தில் கொணரலில் வாதி விதிவிலக்கு பெற வேண்டியதாகும் என்பதை உவிதொச வகுமுறை 22 விதி 4 வலியுறுத்தாக்கு கிறது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். வாதியால் பின்பற்றப்பட்ட செயல்முறையைச் சுட்டிக்காட்டிக் கொண்டு, அத்தகைய விதிவிலக்கு ஏதும் பெறப் பட்டதில்லை எனவும் ஆகையால் தீர்ப்பாணை இல்லாநிலையது ஆகி சட்ட நீதிமன்றத்தில் செயல்படுத்தப்பட இயலாது எனவும் மனுதாரரது வழக்குரைஞர் வாதிட்டார். நிறைவேற்றல்

நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட பின்தொடர்ச்சி பற்றுகை உத்தரவு இவ்வாறு முற்றிலும் நிலை நிற்க கூடியதல்ல என அவர் மேலும் பணிந்திட்டார்.

5. பி.வெங்கடேசன் –எதிர்– எஸ்.பீட்டர் தேவதாஸ் (இறந்தவர்) மற்றும் பிறர் உசீம் எண் 1131/2023இல் வழக்கில் இந்த நீதிமன்றத்தின் 5.11.2024 தேதிய தீர்ப்பிலும் டி. ஞானவேல் –எதிர்– டி.எஸ்.கனகராஜ் (2009) 14 SCC 294 மற்றும் ஒருவர் வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புரையிலும் மனுதாரரது வழக்குரைஞர் அவரது வாதத்துக்கு ஆதரவாக நம்பகத் தன்மை கொண்டிருந்தார்.

6. ஆகையால் சொத்து பற்றுகைக்கு நிறைவேற்றல் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கக் கூடாது என மனுதாரரரது வழக்குரைஞர் பணிந்திட்டார். எனவே நிறைவேற்றல் நீதிமன்றத்தின் உத்தரவை நீக்கறவாக்குமாறு அவர் இறைஞ்சினார்.

7. எதிர்மாறாக, உவிதொச வகுமுறை 22 விதி 4 கீழான விதிவிலக்கை தீர்ப்பாணை பெற்றவர் பெறவில்லை என்ற பொருண்மை பற்றி தகராறில்லை என எதிர்மனுதாரராது வழக்குரைஞர் திரு.ஜே.ராம் பணிந்துரைத்தார். தீர்ப்பாணை இயற்றப்படும் முன்னரே எதிர்வாதி காலமாகியிருந்தார் எனவும் அவர் நியாய்மாக பணிந்திட்டார். எனினும் வாதியின் உறவின ராகவோ அல்லது அண்டை வீட்டுக்காரராகவோ எதிர்வாதி இருக்கவில்லை எனவும் எதிர்வாதி யின் மரணம் பற்றி அறிவது வாதிக்கு சாத்திய மற்றதானது எனவும் ஆகையால் எதிர்வாதி யின் மரணத்தை நீதிமன்றத்தின் பார்வைக்கு எடுத்து செல்லாமைக்காக வாதி குறைசொல்ல பட முடியாது எனவும் அவர் சமர்ப்பித்தார். தரப்பினரின் மரணத்தை நீதிமன்றத்துக்கு தெரிவிக்கும் பொறுப்பை வழக்குரைஞருக்கு வைக்கும் உவிதொச வகுமுறை 22இன் விதி 10ஏ இக்கு எனது கவனத்தை அவர் ஈர்த்தார். ஆகையால் இத்தகைய நுட்பமான எதிர்ப்புகளை எழுப்பிக் கொண்டு எதிர்வாதியின் சட்டப்பூர்வ வாரிசுகள் பொறுப்படைவிலிருந்து தப்பிக்க இயலாது என அவர் கூறினார். எனவே உரிமை யியல் சீராய்வு மனு தள்ளுபடியாதலை அவர் வேண்டினார்.

8. ஒவ்வொரு தரப்பிலும் வைக்கப்பட்ட பணிந்துரைகளை நான் கவனமாகப் பரிசீலித்தி ருக்கிறேன்.

9. தீர்ப்பாணை இயற்றலான நாளன்று எதிர் வாதி உயிரோடில்லை என்பது பற்றி தகராறு கிடையாது. வகுமுறை 22 விதி 10ஏ கீழ் அவரது கட்சிகாரரது மரணம் பற்றி நீதிமன்றத்துக்கு தெரிவித்தலுக்கான கடமை தரப்பினருக்காக முன்னிலையாகும் வழக்குரைஞருக்கு வைக்க படுகிறது என்பதிலும் அதன் பின்னராக அத்தகைய மரணம் பற்றி மற்ற தரப்பினருக்கு நீதிமன்றம் தெரிவித்தல் அவசியமாக்கப் படுகிறது என்பதிலும் அது வரையில் வழக்குரைஞ ருக்கும் இறந்த தரப்பினருக்கும் ஒப்பந்தம் நிலைக்கிறது எனக் கருதப்படுகிறது.

10. பல்வேறு எதிர்வாதிகளில் ஒருவரது அல்லது ஒரே எதிர்வாதியின் மரணம் நேர்வில் பின்பற்றப்படவுள்ள செயல்முறை பற்றி உவிதொச வகுமுறை 22 விதி 4 பேசுகிறது. உவிதொச வகுமுறை 22 விதி 4இன்படி எழுத்திலான விளக்கவுரையை தாக்கலிட தவறிய அல்லது எழுத்திலான விளக்கவுரை தாக்கலிட்டிருந்து வழக்கை மறுக்க தவறிய் எதிர்வாதிகளில் அவரது சட்டபூர்வ பிரதிநிதி களைப் பதிலியாக்கும் அவசியப்பாடிலிருந்து விலக்கை நீதிமன்றத்திலிருந்து வாதி பெறலாம. எனினும் இப்போதைய வழக்கில் ஏற்றவாறு உவிதொச வகுமுறை 22 விதி 4 கீழான தஞ்சத்தை வாதி பின்பற்றியிருக்கவில்லை.

11. எதிர்வாதியின் மரணம் பற்றி வாதி அறியாதிருந்து அதன் விளைவாக நிர்ண யிக்கப்பட்ட காலவரையறைக்குள் பதிலியாக்கல் விண்ணப்பங்கள் தாக்கலிடப்பட இயலாதுள்ள சந்தரப்பம் பற்றியும் அத்தகைய சந்தரப்பத்தில் எதிர்வாதியின் மரணம் மற்றி வாதி அறியாயது நிரூபிக்கப்பட்டால் அந்த பொருண்மை பற்றி காலவரம்பு சட்ட பிரிவு 5 கீழான விண்ணப்பம் எதனையும் நீதிமன்றம் பரிசீலிப்பதை விதி அவசியப்படுத்துகிறது.

12. பி.வெங்கடேசன் வழக்கு தீர்ப்பில், உவிதொச வகுமுறை 22 விதி 4 கீழான விலக்கை பெறாது தீர்ப்பாணை இயற்றப்பட்ட

போது இறந்த நபருக்கு எதிரான தீர்ப்பாணை சட்டத்தின் பார்வையில் இல்லாநிலையதாக மட்டுமே இருக்கும் என இந்த நீதிமன்றம் தீர்ப்பிட்டது.

13. டி. ஞானவேல் வழக்கில் உவிதொச வகுமுறை 22 விதி 10ஏ கீழான விலக்கு இருந்தாலும், இறந்த நபருக்கு எதிராக தீர்ப்புரை அளிக்கப்படு முன்பாக உவிதொச வகுமுறை 22 விதி 4V கீழான விலக்கு வாதியால் பெறப்பட வேண்டியதாகும் என உச்ச நீதிமன்றம் தீர்மானித்தது. ஆயினும் இப்போதைய வழக்கு பொருண்மைகளில் அத்தகைய விலக்கு பெறப் பட்டிருக்கவில்லை என்பது தெளிவாகும். ஆகையால், மு.வ.எண் 8/2013இல் இயற்றப் பட்ட தீர்ப்பாணை இல்லாநிலையதாகும் எனவும் விளைவாக தீர்ப்பாணை நிறைவேற்றப்படவே முடியாது எனவும் நிறைவேற்றல் நீதிமன்றத் தால் இயற்றப்பட்ட பற்றாணை செயல்பட வியலாது என் தீர்ப்பிட்ட டி. ஞானவேல் வழக்கில் உச்சநீதிமன்றத்தாலான மற்றும் பி. வெங்கடேசன் வழக்கில் இந்த நீதிமன்றத்தால் வகுக்கப்பட்ட கோட்பாட்டைப் பின்பற்றுவதில் எனக்குத் தயக்க மில்லை. அதேசமயத்தில், இறந்தவருக்கு எதிராக இயற்றப்பட்ட தீர்ப்பாணை இல்லா நிலை யாக அறிவிக்கப்படுகிறது என்ற காரணத்தால் மட்டுமே வாதியின் உரிமைகளை இறுதிமுறை யாக முன்னழிக்க பண்ண முடியாது. முவ எண் 8/2013இன் ஒரே எதிர்வாதியின் சட்டப்பூர்வ வாரிசுகளை வழக்கில் சேர்த்து வழக்கில் சொல்லப்படும் தொகையை வசூலிக்க அவர் களுக்கு எதிராக செயல்படலுக்கான சுதந்திரம் வாதிக்கு எப்போதும் உண்டு.

14. வாதிக்கு அவ்வாறான சுதந்திரத்தை வழங்கிக் கொண்டு இந்த உரிமையியல் சீராய்வு மனு ஏற்றுக் கொள்ளப்பட்டுக் காஞ்சிபுரம் முதன்மை சார் நீதிமன்ற கோப்பிலான முவ எண் 8/2013இல் நிம எண் 215/2024இல் உண்டான 25.9.2024 தேதிய ஆணை இதன் மூலம் நீக்கறவாக்கப்படுகிறது. செலவுத் தொகை குறித்த உத்தரவு இராது. தொடர்பான பல்வகை மனு முடித்து வைக்கப்படுகிறது.

மொழியாக்கம் : பா.ஞானசேகரன்

உயர்நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றங்களில் மத்திய அரசு வழக்குரைஞர்களை நியமிக்க புதிய வழிகாட்டுதல்

உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களில் மத்திய அரசு சார்பில் ஆஜராகும் வழக்குரைஞர்களை நியமனம் செய்வதற்கு மத்திய அரசின் சட்ட அமைச்சகம் புதிய வழிகாட்டுதலை வெளியிட்டுள்ளது. அந்த வழிகாட்டுதலில் கூறியிருப்பதாவது.

உச்சநீதிமன்றத்தை பொறுத்தமட்டில் மத்திய அரசு சார்பில் ஆஜராகும் வழக்குரைஞர்களின் குரூப்-ஏ பட்டியலில் இடம் பெற 5 ஆண்டுகள் உச்சநீதிமன்றத்தில் மூத்த வழக்குரைஞராக பணியாற்றி இருக்க வேண்டும்.

குரூப்-பி பட்டியலுக்கு 4 ஆண்டுகளும், குரூப்-சி பட்டியலுக்கு 3 ஆண்டுகளும் பணி அனுபவம் இருக்க வேண்டும். சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் நியமிக்கப்படும் மத்திய அரசின் துணை சொலிசிட்டர் ஜெனரல் பதவியை பொறுத்தமட்டில் 10 ஆண்டு அனுபவமும், மத்திய அரசின் மூத்த வழக்குரைஞராக பணியாற்ற 5 ஆண்டுகளும், மத்திய அரசு வக்கீலாக பணியாற்ற 4 ஆண்டுகளும் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மாவட்ட கோர்ட்டு மற்றும் சார்பு நீதிமன்றங்களில் மத்திய அரசு வழக்குரைஞராக நியமிக்கப்படுபவர்களுக்கு 5 ஆண்டுகளும், கூடுதல் மத்திய அரசு வழக்குரைஞராக நியமிக்கப் படுபவர்களுக்கு 3 ஆண்டுகளும் வழக்குரைஞ ராக பணியாற்றிய அனுபவம் இருக்க வேண்டும்.

இவர்களுக்கு ஒதுக்கப்படும் வழக்குகளை அரசின் முன் அனுமதியின்றி மற்றவர்களுக்கு மாற்றக்கூடாது. ஆவணங்களின் ரகசியத் தன்மையை பாதுகாக்க வேண்டும். வழக்கு ஒதுக்கீடு என்பது சட்ட அமைச்சகத்தின் முடிவுக்கு உட்பட்டது. பதவியில் இருந்து விலக விரும்பினால் ஒரு மாதத்திற்கு முன் நோட்டீஸ் வழங்க வேண்டும் அரசின் அறிவுறுத்தல்களை மீறினால் பட்டியலில் இருந்து நீக்கப்படுவார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

நன்றி: தினத்தந்தி 24.8.2026

திருமணம் செய்து கொள்ளும் உரிமை ஒரு மனித உரிமை: தரப்பினர் முன்னிலையாகாததால் மேல்முறையீடு தள்ளுபடியானால், விவாகரத்திற்குப் பிந்தைய திருமணம் சட்டப்படிச் செல்லுபடியாகும்

சென்னை உயர்நீதிமன்றம் – மதுரை அமர்வு
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன்
மாண்புமிகு நீதிபதி எம்.டி. சுமதி
சி.எம்.ஏ.(எம்.டி) எண் 672/2021
நாள்: 13.08.2026
2026 Livelaw (Mad) 400

ஆர். முத்துக்குமார் ... மேல்முறையீட்டாளர்/எதிர்மனுதாரர்

–எதிர்–

ஜே.ஆர். லேகா டே வெண்ணிலா ... எதிர்மனுதாரர்/மனுதாரர்

வேண்டுகை: திருச்சி குடும்ப நல நீதிமன்றத்தின் கோப்பில் உள்ள இந்து திருமண அசல் மனு எண்.361/2017 வழக்கில் 03.03.2021 அன்று வழங்கப்பட்ட நியாயமான மற்றும் தீர்ப்பாணை உத்தரவை ரத்து செய்யக்கோரி, 1984ஆம் ஆண்டு குடும்ப நல நீதிமன்றங்கள் சட்டத்தின் 19வது பிரிவின் கீழ் தாக்கல் செய்யப் பட்ட சிவில் பல்வகை மேல்முறையீடு.

மேல்முறையீட்டாளர் தரப்பில் : திரு. பி.ஆர். பிரிதிவிராஜ், வழக்கறிஞர்

எதிர்மனுதாரர் தரப்பில்: திரு.எஸ். மனோஜ் குமார், வழக்கறிஞர்

தீர்ப்பு

நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன்,

1. திருச்சிராப்பள்ளி குடும்ப நல நீதிமன்றக் கோப்பில் உள்ள எச்.எம்.ஓ.பி எண். 361/2017 வழக்கில் எதிர்மனுதாரராக இருந்தவர், தற்போது நம் முன்பாக மேல்முறையீட்டாளராக உள்ளார்.

2. மேல்முறையீட்டாளருக்கும் எதிர்மனுதார ருக்கும் இடையிலான திருமணம் 03.06.2001 அன்று ராமநாதபுரத்தில் இந்து சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களின்படி நடைபெற்றது. இத்திருமணத்தின் மூலம் இரண்டு குழந்தைகள் பிறந்தனர். மேல்முறையீட்டாளர் கொடுமைப் படுத்தியதாகவும், கைவிட்டுச் சென்றதாகவும் குற்றம் சாட்டி, எதிர்மனுதாரர் எச்.எம்.ஓ.பி எண். 361/2017-ஐ தாக்கல் செய்தார். மேல்முறை யீட்டாளர் பதில் மனு தாக்கல் செய்தார். இரு தரப்பு வாதங்களின் அடிப்படையில், கீழமை நீதிமன்றம் தேவையான பிரச்சினைகளை வகுத்தது. இதில் உள்ள எதிர்மனுதாரர் தன்னை ம.த.சா 1 ஆக விசாரித்துக்கொண்டு, பி1 முதல் பி5 வரையிலான ஆவணங்களை சான்றா வணங்களாக குறியீடு செய்தார். மேல்முறை யீட்டாளர் தன்னை எ.த.சா 1 ஆக விசாரித்துக் கொண்டார். இரு தரப்பினரையும் கேட்டறிந்த பிறகும், பதிவில் உள்ள ஆதாரங்களைக் கருத்தில் கொண்டும், 03.03.2021 நாளிட்ட உத்தரவின் மூலம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த இந்து திருமண சட்ட அசல் மனுவை விசாரணை நீதிமன்றம் அனுமதித்தது. இதனால் அதிருப்தி அடைந்து, இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், மேல்முறையீட்டுக்கான காரணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வாதங்களையும் மீண்டும் வலியுறுத்தினார். மேலும் ஆட்சேபனைக்குரிய உத்தரவை ரத்து

செய்து எச்.எம்.ஓ.பி–ஐ தள்ளுபடி செய்யுமாறு இந்த நீதிமன்றத்தைக் கேட்டுக்கொண்டார்.

4. மாறாக, எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர், ஆட்சேபனைக்குரிய உத்தரவு தகுந்த காரணங்களைக் கொண்டுள்ளது என்றும், அதில் எவ்வித தலையீடும் தேவை யில்லை என்றும் சமர்ப்பித்தார். இதற்கிடையில் எதிர்மனுதாரர் மறுமணம் செய்து கொண்டதால், இந்த மேல்முறையீடே பயனற்றதாக மாறி விட்டது என்றும் அவர் மேலும் சமர்ப்பித்தார்.

5. இரு தரப்பு வாதங்களையும் நாங்கள் கவனமாகப் பரிசீலித்தோம் மற்றும் பதிவில் உள்ள ஆதாரங்களையும் ஆராய்ந்தோம்.

6. தீர்மானிப்பதற்காக எழும் கேள்விகள் இரண்டு:

(i) கொடுமைப்படுத்தினார் என்ற அடிப்படை யில் கீழமை நீதிமன்றம் எதிர்மனுதாரருக்கு விவாகரத்து நிவாரணம் வழங்கியது நியாய மானதா?

(ii) எதிர்மனுதாரர் மறுமணம் செய்து கொண்டார் என்ற அடிப்படையில் இந்த மேல் முறையீடு பயனற்றதாகிவிட்டதா?

7. எதிர்மனுதாரர் வேறு யாருமல்ல, மேல் முறையீட்டாளரின் தாய்மாமன் மகள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுக்கு இடையே 11 வயது வித்தியாசம் உள்ளது. அவர்களது திருமணம் நடந்தபோது, எதிர்மனுதாரர் கல்லூரி யில் முதலாம் ஆண்டு படித்துக் கொண்டி ருந்தார். 13.01.2004 அன்று ஒரு பெண் குழந்தையும், 08.05.2006 அன்று ஒரு ஆண் குழந்தையும் பிறந்தனர். இதற்கிடையில் உள்ள காலத்தில், எதிர்மனுதாரர் முதுகலை படிப்பை தொடர்ந்தார். மேல்முறையீட்டாளர் குரூப் IV ஊழியரான நிலையில், எதிர்மனுதாரர் எம்.டெக் தகுதி பெற்று தனியார் பொறியியல் கல்லூரியில் உதவிப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார். பதில் மனுவின் பத்தி எண் 14(d)–ல், எதிர் மனு தாரர் தொடர்ந்து யாரிடமோ போனில் பேசுவ தாகவும், அவர் யாரிடம் பேசுகிறார் என்று தனது மகளிடம் தான் விசாரித்ததாகவும் மேல்முறை யீட்டாளர் குற்றம் சாட்டியிருந்தார்.

8. இரு தரப்பிலும் அளிக்கப்பட்ட சாட்சியங் களை கவனமாகப் பரிசீலித்த கீழமை நீதிமன்றம், எதிர்மனுதாரரின் நடத்தை மற்றும் குணா திசயங்களை மேல்முறையீட்டாளர் சந்தேகித்ததைக் குறிப்பிட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் தாங்கள் வசிக்கும் குடியிருப்பின் பாதுகாவலரிடம் எதிர் மனுதாரரைப் பற்றி விசாரித்துள்ளார். அவரே ஒப்புக் கொண்டபடி, மேல்முறையீட்டாளர் மகளிடம் சில கேள்விகளைக் கேட்டுள்ளார். 13.08.2015 அன்று எதிர்மனுதாரர் சென்னை சென்றபோது, மேல்முறையீட்டாளர் எதிர்மனு தாரரின் பெற்றோருடன் சண்டையிட்டதோடு, கல்லூரியிலும் சென்று விசாரித்துள்ளார்.

9. ஒருவரின் நடத்தை அல்லது குணா திசயத்தை சந்தேகப்படுவது என்பது 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் 13(1)(டி–ச்) பிரிவின் கீழ் 'கொடுமை' என்பதன் வரையறைக்குள் அடங்கும். இது வெளிப்படை யாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கலாம். மேல்முறையீட்டாளரின் பதில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுகள், எதிர்மனுதாரரின் நடத்தை குறித்து அவரது மனதில் தொடரும் சந்தேகத்தைக் காட்டுகின்றன. இந்த சந்தேக விதையே விரைவில் ஆழமாக வேரூன்றி, நாளடைவில் தம்பதியரின் திருமண வாழ்க்கையை ஒத்திசைவற்றதாக ஆக்குகிறது. சுயமரியாதை உள்ள எந்தவொரு கணவனோ/மனைவியோ இத்தகைய நடத்தையைப் பொறுத்துக்கொள்ள முடியாது.

10. எதிர்மனுதாரர் 15.08.2015 அன்று குழந்தைகளுடன் திருமண வீட்டை விட்டு வெளியேறினார் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். எச்.எம்.ஓ.பி 10.10.2017 அன்று தாக்கல் செய்யப்பட்டது. எதிர்மனுதாரர் ஒரு தனியார் கல்லூரியில் பணிபுரிந்தார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையான மேல்முறை யீட்டாளர், அவர்களைப் பராமரிக்க வேண்டிய கடமைப்பட்டவர். எதிர்மனுதாரரின் பெற்றோர்

குழந்தைகளை அவரைச் சந்திக்க அனுமதிக்க வில்லை என்று ஒரு ஆதாரமற்ற வெற்று கூற்று மட்டுமே முன்வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய கூற்றை ஆதரிக்க எந்த ஆதாரமும் சமர்ப்பிக்கப் படவில்லை. எதிர்மனுதாரரை மீண்டும் வந்து சேர்ந்து வாழும்படி கோரி, மேல்முறையீட்டாளர் எந்தவொரு கடிதமோ அல்லது சட்டபூர்வமான அறிவிப்போ அனுப்பவில்லை. மறுஇணைவுக்கோ அல்லது சமரசத்திற்கோ மேல்முறையீட்டாளர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. திருமண வீட்டை விட்டு வெளியேறியதற்காக எதிர்மனு தாரரைக் குறை கூற முடியாது. ஏற்கனவே குறிப்பிட்டபடி, மேல்முறையீட்டாளர் அவரை விட 11 வயது மூத்தவர். எதிர்மனுதாரரின் கற்பை மேல்முறையீட்டாளர் சந்தேகித்தபோது, அது அவருக்கு மன வேதனையை ஏற்படுத்துவது இயல்பே. மேல்முறையீட்டாளர் காட்டிய அலட்சியத்திலிருந்து, அவருக்கு திருமண வாழ்க்கையைத் தொடர விருப்பமில்லை என்ற முடிவுக்கு வரலாம். அலட்சியம் மற்றும் குழந்தை களைப் பராமரிக்கத் தவறியது ஆகிய இரண்டும் சேர்ந்து நிச்சயமாக வேண்டுமென்றே புறக் கணிப்பதாக அமையும்; இதுவே கைவிட்டுச் சென்றதாகக் கருதப்படும். மேல்முறையீட்டாளர் ஆக்கபூர்வமான முறையில் கைவிட்டுச் சென்ற குற்றத்திற்கு ஆளாகியுள்ளார். இதனால்தான், எதிர்மனுதாரர் 1955ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் 13(1)(i-a) பிரிவின் கீழ் மட்டுமல்லாமல் 13(1)(i-b) பிரிவின் கீழும் மனு தாக்கல் செய்துள்ளார். கீழமை நீதிமன்றம் பதிவில் உள்ள ஆதாரங்களைச் சரியாக மதிப்பாய்வு செய்து, 03.03.2021 நாளிட்ட உத்தரவின் மூலம் திருமணத்தை ரத்து செய்யும் விவாகரத்து நிவாரணத்தை முறையாக வழங்கி யுள்ளது. இந்த கேள்விக்கு அதற்கேற்ப பதிலளிக்கப் படுகிறது.

11. எதிர்மனுதாரர் 27.08.2021 அன்று இந்து சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களின்படி குகன் ராமசாமி என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்று எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் சமர்ப்பித்தார். இது 02.09.2021 அன்று பெங்களூரு பீனியாவில் உள்ள திருமணப் பதிவாளரிடம் முறைப்படிப் பதிவு செய்யப் பட்டுள்ளது. திருமணச் சான்றிதழின் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

12. இங்கு பரிசீலனைக்கு உரிய கேள்வி என்னவென்றால், இது இந்த மேல்முறையீட்டு நடவடிக்கைகளைப் பயனற்றதாக்குமா என்பது தான். மேல்முறையீடு உரிய நேரத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டது. இது 09.08.2021 அன்று விசாரணைப் பட்டியலில் இடம்பெற்றது. ஆனால் குறிப்பிட்ட அந்த தேதியில் யாரும் ஆஜராகவில்லை. 11.08.2021 அன்று அறிவிப்பு அனுப்ப உத்தரவிடப்பட்டது. 15.10.2025 அன்று இந்த விவகாரம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 22.10.2025-க்கு ஒத்திவைக்கப்பட்டது. தொடர்ந்து வழக்கு நடத்தப் படாததால், 05.11.2025 அன்று மேல் முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னர் 30.03.2026 அன்று இது மீண்டும் கோப்பிற்குத் (விசாரணைக்கு) கொண்டுவரப்பட்டது.

13. ஆட்சேபனைக்குரிய ஆணையின் செயல் பாட்டிற்கு இடைக்காலத் தடை ஏதும் முழுவதும் விதிக்கப்படவில்லை என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். 1955ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 15, விவாக ரத்து பெற்ற நபர் சில சூழ்நிலைகளில் மீண்டும் திருமணம் செய்து கொள்ளலாம் என்று கூறுகிறது. அக்குறிப்பிட்ட பிரிவு பின்வருமாறு:-

'விவாகரத்து பெற்றவர்கள் எப்போது மீண்டும் திருமணம் செய்து கொள்ளலாம்: விவாகரத்து தீர்ப்பாணை மூலம் திருமணம் ரத்து செய்யப் பட்டிருக்கும்போது, அத்தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு செய்யும் உரிமை இல்லாமல் இருந்தாலோ, அல்லது மேல்முறையீடு செய்யும் உரிமை இருந்து, மேல்முறையீடு தாக்கல் செய்யப்படாமல் அதற்கான காலக்கெடு முடிந்தி ருந்தாலோ, அல்லது மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டி ருந்தாலோ, திருமணமான இரு தரப்பினரில் எவரேனும் மீண்டும் திருமணம் செய்து கொள்வது சட்டபூர்வமானதாகும்.'

அக்குறிப்பிட்ட பிரிவில் பின்வரும் நிபந்தனை இருந்தது

'ஆனால், முதல் நிலை நீதிமன்றத்தில் தீர்ப்பாணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து குறைந்தபட்சம் ஒரு வருடம் நிறைவடைந்தி ருந்தால் அன்றி, சம்மந்தப்பட்ட தரப்பினர் மீண்டும் திருமணம் செய்து கொள்வது சட்ட பூர்வமானதாகாது.'

1976ஆம் ஆண்டின் 68-வது சட்டத்தின் மூலம் இந்நிபந்தனை நீக்கப்பட்டது. விவாகரத்து பெற்ற நபர் பின்வரும் மூன்று சூழ்நிலைகளில் மறுமணம் செய்து கொள்ளலாம்:

அ) விவாகரத்து தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு செய்ய உரிமை இல்லாதபோது.

ஆ) மேல்முறையீடு தாக்கல் செய்யப் படாமல் மேல்முறையீட்டுக்கான காலக்கெடு முடிந்திருக்கும்போது.

இ) மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும்போது.

என். ராஜேந்திரன் எதிர் எஸ். வள்ளி (2025) 3 SCC 801) வழக்கில், மேல்முறையீடு தாக்கல் செய்தல் என்பது சான்றளிக்கப்பட்ட நகல் இல்லாமல் வெறுமனே தாக்கல் செய்வதை மட்டும் குறிக்காது எனத் தெளிவுபடுத்தப்பட்டது. மேலும், மேல்முறையீட்டு காலக்கெடுவிற்குள் மேல்முறையீடு நீதித்துறை பக்கத்திற்கு வருவதைத் தோல்வியுற்ற தரப்பினர் உறுதி செய்ய வேண்டும் என்பதையும் இது குறிக்காது. மேல் முறையீடு உரிய நேரத்தில், அதாவது கால வரையறைக்குள் தாக்கல் செய்யப்பட்டால், பிரிவு 15 நடைமுறைக்கு வரும். ராஜேந்திரன் வழக்கில், மேல்முறையீடு உரிய நேரத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்பதைக் கண்டறிய, சான்றளிக்கப்பட்ட நகலுக்கு விண்ணப்பித்து அதனைப் பெறச் செலவழித்த காலத்தை விலக்கிக் கணக்கிட வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. லதா காமத் -எதிர்- விலாஸ் (1989) 2 SCC 613) வழக்கில், திருமணம் செல்லாதது என அறிவிக்கப் பட்ட வழக்குகளுக்கும் பிரிவு 15 பொருந்தும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (2020) 11 SCC 253) (கிருஷ்ணவேணி ராய் -எதிர்- பங்கஜ் ராய்) எனப் பதிவான தீர்ப்பின் மூலம் பிரிவு 15-ன் கடுமை ஓரளவு குறைக்கப்பட்டுள்ளது. மேல்முறையீடு நிலுவையில் இருக்கும்போது விவாகரத்து தீர்ப்பாணைக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தாலோ அல்லது தரப்பினரோ அல்லது அவர்களில் எவரேனுமோ மறுமணம் செய்து கொள்ளத் தடை விதிக்கும் இடைக்கால உத்தரவு இருந்தாலோ ஒழிய, காலவரையறைக்குள் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு இருந்தால் மட்டுமே பிரிவு 15-ன் கீழான தடை பொருந்தும் என்றும், மேல்முறையீடு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட தாமதத்தை மன்னித்த பிறகு தாக்கல் செய்யப்படும் மேல்முறையீட்டிற்கு இது பொருந்தாது என்றும் அதில் தீர்ப்பளிக்கப்பட்டது. விவாகரத்திற்குப் பிறகும், மேல்முறையீடு செய்வ தற்கான காலவரையறை முடிந்த பிறகும் செல்லுபடியாகும் வகையில் செய்து கொள்ளப் பட்ட திருமணம், காலதாமதமாகத் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீட்டினால் செல்லாத தாக ஆக்கப்பட வேண்டும் என்பது சட்டமன்றத்தின் நோக்கமாக ஒருபோதும் இருந்திருக்க முடியாது என மாண்புமிகு உச்ச நீதிமன்றம் கவனித்தது. லீலா குப்தா -எதிர்- லட்சுமி நாராயண் (1978) 3 SCC 258) வழக்கில் கூறப்பட்ட கருத்தின்படி, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தரப்பினரில் ஒருவர் இரண்டாவது திருமணம் செய்து கொள்வதற்கு எதிரான தடையின் விளைவு என்பது, விவாக ரத்தை ரத்து செய்வதோ மற்றும் ரத்து செய்யப் பட்ட திருமணத்தை அது தொடர்வது போலத் தொடர்ந்து பாவிப்பதோ அல்ல என்பதாகும்

திருமணங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்:

அ) செல்லுபடியாகும் திருமணம்,

ஆ) செல்லாத திருமணம் மற்றும்

இ) ரத்து செய்யத்தக்க திருமணம்.

14. இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 5-ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து திருமணம் நடந்தால் அது செல்லுபடியாகும் திருமணமாகும். பிரிவு 5-ன் உட்பிரிவுகள் (i), (iv)

மற்றும் (v)–ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்று பூர்த்தி செய்யப்படாவிட்டால், பிரிவு 11–ன்படி அது செல்லாத திருமண மாகும். ஒரு திருமணத்தை ரத்து செய்யத்தக்க தாக மாற்றுவதற்கான காரணங்களைச் சட்டத்தின் பிரிவு 12 பட்டியலிடுகிறது. சட்டத்தின் பிரிவு 15, அதில் குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலைகளில் நடைபெறும் விவாகரத்து பெற்றவரின் மறு மணத்தை விவரிக்க 'சட்டபூர்வமானது' என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது. அதில் கூறப்பட்டுள்ளதை மீறித் திருமணம் நடந்தால், அத்திருமணம் சட்டவிரோதமானது எனப் பிரிவு 15 குறிப்பிடவில்லை. அத்தகைய சூழ்நிலை களில் நடக்கும் திருமணம் சட்டவிரோதமானது என நாம் ஊகிக்க வேண்டுமா? எங்களுக்கு அதிலே சந்தேகங்கள் உள்ளன. லீலா குப்தா வழக்கின்படி, விவாகரத்து தீர்ப்பாணை நடைமுறை யில், உயிர்ப்புடன் உள்ளது. நம் கையிலுள்ள இந்த வழக்கை எடுத்துக்கொள்வோம். மேல் முறையீடு உரிய நேரத்தில் தாக்கல் செய்யப் பட்டாலும், இடைக்காலத் தடை வழங்கப்பட வில்லை. விவாகரத்து வழங்கிய உத்தரவு முழுமையாக அமலில் இருந்தது. இதில் உள்ள எதிர்மனுதாரரின் நிலை விவாகரத்து பெற்ற பெண் என்பதாகும். எனவே, அவர் சட்டரீதியாகத் திருமணம் செய்து கொள்ளத் தகுதியுடையவர். இரண்டாவது திருமணம் 27.08.2021 அன்று நடந்தது. (1978) 3 குஇஇ 258) (லீலா குப்தா –எதிர்– லட்சுமி நாராயண்) எனப் பதிவான தீர்ப்பில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம், இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 15–ஐ மீறி நடத்தப்படும் திருமணம் செல்லாததோ அல்லது ரத்து செய்யத்தக்கதோ அல்ல எனத் தீர்ப்பளித்திருந்தது. ஒன்று செல்லாதது அல்லது ரத்து செய்யத்தக்கது அல்ல என்றால், அது செல்லுபடியாகும் ஒன்றாக மட்டுமே இருக்க முடியும். ஆனால் அப்படிச் சொன்னால், நாம் சட்ட விதியைத் திருத்தி எழுதுவது போலாகும். அது 'மேல்முறையீடு தாக்கல் செய்யப் பட்டுள்ளது ஆனால் இடைக்காலத் தடை பெறப்படவில்லை' என்ற ஒரு நிபந்தனையைச் சேர்ப்பதற்குச் சமமாகிவிடும். மேல்முறையீட்டு நீதிமன்றம் அவ்வாறு செய்வது நியாயமானதாக இருக்காது. அதே சமயம், இதன் விளைவு என்னவென்றால், செல்லுபடியாகும் ஒரு திருமணம் மேல்முறையீட்டு நடவடிக்கையின் நிச்சயமற்ற முடிவுக்குக் கட்டுப்பட வேண்டியுள்ளது. இது நியாயமானதாகத் தெரியவில்லை. அதிலும் மேல்முறையீடுகள் தீர்த்துவைக்கப்பட பல ஆண்டுகள் ஆகும்போது இது மேலும் கடின மாகிறது.

15. திரு. சி.எஸ். ரகுராமன் அவர்களால் (45 JILI (2003) 456)–ல் வெளியிடப்பட்ட மேல் முறையீடு நிலுவையில் இருக்கும்போது விவாக ரத்திற்குப் பிந்தைய திருமணங்கள் என்ற சுவாரஸ்யமான கட்டுரையை நாங்கள் கண்டோம். சந்திர மோகினி ஸ்ரீவஸ்தவா –எதிர்– அவினாஷ் பிரசாத் ஸ்ரீவஸ்தவா (AIR 1967 SC 581), லீலா குப்தா –எதிர்– லட்சுமி நாராயண் (1978) 3 SCC 258), தேஜிந்தர் கவுர் –எதிர்– குர்மில் சிங் (1988) 2 SCC 90), பிரகாஷ் சந்திர சர்மா –எதிர்– விம்லேஷ் (1995 Supp (4) SCC 642), அசோக் ஹுர்ரா –எதிர்– பிபின் சந்திர சாவேரி (1997) 4 SCC 226), சாவித்ரி பாண்டே –எதிர்– பிரேம் குமார் பாண்டே (2002) 2 SCC 73) மற்றும் பிரவீன் மேத்தா –எதிர்– இந்தர்ஜில் மேத்தா (2002) 5 SCC 706) ஆகிய வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளைக் கவனித்த பிறகு, மேல்முறையீடு நிலுவையில் இருக்கும்போது செய்யப்படும் விவாகரத்திற்குப் பிந்தைய திருமணம் செல்லாது என்ற கருத்தையே பெரும்பாலான நீதிபதிகள் எடுத்துள்ளனர் என அத்தகுதி வாய்ந்த ஆசிரியர் கருதுகிறார். அக்குறிப்பிட்ட சட்டப் பிரிவில் சில திருத்தங்களையும் அவர் பரிந்து ரைத்திருந்தார். அதன்பிறகு கால் நூற்றாண்டு காலம் கடந்து விட்டது. மாறிவரும் சமூக நெறிமுறை களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 15–ல் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்று நாங்கள் மரியாதையுடன் பரிந்துரைக்கிறோம். மேல்முறையீடு உரிய

நேரத்தில் தாக்கல் செய்யப் பட்டால் மட்டும் போதாது. மேல்முறையீட்டாளர் அதன் பிறகான இரண்டு மாதங்களுக்குள் விவாகரத்து தீர்ப்பாணைக்கு ஒரு இடைக்காலத் தடையையும் பெற வேண்டும்.

16. ஏற்கனவே குறிப்பிட்டபடி, மேல்முறை யீட்டை நடத்துவதில் மேல்முறையீட்டாளர் கொஞ்சமும் தீவிரமாக இல்லை. விசாரணைக் காகப் பட்டியலிடப்பட்டபோது அவர் ஆஜராக வில்லை. அவர் அதை ஆஜராகாத காரணத்தால் தள்ளுபடி செய்ய அனுமதித்தார். எதிர்மனுதாரர் மறுமணம் செய்து கொண்டதைக் கவனிக் காமலேயே இது மீண்டும் கோப்பில் சேர்க்கப் பட்டது. திருமணம் செய்து கொள்ளும் உரிமை ஒரு மனித உரிமை. நிச்சயமாக, இது சில நிபந்தனைகளுக்கு உட்பட்டது. பிரிவு 15 இந்த உரிமையின் மீது கட்டுப்பாட்டை விதிப்பதால், இதைத் தகுந்த விதத்தில் தீவிரமாக புரிந்து கொள்ள வேண்டும். கிருஷ்ணவேணி ராய் வழக்கிலிருந்து உத்வேகம் பெற்று, ஒரு மேல்முறையீடு ஆஜராகாத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டவுடன், பிரிவு 15 அதன் வீரியத்தை இழக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். பிரிவு 15 தள்ளுபடி செய்வது பற்றிப் பேசுகிறது. இந்தச் சொற்றொடர் 'ஆஜராகாததாலோ அல்லது சரிவர வழக்கை நடத்தாததாலோ தள்ளுபடி செய்யப்படுதல்' என்பதையும் அதன் வரம்பிற்குள் உள்ளடக்கும். மீண்டும் கோப்பில் சேர்ப்பதற்கான விண்ணப்பம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, எதிர்மனுதாரர் மறுமணம் செய்து கொண்டார் எனத் தெரிவிக்கப்படும்போது, மேல்முறையீடு பயனற்றது எனத் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். மறுமணம் எப்போது நடந்தது என்பது இங்குப் பொருத்தமற்றது.

17. மேற்கூறிய கருத்துக்களுடன், இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை

மதுப் பழக்கத்தை காட்டி காப்பீட்டுத் தொகையை நிராகரிக்க முடியாது; நுகர்வோர் ஆணையம் தீர்ப்பு

மதுப்பழக்கத்தை காரணமாகக் காட்டி இறந்து போனவருக்கான காப்பீட்டுத் தொகையை அவர் களின் குடும்பத்தினருக்கு வழங்காமல் காப்பீட்டு நிறுவனங்கள் நிராகரிக்க முடியாது என்று நாகபுரி நுகர்வோர் ஆணையம் தீர்ப்பு அளித்துள்ளது. மகாராஷ்டிரத்தை சேர்ந்த பெண் ஒருவர் நாகபுரி மாவட்ட நுகர்வோர் ஆணையம் தீர்ப்பு அளித்துள்ளது. மகாராஷ்டிரத்தை சேர்ந்த பெண் ஒருவர், நாகபுரி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வழக்குத் தொடுத்திருந்தார். அதில், தனது கணவர் 2021-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எடல்வைஸ் டோக்கியோ லைஃப் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு வாங்கியதாகவும், 2023-ஆம் ஆண்டில் அவர் திடீரென உயிரிழந்த நிலையில் தான் காப்பீட்டுத் தொகை கோரி விண்ணப்பித்ததாகவும் கூறி யுள்ளார். ஆனால் தனது மனுவைத் தொடர்ந்து நிராகரித்த அந்தக் காப்பீட்டு நிறுவனம் காப்பீட்டு பிரீயமாக செலுத்திய ரூ.18,713க்கான காசோலையைத் திருப்பி அளித்து விட்டதாகவும், ஆதலால் காப்பீட்டுத் தொகையுடன் சேர்த்து தனக்கு மனரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியதற்கான இழப்பீட்டுத் தொகையைம் வழங்க உத்தரவிட வேண்டும் என்று அவர் கோரியிருந்தார்.

வழக்கு விசாரணையின்போது காப்பீட்டு நிறுவனம் தரப்பில், காப்பீட்டுதாரர் (பெண்ணின் கணவர்) நீண்ட காலம் மதுப்பழக்கம், உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் ஆகிய இருந்ததை மறைத்து விட்டதாகவும் இது முழுமையான நல்லெண்ணத்தை மீறும் செயல் என்றும் தெரிவிக்கப் பட்டது. இந்த வாதத்தைக் கேட்ட ஆணையம், காப்பீடு எடுக்கும் முன்பு காப்பீட்டுதாரரிடம் நடத்திய மருத்துவப் பரிசோதனையில், அவர் 15 ஆண்டு களாக மாதத்துக்கு இரு முறை 90 மில்லி விஸ்கி மது அருந்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள தாகவும், அப்படியிருக்கையில் காப்பீட்டுத் தொகையை காப்பீடுதாரரின் குடும்பத்துக்கு சட்டப்படி வழங்காமல் காப்பீட்டு நிறுவனம் வேண்டுமென்றே நிராகரித்தது தெளிவாகிறது என்றும் கூறியது. அத்துடன் காப்பீடு தாரரின் மனைவிக்கு ரூ.50 லட்சம் காப்பீட்டுத் தொகையையும், 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் தேதி முதல் கணக்கிட்டு அந்தத் தொகைக்கு 9 சதவீத வட்டியையும் சேர்த்து அளிக்க வேண்டும் என்றும் ஆணையம் உத்தரவிட்டது.

மேலும், காப்பீடுதாரரின் மனைவிக்கு மன ரீதியிலும், உடல்ரீதியிலும் பாதிப்பை ஏற்படுத்தி யதற்கு இழப்பீடாக ரூ.10,000 வழக்கு நடத்திய தற்கான செலவுகளுக்காக ரூ.10,000 அளிக்கும் படியும் நாகபுரி மாவட்ட நுகர்வோர் குறைநீர் நுகர்வோர் ஆணையம் உத்தரவிட்டது.

நன்றி: தினமணி 5.9.2026

நிலம் தொடர்பாக வெவ்வேறு சட்டங்களின் செயற்பாடு

சென்னை உயர்நீதிமன்றம் – மதுரை நீதியர் ஆயம்
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி என்.சதீஷ்குமார்,
மாண்புமிகு நீதிபதி ஆர்.விஜயகுமார்,
மாண்புமிகு நீதிபதி எம்.ஜோதிராமன்
W.P. (MD) No. 21970 of 2015
26.3.2026
2026 (3) CTC 385

1. மில்கால் ஹோலிஸ் 2. வசந்தி ஜோஸ் என்கிற வசந்தகுமாரி
...மனுதாரர்கள்

–எதிர்–

மாவட்ட ஆட்சியர்,
கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில்
2. தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு/மாவட்ட வருவாய் அலுவலர்,
தேசிய நெடுஞ்சாலைக்காக நிலம் கையகப்படுத்துபவர்கள் தேசிய நெடுஞ்சாலை
நாகர்கோயில்–1, கன்னியாகுமரி மாவட்டம்
3. சிறப்பு ஆட்சியர்,
தேசிய நெடுஞ்சாலை ஏக்காக நிலம் கையகப்படுத்துபவர்,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி–2
4. திட்ட இயக்குநர், தேசிய நெடுஞ்சாலைகள்–7 திட்டம்,
ரஹ்மத் நகர், மாவட்ட நீதிமன்றத்திற்கு எதிரில்,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்
5. தகுதி வாய்ந்த அதிகாரி மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்,
தமிழ்நாடு வைப்பீடு உரித்த பாதுகாப்புச் சட்டம்,
1979 கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயில் ...எதிர்வழக்கீட்டாளர்கள்.

மகேஷ்வரன், மனுதாரர்களுக்கான வழக்கறிஞர்

எஸ்.பி. மகராஜன், எதிர்வழக்கீட்டாளர்கள் 3, 4–இன் சிறப்பு அரசு வழக்குரைஞர் சி. அருள் வடிவேல், சேகர், அருள்வடிவேலுக்கான மன்றத்தினர் சேகர் அசோசியேர் எதிர் வழக்கீட்டாளர் எண் 4இன் வழக்கறிஞர்கள்.

சுட்டுடைகள் பதிலளிக்கப்பட்டன. நீ.பே.ம. தள்ளுபடி செலவுத் தொகையின்றி.

கோரிக்கை : கன்னியாகுமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் தாலுகாவில், அழகப்பாபுரம் கிராமத்தில் அமைந்துள்ள புதிய நில அளவை எண் 1023/2, 1023/1சி ஆகிய சொத்துக்கள் மனுதாரருக்குள் சொந்தமானவை. அவை மதுரையிலிருந்து கன்னியாகுமரி வரை செல்கிற தேசிய நெடுஞ்சாலை–7 நான்கு வழி சாலை நீட்டிப்பிற்காக. நிலம் கையகப்படுத்துதல் நடைமுறைக்கு உட்படுத்தப்பட்டது. அவற்றை எதிர்வழக்கீட்டாளர்கள் 2 முதல் 4 வரை யிலானவர்களை மீண்டும் உடைமையை திருப்பி ஒப்படைக்க செயலுறுத்தி நீதிப் பேராணை பிறப்பிக்க நீதிமன்றத்தைக் கோருவ தற்காக இந்திய அரசமைப்பின் 26ஆம் பிரிவின் நீதிப்பேராணை மனுவை முன்னிட்டு ள்ளது.

தீர்ப்பு

நீதிபதி என். சதீஸ்குமார்

1. நீதியர் ஆயத்திற்கிடையே இரு வேறு மாறுபட்ட கருத்துகள் உள்ளன என்பதை குறிப்பிட்டு நீ.பே.மே. (MD) எண் 581, 678/ 2016, நீ.பே.மே. எண் 174/2023 முதலியன. தனி நீதிபதி 1.10.2024 தேதியிடப்பட்ட விரிவான ஆணையில் இந்தப் பொருட் பாட்டினைச் சுட்டியுள்ளார். அதனை பெரிய

நீதியர் ஆயத்திற்கு சுட்டி பின்வரும் கேள்வியை வைத்துள்ளார்.

"1894 நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் 48பி, பிரிவின் வகைமுறைகள் இந்த நிலங்களுக்குப் பொருந்துமா? அதாவது 1956 தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின்படி கையகப் படுத்தப்பட்ட நிலங்களுக்கு பிரிவு 3Dஇன்படி அதுவும் அதில் தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின் இந்த விளம்புகை வெளியிடப்பட்டிருக்கிறவிடத்து?

2. மனுதாரர்களுக்காக முன்னிலையாகிற வழக்கறிஞர் எதிர்வழக்கீட்டாளர்கள் 1 முதல் 3 வரையிலானவர்களுக்கும் 5ஆம் அவருக்கும் முன்னிலையாகிற அரசு வழக்குரைஞரும், 4ஆம் எதிர்வாதியின் வழக்கறிஞரும் கேட்டறியப் பட்டனர்.

3. தனி நீதிபதி சுட்டுகை ஆணையில் கொண்ட கருத்தாவது: இரண்டு நீதியர் ஆயங்களாலும் இருவேறு கருத்துகள் உள்ளன. அதாவது நிலம் தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின்படிக் கையகப்படுத்தியவற்றை திருப்பியளிப்பது தொடர்பாக.

4. தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தைக் கவனமாக கூர்ந்து கவனித்தால் தெரிவிப்பதாவது, இதில் திருப்பியளிப்பது தொடர்பாக. எந்த வகை முறையும் இல்லை. இந்தப் பொருட்பாடு தனி நீதிபதி முன்பு ஸ்ரீஆண்டாள் அழகர் கல்யாண மண்டபம் தனியார் வரம்பிடப்பட்டது –எதிர்– இந்திய யூனியன் என்றும் வழக்கில் 2007 (2) செ.ச.ப. 1021 என்றும் வழக்கில் கொண்டு வரப்பட்டது. தனி நீதிபதி பின்வருமாறு கூறி யுள்ளார்.

1956 தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின் திட்டத்தில்படியான கருத்துப்படியும் இதனை மாற்றுவது அல்லது திருப்பியளிப்பது தொடர்பான வகைமுறை எதுவும் இல்லாத காரணத்தாலும், எவ்வாறு, எதிர்வழக்கீட்டாளர்கள் நான்காம் எதிர்வழக்கீட்டாளர் உள்ளடங்கலாக மாற்றுக் கருத்தை எவ்வாறு கருதுகை செய்தனர் என்பதை என்னால் பார்க்க இயலவில்லை. அதுவும் நிலம் மைய அரசால் கையகப்படுத்தப் பட்டு உற்றடைந்து பின்னர் மனுதாரர்களால் பணிந்தனுப்பட்டது என்பது.

5. சொல்லப்பட்ட கருத்து, மேதகு நீதியர் ஆயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. A.ராஜேந்திரன் –எதிர்– சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பிறர், நீ.பே.ம. (MD) எண் 581/2016, 20.2.2018 தேதியிடப்பட்டது. இதில் நீதியர் ஆயம் பின்வருமாறு கூறியுள்ளது.

"23. ஸ்ரீஆண்டாள் அழகர் கல்யாண மண்டபம் தனியார் வரம்பிடப்பட்டது. –எதிர்– 2007 (7) செ.ச.ப. 1021. இதில் சந்தேக நிலை மற்றம் கெட்ட எண்ணம் என்பதன் காரணங்களால் எதிர்க்கப்பட்டது. பத்தி 24இல் நீதிபதி இந்த பிரச்சினையினைக் கையாண்டர். இதில் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட பின்னர் எதிர்க்கப்பட்டது. பத்தி 49இல் சொல்லப்பட்ட ஆணையில் நீதிபதி கண்டறிந்தவாறு, 1956 தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின் திட்டத்தின் கருத்திலும் மற்றும் நிலத்தை மாற்றியளிக்க அல்லது திருப்பியளிப்பது தொடர்பாக. வகைமுறை எதுவும் இல்லாத காரணத்தாலும் அதுவும், இந்த நிலம் மைய அரசாங்கத்தை உற்றடைந்த பின்னர் என்பது பற்றி 1965 தேசிய நெடுங்சாலைகள் சட்டத்தின் 1894 நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் பிரிவு 11அ போன்ற பிரிவு இல்லாத தாலும், இந்தக் குறை பற்றி இது எடுத்துக் கூறுகிறது மற்றும் 1956 தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின் ஒரே வகைமுறை பிரிவு 3D(3)இல் காணப்படுவது மற்றும் இதில் வகுத்துரைக்கப் பட்டுள்ளதாவது. 3D(1)இன்படி ஒரு விளம்புகை அந்த அறிவிக்கை பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆண்டுக்குள் வெளியிடப்படாதிருக்குமானால், பிரிவு 3(அ)(1)இன்படி அந்த அறிவிக்கை செயற்பாடற்று விடும் என்பது.

6. சொல்லப்பட்ட கருத்து, நீதியர் ஆயத்தினால் மற்றும் ஒரு வழக்கில் மீண்டும் வலியுறுத்தப் பட்டது. சி.ராஜேந்திரன் –எதிர்– தேசிய நெடுஞ்சாலைகளின் இந்திய அதிகார அமைப்பு மற்றும் பிறர் நீ.பே.மே.(MD) எண் 2159/2022, 10.10.2025 தேதியிட்ட வழக்கில்.

7. தனி நீதிபதி கருத்தாவது இந்த நீதிமன்றத்தின் கருத்துப்படி மாற்றுக் கருத்து இந்த நீதிமன்ற வழக்கில் கூறப்பட்டது. ஆல்பர்ட் இமானுவேல் –எதிர்– இந்திய யூனியன் மற்றும் பிறர், 2024 (6) த.த.வ. 38 (நீ.ஆ.), நீ.பே.மே. எண் 174/ 2023 முதலியன 11.4.2023 தேதியிடப் பட்டது.

8. மேற்சொல்லப்பட்ட தீர்ப்புகளை நாங்கள் கூர்ந்தாய்வு செய்துள்ளோம். நீதிப்பேராணை மனுக்கள் பல்வேறு காரணங்களுக்காக முன்னிடப் பட்டவை கையகப்படுத்தலுக்கான அறிவிக்கை உள்ளடங்கலாக நீதியர் ஆயம் பத்தி 8–13இல் ஆல்பர்ட் வழக்கில், அந்த வழக்கின் வித்தியாச மான பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருதுகை செய்து பின்வருமாறு கூறியுள்ளது.

"8–13 மேலும் குறிப்பாக மனுதாரர்களின் நிலங்கள், பொது நோக்கங்களுக்காகத் தேவைப் படவில்லை. அந்தத் திட்டம் அனைத்து வகை களிலும் நிறைவேற்றப்பட்டு வணிக முறையில் 2011இல் இருந்து செயற்பட்டு வருகிறது. நீதிப்பேராணைகள் நடப்பில் உள்ளதற்கு அதே நிலை தொடருவதாக இடைநிலை ஆணை பிறப்பிக்கப்பட்டது மற்றும் மனுதாரர்கள் தொடர்ந்து அவர்களது நிலங்களின் உடைமையை கொண்டுள்ளனர்.

இப்போதும் கூட, குறிப்பாக இந்த நீதிமன்றத்தின் முன்பு வாதிடப்படவில்லை. அதாவது அந்த நிலங்கள் எடுக்கப்பட வேண்டும் என்று மற்றும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்படும் என்றும் கூறப்படவில்லை. எனவே, அந்தத் திட்டம் முழுவதுமாக நிறைவேற்றப் பட்டு முழுவதுமாக முடிக்கப்பட்டதாக விளம்பப் பட்டு செயற்படுகிறபோது, இதில் தெளிவாவது, அந்த நிலங்கள் பொது நோக்கத்திற்காக தேவைப்படவில்லை என்பது. இதில் பொது நலன் இருப்பதாக தெரியவில்லை. இதில் அதிகாரிகளை/அலுவலர்களை அவர்களுடைய தவறுகளுடன் ஒத்திருக்கவும் இதன் மூலம் இந்திய அரசுக்கும் இந்திய தேசிய நெடுஞ் சாலை அதிகாரிகளுக்கும் தேவையற்று நிலத்தை எடுப்பதன் மூலம் இரு நிதிச் சுமையாகவே அமையும். இது உடனடியாக பொது நோக்கத்திற்காக தேவைப்படாது. பொருண்மையின் பொருட்பாட்டின்படி, இத்தகைய கேள்விகள் குறிப்பாக எழுப்பப்பட்டு துவக்க நிலை/இடைநிலை ஆணையில் துவக்க நிலை யில் வழக்கறிஞர்/இடைநிலை ஆணையம் துவக்க நிலையில் வழக்கறிஞர் குழுவை அமர்த்தி கருதுகை செய்யப்பட்டது. இதில் திட்ட அதிகாரியை அறிக்கை முதலானவற்றை தாக்கல் செய்ய கோரப்பட்டது. அதாவது நீதிப் பேராணைகளை வகை செய்கையில், தனி நீதிபதி இதன் செல்லுந்தன்மை பற்றி மட்டுமே கருதுகை செய்தார். அதுவும் இழப்பீட்டினைப் பெற்ற பின்னர் மற்றும் இந்த குறிப்பிட்ட வழக்கின் பொருண்மைகளையும் சூழ்நிலை களையும் கருதுகை செய்யவில்லை. இதனால் இந்த பொருட்பாடு செய்யப்பட வேண்டிய கட்டாயம் உள்ளது."

இந்தப் பிரச்சினை நீதியர் ஆயத்தினால் மேற்சொல்லப்பட்ட வழக்கில் வகை செய்யப் பட்டது. இதில் திருப்பியளித்தல் தொடர்பாக பிரச்சினை இல்லை.

இந்த நிலையில், தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின் பிரிவு 3னஇனை இங்கு அளிப்பது தேவையாகிறது.

3J. நிலம் கையகப்படுத்துதல் சட்டம் 1/ 1894 பொருந்தாது. 1894 (1/1894) நிலம் கையகப்படுத்துதலில் உள்ள எதுவும் இந்தச் சட்டத்தின்படியான கையகப்படுத்துதலுக்குப் பொருந்தாது.

குறிப்பு

கட்டிடத்திற்கு பராமரிப்பிற்கு மேலாண்மைக்கு அல்லது தேசிய நெடுஞ்சாலைகளை அமைக்க நிலம் கையகப்படுத்தப்படுதல் அல்லது அதன் பகுதி எதுவும் இந்தச் சட்டத்தின் வகைமுறை களின்படி மட்டுமே கையகப்படுத்தப்படுதல் வேண்டும். அதாவது நிலம் கையகப்படுத்துதல் சட்டம் 1894 (11894)இன்படி 1894 நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் வகைமுறைகள் இந்தச் சட்டத்தின்படி, கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்குப் பொருந்தாது.

சட்ட வழக்கு

லலிதா –எதிர்– இந்திய யூனியன் AIR 2003/(கர்நா.) 165, கர்நாடக உயர் நீதிமன்றம் கண்டறிந்தது. 1956 தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின் பிரிவு 3D புகுத்தப்பட்டது. 16/1997 சட்டம் மூலமாக இதில் குறிப்பிடப்பட்டு 1894 நிலம் கையகப் படுத்துதல் சட்டம் பொருத்துவதை விலக்குகிறது. அதாவது 1956 தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின்படி கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் தொடர்பாக, இழப்பீடுகளை தீர்மானிக்கும் நோக்கத்திற்க பொருந்தாது என்பது. அரச மைப்பிற்கு பொருந்தாதது. இதில் மேலும், கூறப்படுவதாவது, மனுதாரரின் நிலங்கள் 1956 தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின்படி ஈட்டப்பட்ட நிலங்களுக்கு, கூடுதல் சந்தை விலையினை 23ஏ பிரிவின் பெற உரிமை யுள்ளது. 23(2)இன்படியான மற்றும் 1894 நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் 28ஆம் பிரிவின்படியான சந்தை மதிப்புடன் வட்டியை யும் கூடுதாகப் பெறுவார் என்பது.

10. சொல்லப்பட்ட வகைமுறை அரசமைக்கு எதிரானது என விளம்பப்பட்டாலும் அதாவது கர்நாடக உயர்நீதிமன்றத்தினால் லலிதா –எதிர்– இந்திய யூனியன் என்னும் வழக்கில் அ.இ.அ.2003 (கர்நா.) 165. இது இழப்பீடு தீர்மானிப்பது பொருத்து மட்டுமே. பிந்திய தீர்ப்புகளில் உச்சநீதிமன்றம் பின்வருமாறு கண்டறிந்துள்ளது. தேசிய நெடுஞ்சாலை இந்திய அதிகாரி –எதிர்– சாயிதாபாத் டீ கம்பெனி வரையறுக்கப்பட்டது மற்றும் பிறர், 2020 (15) (உச்.நீ.வ.) 161. உச்சநீதிமன்றம் கூறியுள்ள தாவது தேசிய நெடுஞ்சாலைச் சட்டம் தொடர்புற்ற கண்டறிதல்கள் பின்வருமாறு.

"18. இந்தத் திட்டத்தினைப் பகுப்பாய்வு செய்த பின்னர், இதில் துணிபு கொள்ள வேண்டியதாவது. சட்டம் இயற்றபவர்கள் 1956 சட்டத்தின் ஒரு முழுமையான தொகுப்புச் சட்ட மாக அமைத்தனர். அதாவது நிலம் கையகப் படுத்தும் நோக்கத்திற்காக, பிரித்தளிப்பது உள்ளடங்கலாக இதன் உச்சநிலை அடைதல் என்பதைக் கருதி சட்டத்தின் 3(D) கருத்துப்படி மேலும் வலுப்பெற்றுள்ளது. இதில் 1894 நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் பொருத்துதலை அதாவது 1956 நிலம் கையகப்படுத்துதல் சட்டப்படிவான கையகப்படுத்துதலை தவிர்க்கிறது."

11. ப்யூரெஸ்ட் லால்சன் லிமிடெட் –எதிர்– ஜின்டால் ஏற்றுமதி வரையறுக்கப்பட்டது. 2011 (8) உச்.நீ.வ. 333 வழக்கில் கூறப்பட்டதாவது இந்த தொகுப்புச் சட்டம் தன்னுள் அனைத்தை யும் கொண்டிருந்தபோதிலும், ஒரு எதிர்மறை முறையையும் கொண்டுள்ளது. அதாவது அந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயல்கள் மட்டுமே அனுமதிக்கத்தக்கதன என்பதும் அதில் குறிப்பிடப்படாத செயல்கள் அல்லது நடப்புகள் செய்ய அனுமதிக்கத்தக்கதல்ல என்பதும்.

12. மேற்சொல்லப்பட்ட வழக்கில், உச்ச நீதிமன்றத்தினால் குறிப்பிடப்பட்டவாறு, சட்டமே முழுமையான தொகுப்புச் சட்டமாக உள்ள போது, இதில் கூறப்பட்டுள்ளதாவது இது இந்த பொருட்பாடு தொடர்பாக மிகவும் விரிவாக அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது மற்றும் சொல்லப்பட்ட சட்டத்தின்படி இதனை திருப்பி அளிப்பது பற்றிய வகைமுறை எதுவும் இல்லாதபோதும் கூட நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் பிரிவு 48பி பிரிவுன் பொருத்துமா? என்னும் கேள்வி ஒரு போதும் எழவில்லை. எனவே, 1956 தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின்படி திருப்பியளித்தல் என்னும் கருத்து அனுமதிக்கத்தக்கதல்ல என்பது.

13. நாம் குறிப்பிட்டுள்ளதாவது 1894 நிலம் கையகப்படுத்துதல் சட்டம், திருத்தம் செய்யப்பட்டு நியாய இழப்பீட்டிற்கான உரிமை மற்றும் நிலம் கையகப்படுத்துவதில் வெளிப்படைத் தன்மை, மறு சீரமைப்பு மறு அமைப்பு சட்டம் 2013 (பின்னர் சட்டம் 2013 என்று சுட்டப் படுவது) 2013 சட்டத்தின் பிரிவு 101 பின் வருமாறு படிக்கப்படுகிறது.

"101. பயன்படுத்தப்படாத நிலத்தை திருப்பி யளித்தல்: நிலக் கையுடைமை எடுக்கப்பட்ட

தேதியிலிருந்து ஐந்தாண்டு காலம் வகை நிலம் பயன்படுத்தப்படாமல் இருக்கும்போது, அது அதன் முதன்மைச் சொந்தக்காரர் அல்லது சொந்தக்காரர்களுக்கு அல்லது நேர்வுக்கேற்ப அவரது சட்ட வாரிசுகளுக்கு அல்லது உரிய அரசின் நில வங்கிக்கு அதனைத் திருப்பி யளிக்கும் முறையில் உரிய அரசினால் வகுத்து ரைக்கப்பட்டவாறு அளிக்கப்படுதல் வேண்டும்.

விளக்கம்: இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக நில வங்கி என்பது, ஒரு அரசின் அமைப்பு அது அரசு சொந்தமாக்கப்பட்ட காலியான, விட்டு விடப்பட்ட பயன்படுத்தப்படாத, கையகப்படுத்தப் பட்ட நிலங்கள், இவை மாற்றப்பட்டவை மற்றும் வரி செலுத்தப்படாத சொத்துக்கள் இவற்றை பயன்பாட்டிற்கு கொண்டு வருதல்.

14. மேற்சொல்லப்பட்ட வகைமுறையைப் படிப்பதில், இதில் தெளிவாகப்படுவதாவது, நிலத்தை திருப்பியளித்தல் மாநிலச் சட்டத்தின்படி கையகப்படுத்தப்பட்டவற்றிற்கு மட்டுமே பொருந்தும். அதாவது 2013 சட்டத்தின்படி வேறு வகையாக அன்று.

15. மேற்சொல்லப்பட்ட கருதுகையின்படி நீதியர் பேராயத்தின் இரு தீர்ப்புகளின் எந்த மாறுபட்ட கருத்துக்களும் காணப்படவில்லை. நாம் கருதுவது மேற்குறிப்பிடப்பட்டவாறு, 1894 நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் 48(ஆ) 1956 தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின் வகைமுறைகளின்படி கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்குப் பொருந்தாது. இவ்வாறு இந்தச் சுட்டுகைக்கு பதிலளிக்கப்பட்டது.

16 இந்தப் பிரச்சினைக்குப் பதிலளிப்பதில், நாம் கண்டறிவது இந்த நீதிப்பேராணை செல்லத்தக்கதல்ல. எனவே நீதிப்பேராணை யினைச் சுட்டுவதற்கு முன்பே, ஒரு முறைக்கு மேல் தனி நீதிபதி முன்பான முடிவு. நாம் கூறுவது நீதிப்பேராணை மனு தள்ளுபடி செய்யப்படத்தக்கதாகும். அவ்வாறே, நீதிப் பேராணை மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகைப் பற்றி எந்த ஆணையும் இல்லை.

மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி

பார் கவுன்சில் தலைவராக செஞ்சி கே.கதிரவன் ஒருமனதாக தேர்வு துணைத் தலைவர் இ.பாலமுருகன்

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் தலைவராக வழக்குரைஞர் செஞ்சி கே.கதிரவனும், துணைத் தலைவராக வழக்குரைஞர் இ.பால முருகனும், அகில இந்திய பார் கவுன்சில் உறுப்பின ராக வழக்குரைஞர் பி.எஸ்.அமல்ராஜ்ம் ஒரு மனதாக போட்டியின்றி தேர்வு செய்யப் பட்டுள்ளனர். தேர்தலில் வெற்றி தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலுக்கு மொத்தம் 25 உறுப்பினர் பதவிகள் உள்ளன. இதில், 2 பெண் நியமன உறுப்பினர்கள், மீதமுள்ள 23 உறுப்பினர்கள் தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அந்த வகையில், இந்த 28 உறுப்பினர் பதவி களுக்கு கடந்த மார்ச் 30ஆம் தேதி தேர்தல் நடந்தது. இந்த தேர்தலில் மொத்தம் 143 வக்கீல்கள் போட்டியிட்டனர். இதில் முன்னுரிமை வாக்குகள் அடிப்படையில் சி.பரணிதரன், பி.எஸ்.அமல்ராஜ், இ.பாலமுருகன், டி.மைக்கேல் ஸ்டானிஸ் பிரபு, ஆர்.அய்யாவு, வி.கார்த்திகேயன், 3. கே.கதிரவன், என்.விஜயராஜ். எம்.அருள்முருகன், கே.ஆர்.ஆர். அய்யப்பமணி, ஆர்.சி.பால்கனகராஜ், கே.தமிழ் வாணன், ஆர்.கிரிராஜன், கே.பாலு, எம்.ராஜேந்திர குமார். தாளை முத்தரசு, எம்.வேல் முருகன், ஜி.மோகனகிருஷ்ணன், பெண் வழக்குரைஞர்களில் டி.பிரசன்னா, ஏ.ராஜேஸ்வரி, எல்.சுமதி, பி.சாவித்திரி, ஆர்.விஜயலட்சுமி என மொத்தம் 23 பேர் வெற்றி பெற்றனர்.

அதேபோல, உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி வி.எம்.வேலு மணி, வழக்குரைஞர் சுதர்ஷனா சுந்தர் ஆகியோரை நியமன உறுப்பினர்களாக நியமித்து உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி உத்தரவிட்டார். இந்த நிலையில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக் பார் கவுன்சிலுக்கான புதிய தலைவர், துணைத் தலைவர், அகில இந்திய பார் கவுன்சில் உறுப்பினர் ஆகியோரை தேர்வு செய்வதற்கான தேர்தல் 16.9.2026 நடைபெறுவதாக அறிவிக்கப் பட்டிருந்தது. இதற்கான வேட்புமனுதாக்கல் நேற்று நடைபெற்றது. இதில் புதிய தலைவராக வழக்குரைஞர் செஞ்சி கே.கதிரவனும், துணைத் தலைவராக வழக்குரைஞர் இ.பாலமுருகனும், அகில இந்திய பார் கவுன்சில் உறுப்பினராக வழக்குரைஞர் பி.எஸ்.அமல்ராஜ்ம் ஒருமனதாக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர். இவர் களுக்கான சான்றிதழை தேர்தல் அதிகாரிகளான ஓய்வு பெற்ற நீதிபதி கே.என்.பாஷா மற்றும் அகில இந்திய பார் கவுன்சில் செயலர் அசோக்குமார் பாண்டே ஆகியோர் வழங்கினர்.

நன்றி : தினத்தந்தி 16.9.2026

‘அரசு வழக்கறிஞர்களுக்குத் தவறான தகவல்களை அளிக்கும் அரசு அதிகாரிகள் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைக்கு ஆளாவார்கள்’

சென்னை உயர்நீதிமன்றம் – மதுரை அமர்வு
முன்னிலை: மாண்புமிகு நீதியரசர் ஜி.ஆர். சுவாமிநாதன்
மாண்புமிகு நீதியரசர் பி. புகழேந்தி
நீதிப்பேராணை மனு (மஅ) எண் 21426 / 2026
2026 LiveLaw (Mad) 369

1. ஜே. அப்துல் மாலிக்,
எண் 89, மாரியம்மன் கோவில் தெரு,
துவரங்குறிச்சி கிராமம்,

2. ஜே. சித்திக் அலி,
எண் 89, மாரியம்மன் கோவில் தெரு,
துவரங்குறிச்சி கிராமம், திருச்சி மாவட்டம். ..மனுதாரர்(கள்)

–எதிர்–

1. மாவட்ட ஆட்சியர்,
திருச்சிராப்பள்ளி.

2. மாவட்ட வருவாய் அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.

3. வருவாய் கோட்டாட்சியர்,
ஸ்ரீரங்கம் கோட்டம், ஸ்ரீரங்கம்

4. வட்டாட்சியர், மருங்காபுரி தாலுகா,
மருங்காபுரி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

5. ஆர். ரமேஷ்,
கதவு எண்.83, மீனாட்சி அம்மன் கோவில் தெரு,
துவரங்குறிச்சி கிராமம், திருச்சி மாவட்டம்.

6. பி. கந்தசாமி,
கதவு எண்.3/78, தேத்தூர் கிராமம்,
மருங்காபுரி தாலுகா ..எதிர்மனுதாரர்(கள்)

வேண்டுகை: திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி தாலுகா, பொன்னம்பட்டி பேரூராட்சியில் அமைந்துள்ள சர்வே எண் 33/1–ல் உள்ள சக்கிலியன்குளம் வாய்க்கால் மற்றும் சர்வே எண் 68 மற்றும் 69/2–ல் உள்ள கரந்தபடிகுளம் ஆகிய இடங்களில் 5 மற்றும் 6–வது எதிர்மனுதாரர்களால் செய்யப் பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற தகுந்த நடவடிக்கைகளைத் தொடங்கவும், இந்த நீதிமன்றம் நிர்ணயிக்கும் காலக்கெடுவுக்குள் அதனை அதன் அசல் நிலைக்கு மீட்டெடுக்கவும் 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு ஆணையிடுமாறு ஒரு செயலுறுத்தும் நீதிப் பேராணையை பிறப்பிக்கக் கோரி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 226–வது கூறின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிப்பேராணை மனு.

மனுதாரருக்காக : திரு.ஆர்.ஆர். கண்ணன், வழக்கறிஞர்

எதிர்மனுதாரர்களுக்காக: திரு.பி.ராஜ கோபாலன், அரசு வழக்கறிஞர்.

ஆணை

(நீதிமன்றத்தின் இந்த உத்தரவை நீதியரசர் ஜி.ஆர்.சுவாமிநாதன் பிறப்பித்தார்.)

1. நீதிப்பேராணை மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மற்றும் 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு வழக்கறிஞர் ஆகியோரின் வாதங்கள் கேட்கப்பட்டன.

2. மனுதாரர்கள் திருச்சி மாவட்டம், மருங்காபுரி தாலுகா, துவரங்குறிச்சி கிராமத்தில் வசிப்பவர்கள் ஆவர். மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள வாய்க்கால் அடைக்கப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர்.

3. இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சர்வே எண்கள் 68 மற்றும் 69/2 ஆகியவை நீர்நிலைகள் என்பதை கற்றறிந்த அரசு வழக்கறிஞர் ஒப்புக்கொண்டார். இருப்பினும், அவரது கூற்றுப்படி, சர்வே எண் 33/1 என்பது பட்டா நிலமாகும்.

4. மனுதாரரின் வழக்கறிஞர் தொடர்புடைய 'அ' ('அ') பதிவேட்டு நகலின் மீது நமது கவனத்தை ஈர்த்துள்ளார். அதிலிருந்து சர்வே எண் 33/1 ஆனது கரந்தபடிகுளம் நீர்ப்பிடிப்பு என வகைப் படுத்தப்பட்டுள்ளது தெரியவருகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இது ஒரு நீர்ப்பிடிப்புப் பகுதியாகும். அத்தகைய நிலம் பட்டா நிலமாகவும் இருக்கலாம். இருப்பினும், பட்டாதாரரின் உரிமைகள் வரம்பிற்கு உட்பட்டது. அவர் கட்டுமானங்களை எழுப்பவோ அல்லது நீரின் தடையற்ற ஓட்டத்தைத் தடுக்கும் வகையிலான எந்தவொரு செயலையும் செய்யவோ முடியாது. மேற்பரப்பு நீர் வழிந்தோடுவதை எந்த வகையிலும் தடை செய்யக் கூடாது. சர்வே எண் 33/1-ன் நீர்ப்பிடிப்புப் பகுதியின் தன்மை அவ்வாறே பராமரிக்கப்படுவதை உறுதி செய்வது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமை யாகும். மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்நிலை களில் உள்ள எந்தவொரு ஆக்கிரமிப்பும் சட்டப் படியான உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அகற்றப்பட வேண்டும். நான்காவது எதிர்மனு தாரர் சம்பந்தப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களுக்கு அறிவிப்பு வழங்கி, அவர்கள் தரப்பு விளக்கத்தை அளிக்க ஒரு வாய்ப்பை வழங்கிய பிறகு, சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த ஆணையின் நகலைப் பெற்ற தேதியி லிருந்து நான்கு மாத காலத்திற்குள் இந்த முழு நடவடிக்கையும் முடிக்கப்பட வேண்டும். இந்த நிபந்தனைகளின் அடிப்படையில் இந்த நீதிப் பேராணை மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை ஏதுமில்லை.

5. மேற்கண்ட ஆணையுடன் இந்த விவகாரத் திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட முடியாது. மருங்காபுரி தாலுகா வட்டாட்சியர் 29.07.2026 தேதியிட்ட ந.க.எண்.ஏ1/13/2026 வாயிலாக வழங்கிய எழுத்துப்பூர்வமான அறிவுறுத்தல் களின் அடிப்படையில், சர்வே எண் 33/1 ஒரு பட்டா நிலம் என்று கற்றறிந்த அரசு வழக்கறிஞர் ஒரு வாதத்தை முன்வைத்தார். சர்வே எண் 33/1 ஒரு பட்டா நிலம் என்பது உண்மைதான். ஆனால், குறிப்பு நெடுவரிசையில், இது கரந்தபீபிகுளம் நீர்ப்பிடிப்புப் பகுதி என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், கற்றறிந்த அரசு வழக்கறிஞருக்கு வழங்கப்பட்ட 'அ' ('அ') பதிவேட்டின் நகலில், குறிப்பு நெடுவரிசை 12 காலியாக உள்ளது. நகல் எடுக்கும்போது, இந்தப் பதிவு மறைக்கப்பட்டுள்ள தாகத் தெரிகிறது. இது நீதிமன்றத்தை தவறாக வழிநடத்துவதைத் தவிர வேறில்லை. நாங்கள் பெரும்பாலான வழக்குகளில் அரசு வழக்கறிஞர் முன்வைக்கும் வாய்மொழி வாதங்களின் அடிப்படையிலேயே செயல்படுகிறோம். அரசு வழக்கறிஞரும், தங்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களையே நம்பி யுள்ளனர். அரசு வழக்கறிஞருக்கு வழங்கப்படும் எந்தவொரு தவறான தகவலும் நீதி நிர்வாகத்தில் நேரடியாகத் தலையிடுவ தாகும். இது நீதிமன்ற அவமதிப்புக் குற்றமாகும்.

6. மருங்காபுரி தாலுகா வட்டாட்சியரிடம் விளக்கம் கேட்டு தகவல் அனுப்புமாறு பதிவாளருக்கு (நீதித்துறை) ஆணையிடப் படுகிறது. அறிக்கை 06.08.2026 அன்று எங்கள் முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் பிறகு தாமாக முன்வந்து நடவடிக்கை எடுப்பது குறித்து நாங்கள் முடிவெடுப்போம்.

மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை

நடைமுறைச் சட்டத்தின் பொருந்தும் நிலை

சென்னை உயர்நீதிமன்றம் – மதுரை நீதியர் ஆயம்
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி லஷ்மிநாராயணன்
உ.சீ.ம. (MD) எண் 1113/2026, உ.ப.ம. (MD) எண் 5264/2026
20.4.2026
2026 (3) CTC 390

குடும்ப மேலாளர்,
ஏ. சுப்பிரமணியன், த/பெ. அண்ணாமலை முதலியார்,
எண் 14, வீட்டு வசதிக் காலனி ரோடு,
துறையூர், துறையூர் தாலுகா, திருச்சிராப்பள்ளி மாவட்டம் ...மனுதாரர்

–எதிர்–

பி. கந்தசாமி (இறப்பு) 1. கே.சரவணன்
2. தமிழ்நாடு மாநிலம் சார்பாற்றம்
மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி
3. தாசில்தாரர், தாசில்தாரர் அலுவலகம்,
துறையூர் ...எதிர்வழக்கீட்டாளர்கள்.

எஸ்.ஐ. முத்தையா மனுதாரரின் வழக்கறிஞர்

டி. சிவராமன் எதிர்வழக்கீட்டாளர் எண் 1இன் வழக்கறிஞர்

டி. பர்ஜானா கௌசியா எதிர்வழக்கீட்டாளர் எண் 2, 3 இன் சிறப்பு அரசு வழக்குரைஞர்

உ.சீ.ம. அனுமதிக்கப்பட்டது. பணிப்புரை களுடன் செலவுத் தொகையின்றி. ப.ம. முடிக்கப் பட்டது.

கோரிக்கை : மு.வ.எண் 134/2003. இது துறையூர் மாவட்ட முனிசீப் நீதிமன்ற கோப்பில் உள்ளது. இதன் மு.மே.எண் 518/2013இன் நியாயமான மற்றும் குறைக் கூறப்பட்ட 19.9.2023 தேதியிடப்பட்ட ஆணையை மாற்றக் கோரி. துறையூர் கீழ்நிலை நீதிமன்றத்தில் உ.ப.வி.எண் 2/2025 முன்னிடப்பட்டதில் 13.2.2026 தேதியிடப்பட்ட நியாயமான மற்றும் குறை கூறப்பட்ட ஆணையைத் தள்ளுபடி செய்யக் கோரி உரிமை வழக்கு விசாரணை முறைச் சட்டத்தின் 115ஆம் பிரிவின்படி முன்னிடப்பட்டது.

தீர்ப்பு

1. உரிமையியல் சீராய்வு மனுதாரருக்காக. திரு. எஸ்.ஐ. முத்தையாவும் திரு.டி.சிவராமன் முதல் எதிர்வழக்கீட்டாளருக்காகவும், எதிர் வழக்கீட்டாளர்களுக்காகவும் எதிர்வழக்கீட்டாளர்கள் 2, 3க்காக சிறப்பு அரசு வழக்கறிஞர்களும் கேட்டறியப்பட்டனர்.

2. இந்த உரிமையியல் சீராய்வு மனு துறையூர் கீழ்நிலை நீதிபதியினால் பிறப்பிக்கப் பட்ட ஆணையை எதிர்க்கிறது. அதாவது மூன்றாவது எதிர்வழக்கீட்டாளரின் மகளால் முன்னிடப்பட்ட மேல்முறையீட்டினை அனுமதிப்பதை எதிர்ப்பதுடன் உரிமை வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 9 விதி 13இன்படி முன்னிடப்பட்ட விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டதையும் எதிர்க்கிறது.

3. வசதிக்காக, தரப்பினர்கள் வழக்கின் நிலையின்படி சுட்டப்படுவர்.

4. வாதி மு.வ.எண் 134/2003இனை முன்னிட்டது. துறையூர் மாவட்ட முனிசீப் நீதிமன்றத்தின் கோப்பில் உள்ளது. இதில் வாதியின் குடும்பத்துக்கு சொத்து உடைமை யானது என்று விளம்புகை உய்தி கோரியும் நிலையான தடையுறுத்து ஆணை மாநில அதிகாரிகள் மூன்றாம் எதிர்வாதியின் பெயருக்கு வருவாய்ப் பதிவேடுகளை மாற்றாது தடுக்கு மாறும் கோரப்பட்டது.

5. இதில் வாதியின் வழக்காவது, சொத்தானது, அவரது தந்தைக்குச் சொந்தமானது அதாவது பி.அண்ணாமலை முதலியாருக்கு சொத்தானது அவருக்கு வாய்மொழி பாகப்பிரிவினையில்

ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பது. அதாவது குடும்ப உறுப்பினர்களிடையேயான பாகப் பிரிவினையில் வருவாய்த் துறையினர் ஒரு கூட்டு பட்டாவினை சுப்பிரமணி/வாதி மற்றும் அவரது சகோதரர் பெருமாள் பெயரில் வழங்கி யுள்ளது. இவர்களுக்கு அதிர்ச்சியும் வியப்பூட்டும் வகையில், இவர்கள் அறிய வந்தது. வருவாய் பதிவேடுகளை UDR நில அளவை) நாளது தேதி வரை மாற்றுவதில் முதல் எதிர்வழக்கீட்டாளரின் தந்தையின் பெயரான இந்த சாமி என்பது சேர்க்கப்பட்டிருந்தது. இந்தப் பொருண்மைகள் அறியப்பட்டதன் பேரில், இவர்கள் மூன்றாம் எதிர்வழக்கீட்டாளர்/தாசில்தாரரின் எதிர்ப்பினைத் தெரிவித்து, வருவாய் பதிவேடுகளைத் திருத்து மாறு மனுவினை அளித்தனர்.

6. இந்த நிலையின்போது, மூன்றாம் எதிர் வாதி, குறிப்பிடப்பட்ட சொத்தின் வழக்கின் இணைப்பில் உள்ள சொத்தில் அவருக்கு பங்கு உள்ளதாக விளம்புகை செய்யத் தொடங்கி யுள்ளார். இதனால் அவருடைய சொத்தின் உரிமை மூல பாத்தியதை மீது ஒரு மேகம் சூழ்ந்தது. மேற்சொல்லப்பட்ட தீர்வுகளுக்காக வாதி வழக்கினை முன்னிட்டுள்ளார்.

7. எதிர்வாதிகளுக்கு அழைப்பாணைகள் சார்வு செய்யப்பட்டன. மூன்றாம் எதிர்வாதி கொடுத்ததாவது அவரது தந்தை பெருமாள் முதலியார், 6.12.1930 அன்று சொத்தினை வாங்கியுள்ளார் என்பது. அதன் பின்னர், முஅலிகா ஒன்று 6.7.1949 அன்று பி. அண்ணா மலை முதலியாருக்கும் மூன்றாம் எதிர் வாதிக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டது. அந்த முசுலிகாவின் வரையுரைகளின்படி பி.அண்ணா மலை முதலியாருக்கும் மூன்றாம் எதிர்வாதிக்கும் இடையே உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. அதன்படி அடுத்தடுத்த ஆண்டுகளில் அவர் களை சொத்தினை துய்த்து வர வேண்டும் என்றும், பெருமாள் முதலியாரின் இறப்பிற்குப் பின்னர், சொத்தானது, சகோதரர்களிடையே பகிர்ந்து கொள்ளப்படலாம் என்பது.

8. இதில் கூறப்பட்டதாவது, பெருமாள் முதலியார், இறந்து விட்டார் மற்றும் அந்தச் சொத்தானது அண்ணாமலை முதலியாருக்கும் மூன்றாம் எதிர்வாதிக்கும் இடையே பாகப் பிரிவினை செய்யப்பட்டது. சொல்லப்பட்ட பங்கீட்டில், குறிப்பிடப்பட்ட சொத்து இணைப்புச் சொத்து 3ஆம் எதிர்வாதியின் பங்கானது மற்றும் அது. பி. அண்ணாமலை முதலியாருக்கு வாதியால் பங்கிடப்பட்டவாறு அமையவில்லை. மேலும் அவர் கூறியதாவது.

முச்சாலிகாவின் வலுவையின்பேரிலும் மற்றும் பிந்திய வாய்மொழி பங்கீட்டின்பேரிலும் வருவாய்த் துறை அதிகாரிகளை அவர் அணுகி யுள்ளார் மற்றும் அவர் சார்பாக பதிவேடுகளை மாற்றியுள்ளார். இந்த அடிப்படையில் அவர் இதனை தள்ளுபடி செய்யக் கோரியுள்ளார்.

9. வாதுரைகள் முடிக்கப்பட்ட பின்னர் வாதி ஒரு பதில் விவர உரையினை முன்னிட்டுள்ளார். இந்த விண்ணப்பம் மு.வி.எண் 874/2009. இது தள்ளுபடி செய்யப்பட்டது. இதனை எதிர்த்து, வாதி ஒரு சீராய்வினை முன்னிட்டார். உ.சீ.ம. (PD) எண் 732/2010 இந்த நீதிமன்றம், 22.9.2010 தேதியிடப்பட்ட ஒரு ஆணை மூலமாக, இந்த சீராய்வினை அனுமதித்து மற்றும் வாதியினை மறுமொழி விவர உரையினை முன்னிட அனுமதித்தது. இதில் மேலும், பணிக்கப்பட்ட தாவது, கூடுதல் பிரச்சினைகள் வனையப் படலாம் தேவைப்படுமானால் என்பது மற்றும் வழக்கானது. இந்த ஆணையின்படி பெறப்பட்ட இரண்டு மாதக் காலத்திற்குள் வகை செய்யப் படுமாறு கூறப்பட்டது.

10. PW1 சாட்சிக் கூண்டில் இருந்து விசாரிக்கப் பட்டு உறுதியுரை மெய்ப்பிப்பை முன்னிட்டு ள்ளார். மூன்றாம் எதிர்வழக்கீட்டாளர், வாதியை குறுக்கு விசாரணை 13.6.2012 அன்று செய்துள்ளார். அரசு வழக்குரைஞர் PW1 இனையும் குறுக்கு விசாரணை செய்துள்ளார்.

11. அந்த நிலையில், மூன்றாம் எதிர்வாதி ஐ.வி.எண் 173/2012இல் விண்ணப்பமாக முன்னிட்டுள்ளார். அதில் வாதுரை நிராகரிக்கக் கோரியுள்ளார். சாதாரண கோரிக்கை மூன்றாம் எதிர்வாதி முன்னிடுவதாவது, உரிமை வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 80ஆம் பிரிவின்படியான அறிவிப்பு எதிர் வாதிகள் 1, 2க்கு அளிக்கப்படவில்லை. எனவே வாதுரை நிராகரிக்கப்பட வேண்டும் என்பது.

12. மாவட்ட முனிசீப் 23.7.2013 தேதி யிடப்பட்ட ஆணை மூலமாக, வாதுரையை நிராகரிக்கக் கோரி முன்னிடப்பட்ட விண்ணப்பத் தினை தள்ளுபடி செய்தது. இந்த நீதிமன்றத்தி னால் அளிக்கப்படும் பணிப்புரைகளின்படி விசாரணை நீதிமன்றம் செயற்படுவதனால்

உ.சீ.ம. (PD)(MDS) எண் 752/2010இல் மாவட்ட முனிசீப் துறையூர் வாதியை பொருட் பாடு தொடர்பாக மேல் நடவடிக்கை PW2வினை தனது தரப்பு சாட்சியாக பதிவு செய்யப்பட்டது முன்னிட்டார். முதன்மை விசாரணை PW2விடம் நடத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டது மற்றும் அந்த பொருட்பாடு குறுக்கு விசாரணைக்காக தள்ளிப் போடப்பட்டது.

13. 6.8.2013 அன்று அரசு வழக்குரைஞர் எதிர்வழக்கீட்டாளர்கள் 1, 2இனைச் சார்பாற்றம் செய்து PW2இன் குறுக்கு விசாரணையை மேல் நடத்தவில்லை. ஏனெனில் அவர் சீராய்வினைக் கோரி, தள்ளுபடி ஆணை வாதுரையினை நிராகரிப்பதை எதிர்த்துள்ளார். இதன் விளைவாக, மூன்றாம் எதிர்வாதி தரப்பினரின்றி ஆக்கப் பட்டார். 13.8.2013 PW2 விசாரிக்கப்பட்டார். அவரையும் கூட அரசு வழக்குரைஞர் குறுக்கு விசாரணை செய்துள்ளார். இதன் விளைவாக, PW1 முதல் PW3 சான்றின்படியும் மூன்றாம் எதிர்வாதி தரப்பினரின்றி ஆக்கப்பட்டதாலும் நீதிபதி 21.8.2013 அன்று கோரப்பட்டவாறு வழக்கில் தீர்ப்பாணை அளிக்கப்பட்டது.

14. தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதிலிருந்து இரண்டு நாட்களுக்குள், மூன்றாம் எதிர்வாதி ஐ.வி.எண் 518/2013இன் தரப்பினரில்லா தீர்ப்பாணையை தள்ளுபடி செய்ய விண்ணப்பத் தினை முன்னிட்டுள்ளார். இந்த விண்ணப்பம், நடப்பில் உள்ளபோது சீராய்வில் வாதுரை நிராகரிக்கப்பட்டது. எதிர்க்கப்பட்டது. இது நீதிமன்றத்தினால் கேட்டறியப்பட்டது. அந்த நிலையில், வாதியோ அல்லது மூன்றாம் எதிர்வழக்கீட்டாளரோ வழக்கில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்பதை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவில்லை மற்றும் சொல்லப்பட்ட ஆணையைச் சீராய்வு செய்ய எதுவும் நீதிமன்றத்திற்கு எஞ்சியில்லை என்பது.

இந்த நீதிமன்றம் உ.சீ.ம.(PD)(MD)எண் 548/2014இனை கேட்க முற்பட்டது. அதாவது அதன் நற்குறிப்பை அறிந்து இந்த சீராய்வினை 5.7.2019 அன்று தள்ளுபடி செய்தது. அதன் பின்னர், வாதி கூடுதல் எதிர்உரையை முன்னிட்டார். அது தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 9 விதி 13இன்படி முன்னிடப்பட்ட விண்ணப்பத்தை எதிர்த்து முன்னிடப்பட்டது. மூன்றாம் எதிர்வாதி, இறந்துள்ளார் மற்றும் அவரது மகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள இடையீட்டாளராக்கப்பட்டார். 19.9.2023 தேதியிட்ட ஆணை மூலமாக மாவட்ட முனிசீப் துறையூர் அந்த விண்ணப்பத்தினைத் தள்ளுபடி செய்துள்ளார்.

15. தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 9 விதி 13இன்படி முன்னிடப்பட்ட விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்ட ஆணையினால் குறையுற்ற மூன்றாம் எதிர்வாதியின் மகள் துறையூர் மாவட்ட முனிசீப் உடன் உடன்படாது. தீர்ப்பு நற்குறிப்பின் பேரிலானது எனக் கூறி மேல்முறையீட்டினை அனுமதித்துள்ளார். இவர் தரப்பின்றிப் பிறப்பிக்கப் பட்ட தீர்ப்பாணையைத் தள்ளுபடி செய்துள்ளார். இந்த ஆணை 13.2.2026 தேதியிடப்பட்டது. தற்போதைய சீராய்வை எதிர்ப்பது.

16. எதிர்க்கும் எதிர்வாதி பதிவேட்டின்பேரில், தங்களுக்கு வழக்கைத் தெரிவிக்குமாறு, திரு. சிவராமன் மூலமாக நாள் பொருட்பாடு முழுவதையும் கேட்டறிந்தேன்.

17. திரு.எஸ்.ஐ. முத்தையா பணிந்தளிப்பதில் PW1 முதல் PW3 முழுவதுமாக விசாரிக்கப் பட்டனர். நீதிமன்றமானது சரியாகவே உரிமை வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 17 விதி 2இன்படி சரியாகவே செயற்படுத்தியுள்ளார். கூடுதலாக, இது அவரது கோரிக்கை, தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 17 விதி 2இன்படி சரியாகவே செயற்படுத்தியுள்ளார். கூடுதலாக, இது அவரது கோரிக்கை தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 17 விதி 3(a)இன் காரண மாக, ஒரு நீதிமன்றம் வழக்கின் நற்குறிப்புகளின் பேரில், ஆணை ஒன்றைப் பிறப்பிக்க உரிமை யுடையதாகும். இதனை எதிர்வாதி இந்த நடவடிக்கைகளில் பங்கேற்றதைப் போன்றே பாவிக்கப்படும். ஏனெனில் இவர் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட வகைமுறையின் இருப்பதாகக் கருதப்படும். கூடுதலாக, அவர் குறிப்பிடுவது, முழுவதுமாக அந்த உறுதியிரையில் எந்தத் காரணங்களும் கூறப்படவில்லை. அதாவது கட்டளை 9 விதி 13க்கு ஆதரவான விண்ணப்பத்தில் எனவே, கீழ்நிலை நீதிபதி ஒரு தரப்பினரால் செய்துள்ளார். அதாவது விண்ணப்பத்தினை அனுமதிப்பதில்.

18. திருமதி பர்ஜானா கௌசியா சிறப்பு வழக்குரைஞர், பணிந்தளிப்பது வாதிக்கும் மூன்றாம் எதிர்வாதிக்கும் இடையேயுள்ள பூசல் தொடர்பாக சீராய்வு முன்னிடப்பட்டது.

19. திரு.சிவராஜன் பணிந்தளிப்பது கீழ்நிலை மேல்முறையீட்டு நீதிமன்றம் தனது உளத் தேர்வினைப் பயன்படுத்தியுள்ளது. அதுவும், பதிவேடுகளை படித்தறிந்த பின்னர் மற்றும் இந்த நீதிமன்றம் இதில் இடையீடு செய்யக் கூடாது என்பது. அவர் குறிப்பிட்டதாவது, மூன்றாம் எதிர்வாதி இல்லாதபோது, விசாரணை நீதிபதி 21.8.2013 தேதியிடப்பட்ட தீர்ப்பினை அதன் நற்குறிப்பின்பேரில் விசாரிக்கக் கூடாது மற்றும் இதன் விளைவாக, இந்த சீராய்வுகளை தள்ளுபடி செய்ய கூறியுள்ளது.

20. இரு தரப்பினர்கள் பணிந்தனுப்புதல் களை நான் கவனமாகக் கருதுகை செய்துள்ளேன். நான் பதிவேடுகளை பார்த்துள்ளேன்.

21. இந்தச் சீராய்வில் உரிமை வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 17 விதி 2, 3(a)இன் பொருள்கோள் பற்றி எழுகிறது. கட்டளை17, விதி 2 தொகுப்புச் சட்டத்தின் வரையுரைகளில் நீதிமன்றம் ஒன்றிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. வழக்கின் நற்குறிப்புகளின்பேரில் தீர்ப்பை வழங்குவது அல்லது, கட்டளை 9இன்படி தொகுப்புச் சட்டத்தினைக் கருத்தில் கொண்டுள்ள ஏதேனும் ஒரு முறையில் வழக்கை நடத்துதல் வேண்டும். நீதிமன்றங்களினால் எடுக்கப்பட்ட மாறுபட்ட கருத்துக்கள் உள்ள காரணத்தால், கட்டளை 17 திருத்தம் செய்யப்பட்டு, விளக்கம் ஒன்று புகுத்தப்பட்டது. 1976 உரிமை வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டம் இது 1.12.1977 மு.செ.வரும். இந்த விளக்கத்தின் படி ஒரு நீதிமன்றம், ஒரு வழக்கின் நற்குறிப்பு களின் அடிப்படையில் வழக்கை விசாரித்து, தீர்ப்பாணை ஒன்றினைப் பிறப்பிக்கும். அந்த வழக்குத் தள்ளிப் போடப்படுமானால், அதுவும் தரப்பினரால் கோரப்பட்டு, அதாவது முன்னிலை யாகாத தரப்பினருக்காக மற்றும் சொல்லப்பட்ட தரப்பு அதற்கான சான்றினை அளித்துள்ளது அல்லது அந்த வழக்கில் பெரும்பாலும் அவரது சான்று உள்ளபோது அதன்படி அதனை தீர்மானிக்கும்.

22. சட்ட நிலை பற்றி நான் அதிகம் சங்கடப் படவில்லை தொகுப்பு வழக்கில் தீர்மானிக்கப் பட்டுள்து. பி. ஜானகிரம்மியா செட்டி –எதிர்– ஏ.கே. பார்த்தசாரதி, 2003 (2) த.த.வ. 242 (உச்.நீ.) 2003 (5) உச்.நீ.வ. 641.

உச்சநீதிமன்றம் பணித்ததாவது, ஒரு நீதிமன்றம் ஒரு வழக்கில் நற்குறிப்புகளின் அடிப்படையில் மட்டுமே நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. அதில் எதிர்வாதியினால் எந்த சான்றும் அளிக்கப்படாதபோது அதாவது வழக்கிற்கு ஆதாரமாக எதிர்வாதியால் செய்யப் படும் குறுக்கு விசாரணை மட்டுமே அதாவது வாதியின் சாட்சிகளை மட்டுமே கொண்டு பெறப்படும் சான்று அதன் தரப்பு சாட்சியாகாது. தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 17இன் விதி 2இன் விளக்கத்தின் வகையில் ஒரு தரப்பு சாட்சிக் கூண்டில் ஏறி அவரது சாட்சியை முழுமைப்படுத்த வேண்டும் அல்லது குறைந்தது. இதில் பெரும்பகுதியை இதில் எந்த எதிர்வாதி களும் சாட்சிக் கூண்டு ஏறி சான்றளிக்கவில்லை. எனவே 21.8.2023 தேதியிடப்பட்ட தீர்ப்பு நற்குறிப்பின் பேரிலானதாகக் கருதப்பட முடியாது.

23. இந்த நிலை அவரை எதிர்க்கும் என்று அறிந்து திரு.எஸ்.ஜ. முத்தையா உரிமை வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 17 விதி 3(a)இனை செயற்படுத்தி யுள்ளார். அவருக்கு இணங்க, வாதியும் எதிர் வாதியும் நீதிமன்றத்தில் வந்துள்ளபோது, விசாரணை நீதிமன்றம் வழக்கின் நற்குறிப்புகளின் பேரில் ஆணை பிறப்பிக்க அதிகாரம் கொண்டுள்ளது மற்றும் இதன்படி தரப்பினரின்றி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை தள்ளுபடி செய்யக் கோருகிற விண்ணப்பம் ஏற்கத்தக்க தல்ல. திரு.எஸ்.ஜ.முத்தையாவின் பணிந்த னுப்புதல்கள் தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 9 விதி 13இன்படியான விண்ணப்பம் செல்லத் தக்கதல்ல மற்றும் மூன்றாம் எதிர்வாதிக்கு கிடைக்கத்தக்க ஒரே உய்தியானது, தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு செய்தல் என்பது.

24. இங்கும் கூட முத்தையாவிற்கு ஒரு இடர்பாடு உள்ளது. இங்கு நீதிமன்றத்தில் 21.8.2013 அன்று மூன்றாம் எதிர்வாதி முன்னிலையாகி இருந்தார் என்பதற்காக எந்த சாட்சியும் பதிவேடுகளில் இல்லை என்பது. 21.8.2013 அன்று மூன்றாம் எதிர்வாதி முன்னிலையானதைக் காட்ட எந்தப் பதிவேடும் இல்லை என்றபோது, நீதிமன்றம் தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 17 விதி 3(a)இனைச் செயற்படுத்த முடியாது. சட்ட நிலை, இது பற்றி இந்த வழக்கின், தீர்ப்பில் முடிவு செய்யப்பட்டது.

உச்சநீதிமன்றம் பிரேம் வீர் மற்றும் பிறர் –எதிர்– ப்ரம்ப பிரகாஷ் மற்றும், 2023 (6) த.த.வ. 90 (உச்.நீ.) ; 2023 (3) M.W.N. (உரிமையியல்) 531. (உ.நீ.) ; 2023 19 உச்.நீ. 244.

25. மேதகு திரு. அதஞ்சு தூலியா மற்றும் நீதிபதி ஜெ.பி.பரிதிவாலா கூறியதாவது உ.வி.தொ.ச.இன் கட்டளை 17 விதி 3இன்படியான அதிகாரம் ஒரு கடுமையான அதிகாரம், இது வெற்றி பெற முடியாத தரப்பினை தீருதவி பெறுவதை குறைப்பதாக அமையும். மேலும் இவர்கள் குறிப்பிட்டதாவது வழக்கிற்குத் தயாராகாமல் அதற்காக, உதவாது வெறுமென அவர்கள் முன்னிலையாகி இருப்பதும் வழக்கினை மேல் நடத்த உதவாத நிலையும் எந்த நோக்கத்தையும் நிறைவேற்றாது. அதாவது வழக்கை தீர்மானிப்பது தொடர்பாக. அதன் நற்குறிப்பின்படி இது இல்லாது இருப்பதை விட மோசமான நிலை. அவர்கள் மேலும் குறிப்பிட்டதாவது கட்டளை 17 விதி 3இன் நிபந்தனைகள் இருப்பது மட்டுமே வழக்கில் நற்குறிப்பில் மட்டுமே நடவடிக்கை எடுப்பதற்கு போதியதாகாது. இது இயல்விக்கும் வகைமுறை இது கட்டாயமான ஒன்று அன்று. விதி 3க்கு இணங்க உச்சநீதிமன்றம் செயற்படுவது ஒருவர் முன்னிலையாகி வழக்கில் நடவடிக்கை மேற் கொள்ளும்போது மட்டுமே. ஆனால் மூன்று வழிகளில் ஏதேனும் ஒன்றின்படி தவறு ஏற்படுகிறது. அதாவது விதி 2இல் அல்லது இணைக்கப்பட்ட விளக்கத்தில் குறிப்பிடப்பட்ட வாறு நீதிமன்றம் கட்டளை 17 விதி 2இன் விளக்கத்துடன் கட்டளை 17 விதி 3இனையும் சேர்த்து நன்றாக படித்து விளக்கியது.

26. எனவே, சட்டநிலை பி. ஜானகிராமய்யா செட்டி வழக்கு மற்றும் பிரேம் கிஷீர் வழக்கு தவறியுள்ள தரப்பினர் பக்கத்தில் இருந்து பதிவேட்டில் சான்று எதுவும் கிடைக்கத்தக்கதாக இருந்தாலும் வழக்கில் நடவடிக்கையை நீதிமன்றம் மேற்கொள்ளக் கூடாது என்பது, அது தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 9 விதி 9 இனையே நாட வேண்டியுள்ளது. வாதி தவறும் நேர்வில் அல்லது கட்டளை 8இன் விதி 13இன்படி, எதிர்வாதிகள் தவறுகை காரணமாக மற்றும் 4.7 மில்லி –எதிர்– மகாராஷ்டிரா மாநில மின் பகிர்மான நிறுமம்–வரையறு பிறர். 2023 (5) த.த.வ. 87 (உச்.நீ.) சி.சு.மா.(சி) எண் 3543/2019. 16.8.2023 தேதியிடப்பட்டது.

27. இதற்கான காரணம் அதிக அளவில், அறியப்படவில்லை. தரப்பினர்களும் சாட்சி எதனையும், அளிக்கவில்லை. முறையான மேல்முறையீடு பிரிவு 96 2/வா1. கட்டளை 41 உரிமை வழக்கு விசாரணைத் தொகுப்புச் சட்டத்தின்படி இதனை எதிர்ப்பதற்கான காரணம் எதுவுமில்லை என்பது. மேல்முறையீட்டு நீதிமன்றம், மேல்முறையீட்டாளரை காப்பாற்ற வேண்டுமென்றாலும் இதனை புதியதாக பொருட்பாட்டை கட்டாயமாக முன்னிட வேண்டியிருக்கும். இதில் வழக்குகளை முடிவுக்கு கொண்டு வராமல் இம்முறை வழக்கின் காலத்தை நீட்டிப்பதாக மட்டுமே அமையும்.

28. மூன்றாவது கோரிக்கையாவது திரு.எஸ்.ஜ.முத்தையா கருதுகை செய்ய வேண்டியதில்லை. மு.மே.எண் 518/2013க்கு ஆதரவான உறுதியுரையினை கூர்ந்தாய்வு செய்வதில் அறியப்படுவது மூன்றாம் எதிர்வாதி, அவர் முன்னிட்ட சீராய்வின் முடிவுக்காக அவர் காத்திருப்பதாகக் கூறுவது, வாதுரை நிராகரிக்கப்பட்டதை எதிர்ப்பது, இதில் இவர் எந்தக் காரணமும் கூறவில்லை. 21.8.2013 அன்று தான் ஏன் நீதிமன்றத்தில் முன்னிலையாக வில்லை என்பது தொடர்பாக. இதில் தேவைப்படுவது தரப்பினர் தான் ஏன் அன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை என்பதற்கு சரியான காரணத்தைக் கூறுவது அவசியம்.

29. இது தொடர்பாக மூன்றாம் எதிர்வாதி சார்பாக. இரண்டு காரணிகள் உள்ளன. முதலாவதாக 6.8.2013 அன்று அந்த பொருட்பாடு கேட்கப்பட்டபோது மூன்றாம் எதிர்வாதியின் வழக்குரைஞர் கூறியதாவது, எந்த ஏவுரையும் இல்லை என்பது. விசாரணை நீதிமன்றம், மூன்றாம் எதிர்வாதிக்கு அறிவிப்பினை அளித்திருத்தல் வேண்டும். அதுவும் உச்ச நீதிமன்ற தீர்ப்பினை பின்பற்றி மால்கியாட் சின் மற்றும் வேஹாடட –எதிர்– ஷகீந்தர்சிங் மற்றும் பிறர் 1997 (3) த.த.வ. 619 (உச்.நீ.), 1998 (2) உச்.நீ.வ. 206. சொல்லப்பட்ட நடைமுறை இந்த வழக்கில் பின்பற்றப்படவில்லை என்பது.

30. இந்த நிலை குறிப்பிடப்பட்டபோது திரு. எஸ்.ஜ. முத்தையா பணிந்தளிப்பது, மூன்றாம் எதிர்வாதியின் வழக்கறிஞர் விசாரணை நீதிமன்றத்தின் முன்பு, ஏவுரைகள் எதுவும் இல்லை என்று கூறியுள்ளார். அதே வழக்கறிஞர், இந்த சீராய்வினை முன்னிட்டுள்ளார். உ.சீ.ம. (PD) (MD) எண் 548/2019.

31. திரு. எஸ்.ஜ. முத்தையா பொருண்மைகள் பற்றிய உரிமை கொண்டவர். எனினும், உச்ச நீதிமன்றத்தினால் எடுக்கப்பட்ட கருத்து. மல்கியாத் சிங் வழக்கில் நீதிமன்றத்திற்கு பின்பற்றப்பட அளிக்கப்பட்ட பணிப்புரை எந்த விதிவிலக்கையும் தாங்காது. அந்த நீதிமன்றம், மூன்றாம் எதிர்வாதியின் வழக்கறிஞர், அந்த பொருட்பாடு தொடர்பாக இழுத்தடிக்க பார்ப்பதாக கருத்துக் கொண்டிருக்குமானால், சொல்லப்பட்ட பொருண்மையினைப் பதிவு செய்து, மூன்றாம் எதிர்வாதிக்கு அறிக்கை அளித்திருக்கும். அதே வழக்கறிஞர், மீண்டும் முன்னிலையாவார் என்றால், அது அந்த வழக்கறிஞரை புதிய பரிந்துரையினை முன்னிடக் கோரியிருக்கும். ஏனெனில் முந்திய பரிந்துரையின்படி எந்த ஏவுரையும் இல்லை என்று கூறியிருப்பதன் மூலம், அது தீர்மானிக்கப்பட்டிருக்கும். அந்த செயற்பாடுகளுடன் பின்பற்றப்படவில்லை. விசாரணை நீதிமன்றத்தினால் இவ்வாறு ஆரோக்கியமற்ற நடைமுறை மூன்றாம் எதிர் வாதியின் வழக்கறிஞரால் பின்பற்றப்படுகிறது. நான் மூன்றாம் எதிர்வாதியை எதிர்மறையான விளைவுகளுடன் சந்திக்க விரும்பவில்லை. ஏனெனில் இதில் முக்கிய உரிமைகள் அசையாச் சொத்து தொடர்பாக இந்த நடவடிக்கைகளில் உள்ளடங்கியுள்ளது.

32. வாதி கோருவதாவது, வாய்மொழி பாகப் பிரிவினை பி.அண்ணாமலை முதலியாருக்கும் மூன்றாம் எதிர்வாதிக்கும் இடையே நடை பெற்றதில் அந்தச் சொத்து அவரது தந்தை பி.கந்தசாமிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மூன்றாம் எதிர்வாதியின் கோரிக்கை, பாகப் பிரிவினையில் அந்தச் சொத்து அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் எந்தத் தரப்பினரின் கோரிக்கை உண்மையானது. நம்பத்தக்கது. எனவே இது பற்றி அவசியமாக விசாரணை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது வழக்கறிஞரால் மேற்கொள்ளப்பட்ட நடைமுறை காரணமாகத் தரப்பினர் தனது உரிமையை சொத்தின் மீது இழப்பதாக அமையக் கூடாது என்பது. ஒரு நியாயமான வாய்ப்பு, இரு தரப்பினருக்கும் அளிக்கப்படுதல் வேண்டும். உரிமை வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டம், நடைமுறை ஒரு புதைகுழி யாக அல்லது சித்ரவதை செய்யும் கருவியாக தரப்பினரைத் தண்டிப்பது போன்று, அதாவது வழக்காக வகை செய்வதற்கு ஒத்துழைக்காக தாதற்கானதாக அமையக் கூடாது.

33. எனினும், நான் இடர்பாடுகளை ஒரு பக்கம் ஒதுக்க முடியாது. வழக்கை வேதனை மற்றும் கொடுந்துன்பங்கள் வாதியால் எதிர் கொள்ளப்பட்டுள்ளன. மேல்முறையீட்டு நீதிபதி யால் பிறப்பிக்கப்பட்ட ஆணையர் கூர்ந்தாய்வு செய்வதில், அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது அந்த தீர்ப்பாணை தரப்பினரின்றி பிறப்பிக்கப் பட்ட காரணத்தால் அவர் மேல்முறையீட்டினை அனுமதித்துள்ளார் என்பது. சட்டத்தில் நிலை அதாவது இது குறை காணப்பட முடியாத நிலை யிலானது. நீதிபதி இதனை அறிந்துள்ளார். தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 9 விதி 13இன்படி விண்ணப்பம் ஒன்றினை அனுமதிக்கும் நேரத்தில் வாதிக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய இடர்பாடு களுக்காக. செலவுத் தொகை விதிக்கப்படும்.

மேற்சொல்லப்பட்ட கருத்துப்படி துறையூரில் கீழ்நிலை நீதியின் ஆணையை. வாதங்களால் ஏற்கப்பட்டது. இந்த சீராய்வில் எதிர்ப்புக் குள்ளான ஆணையின்படி நான் மூன்றாம் எதிர்வாதிக்கு, அதிக அளவிலான, செலவுத் தொகையை விதிக்க உள்ளது. மூன்றாம் எதிர் வாதி, 24.4.2026 அன்று அல்லது அதற்கு முன்னர் ரூ.50,000 தொகையை செலுத்துதல் வேண்டும். அந்த விண்ணப்பத்தை நிபந்தனை யுடன் அனுமதிப்பதற்காக, மு.வி.எண் 518/ 2013 மு.வ.எண் 134/2003இல் ஆனது. ஒரு வேளை செலவுத் தொகை செலுத்தப்படாத நேர்வில் மு.வி.எண் 518/2013 தள்ளுபடி செய்யப்படும் என்பது. அதுவும் மேலுமான அறிக்கை இந்த நீதிமன்றத்தில் அனுப்பப் படாமல், இதில் தெளிவாக்கப்படுவதாவது, கால நீட்டிப்புக்கான விண்ணப்பம் இந்த நீதிமன்றத் தால் ஏற்கப்படாது என்பது.

35. மேற்சொல்லப்பட்ட பணிப்புரைகளுடன், உரிமையியல் சீராய்வு மனு ஏற்கப்பட்டு ஆணையிடப்படும். செலவுத் தொகையின் இதன் விளைவாக தொடர்புடைய பல்வகை மனு முடிக்கப்பட்டது.

36. 28.4.2026 அன்று 'இணக்க அறிக்கைக் காக' என்பதை முதல் இனமாகக் கொண்டு அழைக்க.

மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி

விற்பனை ஒப்பந்தத்தின் உண்மைத்தன்மை மற்றும் பணப் பரிமாற்றம் நிரூபிக்கப்படாததால் மேல்முறையீடு தள்ளுபடி

சென்னை உயர்நீதிமன்றம் – மதுரை அமர்வு
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி சி.வி.கார்த்திகேயன்
மாண்புமிகு நீதிபதி ஆர்.விஜயகுமார்
A.S.(MD)No.9/2018
C.M.P.(MD)Nos.452&453/2018
தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்ட நாள்: 23.09.2025
தீர்ப்பு வழங்கப்பட்ட நாள்: 08.10.2025

எம். கலாவதி ...மேல்முறையீட்டாளர்/வாதி

–எதிர்–

சி. மதுபாலா ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

வேண்டுகை: திருச்சிராப்பள்ளி, முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்கள், அசல் வழக்கு எண். 144/2015இல் 31.01.2017 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக, உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908இன் பிரிவு 96இன் கீழ் இந்த முதல் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேல்முறையீட்டாளருக்காக: திரு.எஸ்.ராம கிருஷ்ணன் (திரு.கே.எஸ். வம்சிதர் சார்பாக) வழக்கறிஞர்

எதிர்மனுதாரருக்காக : திரு. சங்கர் முரளி, வழக்கறிஞர்

தீர்ப்பு

நீதிபதி ஆர். விஜயகுமார்

ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கோரி வாதியால் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து, வாதியால் இந்த முதல் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(அ) விசாரணை நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட வாதங்கள்

2. வழக்குப் பிரமாண மனுவின் கூற்றுப்படி, பிரதிவாதியே வழக்கின் அட்டவணை சொத்தின் உரிமையாளர் ஆவார். பிரதிவாதியின் தாயார் வாதியிடம் இருந்து ரூ.45,00,000/– கடனாகப் பெற்றதாகவும், அந்தக் கடனை மெய்ப்பிக்கும் வகையில் பல்வேறு கடன் ஆவணங்களை எழுதிக் கொடுத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. பிரதிவாதியின் தாயாரால் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத காரணத்தால், மேற்கொள்ளப்பட்ட சமரசத்தின் அடிப்படையில், வழக்கின் அட்டவணை சொத்தை விற்க பிரதிவாதி சம்மதித்தார். முழு விற்பனைத் தொகையும் செலுத்தப்பட்டுவிட்டது.

3. விற்பனை ஒப்பந்தத்தில் காலவரம்பு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை என்று வாதி தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. விற்பனை ஒப்பந்தத்தை நிறைவேற்றித் தருமாறு வாதி எப்போது கோரினாலும், பிரதிவாதி அதனை நிறைவேற்றித் தர வேண்டும். மேலும், 15.08.2015 முதல் விற்பனைப் பத்திரத்தை நிறைவேற்றித் தருமாறு வாதி பிரதிவாதியிடம் கோரி வருவதாகவும் வாதிடப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி, இரு தரப்பினருக்கும் இடையே ஒரு நியாயமான காலகட்டம் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதால், தற்போதைய இந்த வழக்கு உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. பிரதிவாதியின் தாயார் வாங்கிய கடனின் பயனாளி பிரதிவாதி என்பதாலும், சொத்தை விற்பனை செய்து கடனை அடைப்பதாக அவர் ஒப்புக்கொண்டிருப்பதாலும், ஒப்பந்தத்தின் மறுபயனுக்கு பிரதிவாதி அந்நியராக இருந்தாலும் வாதிக்கு வழக்குத் தொடர உரிமை உண்டு என வழக்குப் பிராதில் மேலும்

வாதிடப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின்படி தான் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைச் செய்ய வாதி எல்லா நேரங்களிலும் தயாராகவும் விருப்பத்துடனும் இருந்து வந்ததாகவும், தொடர்ந்து அப்படியே இருந்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. தனது தாயார் வாங்கியதாகக் கூறப்படும் கடன்கள் குறித்துத் தனக்கு எதுவும் தெரியாது என்று குறிப்பிட்டுப் பிரதிவாதி எழுத்துப்பூர்வ மான எதிர்வாதத்தைத் தாக்கல் செய்துள்ளார். மேலும், தனது தாயார் வாங்கியதாகக் கூறப் படும் அந்தக் கடனால் தான் ஒருபோதும் எந்தப் பலனும் அடையவில்லை என்றும் வாதிட்டுள்ளார். இந்தக் ஒப்பந்தம் ஒரு போலியான ஆவணம் என்றும், அதில் உள்ள தனது கையொப்பத்தைப் பரிசோதிக்க அதனை நிபுணர் கருத்துக்கு அனுப்ப வேண்டும் என்றும் பிரதிவாதி வாதிட்டுள்ளார்.

6. பிரதிவாதியின் கூற்றுப்படி, வழக்கின் அட்டவணை சொத்து அவளது சொந்தப் பணத்தில் வாங்கப்பட்டது; மேலும் ஹெச்.டி.எஃப்.சி வங்கியிலிருந்து வீட்டுக் கடன் பெற்று அந்தச் சொத்தில் அவர் ஒரு வீட்டைக் கட்டியுள்ளார். எனவே, வழக்கின் அட்டவணை சொத்தை உரிமை மாற்றம் செய்யவோ அல்லது விற்கவோ அவளுக்கு எந்தக் காரணமும் இல்லை மற்றும் அவளுக்குப் பணப் பற்றாக்குறையும் இல்லை.

7. தனது தாயார் பல்வேறு சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவது வழக்கம் என்றும், அதனால் அவர் பல ஆண்டுகளாகத் தலைமறைவாக இருந்தார் என்றும் பிரதிவாதி மேலும் வாதிட்டுள்ளார். வாதி மற்றும் பிரதிவாதி யின் தாயார் இருவருமே குடும்பத் தலைவிகள் ஆவர். பிரதிவாதியின் தாயாருக்கு இவ்வளவு பெரிய தொகை எந்தக் காரணத்திற்காகக் கடனாக வழங்கப்பட்டது என்பது தெரிய வில்லை. பிரதிவாதியின் கூற்றுப்படி, அவளது சுய சம்பாத்திய சொத்தை அபகரிக்கும் நோக்கில் வாதி, பிரதிவாதியின் தாயாருடன் கூட்டுச் சதியில் ஈடுபட்டிருக்கலாம். பிரதிவாதி வேறு ஒரு மாநிலத்தில் வசித்து வருவதாகவும், அவர் ஊரில் இல்லாததைச் சாதகமாகப் பயன்படுத்தி, அவளது சொத்தை அபகரிக்க ஒரு குற்றவியல் சதி தீட்டப்பட்டுள்ளதாகவும் பிரதிவாதி கூறுகிறார். இந்த வழக்கின் விற்பனை ஒப்பந்தத்தைப் போலி செய்ததற்காகக் குற்றவியல் வழக்குத் தொடர உத்தேசித்துள்ளதாகவும் பிரதிவாதி மேலும் தெரிவித்துள்ளார்.

8. வாதி தரப்பில், வாதி தன்னைத்தானே வா.சா.1 ஆக விசாரித்துக் கொண்டார். மேலும், சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தத்தில் சான்றொப்பம் இட்ட வாதியின் சகோதரி வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டார். 08.11.2014 தேதியிட்ட சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தம் மட்டுமே வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஒரே ஆவண மாகும். பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி தன்னைத் தானே பி.சா.1 ஆக விசாரித்துக் கொண்டார். அவர் சா.ஆ. ஆ.1 ஆக ஒரு புகைப்படத்தையும், மற்றும் 01.04.2016 முதல் 31.03.2017 வரையிலான காலத்திற்கு ஹெச்.டி.எஃப்.சி வங்கி வழங்கிய தற்காலிக வங்கிக் கணக்கு அறிக்கையை சா.ஆ. ஆ.2 ஆகவும் குறியீடு செய்துள்ளார்.

(ஆ) விசாரணை நீதிமன்றத்தின் முடிவுகள் (கண்டுபிடிப்புகள்)

9. கீழ்க்கண்ட காரணங்களின் அடிப்படை யில் வழக்கைத் தள்ளுபடி செய்ய விசாரணை நீதிமன்றம் முடிவெடுத்துள்ளது:–

அ) பிரதிவாதியின் தாயார் ரூ.45,00,000/ – கடனாகப் பெற்றார் என்றும், அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக மதிப்புமிக்க பிணையங்கள் மற்றும் கடன் ஒப்பந்தத்தை எழுதிக் கொடுத்தார் என்றும் வாதி வாதிட்டாலும், அந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், பிரதிவாதியின் தாயார் பெற்ற கடனால் பிரதிவாதி பயனடைந்தார் என்பதை நிரூபிக்க எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்பட வில்லை;

ஆ) ஹெச்.டி.எஃப்.சி வங்கியிலிருந்து கடன் பெற்று, வழக்கின் அட்டவணை சொத்தில் பிரதிவாதியால் கட்டுமானம் மேற்கொள்ளப் பட்டது என்பதையும், அந்தக் கடன் இன்னும் நிலுவையில் இருப்பதையும் சா.ஆ. ஆ.2 வங்கி அறிக்கை தெளிவாக நிறுவுகிறது;

இ) விற்பனை ஒப்பந்தத்தில் ரூ.45,00,000/- மறுபயனாகக் கைமாறியதை நிரூபிக்க வாதி முற்றிலும் தவறிவிட்டார்;

ஈ) பிரதிவாதியின் தாயார் வாங்கிய கடனுக்காகவே சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தம் பிரதிவாதியால் எழுதிக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும், அந்த விற்பனை ஒப்பந்தத்தில் பிரதிவாதியின் தாயார் ஒரு தரப்பினராகவோ அல்லது சான்றொப்பமிடுபவராகவோ சேர்க்கப் படவில்லை;

உ) விற்பனை ஒப்பந்தத்தை நிறைவேற்றிய நேரத்தில், பிரதிவாதியின் தாயார் கடன் வாங்கிய போது எழுதிக் கொடுத்த ஆவணம் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்பதை வா.சா.1 ஒப்புக் கொண்டுள்ளார்;

ஊ) சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தத்தை நிறைவேற்றிய அதே நேரத்தில், கடனைத் திருப்பிச் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு பிரதி வாதியின் தாயார் ரூ.100/- முத்திரைத் தாளில் ஒரு உறுதிமொழி ஒப்பந்தத்தை எழுதிக் கொடுத்திருப்பதாக வா.சா.1 ஒப்புக் கொண்டு ள்ளார். அந்த ஆவணமும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காகப் பிரதிவாதியின் தாயாரிட மிருந்து மற்றொரு ஒப்பந்தத்தை வாதி பெற்றி ருப்பதால், வா.சா.ஆ.1 விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் எந்தப் பணப்பரிமாற்றமும் (மறுபயன்) நடைபெறவில்லை என்பது தெளிவாகிறது;

எ) ஒப்பந்தத்தின்படி தான் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைச் செய்ய வாதி தயாராக வும் விருப்பத்துடனும் இல்லை என்பதை வா.சா.1-இன் சாட்சியம் தெளிவாக வெளிப் படுத்துகிறது;

ஏ) வாதியின் கட்டாயப்படுத்தல் மற்றும் மிரட்டலின் காரணமாகவே பிரதிவாதியால் விற்பனை ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றும், அது பிரதிவாதியின் சொந்த விருப்பத்தின் பேரில் நடைபெறவில்லை என்றும் வா.சா.1-இன் சாட்சியம் வெளிப்படுத்துகிறது. எனவே, இந்த விற்பனை ஒப்பந்தத்தை சட்டப்படி நிறைவேற்ற இயலாது. கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தக் கோரிப் பிரதிவாதியின் தாயாருக்கு வாதி எந்தவொரு சட்டபூர்வமான அறிவிப்பையும் அனுப்பவில்லை; மேலும் பிரதிவாதியின் தாயார் எழுதிக் கொடுத்ததாகக் கூறப்படும் காசோலை மற்றும் உறுதிமொழிப் பத்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பிரதிவாதியின் தாயார் நொடிப்புநிலை மனு தாக்கல் செய்துள்ளார், அந்த மனுவில் வாதி ஒரு தரப்பினராகச் சேர்க்கப்படவில்லை. மேலும், பிரதிவாதியின் தாயார் தனது மகனின் தொழிலுக்காகவே கடன் வாங்கினார் என்றும், அந்தக் கடன் தொகையைப் பிரதிவாதியின் தாயார் பிரதிவாதிக்குக் கொடுத்தாரா என்பது தனக்குத் தெரியாது என்றும் வாதி தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார்; மற்றும்

ஐ) விற்பனை ஒப்பந்தத்தில் உள்ள தனது கையொப்பத்தைப் பிரதிவாதி திட்டவட்டமாக மறுத்து, அந்த விற்பனை ஒப்பந்தத்தை நிபுணர் கருத்துக்கு அனுப்ப வேண்டும் என்று கோரி யிருந்தபோதிலும், வாதி அதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நீதிமன்றத்தில் உள்ள எழுத்துப்பூர்வமான எதிர்வாதம், வக்காலத்து மற்றும் பிற ஆவணங்களில் காணப்படும் பிரதிவாதியின் கையொப்பத்துடன் சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தத்தில் காணப்படும் கையொப்பம் பொருந்தவில்லை. கையொப்பத்தில் உள்ள வேறுபாடு வெறும் கண்களுக்கே தெளிவாகத் தெரிகிறது. எனவே, விற்பனை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதையும், பிரதிவாதி யின் கையொப்பத்தையும் நிரூபிக்க வாதி தவறி விட்டார்.

10. சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தம் என்பது பதிவு செய்யப்படாத ஒரு ஆவணமாகும். 2012ஆம் ஆண்டில் பதிவுச் சட்டத்தில் செய்யப் பட்ட திருத்தத்திற்குப் பிறகு, 01.12.2012-க்குப் பின் நிறைவேற்றப்படும் விற்பனை ஒப்பந்தங் களைப் பதிவு செய்வது அவசியமாகும். சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தம் 08.11.2014 அன்று நிறைவேற்றப்பட்டுள்ளதால், அது சாட்சியமாக ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல;

எனவே, பதிவு செய்யப்படாத விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு செல்லுபடியாகாது.

11. மேற்கண்ட முடிவுகளின் அடிப்படையில், விசாரணை நீதிமன்றம் வழக்கைத் தள்ளுபடி செய்துள்ளது. இந்தத் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து, வாதியால் தற்போதைய இந்த முதல் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(இ) பரிசீலனைக்குரிய அம்சங்கள்:

அ) சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதை வாதி நிரூபித்துள்ளாரா?

ஆ) சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் பணப் பரிமாற்றம் வழங்கப்பட்டதை வாதி நிரூபித்துள்ளாரா?

இ) ஒப்பந்தத்தின்படி தான் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைச் செய்ய வாதி தயாராகவும் விருப்பத்துடனும் இருந்தாரா?

ஈ) முன்பணத்தைத் திரும்பப் பெறுதல் என்ற மாற்றுப் பரிகாரத்திற்கு வாதி தகுதியானவரா?

(ஈ) இரு தரப்பிலும் ஆஜரான வழக்கறிஞர் களின் வாதங்கள்

12. மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் முன்வைக்கும் வாதம் என்னவென்றால், பிரதிவாதியின் தாயார் வாதிக்கு மிகப் பெரிய தொகையைக் கடனாகத் தர வேண்டியிருந்தது மற்றும் பிரதிவாதியின் தாயார் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க வாதி உத்தேசித்திருந்தார். அத்தகைய நடவடிக்கையைத் தவிர்ப்பதற்காக, வாதிக்குச் சாதகமாக இந்த வழக்கின் விற்பனை ஒப்பந்தத்தை நிறைவேற்றித் தரப் பிரதிவாதி முன்வந்தார். 08.11.2014 அன்று இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது. மேலும் கடன் தொகையே விற்பனைக்கான மறுபயனாகக் கருதப்பட்டது. வாதி கோரும்போது விற்பனைப் பத்திரத்தை நிறைவேற்றித் தரப் பிரதிவாதி ஒப்புக்கொண்டார். விற்பனைக்கான மறுபயன் எதுவும் வழங்கப்பட வில்லை என்றும், பிரதிவாதியின் தாயார் வாங்கிய கடன்களை வாதி நிரூபிக்கத் தவறி விட்டார் என்றும் விசாரணை நீதிமன்றம் முடிவுக்கு வந்தது சரியல்ல. உண்மையில், வாதி தன்னைத்தானே வா.சா.1. ஆக விசாரித்துக் கொண்டார் மற்றும் சான்றொப்ப மிட்ட வா.சா.2 பிரதிவாதியின் தாயார் வாங்கிய கடன்கள் குறித்துத் தெளிவாகச் சாட்சியம் அளித்துள்ளார். வாதி விற்பனைக்கான மறு பயனை நிரூபித்து உள்ள நிலையில், வாதி கோரியபடியே விசாரணை நீதிமன்றம் வழக்கில் தீர்ப்பாணை வழங்கியிருக்க வேண்டும்.

13. விற்பனை ஆவணத்தை நிறைவேற்று வதைத் தவிர்க்கும் நோக்கத்திற்காக மட்டுமே பிரதிவாதி தனது கையொப்பத்தை மறுத்துள்ளார் என்று மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மேலும் வாதிடுகிறார். சா.ஆ.அ1–இல் உள்ள பிரதிவாதியின் கையொப்பத்தை, வழக்குத் தொடரப்பட்ட பிறகு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்து, எழுத்துப்பூர்வமான எதிர்வாதம் மற்றும் பிற ஆவணங்களில் உள்ள கையொப்பத்துடன் ஒப்பிட்டுப் பார்த்த விசாரணை நீதிமன்றத்தின் செயல் சரியல்ல.

14. வாதிக்குச் சாதகமாக விற்பனை ஒப்பந்தத்தை நிறைவேற்றிய பிறகு, சட்ட நடவடிக்கைகளில் இருந்து தனது தாயாரைக் காப்பாற்றுவதற்காக, பிரதிவாதியும் அவரது தாயாரும் விற்பனைப் பத்திரத்தை நிறைவேற்று வதைத் தவிர்க்க ஒருவருக்கொருவர் கூட்டுச் சதியில் ஈடுபட்டனர் என்று மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மேலும் கூறுகிறார். பிரதிவாதி மட்டுமே அவரது ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பங்களைக் கொண்டிருப்பார் என்பதால், சா.ஆ.அ1–இல் உள்ள சர்ச்சைக்குரிய கையொப்பத்துடன் அவற்றை ஒப்பிடுவதற்காக நீதிமன்றத்தின் முன் அவற்றைச் சமர்ப்பித்திருக்க முடியும் என்று அவர் மேலும் வாதிடுகிறார். பிரதிவாதி தனது ஒப்புக் கொள்ளப்பட்ட கையொப்பத்தைச் சமர்ப்பிக்காத நிலையில், சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தத்தின் உண்மைத் தன்மையை நிரூபிக்கும் சுமையை நீதிமன்றம் வாதி மீது மாற்றியிருக்கக் கூடாது.

15. பிரதிவாதியின் தாயார் வாதியிடம் இருந்து ரூ.45,00,000/- கடனாகப் பெற்றுள்ளார் என்ற உண்மையை ஒப்புக் கொள்வதாகவே சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தம் அமைந்துள்ளது என்று மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மேலும் வாதிடுகிறார். எனவே, பிரதிவாதியின் தாயாருக்கு ரூ.45,00,000/- செலுத்தப் பட்டதை வாதி நிரூபிக்கத் தேவையில்லை.

16. முழு விற்பனைத் தொகையும் பிரதிவாதியின் தாயார் பெற்ற கடன்களில் ஏற்கனவே சரிக்கட்டப்பட்டுவிட்டது. வாதியின் தரப்பில் நிறைவேற்றுவதற்கு எதுவும் மீதமில்லை. எனவே, ஒப்பந்தத்தின்படிதான் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைச் செய்ய வாதி தனது தயார்நிலையையும் விருப்பத்தையும் நிரூபிக்க வில்லை என்ற முடிவுக்கு விசாரணை நீதிமன்றம் வந்தது சரியல்ல என்று மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மேலும் வாதிடுகிறார்.

17. சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் கடன் தொகை சரிசெய்யப்பட்டதால், நொடிப்புநிலை நடவடிக்கைகளில் வாதியை ஒரு தரப்பினராகச் சேர்க்க வேண்டிய அவசியம் பிரதிவாதியின் தாயாருக்கு ஏற்படவில்லை என்று மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மேலும் வாதிடுகிறார். எனவே, பிரதிவாதியின் தாயார் தொடங்கிய நொடிப்புநிலை நடவடிக்கைகளில் வாதியைச் சேர்க்காததை, வாதிக்கும் பிரதிவாதியின் தாயாருக்கும் இடையே எந்தப் பணப் பரிவர்த்தனையும் நடக்கவில்லை என்ற முடிவுக்கு வருவதற்கான ஒரு காரணியாகக் கருத முடியாது. ஆகையால், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பானையை ரத்து செய்து, வாதி கோரியபடியே ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான தீர்ப்பாணையினை வழங்குமாறு அவர் வேண்டினார்.

18. இதற்கு மாறாக, எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், பிரதிவாதி தனது கையொப்பம் போலி செய்யப்பட்டது குறித்து எழுத்துப்பூர்வமான எதிர்வாதத்தில் திட்டவட்டமான நிலைப் பாட்டை எடுத்துள்ளார் என்றும், அந்த ஆவணத்தை நிபுணர் கருத்துக்கு அனுப்ப வேண்டும் என்று கோரியிருந்தார் என்றும் குறிப்பிடுகிறார். இருப்பினும், இந்த ஆவணம் நிறைவேற்றப் பட்டதை நிரூபிக்க வாதி தவறி விட்டார். இந்த வழக்கின் விற்பனை ஒப்பந்தத்திற்கான மறுபயன் என்பது பிரதிவாதியின் தாயார் வாங்கிய கடன்கள் தான் என்பதே வாதியின் வழக்காகும். எனவே, அந்தக் கடன்கள் நிரூபிக்கப்படாத வரை, சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தம் விற்பனைக்கான மறுபயன் இல்லாத தால் செல்லுபடியற்றதாகி விடும். விற்பனை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதோ அல்லது அந்த ஒப்பந்தத்தின் கீழ் விற்பனைக்கான மறுபயன் கைமாறியதோ வாதியால் நிரூபிக்கப்படவில்லை என்று விசாரணை நீதிமன்றம் சரியாகவே முடிவுக்கு வந்துள்ளது என்று அவர் மேலும் வாதிடுகிறார். வாதி/வா.சா.1-இன் சாட்சியமே, வாதி தனது வழக்கை நிரூபிக்க முற்றிலும் தவறிவிட்டார் என்ற உண்மையை நிறுவுகிறது என்று அவர் மேலும் வாதிடுகிறார். எனவே, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பானையை உறுதி செய்யுமாறு அவர் வேண்டினார்.

19. இரு தரப்பிலும் முன்வைக்கப்பட்ட வாதங்களை நாங்கள் கவனமாகப் பரிசீலித்தோம் மற்றும் ஆவணப் பதிவுகளில் உள்ள ஆதாரங்களை முழுமையாக ஆராய்ந்தோம்.

(உ) விவாதம்

20. பிரதிவாதியால் வாதிக்குச் சாதகமாக நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படும் 08.11.2014 தேதியிட்ட சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கோரி வாதியால் இந்த வழக்கு தொடரப் பட்டுள்ளது. அந்த ஆவணத்தை ஆராய்ந்ததில், பிரதிவாதியின் தாயார் பணம் கடனாகப் பெற்றுள்ளார் என்பதும், அத்தொகையைத் திருப்பிச் செலுத்த முடியாததால் ஒரு சமரசம் எட்டப்பட்டு, வழக்கின் அட்டவணை சொத்தை ரூ.45,00,000/-க்கு விற்பனை செய்யப் பிரதிவாதி இந்த விற்பனை ஒப்பந்தத்தை நிறைவேற்ற ஒப்புக்கொண்டார் என்பதும்

தெரியவருகிறது. ரூ.45,00,000/- முழு விற்பனைத் தொகையும் (மறுபயன்) ஏற்கனவே சரிசெய்யப்பட்டுவிட்டது என்றும் அந்த ஆவணத்தில் மேலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதியின் முதன்மையான தற்காப்பு வாதம் என்னவென்றால், தவறான புரிதல்கள் காரண மாகத் தனது தாயாருடன் தான் நல்லுறவில் இல்லை என்பதுடன், இந்த விற்பனை ஒப்பந்தத்தைத் தான் ஒருபோதும் நிறைவேற்ற வில்லை என்பதாகும். தனது தாயார் வாங்கிய கடனால் தான் ஒருபோதும் பயனடையவில்லை என்றும் பிரதிவாதி மேலும் வாதிடுகிறார். எனவே, சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தம் பிரதி வாதியால் நிறைவேற்றப்பட்டதை மட்டுமின்றி, அந்த ஒப்பந்தத்தின் கீழ் மறுபயன் கை மாறியதையும் நிரூபிக்க வேண்டிய முழுச் சுமையும் வாதியின் மீதே உள்ளது.

21. வா.சா.1-இன் சாட்சியத்தை ஆராய்ந்ததில், வங்கியில் இருந்து ரூ.5,00,00,000/- கடன் பெறுவதற்கான தரகுத் தொகையாகப் பிரதிவாதி யின் தாயாருக்கு வாதி ரூ.45,00,000/- வழங்கியதாகக் கூறப்படுகிறது. ஆரம்பத்தில் வாதி ரூ.15,00,000/- மற்றும் பின்னர் ரூ.5,00,000/- வழங்கியதாகக் கூறப்படு கிறது. அந்தத் தொகைக்காகப் பிரதிவாதியின் தாயாரால் இரண்டு காசோலைகள் வழங்கப் பட்டுள்ளன. பணமாக்குவதற்காக வங்கியில் சமர்ப்பிக்கப்பட்டபோது அந்த இரண்டு காசோலை களும் பணமின்றித் திரும்பின. வாதியின் கூற்றுப்படி, பிரதிவாதியின் தாயார் ரூ.45,00,000/ -க்கு மற்றொரு காசோலையை வழங்கிய தாகவும், அது வங்கியில் சமர்ப்பிக்கப்பட வில்லை என்றும் கூறப்படுகிறது. பிரதிவாதியின் தாயார் எழுதிக் கொடுத்த மூன்று உறுதிமொழிப் பத்திரங்கள் மற்றும் ஒரு உறுதிமொழி ஆவணம் ஆகியன தனது பொறுப்பில் இருப்பதாக வாதி மேலும் கூறுகிறார். காசோலை நிராகரிக்கப் பட்டதற்காகவோ அல்லது மேற்கண்ட தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்காகவோ பிரதிவாதியின் தாயாருக்குத் தான் எந்தவொரு சட்டபூர்வமான அறிவிப்பையும் அனுப்பவில்லை என்று வாதி மேலும் கூறுகிறார்.

22. சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட தேதியன்று, பிரதிவாதியின் தாயார் வாதிக்குச் சாதகமாக மற்றொரு உறுதி மொழி ஆவணத்தை எழுதிக் கொடுத்துள்ளார் என்பதை வாதி தனது சாட்சியத்தில் மேலும் ஒப்புக்கொண்டுள்ளார். அந்த ஆவணமும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் வழக்கின் அட்டவணை சொத்தின் மீது வங்கிக் கடன் உள்ளது என்ற உண்மை தனக்குத் தெரியாது என்று அவர் மேலும் தெரிவித்து உள்ளார்.

23. சா.ஆ.அ1. விற்பனை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட தேதியன்று, வழக்கின் அட்டவணை சொத்தை வாங்கும் எண்ணம் தனக்கு இல்லை என்றும், பிரதிவாதியின் தாயாருக்கு அளித்த பணத்தைத் திரும்பப் பெறுவது மட்டுமே தனது ஒரே நோக்கமாக இருந்தது என்றும் வா.சா.1 மேலும் சாட்சியம் அளித்துள்ளார். சா.ஆ.ஆ.1 விற்பனை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட நேரத்தில், ரூ.45,00,000/- முழுத் தொகையையும் மூன்று மாத காலத்திற்குள் செலுத்தத் தயாராக இருப்பதாகப் பிரதிவாதியின் தாயார் கூறியதாக அவர் மேலும் சாட்சியம் அளித்துள்ளார். இந்த உண்மை, அதே நாளில் பிரதிவாதியின் தாயார் எழுதிக் கொடுத்த உறுதி மொழி ஒப்பந்தத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. விற்பனை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட நேரத்தில், பிரதிவாதி டெல்லியில் இருந்தார் என்றும், அவரது டெல்லி முகவரி தனக்குத் தெரிவிக்கப்படவில்லை என்றும் வாதி மேலும் சாட்சியம் அளித்துள்ளார்.

24. பிரதிவாதியின் தாயார் 11 நபர்களுக்கு எதிராக நொடிப்புநிலை மனுவைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், அந்த நடவடிக்கைகளில் தான் ஒரு தரப்பினர் இல்லை என்றும் வாதி மேலும் சாட்சியம் அளித்துள்ளார். கடனாகப் பெறப்பட்ட தொகையின் பலன் பிரதிவாதிக்காகப் பயன்படுத்தப்பட்டதா இல்லையா என்ற உண்மை தனக்குத் தெரியாது என்று வாதி மேலும் சாட்சியம் அளித்துள்ளார். பிரதிவாதிக்கு நேரடி

யாக எந்தத் தொகையையும் தான் வழங்க வில்லை என்று வா.சா.1 மேலும் கூறியுள்ளார்.

25. சா.ஆ.அ1 மற்றும் வா.சா.1–இன் சாட்சியம் ஆகியவற்றை ஒட்டுமொத்தமாகப் படித்துப் பார்க்கும்போது பின்வரும் உண்மைகள் தெளிவாகத் தெரிகின்றன:–

அ) பிரதிவாதியின் தாயார் எழுதிக் கொடுத்த தாகக் கூறப்படும் உறுதிமொழிப் பத்திரங்கள், காசோலைகள் மற்றும் 08.11.2014 தேதியிட்ட ஒரு உறுதிமொழி ஆவணம் ஆகியன வாதியின் வசம் இருந்தபோதிலும், அவற்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வாதி முற்படவில்லை. இந்த ஆவணங்களைச் சமர்ப்பித்தால் மட்டுமே பிரதிவாதியின் தாயாருக்கு ரூ.45,00,000/– வழங்கப்பட்டது என்பதை நிறுவ முடியும். இந்த ஆவணங்களைச் சமர்ப்பிக்காதது, வா.சா.ஆ.1 விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் விற்பனைக்கான மறுபயன் கைமாறியதை வாதி நிரூபிக்க வில்லை என்பதைத் தெளிவாக நிறுவுகிறது;

ஆ) சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் சொத்தை வாங்கும் எண்ணம் தனக்கு ஒருபோதும் இருந்ததில்லை என்பதை வாதி தனது சாட்சியத்தில் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார். அவர் தனது பணத்தைத் திரும்பப் பெற மட்டுமே விரும்பியுள்ளார். வாதியின் சாட்சியத்தின்படி, மூன்று மாத காலத்திற்குள் ரூ.45,00,000/– தொகையைத் திருப்பிச் செலுத்துவதாக உறுதி யளித்துப் பிரதிவாதியின் தாயார் 08.11.2014 தேதியிட்ட மற்றொரு உறுதிமொழி ஆவணத்தை எழுதிக் கொடுத்துள்ளார். எனவே, வா.சா.ஆ.1 விற்பனை ஒப்பந்தம் பிரதிவாதியால் நிறைவேற்றப் பட்டது என வைத்துக் கொண்டாலும், அது பிரதிவாதியின் தாயார் வாங்கிய கடன்களுக்கான பாதுகாப்பாக மட்டுமே பெறப்பட்டது என்பதும், வாதிக்குச் சாதகமாக விற்பனைப் பத்திரத்தைப் பெறுவதற்காக அதனைச் சட்டப்படி நிறைவேற்றும் எண்ணத்துடன் பெறப்படவில்லை என்பதும் தெளிவாகிறது; மற்றும்

இ) வா.சா.ஆ.1 விற்பனை ஒப்பந்தத்தில் உள்ள தனது கையொப்பத்தைப் பிரதிவாதி திட்டவட்டமாக மறுத்துள்ளதுடன், அதனை நிபுணர் கருத்துக்கு அனுப்ப வேண்டும் என்றும் கோரியுள்ளார். அந்த ஆவணத்தை நிபுணர் கருத்துக்கு அனுப்ப வாதி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இத்தகைய சூழ்நிலைகளில், சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்டதை நிறுவுவதற்கான தனது சுமையை வாதி நிறைவேற்றவில்லை.

26. வாதியின் மேற்கண்ட திட்டவட்டமான சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்டதையும், விற்பனைக்கான மறுபயன் கைமாறியதையும் மற்றும் சா.ஆ.அ1 விற்பனை ஒப்பந்தத்தைச் சட்டப்படி நிறைவேற்றும் தன்மையையும் நிரூபிக்க வாதி முற்றிலும் தவறிவிட்டார் என்பது தெளிவாகிறது. இத்தகைய சூழ்நிலைகளில், ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கோரிய வழக்கை விசாரணை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது சரியே.

27. பிரதிவாதிக்கு நேரடியாக ரூ.45,00,000/– தொகையைத் தான் வழங்கவில்லை என்று வாதி ஒப்புக்கொண்டுள்ள நிலையிலும், மற்றும் பிரதிவாதியின் தாயாருக்கு வழங்கப்பட்ட கடனுக் கான பாதுகாப்பாக மட்டுமே இந்த விற்பனை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது என்பது நிறுவப் பட்டுள்ள நிலையிலும், முன்பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான மாற்றுப் பரிகாரக் கோரிக்கையையும் விசாரணை நீதிமன்றம் நிராகரித்தது சரியே.

(ஊ) முடிவுரை

28. மேற்கண்ட விவாதங்களின் அடிப்படை யில் பார்க்கும்போது, இந்த முதல் மேல்முறை யீட்டில் எந்தவிதமான தகுதியும் இல்லை. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இதன்மூலம் உறுதி செய்யப்படு கிறது மற்றும் இந்த முதல் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை ஏதுமில்லை. இதன் விளைவாக, இதனுடன் தொடர்புடைய பல்வகை மனுக்களும் முடித்து வைக்கப்படுகின்றன.

மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை

2000ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 7/2001)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

The Tamil Nadu Farmer's Management of Irrigation Systems Act, 2000 (Tamil Nadu Act No.7 of 2001) (as on 31st October, 2023)

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 2001ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25ஆம் நாளன்று குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவைப் பெற்றுப் பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

நீர்ப்பாசன அமைப்பு முறையின் மேலாண்மையில் குடியானவர்கள் பங்கேற்பதற்கும், அது தொடர்பானவைகளுக்கு அல்லது அதன் இடைவிளைவானவைகளுக்கும் வகை செய்வதற்கான சட்டம்.

வேளாண் உற்பத்தியை மேம்படுத்துவதற்காகத் தேசிய சொத்தான நீர்வளத்தை நலன் தரத்தக்க வகையில் பயன்படுத்திக் கொள்வதை உறுதி செய்கின்ற வரையில், திறமையாகவும் சரிசமமாகவும் நீர் வழங்கப்படுவதையும் பகிர்ந்தளிக்கப்படுவதையும் சார்ந்திருக்கின்றதாலும் தமிழ்நாடு மாநிலம் முக்கியமாக ஒரு வேளாண் மாநிலமாக இருப்பதாலும்.

நீர் வழங்கப்படுவதற்கான திட்டத்திற்கும், அதன் செயல்முறை ஏற்பாட்டிற்கும் இணங்க, நீர்ப்பாசன அமைப்பு முறையில் குடியானவர்களை ஈடுபடச் செய்வதன் மூலமாகவும் அவர்களிடையே அதற்கான உரிமையுணர்வை ஏற்படுத்துவதன் மூலமாகவும், பயனாளர்களுக்கிடையே தண்ணீரானது பகிர்ந்தளிக்கப்படுவதை, நீர்ப்பாசன அமைப்பு முறை போதுமான அளவு பேணி வரப்படுவதை, வேளாண் உற்பத்திக்க பயன்படத்தக்க வகையில் நீரை திறமையாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்திக் கொள்வதை மேம்படுத்திப் பாதுகாப்பது இன்றியமையாததாக இருப்பதாலும்.

நீர்ப்பாசன வசதிகளுக்கான அறிவியல் சார்ந்த மற்றும் முறையான வளர்ச்சியும் பராமரிப்பும் (விவசாயிகள் சங்கங்களின்) குடியானவர் அமைப்புகளின் மூலமாக மட்டுமே சிறப்பாக இருக்க முடியும் எனக் கருதுவதாலும்.

பயனுள்ள மற்றும் நம்பகமான தண்ணீர் வழங்குதல் மற்றும் பங்கீடு செய்தலுக்கு (விவசாயிகள் சங்கங்களுக்கு) குடியானவர் அமைப்புகளுக்கு நீர்ப்பாசன முறை மேலாண்மை மற்றும் பராமரிப்பில் பயனுள்ள பங்கு அளிக்க வேண்டியது இருப்பதாலும்,

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு.

அத்தியாயம் 1

முன்னுரை

1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்:

(1) இந்தச் சட்டம் 2000ஆம் தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு, அறிவிக்கையின் மூலமாகக் குறிப்பிடக் கூடிய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும். மேலும் வெவ்வேறு பகுதிகளுக்காகவும் வெவ்வேறு வகைமுறைகளுக்காகவும் வெவ்வேறு தேதிகள் குறிப்பிடப்படலாம்.

2. பொருள் வரையறைகள்: இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி:

(a) "உச்சநிலைக் குழு" என்பது, பிரிவு 12இன்படி அமைத்துருவாக்கப்பட்டுள்ள உச்சநிலைக் குழு எனப் பொருள்படும்.

(b) குடியானவர்களின் அமைப்பு தொடர்பான செயற்பாட்டுப் "பரப்பிடம்" என்பது. இதன் பொருட்டு அறிவிக்கையின் மூலமாக அரசு குறிப்பிடக் கூடிய பாசனப் பரப்பிடத்திற்குள் உள்ள தொடர்ச்சியான ஒரு நிலத் தொகுதி எனப் பொருள்படும்.

(c) "ஆயக்கட்டுச் சாலை" என்பது. செயற்பாட்டுப் பரப்பிற்குள் உள்ள ஒரு சாலை எனப் பொருள்படும். ஆனால் ஒரு கிராம, ஊராட்சி ஒன்றிய, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி, நெடுஞ்சாலை ஆகியவற்றின் உரிமையில் உள்ள சாலை எதையும் உள்ளடக்காது.

(d) "கால்வாய் அமைப்பு" என்பது.

(i) நீர்ப்பாசனத்திற்காக நீர் வழங்கப்படுவதற்காகவும் விநியோகிக்கப்படுவதற்காகவும் அமைக்கப்பட்டுள்ள முதன்மைக் கால்வாய்கள், கிளைக் கால்வாய்கள், பகிர்மானக் கால்வாய்கள் மற்றும் நீரோடைகள் என்றும்

(ii) நீர்ப்பாசனத்திற்காக நீர் விநியோகிக்கப்படுவதுடன் தொடர்புடைய பணியமைப்புகள், கட்டுமானங்கள் மற்றும் சாதனங்கள் அனைத்தும் என்றும்,

(iii) நீர்ப்பாசன மதகு அமைப்பு ஒன்றின் கீழ் உள்ள நிலக் கால்வாய்கள் மற்றும் தொடர்புடைய வேறு கால்வாய்கள் மற்றும் கட்டுமானங்கள் அனைத்தும் என்றும்,

பொருள்படும்.

(e) "ஆட்சியர்" என்பது, நீர்ப்பாசன அமைப்பு அமைந்துள்ள ஒரு மாவட்டத்தின் ஆட்சியர் என்று பொருள்படுவதோடு, இந்தச் சட்டத்தின் கீழ் ஆட்சியருக்குள்ள அலுவல்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் ஏதொன்றையும் ஆற்றி வரும் பொருட்டு அரசினால் இதற்கெனத் தனியாக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர் எவரையும் உள்ளடக்கும்.

(f) பாசனப் பரப்பிடம் என்பது, புவிஈர்ப்பு விசையின் மூலமாகவோ அல்லது நீரேற்றுப் பாசனத்தின் மூலமாகவோ அல்லது அரசினர் வழி வகையிலிருந்த வேறு முறை நீர்ப்பாசன அமைப்பு எதன்படியும் நீர்ப்பாசனம் செய்யப்படும் அல்லது நீர்ப்பாசனம் செய்யப்படுவதற்குத் தகுந்ததான ஒரு பரப்பிடம் எனப் பொருள்படும் மற்றும் அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதன்படியும், ஆயக்கட்டு என்று அழைக்கப்பட்டாலும் அல்லது வேறு எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும் அந்தப் பரப்பிடம் ஒவ்வொன்றையும் உள்ளடக்கும்.

(g) "தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு" என்பது, பிரிவு 26இன்படி நியமிக்கப்பட்டுள்ள அதிகார அமைப்பு எனப் பொருள்படும்.

(h) நீர்ப்பாசன அமைப்பு ஒன்று தொடர்பான வடிகால் அமைப்பு என்பது.

(i) வடிநீரோ, உபரிநீரோ வடிந்து செல்வதற்காக இயற்கையாகவோ செயற்கையாகவோ உள்ள கால்வாய்களையும் அது தொடர்பான அல்லது அதற்குத் துணையாக உள்ள அனைத்துக் கட்டுமானங்களையும் உள்ளடக்கும்.

(ii) நீர்ப்பாசன அமைப்பு அல்லது கால்வாய் அமைப்பு மற்றும் அது தொடர்பான பிற கட்டுமானங்களில் உள்ள கசிவு நீர்க்கழிவு நீர் அகற்றுவதற்கான கட்டுமானங்களை உள்ளடக்காது.

(iii) நிலத்து வடிகால்களிலிருந்து உபரி நீரானது வடிவதற்காக உள்ள சேகரிப்பு வடிகால்கள் மற்றும் முதன்மை வடிகால்கள் அனைத்தையும் உள்ளடக்கும் மற்றும்

(iv) நீர்ப்பாசன மதகு அமைப்பு ஒன்றின் கீழ் உள்ள நிலத்து வடிகால்கள் மற்றும் தொடர்புடைய கட்டுமானங்கள் அனைத்தையும் உள்ளடக்கும்.

(i) குடியானவர் அமைப்பு என்பது,

(i) தொடக்க நிலையில் பிரிவு 4இன்படி அமைத்துருவாக்கப்பட்ட நீரைப் பயன்படுத்துபவர் அனைவரையும் கொண்டிருக்கின்ற ''தண்ணீர் பயன்படுத்துவோர் சங்கம்'' என்றும் அல்லது

(ii) இரண்டாம் நிலையில் பிரிவு 7இன்படி அமைத்துருவாக்கப்பட்ட பகிர்மானக் குழு என்றும் அல்லது

(iii) திட்ட நிலையில் பிரிவு 10இன்படி அமைத்துருவாக்கப்பட்ட 'திட்டக் குழு' என்றும், பொருள்படும்.

(j) ''நிலக் கால்வாய்'' என்பது, மதகு அமைப்பு ஒன்றிலிருந்து வருகின்ற நீரைப் பெற்று விநியோகிப்பதற்கானதும், தற்போது இருக்கின்ற அல்லது அரசாலோ, நீரைப் பயன்படுத்து பவர்களாலோ, வேறு முகவாண்மை அமைப்பு எதனாலுமோ இனி கட்டப்பட இருக்கின்றதுமான கால்வாய் ஒன்றை உள்ளடக்கும்.

(k) ''நில வடிகால்'' என்பது, மதகு அமைப்பு ஒன்றின் கீழ் உடைமை நிலத்திலிருந்து கழிவு நீரையோ, உபரி நீரையோ, வெளியேற்றும் பொருட்டு நீர் பயன்படுத்துபவர்களாலோ அல்லது வேறு முகவாண்மை அமைப்பு எதனாலுமோ தோண்டப்பட்டதும், பேணி வரப்படுவதுமான கால்வாய் ஒன்றை உள்ளடக்கும். மேலும் அது தற்போது இருக்கின்ற அல்லது இனி கட்டப்பட இருக்கின்ற வடிகால்கள், கசிவு நீர்க் கால்வாய்கள் மற்றும் அது போன்ற கட்டுமானங்களையும் உள்ளடக்கும்.

(l) ''நிதி முகவாண்மை அமைப்பு'' என்பது, குடியானவர் அமைப்பின் செயற்பாட்டுப் பரப்பிடத்தை மேம்படுத்துவதற்காகப் பணம் கடன் கொடுக்கின்ற வணிகத் தொழில் வங்கி அல்லது கூட்டுறவுச் சங்கம் எதுவும் என்றோ அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதன்படியும் நிறுவப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட பிற வங்கி அல்லது அமைப்பு எதுவும் என்றோ பொருள்படும்.

(m) ''அரசு'' என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்.

(n) ''அரசு வழிவகை'' என்பது, நீர்வள ஆதார அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் நீரைப் பெறுவதற்கான வழிவகை எதுவும் எனப் பொருள்படும்.

(o) ''நீரழுத்த அடிப்படைக் கூறு'' என்பது, தலைக்கட்டுமானம், முதன்மைக் கால்வாய், கிளைக் கால்வாய்கள், பகிர்மானக் கால்வாய்கள், மதகு அமைப்புகள் மற்றும் அவை போன்ற நீரழுத்த கட்டுமானங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கட்டுமானங்களைப் பயன்படுத்தும் நீர்ப்பாசனத்திற்கு உகந்த பரப்பிடங்களை அடையாளம் காண்பதற்கான அடிப்படைக் கூறு எனப் பொருள்படும்.

(p) ''நீர்ப்பாசன அமைப்பு'' என்பது, அரசு வழிவகைகளிலிருந்து நீப்பாசனத்திற்காகவும் அதைச் சார்ந்த பயன்பாடுகளுக்காகவும் நீரைப் பயன்படுத்திக் கொள்வதற்காக உள்ள பெரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசன அமைப்பு எனப் பொருள்படும். மேலும் அது நீர்த்தேக்கங்கள், திறந்த வெளிக் கால்வாய்கள், மாற்று வழி அமைப்புகள், நீரேற்றுப் பாசனத் திட்டங்கள், அணைக்கட்டுகள், குளங்கள், கிணறுகள் மற்றும் அவை போன்றவற்றை உள்ளடக்கும்.

விளக்கம் இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக.

(i) ''பெரிய நீர்ப்பாசன அமைப்பு'' என்பது, 10000 ஹெக்டேர்களுக்கும் அதிகமாக நீர்ப்பாசனம் செய்யத்தக்க பாசனப் பரப்பிடத்தைக் கொண்ட நீர்ப்பாசனத் திட்டத்தின்படியான பெரிய நீர்ப்பாசன அமைப்பு எனப் பொருள்படும்.

(ii) ''நடுத்தர நீர்ப்பாசன அமைப்பு'' என்பது, 2000 ஹெக்டேர்களுக்கு மேல் 10000 ஹெக்டேர்கள் வரை நீர்ப்பாசனம் செய்யத்தக்க பாசனப் பரப்பிடத்தைக் கொண்ட நடுத்தர நீர்ப்பாசனத் திட்டத்தின்படியான நீர்ப்பாசன அமைப்பு எனப் பொருள்படும்.

(iii) ''சிறிய நீர்ப்பாசன அமைப்பு'' என்பது. 2000 ஹெக்டேர்கள் வரை நீர்ப்பாசனம் செய்யத்தக்க பாசனப் பரப்பிடத்தைக் கொண்ட சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்படியான நீர்ப்பாசன அமைப்பு எனப் பொருள்படும்.

(q) ''நிலம்'' என்பது, ஏதேனும் நீர்ப்பாசன அமைப்பு ஒன்றின் பதிவு பெற்ற ஆயக்கட்டு எதன்படியுமான நிலம் எதுவும் எனப் பொருள்படும்.

(r) ''பேணுகை'' என்பது, தர அளவு வைத்து வடிவமைக்கப்பட்ட இந்தச் செயல்முறையானது, நீரை நிலங்களுக்கு உரியவாறு பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, இந்த நீர்ப்பாசன அமைப்பில் தேவையானப் பணிகளை நிறைவேற்றுதல் எனப் பொருள்படும்.

(s) ''மேலாண்மைக் குழு'' என்பது, பாசனப் பரப்பிடம் எதிலும் நீர்ப்பாசனத்தை முறைப்படுத்துவதற்கான பகிர்மான முறை மற்றும் கால அளவு பற்றிய விவரங்களுடனான நீரின் வெளியேற்றப் பட்டியல் எனப் பொருள்படும்.

(t) ''செயற்பாட்டுத் திட்டம்'' என்பது, பாசனப் பரப்பிடம் எதிலும் நீர்ப்பாசனத்தை முறைப்படுத்துவதற்கான பகிர்மானமுறை மற்றும் கால அளவு பற்றிய விவரங்களுடனான நீரின் வெளியேற்றப் பட்டியல் எனப் பொருள்படும்.

(u) ''சுழற்சிமுறை பகிர்மானம்'' என்பது, நீர் வழங்கப்படுகின்ற நாள், கால அளவு, நேரம் ஆகியவற்றினைக் குறிப்பிட்டுக் காட்டுகின்ற ஒப்புதல் அளிக்கப்பட்ட அட்டவணை ஒன்றுக்கு இணங்க நீரைப் பயன்படுத்துபவர்களுக்கு சுழற்சி முறையில் நீரானது ஒதுக்கிப் பகிர்ந்தளிக்கப்படுகின்ற ஒரு முறை எனப் பொருள்படும்.

(v) ''ஆட்சி மண்டலத் தொகுதி'' என்பது, தண்ணீர் பயன்படுத்துவோர் சங்கத்தின் பரப்பிடம் ஒன்றின் கீழ் உள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மதகு அமைப்புகளையுடைய பாசனப் பரப்பிடம்

(w) நீர்ப்பாசன அமைப்பு ஒன்றின் தொடர்பான நீர் ஒதுக்கீடு என்பது, குடியானவர் அமைப்பு ஒன்றினால் அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தில் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் நீர்ப்பங்கீடு எனப் பொருள்படும்.

(x) ''நீர்வள ஆதார அமைப்பு'' என்பது. அரசின் பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பு எனப் பொருள்படும்.

(y) ''நீரைப் பயன்படுத்துபவர்'' என்பது. நிலம் ஏதொன்றையும் பொறுத்த அளவில், வருவாய்ப் பதிவேடுகளில் உரிமையாளராகவோ அல்லது குத்தகைதாரராகவோ பதிவு செய்யப்பட்டிருந்து, நிலத்தை உடைமையில் வைத்து வருகின்ற குடியானவர் எவரும் என்று பொருள்படும். மேலும் அது அரசு வழிவகைகளிலிருந்து வேளாண்மைக்காக நீரைப் பயன்படுத்துகிற வேறு தனி நபர் எவரையுமோ அல்லது சங்கம் ஒன்றையோ உள்ளடக்கும்.

அத்தியாயம் II

குடியானவர் அமைப்புகள்

3) நீரைப் பயன்படுத்துபவர் சங்கத்தின் பரப்பிடத்தை வரையறுத்தல் (1) ஆட்சியர், வகுத்துரைக்கப்படும் முறையில், நிர்வாக அளவில் உருப்பெறக் கூடிய கால்வாய் நீருக்கான கட்டுமானங்களின் அடிப்படையிலான நீர்ப்பாசன அமைப்பு ஒவ்வொன்றின்படியும் பாசனப் பரப்பிடத்தை வரையறுக்கபடலாம் என்பதோடு இந்தச் சட்டத்தின் நோக்கங்களக்காக நீர் பயன்படுத்துவோர் சங்கத்தின் பரப்பிடம் ஒன்றாக அதனை விளம்பலாம்.

வரம்புரை: சிறிய நீர்ப்பாசன அமைப்பின் படியான பாசனப் பரப்பிடத்தைப் பொறுத்த அளவில், அப்பாசன பரப்பிடம் முழுவதும் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு ஒருமுறை மட்டுமே நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் பரப்பிடம் ஒன்றாக அமையலாம்.

4. நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தை அமைத்தல்: (1) பிரிவு 3இன்படி வரையறுக்கப்பட்டுள்ள நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் பரப்பிடம் ஒவ்வொன்றாகாகவும் அதன் தனிப்பட்ட வட்டாரப் பெயரினால் அழைக்கப்படும் நீரைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) நீரைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒவ்வொன்றும் அத்தகைய நீரைப் பயன்படுத்துவோர் சங்க பரப்பிடத்திலுள்ள நீர் பயன்படுத்துவோர்கள் அனைவரையும் உறுப்பினர்களாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

வரம்புரை: நிலம் ஏதொன்றையும் சட்டப்படி தன்வசம் வைத்திருக்கிற மற்றும் அதனை அனுபவித்து வருகிற நபர் எவரும், சாகுபடி ஆண்டு ஒன்றில் அவ்வாறு தன் வசம் வைத்து வருவதையும், அனுபவித்து வருவதையும் மெய்ப்பிப்பதன்பேரில், அவர் ஒரு பதிவு பெற்ற என்றாலும் சரி, உறுப்பினர் என்கிற தகுதியைக் கோரலாம்; நீரைப் பயன்படுத்துவோர் சங்கம், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, அத்தகைய நபருக்கு உறுப்பினர் தகுதியை மறுத்தல் கூடாது மற்றும் அத்தகைய நபர் நீரைப் பயன்படுத்துகின்ற ஒருவராக இருப்பது போன்றே கட்டணங்களைச் செலுத்துவதற்கு உள்ளாதலும் வேண்டும்.

மேலும் வரம்புரை: நீரைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒன்றின், ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்சி மண்டலத் தொகுதியின் உறுப்பினராக ஆவதற்குத் தகுதி உடையவராக இருக்கிற நபர் எவரும், தமது விருப்பத் தெரிவின்படி ஏதாவது ஓர் ஆட்சி மண்டலத் தொகுதியில் உறுப்பினராக இருப்பதற்குத் தகுதி உடையவராவர்.

(3) உட்பிரிவு (2)இல் குறித்துரைக்கப்படும் உறுப்பினர்கள் அந்தந்த நீர் பயன்படுத்துவோர் சங்கத்திற்கான பொதுக் குழுவினை அமைத்தல் வேண்டும் மற்றும் அத்தகைய உறுப்பினர்கள் மட்டுமே வாக்களிப்பதற்கான உரிமையைப் பெற்றவர்களாவர்.

5. நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் மேலாண்மைக் குழுவை அமைத்தல் மற்றும் தலைவரையும் உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்தல்: (1) நீரைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒவ்வொன்றிற்காகவும் ஒரு மேலாண்மைக் குழு இருத்தல் வேண்டும்.

(2) ஆட்சியர், நீரைப் பயன்படுத்துவோர் சங்க உறுப்பினர்களிடையே இருந்து நேரடித் தேர்தல் மூலம் மறைவான வாக்கெடுப்பு முறையில், அதன் மேலாண்மைக் குழுவிற்கான தலைவரை வகுத்துரைக்கப்படும் முறையில் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(3) ஆட்சியர், நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் பரப்பிடத்தின் ஆட்சி மண்டலத் தொகுதி ஒவ்வொன்றில் இருந்தும், ஓர் உறுப்பினரைக் கொண்டிருக்கின்ற மேலாண்மைக் குழு உறுப்பினர் களை மறைவான வாக்கெடுப்பு வாயிலாக வகுத்துரைக்கப்படும் முறையில் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(4) உட்பிரிவுகள் (2) அல்லது (3)இன்படி நடத்தப்பட்ட தேர்தல் ஒன்றில் ஆட்சி மண்டலத் தொகுதியின் தலைவரோ, உறுப்பினரோ தேர்ந்தெடுக்கப்படவில்லையானால், உட்பிரிவுகள் (2) அல்லது (3)இல் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் புதிய தேர்தல் நடத்தப்படுதல் வேண்டும்.

(5) மேலாண்மைக் குழுவின் தலைவரும், உறுப்பினர்களும் பிரிவு 13இன்படி திரும்ப அழைக்கப்படவில்லையானால், மேலாண்மைக் குழுவின் முதலாம் கூட்டத் தேதியில் இருந்து ஐந்தாண்டு கால அளவிற்குப் பதவியில் இருத்தல் வேண்டும்.

(6) மேலாண்மைக் குழுவானது நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் அதிகாரங்களைச் செலுத்தி வருதலும் அலுவல்களை ஆற்றி வருதலும் வேண்டும்.

6. பகிர்மானக் குழுப் பரப்பிடத்தை வரையறுத்தல் :நீரைப் பயன்படுத்துவோர் சங்கங்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவற்றைக் கொண்டிருக்கின்ற, பெரிய நீர்ப்பாசன அமைப்பு ஒவ்வொன்றின் பாசனப் பரப்பிடம் ஒவ்வொன்றையும், அரசு வகுத்துரைக்கப்படும் முறையில் வரையறுக்கப்படலாம் என்பதோடு, அதனை இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பகிர்மானக் குழுப் பரப்பிடம் ஒன்றாக விளம்பலாம்.

7. பகிர்மானக் குழுவை அமைத்தல்: (1) பிரிவு 6இன்படி பகிர்மானக் குழுப் பரப்பிடம் ஒன்றாக விளம்பப்பட்டுள்ள அத்தகைய பரப்பிடம் ஒவ்வொன்றுக்காகவும் அதன் தனிப்பட்ட வட்டாரப் பெயரில் அழைக்கப்படுகின்ற பகிர்மானக் குழு ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) பகிர்மானக் குழுப் பரப்பிடம் ஒன்றில் நீரைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒவ்வொன்றின் தலைவரும், அத்தகைய பகிர்மானக் குழுவின் பதவி வழி உறுப்பினர் ஆவார் மற்றும் அத்தகைய உறுப்பினர்கள் அனைவரும் அத்தகைய பகிர்மானக் குழுவின் பொதுக் குழுவாக இருப்பார்கள்.

8. பகிர்மானக் குழுவிற்கான மேலாண்மைக் குழுவை அமைத்து, அதன் தலைவரையும் உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்தல்: (1) பகிர்மானக் குழு ஒவ்வொன்றிற்காகவும் ஒரு மேலாண்மைக் குழு இருத்தல் வேண்டும்.

(2) ஆட்சியர், பகிர்மானக் குழு உறுப்பினர்களிடையே இருந்து நேரடித் தேர்தல் மூலம் மறைபான வாக்கெடுப்பு மூலமாக அதன் மேலாண்மைக் குழுவிற்கான தலைவரை வகுத்துரைக்கப்படும் முறையில் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(3) ஆட்சியர், பகிர்மானக் குழுவின் உறுப்பினர்களிடையே இருந்து, ஐவருக்கும் மிகாத வேளாண்மைக் குழு உறுப்பினர்களை வகுத்துரைக்கப்படும் முறையில் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

வரம்புரை: அரசு அவ்வப்போது தேர்தலை ஒத்திப் போடலாம். ஆனால் அதற்கான காரணங்களை எழுத்து வடிவில் பதிவு செய்தல் வேண்டும்.

(4) உட்பிரிவுகள் (2) அல்லது (3)இன்படி நடத்தப்பட்ட தேர்தல் ஒன்றில் மேலாண்மைக் குழுவின் தலைவரோ, உறுப்பினரோ தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றால் உட்பிரிவுகள் (2) அல்லது (3)இன்படி குறிப்பிடப்பட்ட முறையில் புதிய தேர்தல் நடத்தப்படுதல் வேண்டும்.

(5) மேலாண்மைக் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் கால அளவு பிரிவு 13இன்படி நீக்க உத்தரவு திரும்ப பெறப்படவில்லையானால், பிரிவு 7இன் உட்பிரிவு (2)இல் குறிப்பிடப்பட்ட பொதுக் குழு உறுப்பினர்களின் பதவிக் கால அளவுடன் ஒரு சேர முடிவடைவதாக இருத்தல் வேண்டும்.

(6) மேலாண்மைக் குழு, பகிர்மானக் குபவின் அதிகாரங்களைச் செலுத்தி வருதலும் அலுவல்களை ஆற்றி வருதலும் வேண்டும்.

9. திட்டப் பரப்பிடத்தை வரையறுத்தல்: அரசு, வகுத்துரைக்கப்படும் முறையில் பெரிய நீர்ப்பாசன அமைப்பு ஒன்றின் பாசனப் பரப்பிடம் ஒவ்வொன்றையும் அல்லது அதன் பகுதி ஒவ்வொன்றையும், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, திட்டப் பரப்பிடம் ஒன்றாக விளம்பலாம்.

10. திட்டக் குழுவை அமைத்தல் : (1) பிரிவு 9இன்படி விளம்பப்பட்டுள்ள திட்டப் பரப்பிடம்ஒவ்வொன்றிற்காகவும், அதன் தனிப்பட்ட வட்டாரப் பெயரில் அழைக்கப்படும் திட்டக் குழு ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) திட்டப் பரப்பிடத்தில் உள்ள பகிர்மானக் குழு ஒவ்வொன்றின் தலைவரும், அத்தகைய திட்டக் குழுவின் பதவி வழி உறுப்பினர்கள் ஆவர் என்பதோடு அத்தகைய உறுப்பினர்கள் அனைவரும் அத்தகைய உறுப்பினர்கள் அனைவரும் அத்தகைய திட்டக் குழுவிற்கான பொதுக் குழுவினை அமைத்தல் வேண்டும்.

11. திட்டக் குழுவிற்கான மேலாண்மைக் குழுவை அமைத்து உருவாக்குதலும் அதன் தலைவர் மற்றும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும்: (1) திட்டக் குழு ஒவ்வொன்றுக்காகவும் ஒரு மேலாண்மைக் குழு இருத்தல் வேண்டும்.

(2) ஆட்சியர், திட்டக் குழுவின் உறுப்பினர்களுக்கிடையே இருந்து நேரடித் தேர்தல் மூலம், மறைவான வாக்கெடுப்பின் வாயிலாக அதன் மேலாண்மைக் குழுவின் தலைவரை வகுத்துரைக்கப்படும் முறையில் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

வரம்புரை: அரசு அவ்வப்போது தேர்தலை ஒத்திப் போடலாம். ஆனால் அதற்கான காரணங்களை எழுத்து வடிவில் பதிவு செய்தல் வேண்டும்.

(4) உட்பிரிவுகள் (2) அல்லது (3)இன்படி நடத்தப்பட்ட தேர்தல் ஒன்றில், அந்த மேலாண்மைக் குழுவின் தலைவரோ உறுப்பினர்களோ தேர்ந்தெடுக்கப்படவில்லையானால், உட்பிரிவுகள் (2) அல்லது (3)இல் குறிப்பிடப்பட்ட அதே முறையில் புதிய தேர்தல் நடத்தப்படுதல் வேண்டும்.

(5) மேலாண்மைக் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் கால அளவு பிரிவு 13இன்படி நீக்க உத்தரவு திரும்ப பெறப்படவில்லையானால், பிரிவு 10இன் உட்பிரிவு (2)இல் குறிப்பிடப்பட்ட பொதுக் குழு உறுப்பினர்களின் பதவிக் கால அளவுடன் ஒருசேர முடிவடைவதாக இருத்தல் வேண்டும்.

(6) மேலாண்மைக் குழு, திட்டக் குழுவின் அதிகாரங்களைச் செலுத்தி வருதலும், அலுவல்களை ஆற்றி வருதலும் வேண்டும்.

12. உச்சநிலைக் குழு அமைத்தல்: (1) அரசு அறிவிக்கையின் மூலமாகத் தலைவரையும் வகுத்துரைக்கப்படும் எண்ணிக்கையிலான உறுப்பினர்களையும் கொண்ட உச்சநிலைக் குழு ஒன்றை அமைத்துருவாக்கலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி அமைத்து உருவாக்கப்பட்டுள்ள உச்சநிலைக் குழுவானது, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நடைமுறைப் படுத்துவதற்கான கொள்கைகளையும், வழிகாட்டு நெறிகளையும் வகுத்துரைக்கப்படும் அதிகாரங்களையும் செலுத்தி வரலாம் மற்றும் அலுவல்களை ஆற்றி வரலாம்.

13. நீக்க உத்தரவை திரும்பப் பெறுவதற்கான நடைமுறை : (1) குடியானவர் அமைப்பு ஒன்றின் தலைவர் அல்லது குழு தலைவர் அல்லது உறுப்பினர் ஒருவரின் நீக்க உத்தரவை திரும்ப பெறுவதற்கான தீர்மானம் ஒன்று, வாக்களிப்பதற்கு உரிமையுடைய குடியானவர் அமைப்பின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாதவர்களால் கையொப்பமிட்டு எழுத்து வடிவில் வகுத்துரைக்கப்படும் படிவத்தில் அறிவிப்பு ஒன்றைக் கொடுப்பதன் மூலமாகச் செய்யப்படலாம்.

வரம்புரை: எந்த நபருக்கு எதிராக அந்தத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறதோ அந்த நபர் எவரும், பதவியை ஏற்றுக் கொண்டத் தேதியிலிருந்து ஓராண்டிற்குள், இந்தப் பிரிவின்படியான தீர்மானம் குறித்த அறிவிப்பு எதையும் செய்தல் கூடாது.

(2) சிறப்பாக இந்த நோக்கத்திற்கு எனக் கூட்டப்பட்டுள்ள பொதுக் குழுக் கூட்டம் ஒன்றில் வந்திருந்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையினரது ஆதரவுடன் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், ஆட்சியர் அல்லது அரசு, ஆணையின் மூலமாக, அத்தகைய நபரைப் பதவியிலிருந்து நீக்கி விடுதல் வேண்டும் என்பதோடு, இதனால் ஏற்படுகின்ற காலிப் பணியிடம், தற்செயல் காலிப் பணியிடம் போன்ற அதே முறையில் நிரப்பப்படுதலும் வேண்டும்.

14. குடியானவர்கள் அமைப்பில் துணைக் குழுக்களை அமைத்தல்: மேலாண்மைக் குழுவானது இந்தச் சட்டத்தின்படி அதன் அலுவல்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றுள் ஏதொன்றையுமோ நிறைவேற்றுவதற்காகத் தொடர்புடைய குடியானவர்கள் அமைப்பின் உறுப்பினர்களுக்கு இடையே இருந்து அத்தகைய எண்ணிக்கையில் துணைக் குழுக்களை அமைத்தல் வேண்டும்.

15. குடியானவர்கள் அமைப்பு ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும்: பிரிவு 2இன் (1)ஆம் கூறில் குறிப்பிடப்பட்ட குடியானவர்கள் அமைப்பு ஒவ்வொன்றும், தனித்த ஒரு பெயருடனும் தொடர் வழியுரிமையுடனும் பொதுவான இலச்சினையுடனும் கூடிய ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும் மற்றும் இந்தச் செய்வதற்கான தகுதி பெற்றதாகவும், அது எந்த நோக்கத்திற்குத் தேவையானதாகவும், தக்கதாகவும் உகந்ததாகவும் இருக்கக் கூடிய அனைத்துச் செயல்களையும் செய்யக் கூடியதாகவும் மற்றும் தலைவரால் அல்லது தலைவரைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற நபரால் அதன் கூட்டுடைமைப் பெயரில் வழக்கிடுதல் மற்றும் வழக்கிடப்படுதல் வேண்டும்.

வரம்புரை : குடியானவர்கள் அமைப்பு எதுவும், அதன் சொத்து எதனையும் எந்த முறையிலும் சொத்து மாற்றம் செய்வதற்கு உரிமையுடையதாக ஆகுதல் கூடாது.

16. குடியானவர்களின் அமைப்பில் மாறுதல்கள்: அரசானது, குடியானவர் அமைப்பின் நலன் கருதி, பாசனப் பரப்பிடம் எதிலும் அறிவிக்கை வாயிலாக இது குறித்துச் செய்யப்பட்ட விதிகளுக்க இணங்கிய வகையில்.

(a) ஏற்கனவே உள்ள குடியானவர்கள் அமைப்பு எதிலிருந்தும் பரப்பிடம் எதனையும் பிரிப்பதன் மூலம், புதிய குடியானவர் அமைப்பு ஒன்றினை உருவாக்கலாம்; அல்லது

(b) குடியானவர்கள் அமைப்பு எதனின் பரப்பிடத்தையும் அதிகரிக்கலாம் அல்லது

(c) குடியானவர்கள் அமைப்பு எதனின் பரப்பிடத்தையும் குறைக்கலாம் அல்லது

(d) குடியானவர்கள் அமைப்பின் எல்லைகளை மாற்றியமைக்கலாம் எதனின் பரப்பிடத்தையும் குறைக்கலாம் அல்லது; அல்லது

(e) தவறு எதனையும் சரி செய்வதற்காக இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒன்றை நீக்கலாம்.

வரம்புரை: பெரும்பாலும் பாதிக்கப்படக் கூடிய குடியானவர்கள் அமைப்பிற்கு நியாயமான ஒரு வாய்ப்பினை வழங்கினாலன்றி, அத்தயை பிரித்தல், அதிகரித்தல், குறைத்தல், மாற்றியமைத்தல் அல்லது நீக்கம் எதுவும் செய்யப்படுதல் கூடாது.

17. வேட்பாளர்கள் அல்லது உறுப்பினர்களின் தகுதியின்மை: (1) நபர் எவரும், மேலாண்மைக் குழு எதனின் தலைவராகவோ அல்லது குழுத் தலைவராகவோ அல்லது உறுப்பினர் ஒருவராகவோ தெரிவு செய்யப்படுவதற்கு.

(a) அவர் ஒரு சிற்றூராட்சி ஊழியராகவோ அல்லது இந்திய அரசின் அல்லது மாநில அரசின் அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு எதனின் அலுவலராகவோ அல்லது ஊழியராகவோ அல்லது அரசு நிதியிலிருந்து உதவி பெறுகின்ற நிறுவனத்தின் பணியாளராகவோ இருந்தால்.

(b) ஒழுக்கக் கேட்டினை உள்ளடக்குகின்ற குற்றச் செயல் எதனையும் அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதனின் படியும் செய்ததற்காகக் குற்றவியல் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவராக இருந்தால்.

(c) அவர் மனநிலை சரியற்றவராக இருந்து, தகுதி வாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால், அவ்வாறு விளம்பப்பட்டவராக இருந்தால்.

(d) அவர் ஒரு நொடிப்பு நிலையர் என நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரர் ஒருவராகவோ அல்லது விடுவிக்கப்படாத நொடிப்பு நிலையராகவோ இருந்தால் அல்லது

(e) அவர் அரசுக்கோ அல்லது குடியானவர்கள் அமைப்பிற்கோ செலுத்தப்பட வேண்டிய நில வருவாய் அல்லது தண்ணீர் வசதிக் கட்டணங்கள் எவற்றையும் செலுத்தத் தவறியவராக இருந்தால்

(f) சிற்றூராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியம் அல்லது பேரூராட்சி அல்லது நகராட்சி அல்லது மாநகராட்சி அல்லது மாநில அல்லது மைய அரசு அல்லது குடியானவர்களின் அமைப்பிற்கான, தொடர்புள்ள குடியானவர்களின் அமைப்பின் பரப்பிடத்தில் செய்யப்பட்டு வருகிற பணி எதிலுமோ அல்லது அதனுடன் இருந்து வருகிற ஒப்பந்தம் எதிலுமோ அவர் அக்கறையுள்ளவராக இருந்தால்

தகுதியுடையவராக மாட்டார்.

வரம்புரை: நபர் ஒருவர்

(i) நிறுமம் ஒன்றில், வெறும் பங்குடையவராக ஆனால் இயக்குநராக அல்லாமல் அல்லது

(ii) அசையாச் சொத்தின் குத்தகைய விற்பனை அல்லது கொள்முதல் எதிலுமோ அல்லது அதற்கான உடன்பாடு எதிலுமோ அல்லது

(iii) பணத்தைக் கடனாகப் பெறுவதற்கான உடன்பாடு எதிலுமோ அல்லது பணத்தை மட்டுமே செலுத்துவதற்கான காப்பீடு எதிலுமோ அல்லது

(iv) குடியானவர்கள் அமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பான விளம்பரம் எதுவும் எந்தச் செய்தித்தாளில் வந்துள்ளதோ அந்தச் செய்தித்தாள் எதிலும்.

தமது பங்கினைப் பெற்றிருப்பவராகவோ அல்லது அக்கறையுடையவராகவோ இருப்பதன் காரணமாக மட்டுமே அத்தகைய ஒப்பந்தத்தில் அல்லது பணியில் அக்கறையுள்ளவராகக் கருதப்படுதல் கூடாது.

விளக்கம்: ஓர் ஒப்பந்தமானது, முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கிற நிலையில், சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிக் குடியானவர்களின் அமைப்பு, மாநில அல்லது மைய அரசானது, ஒப்பந்தத்தின் கடப்பாடுகளில் தனது பங்கினை நிறைவேற்றி இருக்கவில்லை என்ற காரணத்தால் மட்டுமே, அந்த ஒப்பந்தமானது நிலுவையில் உள்ளதாகக் கருதப்படுதல் கூடாது என இதன்மூலம் ஐயங்களை அகற்றுவதற்காக விளம்பப்படுகிறது.

(2) குடியானவர்கள் அமைப்பின் மேலாண்மைக் குழு எதனின் ஒரு தலைவர் அல்லது குழுத் தலைவர் அல்லது உறுப்பினர்

(a) ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்கி இருக்கின்ற குற்றவியல் வழக்கொன்றில் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்படுவார் என்றால்; அல்லது

(b) நியாயமான காரணம் எதுவும் இன்றி மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ந்து வாராதிருப்பார் என்றால்,

பதவியில் தொடர்ந்து இருப்பதற்குத் தகுதியற்றவர், மற்றும் உடனடியாக அவர் பதவி வகிப்பது அற்றுப்போதல் வேண்டும்.

வரம்புரை : இனம் ((b)இன்படியான தகுதியின்மையானது நிறை கர்ப்பிணி நிலையில் உள்ள பெண்ணைப் பொறுத்தவரையிலும் மற்றும் அவருக்குக் குழந்தை பிறந்ததற்குப் பின்னர் மூன்று மாத காலத்திற்கும் பொருந்தாது.

(3) நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் அவர் நீரைப் பயன்படுத்துபவராக இருப்பது அற்றுப் போகிறபோது, மேலாண்மைக் குழு ஒன்றின் உறுப்பினர் ஒருவராகவோ அல்லது தலைவர் ஒருவராகவோ அல்லது குழுத் தலைவர் ஒருவராகவோ அல்லது உறுப்பினர் ஒருவராகவோ இருப்பதும் அற்றுப் போதல் வேண்டும் மற்றும் அவர் பதவியில் தொடர்ந்து இருப்பதற்குத் தகுதியற்றவர் ஆவார்.

18. பதவி விலகல்: (1) குடியானவர்கள் அமைப்பின் மேலாண்மைக் குழு ஒன்றின் உறுப்பினர் ஒருவர், தொடர்புடைய மேலாண்மைக் குழுவின் தலைவர் அல்லது குழுத் தலைவருக்குப் பதிவு அஞ்சலின் மூலமாக அனுப்பப்பட்ட அல்லது அவரிடம் நேரடியாகக் கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றின் மூலமாக தமது பதவியை விட்டு விலகலாம்.

(2) தண்ணீரைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒன்றின் மேலாண்மைக் குழுவின் தலைவர், தொடர்புடைய பகிர்மானக் குழுவின் தலைவருக்குப் பதிவு அஞ்சலின் மூலம் அனுப்பப்பட்ட அல்லது அவரிடம் நேரிடையாகக் கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றின் மூலமாக தமது பதவியை விட்டு விலகலாம்.

(3) பகிர்மானக் குழு ஒன்றின் மேலாண்மைக் குழுத் தலைவர், தொவுடைய திட்டக் குழுவின் தலைவருக்குப் பதிவு அஞ்சலின் மூலமாக அனுப்பப்பட்ட அல்லது அவரிடம்ன நேரிடையாகக் கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றின் மூலமாகத் தமது பதவியை விட்டு விலகலாம்.

(4) திட்டக் குழு ஒன்றின், மேலாண்மைக் குழுவின் தலைவர், உச்சநிலைக் குழுவின் தலைவருக்குப் பதிவு அஞ்சலின் மூலமாக அனுப்பப்பட்ட அல்லது அவரிடம் நேரிடையாகக் கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றின் மூலமாகத் தமது பதவியை விட்டு விலகலாம்.

(5) இந்தப் பிரிவின்படியான பதவி விலகல் எதுவும், அது ஏற்கப்பட்ட தேதியிலிருந்தோ அல்லது அது வரப்பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவடைந்ததன் பேரிலோ, இவற்றுள் எது முந்தியதோ அந்தத் தேதியிலிருந்து செயல்விளைவு கொள்ளுதல் வேண்டும்.

19. காலியிடங்களை நிரப்புதல்: (1) பிரிவு 17இன் உட்பிரிவுகள் (2) அல்லது (3)இன்படி தகுதி இழந்ததன் காரணமாகவோ அல்லது இறப்பின், அல்லது பதவி விலகலின் காரணமாகவோ அல்லது வேறு காரணம் எதற்காகவும் மேலாண்மைக் குழு எதிலும் ஏற்படுகின்ற முறையில், உட்பிரிவு (2)இன்படி தேர்தலின் மூலமாக அந்தக் காலியிடம் நிரப்பப்படும் வரை பெயர் குறித்து நியமிப்பதன் மூலமாகவோ நிரப்பப்படுதல் வேண்டும்.

(a) நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தில் உள்ள காலிப் பணியிடம் ஒன்று வகுத்துரைக்கப்படம் முறையில் பகிர்மானக் குழுவின் மேலாண்மைக் குழுவினால் பெயர் குறித்து நியமிப்பதன் மூலமாக நிரப்பப்படுதல் வேண்டும்.

(b) பகிர்மானக் குழுவில் உள்ள காலிப் பணியிடம் ஒன்று வகுத்துரைக்கப்படும் முறையில் திட்டக் குழுவின் மேலாண்மைக் குழுவினால் பெயர் குறித்து நியமிப்பதன் மூலமாக நிரப்பப்படுதல் வேண்டும்.

(c) திட்டக் குழுவில் உள்ள காலிப் பணியிடம் ஒன்று வகுத்துரைக்கப்படும் முறையில் உச்சநிலைக் குழுவால் நிரப்பப்படுதல் வேண்டும்.

(2) ஆட்சியர், அத்தகைய காலிப்பணியிடம் ஏற்பட்ட தேதியிலிருந்து ஒருமாத கால அளவிற்குள் காலிப் பணியிடத்தை நிரப்புவதற்குத் தேர்தல்களை நடத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

(3) உட்பிரிவு (2)இன்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியானவர்கள் அமைப்பின் உறுப்பினர் ஒருவரின் அல்லது தலைவர் ஒருவரின் அல்லது குழுத் தலைவர் ஒருவரின் பதவிக் கால அளவானது, அவர் வழக்கமாக தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் அந்தப் பதவிக் காலமானது எந்த நேரத்தில் முடிவடைந்திருக்குமோ அந்த நேரத்தில் முடிவடைதல் வேண்டும்.

20. காலியிடம் முதலியவற்றினால் செயல்கள் செல்லத்தகாதவை ஆகுதல் கூடாது: மேலாண்மைக் குழு எதனின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், மேற்சொன்ன மேலாண்மைக் குழுவில் காலியிடம் எதுவும் இருக்கின்றது அல்லது அதனை அமைத்துருவாக்குவதில் தவறு இருக்கிறது என்ற காரணத்தினால் மட்டுமே செல்லத்தகாதவை ஆக்குதல் கூடாது.

21. கூட்டங்கள்: குடியானவர்கள் அமைப்பின் மற்றும் அதனுடைய மேலாண்மைக் குழுக்களின் கூட்டங்கள் வகுத்துரைக்கப்படும் கால அளவிலும், நடைமுறைப்படியும் குறைவெண் வரம்புடனும் இருத்தல் வேண்டும்.

அத்தியாயம் III

குடியானவர்கள் அமைப்பின் அலுவல்கள்

22. நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் அலுவல்கள்: நீரைப் பயன்படுத்துவோர் சங்கமானது, பின்வரும் அலுவல்களைப் புரிதல் வேண்டும், அதாவது

(a) பகிர்மானக் குழுவின் அல்லது திட்டக் குழுவின் மேலாண்மைக் குழுவினால் ஏற்கப்பட்ட ஆகியவற்றின் அடிப்படையில் பகிர்மானக் குழுவாலும் திட்டக் குழுவாலும் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்கிய வகையில், ஒவ்வொரு நீர்ப்பாசனப் பருவக் காலத்திற்கும் செயல் திட்டம் ஒன்றையும் சுழற்சி நீர் வழங்கு முறையையும் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.

(b) அவ்வப்போது நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் நிதியைப் பயன்படுத்தி ஒவ்வொரு பயிர் பருவக் காலத்தின் முடிவிலும் அதன் செயற்பாட்டிலுள்ள பரப்பிடத்தில் நீர்ப்பாசன முறையைப் பேணி வருவதற்கானத் திட்டம் ஒன்றைத் தயாரித்தலும், அதன் செயற்பாட்டிலுள்ள பரப்பிடத்தில் அமைந்துள்ள நீர் வழிகள் மற்றும் நீர் வடிகால்கள் ஆகிய இரண்டு பகிர்மான முறைகளிலும் உள்ள பராமரிப்புப் பணிகளை நிறைவேற்றுதல்.

(c) சுழற்சிமுறை நீர் வழங்குதலுக்கு இணங்கிய வகையில் அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தின் கீழ் வருகின்ற பற்பல மதகுகளுக்கு இடையே நீரைப் பயன்படுத்துவதை முறைப்படுத்துதல்;

(d) ஒதுக்கி அளிக்கப்பட்டுள்ள நீரைப் பயன்படுத்துவதில் சிக்கனத்தை மேம்படுத்துதல்

(e) அதன் கோரிக்கையைத் தயாரிப்பதிலும், தண்ணீர்க் கட்டணங்களை வசூலிப்பதிலும் அரசின் வருவாய்த் துறையின் அதிகாரிகளுக்கு உதவி செய்தல்

(f) அரசின் வருவாய்த் துறையினால் வெளியிடப்பட்ட நீரைப் பயன்படுத்துவோரைப் பற்றிய பதிவேடு ஒன்றினைப் பேணி வருதல்

(g) செயற்பாட்டுப் பரப்பிடத்திற்குள்ளான நீர்ப்பாசன முறையைப் பற்றிய விளக்க விவரப் பட்டியல் ஒன்றைத் தயாரித்தலும் பேணி வருதலும்

(h) பாசனத்திற்கான நீர் வழியைக் கவனித்து மேலாண்மை செய்தல்

(i) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்திற்குள்ளாக நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் உறுப்பினர்களுக்கிடையே எழும் பூசல்களைத் தீர்வு செய்தல்

(j) வள ஆதாரங்களைத் திரட்டுதல்

(k) கணக்குகளைப் பேணி வருதல்

(l) கணக்குகளுக்கான ஆண்டுத் தணிக்கை செய்வித்தல்

(m) மேலாண்மைக் குழுவின் தேர்தல்களை நடத்துவதில் உதவி செய்தல்

(o) பகிர்மானக் குழு மற்றும் திட்டக் குழுவின் முடிவுகளுக்கு இணங்கி நடத்தல்.

(p) வகுத்துரைக்கப்படும் முறையில் பொதுக் குழு கூட்டங்களை நடத்துதல்

(q) கால்வாய் மற்றும் குளம் புறம்போக்கு பரப்பிடங்களில் பண்ணைத் தோட்டம் அமைக்க வழிவகை செய்வதை ஊக்குவித்தல் மற்றும் அத்தகைய பண்ணைத் தோட்டங்களைப் பாதுகாத்தலும் பேணி வருதலும்

(r) நீரை முறையாகப் பங்கிடுதல் மற்றும் வகுத்துரைக்கப்படும் காலமுறையின்படி சமூகத் தணிக்கையை நடத்துதல்

(s) தண்ணீர் பயன்படுத்துவார் சங்கத்தில் அதிகார வரம்பிலுள்ள பரப்பிடங்களில் அமைந்துள்ள கால்வாய், வடிகால், குளம், புறம்போக்குகளின் மீது அத்துமீறி செய்யப்பட்ட ஆக்கிரமிப்பை அகற்றுதல்

23. பகிர்மானக் குழுவின் அலுவல்கள்: பகிர்மானக் குழுவானது, பின்வரும் அலுவல்களை ஆற்றுதல் வேண்டும். அதாவது

(a) திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தோடு இணங்குகிற வகையில் ஒவ்வொரு பாசனப் பருவக் காலத்தின் தொடக்கத்திலும் தகுதி, பரப்பிடம், மண்வகை, பயிர் அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நடைமுறைத் திட்டம் ஒன்றை தயாரித்தல்.

(b) ஒவ்வொரு பயிர்ப் பருவக் காலத்தின் இறுதியிலும் அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்திற்குள்ளாக அமைந்துள்ள கிளைக் கால்வாய்கள், கால்வாய்ப் பிரிவுகள், நடுத்தர வடிகால்கள் ஆகியவற்றைப் பேணி வருவதற்காகத் திட்டம் ஒன்றைத் தயாரித்தல் மற்றும் அவ்வப்போது நிதியைப் பயன்படுத்திப் பராமரிப்பு பணிகளை நிறைவேற்றுதல்

(c) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தின் கீழ் வருகின்ற நீரைப் பயன்படுத்துவோர் சங்கங்கள் பலவற்றிற்கு இடையே தண்ணீர் பயன்படுத்தப்படுவதை முறைப்படுத்துதல்

(d) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தில் நீரைப் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கு இடையே பூசல்கள் ஏதேனும் இருந்தால், அவற்றைத் தீர்வு செய்தல்

(e) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தில் நீரைப் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கானப் பதிவேடு ஒன்றினைப் பேணி வருதல்

(f) வடிகால்கள் உள்ளிட்ட அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தில் உள்ள நீர்ப்பாசன முறையைப் பற்றிய விளக்க விவரப் பட்டியல் ஒன்றைப் பேணி வருதல்.

(g) ஒதுக்கியளிக்கப்பட்டுள்ள நீரைப் பயன்படுத்துவதில் சிக்கன நடவடிக்கையை மேம்படுத்துதல்

(h) கணக்குகளைப் பேணி வருதல்

(i) அதன் கணக்குகளின் ஆண்டுத் தணிக்கையைச் செய்வித்தல்

(j) வகுத்துரைக்கப்படும் பிற பதிவுருக்களைப் பேணி வருதல்

(k) பாசனத்திற்கான நீர் பாய்வதைக் கவனித்து மேலாண்மை செய்தல்

(l) வகுத்துரைக்கப்படும் விதத்தில் பொதுக் குழுக் கூட்டங்களை நடத்துதல்

(m) திட்டக் குழுவின் முடிவுகளுக்கு இணங்கி நடத்தல்

(n) வகுத்துரைக்கப்படும் முறையில் நீர்ப் பகிர்மானத்தையும், காலமுறைப்படி சமூகத் தணிக்கையைம் செய்வித்தல்

(o) மேலாண்மைக் குழுவின் தேர்தல்களை நடத்துவதில் உதவி செய்தல்

(p) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தில் பண்ணைத் தோட்டங்களுக்கு வழிவகை செய்து ஊக்கமளித்தல்

(q) பகிர்மானக் குழுவின் அதிகார வரம்பிலுள்ள பரப்பிடங்களில் அமைந்துள்ள, கால்வாய், வடிகால்கள், குளம் புறம்போக்குகளின் மீது அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதை அகற்றுதல்.

24. திட்டக் குழுவின் அலுவல்கள்: திட்டக் குழுவானது, பின்வரும் அலுவல்களை ஆற்றுதல் வேண்டும், அதாவது

(a) ஒவ்வாரு பாசனப் பருவ காலத்தின் தொடக்கத்திலும் திட்டப் பரப்பிடம் முழுவதையும் பொறுத்த அளவில் தகுதி வாய்ந்த அதிகார அமைப்பினால் அனுமதிக்கப்பட்ட தகுதி, பரப்பிடம், மண் வகை, பயிர் அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நடைமுறைத் திட்டம் ஒன்றைத் தயாரித்தல்.

(b) ஒவ்வொரு பயிர்ப் பருவ காலத்தின் இறுதியிலும், அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்திற்குள் அமைந்துள்ள பெரிய வடிகால்கள் உள்ளிட்ட பாசனமுறையைப் பேணி வருவதற்கானத் திட்டம் ஒன்றுக்கு ஒப்புதல் அளித்தல் மற்றும் அவ்வப்போது திட்டக் குழுவின் நிதியைப் பயன்படுத்திப் பராமரிப்பு பணிகளை நிறைவேற்றுதல்

(c) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தில் உள்ள பகிர்மானக் குழுக்கள், நீர் பயன்படுத்துவோர் சங்கங்கள் ஆகியவற்றின் பணிப் பட்டியல் ஒன்றைப் பேணி வருதல்

(d) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தில் உள்ள கிளைக் கால்வாய்கள், கால்வாய்ப் பிரிவுகள், வடிகால் முறைகள் ஆகியவற்றைப் பற்றிய விளக்க விவரப் பட்டியல் ஒன்றைப் பேணி வருதல்

(e) பகிர்மானக் குழுக்களிடையே பூசல்கள் ஏதேனும் இருந்தால் அதனைத் தீர்வு செய்தல்

(f) ஒதுக்கியளித்துள்ள நீரைப் பயன்படுத்துவதில் சிக்கன நடவடிக்கையை மேம்படுத்துதல்

(g) கணக்குகளைப் பேணி வருதல்

(h) அதன் கணக்குகளுக்கான ஆண்டுத் தணிக்கையைச் செய்தல்

(i) வகுத்துரைக்கப்படும் பிற பதிவுருக்களைப் பேணி வருதல்

(j) வகுத்துரைக்கப்படும் பொதுக் குழுக் கூட்டங்களை நடத்துதல்

(k) வகுத்துரைக்கப்படும் விதத்தில் நீர்ப் பங்கீட்டையும், காலமுறைப்படியான சமூகத் தணிக்கையையும் முறையாகச் செய்வித்தல்

(l) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்திற்குள் பண்ணைத் தோட்டங்களுக்கு வழிவகை செய்து ஊக்கமளித்தல்

(m) திட்டக் குழுவின் அதிகார வரம்பிலுள்ள பரப்பிடங்களில் அமைந்துள்ள கால்வாய், வடிகால்கள், குளம், புறம்போக்குகளின் மீது அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதை அகற்றுதல்.

25. கட்டணங்களை விதிப்பதற்கும் வசூலிப்பதற்கும் அதிகாரம் : ஒரு குடியானவர்கள் அமைப்பானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவும், அந்த அமைப்பின் இலக்குகளை அடைவதற்காகவும், அதன் பணிகளை (அலுவல்களை) ஆற்றுவதற்காகவும், அவ்வப்போது, வகுத்துரைக்கப்படும் விதத்தில், நீரைப் பயன்படுத்துபவர் ஒவ்வொருவரிடம் இருந்தும், ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஹெக்டேருக்கு ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாத வரையிலான கட்டணங்களை விதித்து வசூலிக்கலாம்.

26. தகுதி வாய்ந்த அலுவலரை நியமித்தலும் அவரது அலுவல்களும்: (1) அரசானது அறிவிக்கையின் மூலமாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக குடியானவர்கள் அமைப்பு ஒவ்வொன்றுக்கும், தாம் தேவை எனக் கருதும் நீர்வள நிறுவனத்தின் அலுவலரைத் தகுதி வாய்ந்த அலுவலராக நியமிக்கலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி நியமிக்கப்பட்ட தகுதி வாய்ந்த அதிகாரி, அத்தகைய குடியானவர்கள் அமைப்பினால் எடுக்கப்படும் அனைத்து முடிவுகளையும் நடைமுறைப்படுத்துவதிலும், அவற்றை நிறைவேற்றுவதிலும் முறையே அத்தகைய குடியானவர்கள் அமைப்பிற்குப் பொறுப்பானவராக இருத்தல் வேண்டும்.

(3) குடியானவர்கள் அமைப்பு ஒவ்வொன்றும், தகுதி வாய்ந்த அதிகாரியால் கோரப்படக் கூடிய ஒத்துழைப்பையோ அல்லது உதவியையோ கொடுத்தல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அவ்வப்போது தகுதி வாய்ந்த அதிகாரியால் பிறப்பிக்கப்படக் கூடிய பணிப்புரைகளுக்கோ அறிவுறுத்தங்களுக்கோ இணங்கி நடத்தல் வேண்டும்.

அத்தியாயம் IV

குடியானவர் அமைப்பின் நிதி

27. குடியானவர்கள் அமைப்பின் நிதி : குடியானவர்கள் அமைப்பு ஒவ்வொன்றுக்கும் நிதி ஒன்று இருத்தல் வேண்டும். அது பின்வரும் வள ஆதாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது

(1) குடியானவர்கள் செயற்பாட்டுப் பரப்பிடத்தில் வகுத்துரைக்கப்படும் வீதங்களில் வசூலிக்கப்பட்ட நீர் கட்டணங்களின் பங்காக அரசிடமிருந்து வரப்பெற்ற மானியங்கள்

(2) செயற்பாட்டுப் பரப்பிடத்தில் மேம்பாட்டிற்காக மாநில மற்றும் மைய அரசினால் வழங்கப்படக் கூடிய பிற நிதி

(3) தனது செயற்பாட்டுப் பரப்பிடத்தில் சிக்கன மேம்பாட்டுச் செயல்கள் எதனையும் ஏற்றுக் கொள்வதற்காக நிதி நிறுவனம் எதிலிருந்தும் பெறப்பட்ட வள ஆதாரங்கள்

(4) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்திற்குள்ளாக நீர்ப்பாசன முறையோடு சேர்ந்த சொத்துக்கள் மற்றும் உடைமைகளிலிருந்து அரசினால் வழங்கப்படக் கூடிய வருமானம்.

(5) பிரிவு 25இன்படி வசூலிக்கப்பட்ட கட்டணங்கள்

(6) வேறு வழிவகை எதிலிருந்தும் பெறப்படும் தொகைகள்.

28. நிதியில் வைப்பீடு செய்தலும் அதனை நிருவாகம் செய்தலும்: (1) குடியானவர்கள் அமைப்பானது தனது நிதியைத் தேசிய வங்கி ஒன்றிலோ அல்லது கூட்டுறவு வங்கி ஒன்றிலோ அல்லது மேலாண்மை கூட்டுறவுச் சங்கம் எதிலுமோ வைத்திருத்தல் வேண்டும்.

(2) இந்த நிதி, இந்தச் சட்டத்தின் நிருவாகத்தில் தொடர்புடைய குடியானவர்கள் அமைப்பின் மேலாண்மைக் குழுவிற்கு ஏற்பட்ட செலவுகளை எதிர்கொள்வதற்குப் பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர வேறு நோக்கம் எதற்காகவும் பயன்படுத்தப்படுதல் கூடாது.

29. கடன் தீர் நிதி: (1) குடியானவர்கள் சங்க (உழவர் அமைப்பு)த்தின் மேலாண்மைக் குழு, கடன் வாங்கிய பணத்தைத் திரும்பச் செலுத்துவதற்காகக் கடன் தீர் நிதி ஒன்றைப் பராமரித்து வருதல் வேண்டும். அக்கடன் தீர் நிதிக்கு நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள், அவ்வாறு கடன் வாங்கிய பணம் அனைத்தையும் திரும்பச் செலுத்துவதற்குப் போதிய தொகையைக் கடன் தீர் நிதியில் ஒவ்வோர் ஆண்டும் செலுத்துதல் வேண்டும்.

(2) கடன் தீர் நிதி அல்லது அதன் பகுதி எதுவும், அது எந்தக் கடனைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்டதோ, அந்தக் கடனைத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படலாம் மற்றும் அத்தகைய கடன் முழுவதுமாக அடைக்கப்படும் வரையில், அது வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படுதல் கூடாது.

30. தணிக்கை: குடியானவர்கள் சங்கம் ஒவ்வொன்றும் அதன் கணக்குகள் வகுத்துரைக்கப்படும் முறையில், தணிக்கையாளர்களால் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட வேண்டும்.

31. வரவு செலவுத் திட்ட மதிப்பீடு : குடியானவர்கள் சங்கத்தின் மேலாண்மைக் குழு, ஒவ்வொரு நிதியாண்டிலும், அடுத்த நிதியாண்டினைப் பொறுத்த அக்குழுவின் திட்டமிடப்பட்ட வரவுகளையும், செலவினங்களையும் காட்டுகின்ற வரவு–செலவுத் திட்டம் ஒன்றினை வகுத்துரைக்கப்படும் அத்தகைய படிவத்தில் தயாரித்து அத்தகைய முறையில் பொதுக் குழுவின் முன்பு அனுமதிக்காக தாக்கல் செய்தல் வேண்டும்.

அத்தியாயம் V

குற்றச் செயல்களும் பணத் தண்டங்களும்

32. குற்றச் செயல்களும் பணத்தண்டங்களும்: சட்டப்படியான அதிகார உரிமையின்றிப் பின்வரும்:

(a) பாசன முறை எதையும் சேதப்படுத்துகிற, மாற்றுகிற, பெரிதாக்குகிற அல்லது தடை செய்கிற அல்லது

(b) பாசன முறையோடு குறுக்கிடுகிற, அதை அதிகரிக்கிற அல்லது நீர்வரத்தை அல்லது ஓட்டத்தைப் பாசன முறை மூலமாக அதன் மேலாகவோ அல்லது கீழாகவோ குறைக்கிற அல்லது

(c) பாசன முறையைப் பராமரிப்பதற்குப் பொறுப்புடையவர், அதன் நீர் வீணாகாது தடுப்பதற்கான முன்னெச்சரிக்கையைச் சரியாக எடுக்காது புறக்கணிக்கிற அல்லது அதிகாரமளிக்கப்பட்டபடி நீர் பகிர்ந்தளிக்கப்படுவதில் குறுக்கிடுகிற அல்லது அதிகாரமளிக்கப்படாத முறையில் அல்லது அருகிலுள்ள நிலத்திற்குச் சேதம் விளைவிக்கும் முறையில் நீரைப் பயன்படுத்துகிற அல்லது

(d) பாசன முறை எதனின் நீரையும், எந்த நோக்கங்களுக்காக அது சாதாரணமாகப் பயன்படுத்தப்படுகிறதோ, அந்நோக்கங்களுக்கான அதன் பயனை குறைக்கும் முறையில் அதன் தூய்மையைக் கெடுக்கிற அல்லது அதை நச்சுப்படுத்துகிற அல்லது

(e) அரசுப் பணியாளரின் அதிகாரத்தால் நிர்ணயிக்கப்பட்ட நீர் மட்டக் குறிகளை அல்லது நீர் அளவெல்லை அல்லது வேறு குறி அல்லது நீர் அடையாளம் எதையும் தடுக்கிற அல்லது அகற்றுகிற அல்லது

(f) பாசன முறை எதனின் மதகு அல்லது புறமதகு அல்லது இது போன்ற சாதனம் எதையும் திறக்கிற மூடுகிற அல்லது தடுக்கிற அல்லது திறக்க, மூட அல்லது தடுக்க முயற்சிக்கிற அல்லது

(g) தண்ணீர் பயன்பாட்டாளர் சங்கம் அல்லது பகிர்மானக் குழு அல்லது திட்டமிடும் குழுவால் தீர்மானம் செய்யப்பட்ட நீர் வழக்கு சுழற்சிமுறை அல்லது நீர்ப் பங்கீடு அல்லது ஒழுங்குமுறையை மீறுகிற.

செயல்களைச் செய்யும் எவரும் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டதன் பேரில், இரண்டாண்டு கால அளவிற்குச் சிறைத் தண்டனையுடனோ அல்லது ஐந்தாயிரம் ரூபாய் வரை நீடிக்கப்படக் கூடிய பணத் தண்டத்துடனோ அல்லது இரண்டுடனோ தண்டிக்கப்படுதல் வேண்டும்.

33. குற்றச் செயல்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்: நீதிமன்றம் எதுவும், இந்தச் சட்டத்தின்படி குற்றச் செயல் ஒன்றினைத் தகுதி வாய்ந்த அதிகாரி அல்லது குடியானவர்கள் சங்க மேலாண்மைக் குழுத் தலைவரால் அல்லது குழுத் தலைவரால் செய்யப்பட்ட முறையீட்டின்பேரில் அல்லாமல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் கூடாது.

34. வேறு சட்டங்களின்படியான தண்டனைக்குத் தடையில்லை : இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், அப்போதைக்கு நடைமுறையிலுள்ள வேறு சட்டம் எதன்படியும், இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதையொட்டியோ செய்யப்பட்ட செயல் அல்லது விடுகை எதற்காகவும் குற்ற வழக்குத் தொடுக்கப்படுவதிலிருந்தும், தண்டிக்கப்படுவதிலிருந்தும் நபர் எவரையும் தடுத்தல் கூடாது.

வரம்புரை: நபர் எவரும் ஒரே குற்றத்திற்காக ஒருமுறைக்கு மேலாக, குற்ற வழக்குத் தொடுக்கப்படுதலும், தண்டிக்கப்படுதலும் கூடாது.

35. குற்றச் செயல்களை இணக்கமாகத் தீர்த்தல் :(1) பிரிவு 32இன்படி தண்டிக்கத்தக்கக் குற்றச் செயல் எதுவும், பிரிவு 33இன்படி முறையீடு செய்யும் முன்னரோ அல்லது அதன் பின்னரோ, தகுதி வாய்ந்த அதிகாரியாலோ அல்லது குடியானவர்கள் சங்க மேலாண்மைக் குழுவின் தலைவரோ அல்லது குழுத் தலைவரோ தீர்மானிக்கும் தொகையை அரசின் கணக்கில் செலுத்தியதின்பேரில்,

அக்குற்றச் செயல் தகுதி வாய்ந்த அதிகாரியாலோ அல்லது தலைவராலோ அல்லது குழுத் தலைவராலோ இணக்கமாகத் தீர்க்கப்படலாம்.

வரம்புரை: அத்தகைய தொகையானது எந்த நிலையிலும், அவ்வாறு இணக்கமாகத் தீர்க்கப்பட்ட குற்றச் செயலுக்காக இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்படம் அபராதத் தொகையின் உச்ச அளவிற்கு மேற்படுதல் கூடாது.

(2) உட்பிரிவு (1)இன்படி ஒரு குற்றச் செயலானது இணக்கமாகத் தீர்க்கப்பட்டிருக்கிறபோது, அக்குற்றவாளிக்கு எதிராக, நடவடிக்கை அல்லது மேல்நடவடிக்கை எதுவும், அவ்வாறு இணக்கமாகத் தீர்க்கப்பட்ட குற்றச் செயலைப் பொறுத்து எடுக்கப்படுதல் கூடாது. அக்குற்றவாளி, பாதுகாவலில் வைக்கப்பட்டிருந்தால், உடனடியாக விடுதலை செய்யப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்படித் தண்டிக்கப்படத்தக்க குற்றச் செயல் எதுவும், இப்பிரிவின்படி வகை செய்யப்பட்டுள்ள விதத்தில் தவிர, இணக்கமாகத் தீர்க்கப்படுதல் கூடாது.

அத்தியாயம் VI

பூசல்களைத் தீர்வு செய்தல்

36. பூசல்களைத் தீர்வு செய்தல்: (1) குடியானவர்கள் சங்க உறுப்பினர்களுக்கிடையே அச்சங்கத்தின் அமைப்பு எதுவும் மேலாண்மை, அதிகாரங்கள் அல்லது அலுவல்கள் குறித்து எழும் பூசல் அல்லது கருத்து வேறுபாடு அவ்விவசாயிகள் சங்கத்தின் மேலாண்மைக் குழுவால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) நீர்ப் பயன்பாட்டாளர்கள் ஒருவருக்கும் மேலாண்மைக் குழுவிற்கும் இடையிலோ அல்லது இரண்டு அல்லது அவற்றுக்கு மேலான நீர் பயன்பாட்டாளர்கள் சங்கங்களுக்கு இடையேயோ எழும் பூசல் அல்லது கருத்து வேறுபாடு எதுவும், நீர்ப் பங்கீட்டுக் குழுவின் மேலாண்மைக் குழுவால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) உறுப்பினர் ஒருவருக்கும் பங்கீட்டாளர் குழுவிற்கும் இடையிலோ அல்லது இரண்டு அல்லது நீர்ப் மேற்பட்ட அவற்றுக்கு குழுக்களுக்கும் இடையிலோ எழும் அத்தகைய பூசல் அல்லது கருத்து வேறுபாடு எதுவும் நீர்ப் பங்கீட்டார்கள் பகிர்மானக் குழுவின் மேலாண்மைக் குழுவால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(4) திட்டமிடும் குழு உறுப்பினர் ஒருவருக்கும் திட்டமிடும் குழுவின் மேலாண்மைக் குழுவிற்கும் இடையிலோ அல்லது இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட திட்டமிடும் குழுக்களின் உறுப்பினர்களுக்கு இடையிலோ எழும் பூசல் அல்லது கருத்து வேறுபாடு குழுவால் தீர்மானிக்கப்படுதல் உச்சநிலைக் வேண்டும், அதன் முடிவே அறுதியானதாகும்.

(5) இப்பிரிவின்படியான பூசல் அல்லது கருத்து வேறுபாடு ஒவ்வொன்றும், அப்பூசல் அல்லது கருத்து வேறுபாடு, குறித்து அனுப்பப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

37. மேல்முறையீடுகள்: (1) தண்ணீர் குழுவால் அல்லது கருத்து பயன்பாட்டாளர் சங்கத்தின் மேலாண்மைக் செய்யப்பட்ட பூசலுக்குரிய வேறுபாட்டிற்கான முடிவினால் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனாலும் குறையுற்ற தரப்பினர் எவரும், நீர்ப் பங்கீட்டுக் குழுவின் மேல்முறையீடு மேலாண்மைக் குழுவிற்கு செய்யலாம். மேல்முறையீட்டில் அதன் முடிவே அறுதியானதாகும்.

(2) நீர்ப்பங்கீட்டுக் குழுவின் மேலாண்மைக் குழுவால் செய்யப்பட்ட பூசலுக்குரிய அல்லது கருத்து வேறுபாட்டிற்கான முடிவினால் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனாலும் குறையுற்ற தரப்பினர் எவரும், மேலாண்மைக் குழுவிற்கு மேல்முறையீடு செய்யலாம். அத்தகைய மேல்முறையீட்டில் அதன் முடிவே அறுதியானதாகும்.

(3) திட்டமிடும் குழுவின் மேலாண்மைக் குழுவால் செய்யப்பட்ட பூசலுக்குரிய அல்லது கருத்து வேறுபாட்டிற்கான முடிவினால் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனாலும் குறையுற்ற தரப்பினர் எவரும், உச்சநிலைக் குழுவிற்கு மேல்முறையீடு அத்தகைய மேல்முறையீட்டில் அறுதியானதாகும். செய்யலாம். அதன் முடிவே

(4) உட்பிரிவுகளில் (1) அல்லது (2) அல்லது (3)இல் எதன்படியும் மேல்முறையீடு எதுவும், அந்த முடிவு அல்லது ஆணை குறையுற்ற தரப்பினருக்குத் தெரிவிக்கப்பட்ட பதினைந்து நாட்களுக்குள் தாக்கல் செய்யப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின்படி தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடு ஒவ்வொன்றும், அது தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

அத்தியாயம் VII

பல்வகை

38. பதிவுருக்கள்: (1) குடியானவர்கள் சங்கம் ஒவ்வொன்றும், பின்வரும் கணக்குகள், பதிவுருக்கள், ஆவணங்களைத் தன் அலுவலகத்தில் பேணிவருதல் வேண்டும், அதாவது

(a) நாளது தேதி வரையிலான இச்சட்டத்தின் நகல்;

(b) குடியானவர்கள் சங்கம் செயற்படும் பரப்பளவின் வரைபடமும் அத்துடன் நீர்வள ஆதார அமைப்புடன் கலந்தாலோசித்துத் தயாரிக்கப்பட்ட அமைப்பின் வரைபடமும், நீர்ப்பங்கீட்டுப் பரப்பளவின் அமைப்புப் பற்றிய வரைபடமும்;

(c) சொத்திருப்புகள் மற்றும் கடப்பாடுகளின் விவர உரை;

(d) குறிப்புப் புத்தகம்;

(e) வரவு செலவுக் கணக்குக்காட்டும் கணக்குப் புத்தகங்கள்;

(f) குடியானவர்கள் சங்கத்தால் கொள்முதல் செய்யப்பட்ட மற்றும் விற்கப்பட்ட சரக்குகளின் கணக்குப் புத்தகங்கள்;

(g) அளவுப் பதிவேடுகள், நில அளவைப் புத்தகங்கள், பணிப்புரைகளும் அவை போன்ற பிறவும்;

(h) தணிக்கை அறிக்கைகள் மற்றும் விசாரணை அறிக்கைகளின் நகல்கள்;

(i) அவ்வப்போது வகுத்துரைக்கப்படும் வேறு கணக்குகள், பதிவுருக்கள், ஆவணங்கள் ஆகியவை.

(2) குடியானவர்கள் சங்க உறுப்பினர்களின் தகவலுக்காகக் கணக்குப் புத்தகங்களும் பதிவுருக்களும் திறந்து வைக்கப்படுதல் வேண்டும்.

39. குடியானவர்கள் சங்கத்திற்குக் கொடுக்கப்பட நிலவருவாய் நிலுவையைப் வேண்டிய பணத்தை போன்றே வசூலித்தல்: இச்சட்டத்தின்படி அப்போதைக்கு நடைமுறையிலுள்ள எதன்படியும் எடுக்கப்பட்டு எடுக்கப்படக்கூடிய பிற அல்லது வேறு சட்டம் அல்லது வருகின்ற நிலுவை வசூல்முறைக்கு சங்கத்திற்குக் பாதகம் இல்லாமல், குடியானவர்கள் கொடுக்கப்பட வேண்டிய பணம் எதுவும் நிலவருவாய் நிலுவையைப் போன்றே வசூலிக்கப்படலாம். அவ்வாறு வசூலிக்கும் நோக்கத்திற்காகத் தகுதிவாய்ந்த அதிகாரி 1864 ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வசூலிக்கும் சட்டம் II/1864) சட்டத்தின்படி (தமிழ்நாடு ஆட்சியரின் அதிகாரங்களைக் கொண்டிருப்பார்)

40. கூட்டங்கள்: குடியானவர்கள் சங்கம் மற்றும் மேலாண்மைக் குழுவின் கூட்டம், அதன் நடைமுறை, கூட்டக் கால இடைவெளிகள், அதன் தலைமை, அதன் குறைவெண் வரம்பு ஆகியவை வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

41. ஆணையரின் நியமனம்: (1) அரசு, இந்தச் சட்டத்தின்படியான அல்லது அதனையொட்டி அலுவல்களை செய்யப்பட்ட விதிகளின் படியான நிறைவேற்றுகையில் தகுதி வாய்ந்த அதிகாரி

மற்றும் ஆட்சியர்களின் மீது பொதுக் கட்டுப்பாடும் மேற்பார்வையும் செய்யுமாறு ஆணையர் ஒருவரை நியமிக்கலாம்;

(2) ஆணையரால் செலுத்தப்படும் அதிகாரங்களும் நிறைவேற்றப்படும் அலுவல்களும் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

42. ஏற்கனவே அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட குடியானவர்கள் சங்கங்களை இணைத்தலும் இடைக்கால மாற்று ஏற்பாடுகளும்: (1) இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு, பங்கேற்பு நீர்ப்பாசன மேலாண்மையின் மற்றும் அலுவல்களை ஆற்றி வரும் பிரிவு 3இன்படி நீர் பயன்பாட்டாளர்கள் சங்கத்தின் பரப்பிடம் எதிலும் பரப்பிடம் என்று விளம்பப்படும் செயற்படும் நோக்கத்திற்காக, அந்தப் பரப்பிடத்தில் பிரிவு நீர் பயன்பாட்டாளர்கள் 5க்கு இணங்க மேலாண்மைக் குழு அமைக்கப்பட்ட சங்க உடனேயே 1975ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்களைப் பதிவு செய்தல் ஏற்கனவே அமைக்கப்பட்டுப் பதிவு சட்டத்தின்படி செய்யப்பட்ட குடியானவர்கள் சங்கம் எதுவும், அற்றுபோதல் வேண்டும்.

வரம்புரை: இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு, நீர்வள ஆதார அமைப்பின் அதிகாரி எவருடனும் குடியானவர்கள் சங்கம் எதுவும் செய்து கொண்டிருக்கிறபோது இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து இந்தச் சட்டத்திற்கு இணங்க, நீர் பயன்பாட்டாளர்கள் சங்கத்தின் மேலாண்மைக்குழு அமைத்துருவாக்கப்படும் வரையில் அந்தந்தப் பரப்பிடங்களில் நீர் பயன்பாட்டாளர்கள் சங்கத்தின் அதிகாரங்களையும் அலுவல்களையும் தொடர்ந்து செலுத்துதலும் ஆற்றுதலும் வேண்டும்.

(2) அரசு, அறிவிக்கை வாயிலாகக் குடியானவர்கள் சங்கம் மேலாண்மைக் குழு முறையாக அமைக்கப்பட்டு அல்லது மறு அமைப்புச் செய்யப்பட்டு, இச்சட்டத்தின் வகைமுறைகளின்படி மேலாண்மைக்குழு பதவி ஏற்கும் வரையில், அந்தக் குடியானவர்கள் சங்கத்தின் மற்றும் மேலாண்மைக்குழுவின் அதிகாரங்களைச் செலுத்தியும், அலுவல்களை ஆற்றியும் வருவதற்காக நீர்வள ஆதார அமைப்பிலிருந்து அதிகாரிகளை நியமிக்கலாம்.

43. குடியானவர்கள் சங்கத்தின் ஆணைகளுக்கும் சான்று அளித்தல்:– ஆவணங்களுக்கும் உறுதிச் குடியானவர்கள் சங்கத்தின் அனைத்து ஆணைகள், முடிவுகள், அறிவிப்புகள் மற்றும் வேறு ஆவணங்களும் அத்தகைய குடியானவர்கள் சங்கத்தின் தலைவரால் அல்லது குழுத்தலைவரால் அல்லது இதன்பொருட்டு அத்தகைய மேலாண்மைக்குழுவால் உறுதிபடுத்தி அதிகாரமளிக்கப் எழுத்துவடிவில் படக்கூடிய மேலாண்மைக் குழுவின் வேறு உறுப்பினர் எவராலும் கையொப்பமிட்டு உறுதிச் சான்றளிக்கப்படுதல் வேண்டும்.

44. நல்லெண்ணத்தில் நடவடிக்கைக்குப் பாதுகாப்பு: இந்தச் எடுக்கப்பட்ட சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதன்படியும் நல்லெண்ணத்தில் செய்யப்பட்டுள்ள அல்லது செய்யக் கருதப்பட்டுள்ள செயல் எதற்காகவும், நபர் எவருக்கும் எதிராக, உரிமையியல் வழக்கோ, குற்றவியல் வழக்கோ அல்லது சட்ட நடவடிக்கை எதுவுமோ வேறு தொடுக்கப்படுதல் கூடாது.

45. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்: இச்சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் அரசு தமிழ்நாடு இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசிதழில் வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக, அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதாகவோ உகந்ததாகவோ தமக்குத் தோன்றுகிற இச்சட்டத்திற்கு முரணாக இல்லாத வகைமுறைகளைச் செய்யலாம்:

வரம்புரையாக: இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து பிறகு இரண்டாண்டுக் காலஅளவு முடிவடைந்த பிறகு அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

46. ஆணைகளைப் பிறப்பிப்பதற்கான அரசின் அதிகாரம்: (1) அரசு பொதுநலனைக் கருதி ஆணை வாயிலாக, அந்த ஆணையில் குறித்துரைக்கப்பட்ட நிகழ்வு எதிலும், தகுதிவாய்ந்த அதிகாரிக்கு இச்சட்டத்தின்படி விசாரணை ஒன்றைச் செய்யும்படியோ அல்லது உ நடவடிக்கை எடுக்கும்படியோ உத்தரவிடலாம். அந்த தகுதி வாய்ந்த அதிகாரி, அவ்வாறு செய்த விசாரணை அல்லது எடுத்த நடவடிக்கைகளின் விளைவு குறித்து வகுத்துரைக்கப்படும் காலஅளவிற்குள் அரசுக்கு அறிக்கை அனுப்புதல் வேண்டும்.

(2) அரசானது, தகுதிவாய்ந்த உடைய அரசுக்கு அதிகாரியின் அல்லது குடியானவர்களின் சங்கத்தின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் தொடர்பான விவரம் எதனையும் பொறுத்த அளவில், தாம் தேவை எனக் கருதும், பொதுத்தன்மை ஆணைகளையும் பணிப்புரைகளையும் பிறப்பிக்கலாம்; நு அதன் பேரில் தகுதிவாய்ந்த அதிகாரியோ அல்லது குடியானவர்கள் சங்கமோ அத்தகைய ஆணைகளுக்கும் பணிப்புரைகளுக்கும் செயல்விளைவு அளித்தல் வேண்டும்.

47. ஆணையரால் செய்யப்படும் மேலாய்வு : ஆணையர், தாமாகவோ அல்லது விண்ணப்பத்தின் பேரிலோ, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட முடிவு, ஆணை அல்லது வேறு நடவடிக்கைகளைப் பொறுத்த, முடிவு அல்லது ஆணை எதனின் தகுதி, சட்ட முறைமை அல்லது பொருத்தம் உடைமை குறித்து, தாம் தெளிவுறக் காண்பதற்காகக் குடியானவர் சங்கத்தின் மேலாண்மைக்கு அல்லது உச்சநிலைக்குழு எதனின் பதிவுருக்களைத் தருவித்துப் பரிசீலனை செய்யலாம். அத்தகைய முடிவு, ஆணை அல்லது நடவடிக்கைகள் மாற்றம் செய்யப்பட வேண்டும், நீக்கம் செய்யப்பட வேண்டும் அல்லது எதிர்மாறாக்கப்பட வேண்டும் அல்லது மறுபரிசீலனைக்காகத் திருப்பி அனுப்பப்படுதல் வேண்டும் என்று ஆணையருக்குத் தோன்றினால் அவர் அதற்கு உரிய ஆணைகளைப் பிறப்பிக்கலாம்:

வரம்புரை: ஆணையர், பாதிக்கப்படக்கூடிய நபருக்குத் தம் தரப்பினை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பு ஒன்றினை வழங்கினாலன்றி நபர் எவருக்கும் எதிராகப் பாதகமான ஆணை எதனையும் பிறப்பித்தல் கூடாது.

48. மற்றச் சட்டங்களின் செயற்பாடு பாதிக்கப்படுதல் கூடாது: இச்சட்டத்தின் வகைமுறைகள் அப்போதைக்கு நடைமுறையில் இருந்து வருகின்ற வேறு சட்டங்கள் எதற்கும் கூடுதலாக இருத்தல் வேண்டுமேயன்றி அவற்றுக்குப் பாதகமாக இருத்தல் கூடாது.

49. காப்புரை: இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், நடைமுறையிலுள்ள சட்டம் எதன்படியும், சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம், பேருராட்சி, நகராட்சி அல்லது மாநகராட்சி எதனின் உரிமைகளையும் அவற்றில் ஒப்படைக்கப்பட்டுள்ள சொத்துக்களையும் பாதிக்கக் கூடாது.

50. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்: (1) அரசு, இந்தச்சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றில் எதையுமோ நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி அல்லது ஆணை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, விரைவில் சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுதல் வேண்டும். அது அவ்வாறு வைக்கப்பட்ட அக்கூட்டத்தொடர் முடிவடையும் முன்னரோ அல்லது அதற்கு அடுத்த கூட்டத்தொடரிலோ சட்டமன்றப் பேரவை, அந்த விதி அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதையும் செய்யுமானால் அல்லது சட்டமன்றப் பேரவை, அவ்வாறு அவ்விதி அல்லது ஆணை செய்யப்படுதல் கூடாது என முடிவு செய்யுமானால், அதன் பின்பு, அந்த விதி அல்லது ஆணை அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நடைமுறைக்கே வராது போதல் வேண்டும். எனினும் அத்தகைய மாறுதல் அல்லது நீக்கம் எதுவும், அந்த விதி அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்டுள்ள எதனுடைய செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

நன்றி : தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை

13வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு மற்றும் உலகளாவிய பொருளாதார உச்சி மாநாடு-2026, மொரீசியஸ்

மாநாட்டு செய்திக் குறிப்பு

13வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு மற்றும் உலகளாவிய பொருளாதார உச்சி மாநாடு 2026 மொரீஷியஸில் வெற்றிகரமாக நிறைவு.

13வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு மற்றும் உலகளாவிய பொருளாதார உச்சி மாநாடு 2026, 11 முதல் 13 செப்டம்பர் 2026 வரை மொரீஷியஸில் உள்ள அட்டல் பிகாரி வாஜ்பாய் நிறுவன அரங்கில் வெற்றிகரமாக நடைபெற்றது. மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த உச்சி மாநாடு, சென்னை. சென்னை வளர்ச்சிக் கழகம் மற்றும் உலகத் தமிழர் பொருளாதார கழகம் ஆகியவற்றுடன் மொரீஷியஸின் இந்தியன் பிசினஸ் கவுன்சில் உடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தியா, மொரீஷியஸ், ஆப்பிரிக்கா மற்றும் விரிவான இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்கிடையேயான பொருளாதார ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாட அமைச்சர்கள், தூதர்கள், தொழில்துறை தலைவர்கள், கல்வியாளர்கள் மற்றும் உலகத் தமிழர் புலம்பெயர் சமூகத்தின் பிரதிநிதிகள் ஒன்று கூடினர்.

தொடக்க விழா

2026 செப்டம்பர் 11 வெள்ளிக்கிழமை மாலை, பிரதிநிதிகளின் பதிவு மற்றும் அன்பான வரவேற்பு நிகழ்ச்சியைத் தொடர்ந்து மாநாடு தொடங்கியது. மொரீஷியஸ் குடியரசின் மாண்புமிகு துணைக் குடியரசுத் தலைவர் **மேதகு திரு.ஜீன் யுவன் ராடர்ட் ஹங்கிலி, G.O.S.K.,** உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள், முக்கிய பிரமுகர்கள், முன்னணி தொழிலதிபர்கள் மற்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பிரதிநிதிகள் தொடக்க நிகழ்வைச் சிறப்பித்தனர்.

13வது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டின் தலைவர் மற்றும் சென்னை வளர்ச்சிக் கழகம் மற்றும் உலகத் தமிழர் பொருளாதார கழகம் ஆகியவற்றின் தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத், மாண்புமிகு துணைக் குடியரசுத் தலைவரையும் சிறப்பு விருந்தினர்களையும் அன்புடன் வரவேற்று, மாநாட்டின் மையக் கருப்பொருளை அறிமுகப்படுத்தினார். மேலும் சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பு, நிலையான வளர்ச்சி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளமை ஆகியவற்றை வளர்ப்பதற்கான மாநாட்டின் நோக்கத்தையும் விளக்கினார்.

உலகளாவிய உரையாடல், கூட்டாண்மை மற்றும் அறிவுப் பரிமாற்றத்திற்கான சிறப்புத் தளமாக விளங்கிய இம்மாநாட்டில் இந்தியா, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், தென்னாப்பிரிக்கா, மொரீஷியஸ், சிங்கப்பூர், மலேசியா, ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன் மற்றும் பல நாடுகளைச் சேர்ந்த 250-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அரசியல் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள், தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள், தொழில்முறை நிபுணர்கள் மற்றும் உலகத் தமிழர் புலம்பெயர் சமூக உறுப்பினர்களின் பல்வகை பிரதிநிதித்துவம், மாநாட்டின் சர்வதேச முக்கியத்துவத்தையும் எல்லை தாண்டிய பொருளாதாரக் கூட்டணிகளை உருவாக்கும் அதன் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தியது. இக்கூட்டம் பயனுள்ள கலந்துரையாடல்களை முன்னெடுத்தல், உருவெடுத்து வரும் முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காணுதல் மற்றும் இந்தியா, மொரீஷியஸ், ஆப்பிரிக்கா மற்றும் உலகளாவிய சமூகத்திற்கிடையே நீடித்த பொருளாதார ஒத்துழைப்பிற்கான அடித்தளத்தை வலுப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது.

தொடக்க நிகழ்வின் சிறப்பு விருந்தினர்கள் மற்றும் உரைகள்

தொடக்க விழாவிற்கு மொரீஷியஸ் குடியரசின் துணைக் குடியரசுத் தலைவர் **மேதகு திரு.ஜீன் யுவன் ராடர்ட் ஹங்கிலி, G.O.S.K.,** தலைமை தாங்கி முறைப்படி தொடங்கி வைத்தார். பின்னர் மொரீஷியஸிற்கான இந்திய உயர் ஆணையர் **வணக்கத்திற்குரிய திரு.அனுராக் வத்சவா, IFS,** மற்றும் தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, தகவல் மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் **மாண்புமிகு ஆ. ராஜ்மோகன்** ஆகியோர் உரையாற்றினர்.

டாக்டர் பரமசிவம் பிள்ளை வையாபுரி (மொரீஷியஸ் குடியரசின் முன்னாள் துணைக் குடியரசுத் தலைவர்), **டாக்டர் தர்மராஜன் ராமலிங்கம்** (மொரீஷியஸ் இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர்), **டாக்டர் ராஜன் நரசிங்கன்** (வெளியுறவு, பிராந்திய ஒருங்கிணைப்பு மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சகத்தின் இளநிலை அமைச்சர்), **திரு.கோவிந்த கின்னஸ்** (மொரீஷியஸ் தேசிய உள்கட்டமைப்புத் துறை அமைச்சர்), **திரு.லட்சுமணய்யா பென்டய்யா** (பொது சேவை மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்), **திரு.மகேந்திர கொண்டைய்யா, ஓஎஸ்கே.** (கலை மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சர்), **திரு.தனேஷ்வர் தம்ரி** (மொரீஷியஸ் நிதித் துறையின் இளநிலை அமைச்சர்), மற்றும் தமிழ்நாடு அரசின் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் **திரு.எம்.ஏ. சித்திக்,** IAS ஆகியோர் சிறப்பு கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

மொரீஷியஸ் நாடாளுமன்ற உறுப்பினர் **திரு.கோவிந்தன் பைனிவேல் வேங்கடசாமி** மற்றும் தமிழ்நாட்டின் சிதம்பரம் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டமன்ற உறுப்பினர் திரு.தமீம் அன்சாரி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர். அவர்களின் சிறப்பான பங்கேற்பை கௌரவிக்கும் வகையில், மொரீஷியஸ் குடியரசின் துணைக் குடியரசுத் தலைவர் திரு.ஜீன் யுவன் ராடர்ட் ஹங்கிலி, G.O.S.K., அவர்கள் இருவரையும் கௌரவித்தார்.

மொரீஷியஸ் நிதித்துறையின் இளநிலை அமைச்சர் திரு. தனேஷ்வர் தம்ரி, மொரீஷியஸில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் பல்வேறு வணிக வாய்ப்புகளை எடுத்துரைக்கும் வகையில் பயனுள்ள மற்றும் தாக்கமிக்க உரையை வழங்கினார். நாட்டின் பொருளாதாரச் சூழல், முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் சர்வதேச வணிக ஒத்துழைப்பிற்கான வழிகள் குறித்து அவரது உரை மதிப்புமிக்க பார்வைகளை வழங்கியது. பல்வேறு நாடுகளிலிருந்து வந்த பார்வையாளர்கள் மற்றும் பிரதிநிதிகளால் உரை பெரிதும் பாராட்டப்பட்டது.

மொரீஷியஸின் டெய்லமாய் நிர்வாக இயக்குநரும் வரவேற்புக் குழுத் தலைவருமான **திரு.ஜென்சன் டெய்லமாய்** நன்றியுரை வழங்கி, சிறப்பு விருந்தினர்கள், பிரதிநிதிகள் மற்றும் கௌரவ விருந்தினர்களின் மதிப்புமிக்க பங்கேற்புக்கு நன்றி தெரிவித்தார். மாலை நேரம் சிறப்பான கலாச்சார நிகழ்ச்சியுடனும், டெய்லமாய் குழுமம் வழங்கிய இரவு விருந்துடனும் நிறைவடைந்தது.

மாநாட்டு அமர்வுகள்

அடுத்த இரண்டு நாட்களில், இந்தியா, மொரீஷியஸ், ஆப்பிரிக்கா மற்றும் உலகத் தமிழர் சமூகத்திற்கிடையேயான பொருளாதார ஒத்துழைப்பின் பல்வேறு பரிமாணங்களை ஆராயும் 13 கருப்பொருள் அமர்வுகள் நடைபெற்றன.

செப்டம்பர் 12 சனிக்கிழமை, உலகப் பொருளாதார நிலை மற்றும் அதில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்கள்; உலகளாவிய வணிக மையமாகவும் ஆப்பிரிக்கா மற்றும் இந்தியப் பெருங்கடலுக்கான நுழைவாயிலாகவும் மொரீஷியஸின் நிலை; பொருளாதார வளர்ச்சிக்கான சுகாதாரத் திட்டங்கள் மற்றும் மருத்துவ நலன்; சர்வதேச வர்த்தகத்தை நிர்வகிக்கும் சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள்; இந்தியா, மொரீஷியஸ் மற்றும் ஆப்பிரிக்காவிற் கிடையேயான வர்த்தகத்தை ஊக்குவிப்பதில் நிதி நிறுவனங்களின் பங்கு; கணக்கியல் நடைமுறைகள், மேலாண்மைத் திறன்கள் மற்றும் இடர் மதிப்பீடு ஆகியவை குறித்து பிரதிநிதிகள் கலந்துரையாடினர். தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் பிற இந்திய மாநிலங்களில் முதலீடு மற்றும் வணிக வாய்ப்புகள் குறித்த அமர்வுடன் அன்றைய நாள் நிறைவடைந்தது.

தமிழ்நாடு அரசின் பங்கேற்பு

தமிழ்நாடு அரசின் முக்கிய பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றது முதலீடு, வர்த்தகம் மற்றும் வணிக ஒத்துழைப்புக்கான கவனத்தை மேலும் வலுப்படுத்தியது.

முதலீடு மற்றும் வணிக வாய்ப்புகள் குறித்த சிறப்பு அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டு, முதலீடு, தொழில் கூட்டாண்மை மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான சாத்தியமான வழிகளை ஆராய்வதற்கான தளமாக அமைந்தது. Guidance Tamil Nadu நிறுவனத்தின் Investment Strategist மற்றும் BFSI தலைவரான திரு. விக்னேஷ், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் Life Sciences, Export & BIU தலைவரான **திரு.காட்சன்,** தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, தகவல் மற்றும் விளம்பரத் துறை **மாண்புமிகு அமைச்சர் திரு.ஆ.ராஜ்மோகன்** மற்றும் விஜடி பல்கலைக்கழக வேந்தர் **டாக்டர் ஜி.விஸ்வநாதன்** ஆகியோர் இவ்வமர்வில் கலந்து கொண்டனர். அவர்களின் பங்கேற்பு கலந்துரையாடல்களுக்கு குறிப்பிடத்தக்க மதிப்பைச் சேர்த்ததுடன், தமிழ்நாடு மற்றும் உலகத் தமிழர் சமூகத்திற்கிடையேயான வணிக மற்றும் முதலீட்டு இணைப்புகளை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் எடுத்துக்காட்டியது.

செப்டம்பர் 13 ஞாயிற்றுக்கிழமை, MSME, ரியல் எஸ்டேட், வர்த்தகம் மற்றும் சேவைத் துறைகளில் உள்ள வாய்ப்புகள்; உருவெடுத்து வரும் வணிக வாய்ப்புகள், தொடக்க நிறுவனங்கள் மற்றும் புதுமைத் திட்டங்கள்; உயர்கல்வி, தொழில்முறைப் பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு வாய்ப்புகள்; கல்வி, தொழில்முனைவு மற்றும் வேலைவாய்ப்பு மூலம் பெண்கள் முன்னேற்றம்; தகவல் தொழில்நுட்பம், தகவல் தொடர்பு மற்றும் செயற்கை நுண்ணறிவில் உள்ள வாய்ப்புகள்; தமிழ் மொழி, வலையமைப்பு மற்றும் சமூக மேம்பாட்டின் மூலம் வணிகத் தொடர்புகள் ஆகியவை குறித்து அமர்வுகள் நடைபெற்றன. ஒவ்வொரு அமர்விற்கும் இந்தியா, மொரீஷியஸ், ஆப்பிரிக்கா, வளைகுடா, தென்கிழக்காசியா மற்றும் பிற பகுதிகளைச் சேர்ந்த அமைச்சர்கள், தூதர்கள், மூத்த அதிகாரிகள் மற்றும் தொழில்துறை தலைவர்கள் தலைமை தாங்கி உரையாற்றினர்.

விருதுகள் மற்றும் நிறைவு விழா

செப்டம்பர் 13 ஞாயிற்றுக்கிழமை மாலை, விருதுகள் மற்றும் நிறைவு விழாவுடன் உச்சி மாநாடு நிறைவடைந்தது. **டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத்** வரவேற்புரையாற்றி, மாநாட்டு அறிக்கையை சமர்ப்பித்து விருது பெற்றவர்களை அறிவித்தார். மொரீஷியஸ் குடியரசின் தலைவர் **மேதகு திரு. தரம்பீர் கோகுல்,G.C.S.K.,** தலைமையில் விருதுகள் வழங்கப்பட்டதுடன், அவர் நிறைவு உரையும் நிகழ்த்தினார். **டாக்டர் பரமசிவம் பிள்ளை வையாபுரி** (மொரீஷியஸ் முன்னாள் துணைக் குடியரசுத் தலைவர்), **டாக்டர் ராஜன் நரசிங்கன்** (வெளியுறவு, பிராந்திய ஒருங்கிணைப்பு மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சகத்தின் இளநிலை அமைச்சர்), தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, தகவல் மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் **மாண்புமிகு ஆ. ராஜ்மோகன்** மற்றும் விஜடி பல்கலைக்கழக வேந்தர் **டாக்டர் ஜி.விஸ்வநாதன்** ஆகியோர் சிறப்பு கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

மாநாடு மூன்று பிரிவுகளில் அங்கீகாரங்களை வழங்கியது – ''**உலகத் தமிழ் மாமணி விருது**'' (Crown Jewels of World Tamils), நிறுவன விருது மற்றும் தனிநபர் விருது – உலகத் தமிழர் சமூகத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களித்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களைக் கௌரவிக்கும் வகையில் இவ்விருதுகள் வழங்கப்பட்டன.

நன்றியுரை மற்றும் நிறைவு

மாநாட்டின் வெற்றிக்கு முக்கிய பங்களிப்பை வழங்கிய சிறப்பு விருந்தினர்கள், சிறப்புமிக்க பேச்சாளர்கள், பிரதிநிதிகள், தொழில்துறை தலைவர்கள் மற்றும் விருந்தினர்களின் பங்கேற்புக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார். **இந்திய வணிக கவுன்சில், மொரீசியஸ்** தலைவர் **திரு.ஜெயசங்கர் சேஷாத்ரி** நன்றியுரை வழங்கி, தமது நிறைவுரையில், **திரு.ஜெயசங்கர் சேஷாத்ரி** அனைத்து பங்கேற்பாளர்களின் ஆர்வமிக்க ஈடுபாட்டிற்கும் நன்றி தெரிவித்ததுடன், மொரீஷியஸ், இந்தியா மற்றும் விரிவான சர்வதேச சமூகத்திற்கிடையே வலுவான வணிகத் தொடர்புகள், முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் நீடித்த பொருளாதாரக் கூட்டாண்மைகளை எளிதாக்குவதில் **இந்திய வணிக கவுன்சில், மொரீசியஸின்** உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார். அவரது நன்றியுரை அதிகாரப்பூர்வ நிகழ்வுகளை இனிதே நிறைவு செய்ததுடன், தொடர்ந்து நடைபெற்ற கலாச்சார நிகழ்ச்சி மற்றும் பிரியாவிடை இரவு விருந்திற்கான வழியை அமைத்தது. ●

சென்னை உயர்நீதிமன்றத்தில் முதன்மை மொழி தமிழ், பேரவையில் தீர்மானம் நிறைவேற்றம்

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை முதன்மையான நீதிமன்ற மொழியாக அங்கீகரிக்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றத்தில் வழங்கப்படும் தீர்ப்புரைகள், தீர்ப்பாணைகள் மற்றும் நீதிமன்ற உத்தரவுகள் அனைத்தும் தமிழில் வழங்கும் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்றும் பேரவையில் முதல்வர் விஜய் கொண்டு வந்த தனித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பேரவையில் அரசின் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து முதல்வர் விஜய் பேசியதாவது, தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டம் 1956-இன் பிரிவு 2-இல் தமிழ்நாட்டின் ஆட்சி மொழியாக தமிழ் இருக்க வேண்டும் என்று அறிவிக்கிறது. மேற்சொன்ன சட்டத்தில் பிரிவு 4-இல் குறிப்பிட்ட ஆட்சிப் பணிக்குத் தமிழைப் பயன்படுத்த அரசு அறிவிக்கை மூலம் உத்தரவிடலாம் என்ற அதிகாரம் வழங்குகிறது. அதில் குறிப்பாக, மேற்படி சட்டத்துக்கு 1976ஆம் ஆண்டு செய்யப்பட்ட திருத்தங்களின் மூலம் உயர்நீதிமன்றத்தின் கீழ் செயல்படும் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள், வாடகை நீதிமன்றங்கள் மற்றும் வருவாய் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் அனைத்து வழக்குகளிலும் சாட்சியங்களைப் பதிவு செய்வதற்கு தீர்ப்புரை, தீர்ப்பாணை மற்றும் உத்தரவுகளைத் தமிழிலேயே எழுதுவதற்கும் சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. காலத்தின் கட்டாயம் தமிழ்நாட்டில் மாவட்ட நீதிமன்றங்களில் தமிழ் ஏற்கனவே சட்டரீதியான நீதிமன்ற மொழியாக உள்ள நிலையில், அந்த நீதித் துறை அமைப்பின் மாநிலத்தில் உச்சநிலையில் உள்ள சென்னை உயர்நீதிமன்றத்திலும் தமிழை முதன்மை மொழியாக அங்கீகரிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டம் 348(1)-இன்படி, தற்போது இந்திய உச்சநீதிமன்றம் மற்றும் அனைத்து உயர்நீதிமன்றங்களில் நடவடிக்கைகள் அனைத்தும் ஆங்கிலம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதே சட்டம் 348-இன் உள்பிரிவு 2-இல் ஒரு மாநில ஆளுநர் குடியரசுத் தலைவரின் முன் ஒப்புதலுடன் அந்த மாநிலத்தின் ஆட்சி மொழியை அந்த மாநில உயர்நீதிமன்ற நடவடிக்கைகளின் பயன்படுத்துவதற்கு அதிகாரம் வழங்க முடியும் என்று தெரிவிக்கிறது. மேலும் ஆட்சி மொழிகள் சட்டம் 1963-இன் பிரிவு 7-இல் மாநிலத்தின் ஆளுநர் குடியரசுத் தலைவர் முன் ஒப்புதலுடன் அந்த மாநில ஆட்சி மொழியை ஆங்கிலத்துடன் கூடுதலாக உயர்நீதிமன்றத் தீர்ப்புரைகள், தீர்ப்பாணைகள், உத்தரவுகள் ஆகியவற்றில் பயன்படுத்துவதற்கு அதிகாரம் வழங்க வழிவகை செய்கிறது. அந்த மொழியில் வழங்கப்படும் தீர்ப்புடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. சமமான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் மொழியை முதன்மை மொழியாகவும் ஆங்கிலத்துக்கு வழங்கப்பட வேண்டும். இந்தக் கோரிக்கையை முன்னிறுத்தி கடந்த 6.12.2006-இல் தமிழ்நாடு பேரவை சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழைப் பயன்படுத்த வேண்டும் என்று ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது. அந்தத் தீர்மானம் அரசமைப்புச் சட்ட நடைமுறையின் அடிப்படையில் மத்திய அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது.

அன்றைய பேரவை விவாதங்களிலும் தமிழ் பயன்பாடு ஆங்கிலத்தை அகற்றும் நடவடிக்கை அல்ல, மாறாக ஆங்கிலத்துடன் கூடுதலாகத் தமிழைப் பயன்படுத்தும் நடவடிக்கை என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. ஆனால், பின்னர் 2012-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தின் முழு அமர்வு இந்த முன்மொழிவை ஏற்கவில்லை என்றும், அதன் காரணமாக மத்திய அரசு மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் 2018ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் மத்திய சட்ட அமைச்சகத்தால் தெரிவிக்கப்பட்டது. ஒரு கோரிக்கை ஒரு கட்டத்தில் நிராகரிக்கப்பட்டது என்பதால், அது என்றென்றும் முடிவுற்று விட்டது என்று பொருள் கொள்ள முடியாது. காலம் மாறுகிறது, தொழில்நுட்பம் மாறுகிறது. நீதித் துறையில் மொழி பெயர்ப்பு வசதிகள் வளர்ந்துள்ளன. தமிழில் சட்டக் கல்வி, சட்ட நூல்கள், சட்ட அகராதிகள், தீர்ப்புகளின் மொழி பெயர்ப்புகள் ஆகியவை பெருமளவில் வளர்ந்துள்ளன. எனவே, 2006-ஆம் ஆண்டு இருந்த சூழ்நிலையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, இன்றைய சூழ்நிலையை மதிப்பிடாமல் தற்போதைய வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகத் திறன்களைக் கருத்தில் கொண்டு, இந்த விவகாரத்தை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

நீதி தேவதையின் கரம் வலுப்பெறும் சாதாரண குடிமக்கள் தனது வாழ்க்கை, நிலம், குடும்பம், சொத்து, வேலை, உரிமை ஆகியவை தொடர்புடைய வழக்கு நீதிமன்றத்தில் நடக்கும்போது, என்ன நடக்கிறது என்பதைத் தனது தாய் மொழியில் புரிந்து கொள்ள முடிந்தால் நீதி பெறுவதும் வழங்குவதும் வலுப்பெறும், நீதி பரிபாலனத்தில் மக்களும் தம் தாய்மொழியில் பங்கெடுப்பதால், நீதி தேவதையின் கரம் வலுப்பெறும். எனவே, நீதியின் மொழி மக்களுக்கு உரிய மொழியாக இருப்பது ஜனநாயகத்தின் அடிப்படை நோக்கம், தமிழ்நாட்டில் மாவட்ட நீதிமன்றங்களில் தமிழ் பயன்படுத்தும்நிலையில், அதை சென்னை உயர்நீதிமன்றத்திலும் விரிவுபடுத்துவது ஒரு இயல்பான அடுத்த கட்டமாகும். தமிழ்மொழியை மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் முதன்மையான மொழியாக அங்கீகரிக்க வேண்டும். தமிழில் மனுக்கள், ஆவணங்கள் மற்றும் வாதங்களைச் சமர்ப்பிப்பதற்கு உரிய நடைமுறையை உருவாக்க வேண்டும். நீதிபதிகள், வழக்குரைஞர்கள் மற்றும் நீதிமன்றப் பணியாளர்களுக்கக்கான சட்டத் தமிழ் மற்றும் மொழி பெயர்ப்பு பயிற்சியை ஏற்படுத்த வேண்டும். அரசமைப்புச் சட்டம் 348 பிரிவு 2, ஆட்சி மொழிச் சட்டம் 1963 பிரிவு 7 ஆகியவற்றின் கீழ் மாநில ஆளுநரால் அனுப்பப்படும் முன் மொழிவுகளின் மீது தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும்.

இது எந்த மொழிக்கும் எதிரான கோரிக்கை அல்ல. இது இந்தியாவின் கோரிக்கையாகும். இது ஒரு குடிமகள்/குடிமகன் தனது மொழியில் நீதியை புரிந்து கொள்ளவும் அணுகவும், அனுபவிக்கவும் உரிமை பெற வேண்டும் என்ற ஜனநாயகக் கோரிக்கை. தமிழ்நாடு சட்டப் பேரவை ஒரு மனதாக இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை நிறைவேற்றி சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை முதன்மை மொழியாகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசும், குடியரசுத் தலைவரும் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

நன்றி: தினமணி 4.9.2026

THINK AHEAD. STAY AHEAD.

Bharath UNIVERSITY

30 YEARS OF EXCELLENCE

RATING AA+

பாரத் பல்கலைக்கழகம்



■ B.TECH

AERONAUTICAL ENGINEERING
AUTOMOBILE ENGINEERING
BIO-PROCESS ENGINEERING
BIO-INFORMATICS
BIO-MEDICAL ENGINEERING
CHEMICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
COMPUTER SOFTWARE ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
ELECTRONICS AND CONTROL ENGINEERING
ELECTRONICS AND INSTRUMENTATION ENGG.
ELECTRONICS AND TELECOM ENGINEERING
FOOD PROCESS ENGINEERING
GENETICS ENGINEERING
INDUSTRIAL BIO-TECHNOLOGY
INFORMATION TECHNOLOGY
INSTRUMENTATION AND CONTROL ENGG.
MECHATRONICS
NANO TECHNOLOGY
PRODUCTION TECHNOLOGY

■ B.ARCH

Eligibility : As per Council of Architecture norms

■ M.TECH

[For Program details, please visit: www.bharathuniv.ac.in]

EVENING PROGRAMME : B.TECH & M.TECH
MECHANICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING

B.TECH LATERAL ENTRY ALL PROGRAMME
Eligibility : Diploma / B.Sc.

M.S. BY RESEARCH AND Ph.D.
All Disciplines Full time and Part time

INTEGRATED PROGRAMME
B.TECH + MBA - 5 Years and B.TECH + M.TECH - 5 Years

■ MBA

[Full time and Part time]

■ MCA

■ HOTEL MANAGEMENT & CATERING

Courses : Diploma, B.Sc., & MBA

PLACEMENT 100%

1st among the participants from 125 Countries in International competition on Robotics

Job Placements : 100% with the highest salary package of ₹10 L P.A.

Collaborations with R&D Institutions and Industries like IBM, Nokia, CISCO, SAP, Etc.,

Internationally acclaimed curriculum in tune with global trends.

Scholarships worth ₹12.00 crores to the meritorius students

27 Centers of excellence to promote research and industry aided / driven projects

SCHOLARSHIP (TUITION FEES GRANT) ■ **100%**-State Toppers of all Boards ■ **50%**-School toppers, participated in National Level Sports Competition / Event ■ **30%**-Students having participated in State Level Sports Competition / Event ■ **35%**-Students securing 90% above Marks in the Board examinations ■ **25%**- "SARVA SIKSHA" Scheme I Scheduled Caste / Scheduled Tribe candidate I Parent being an Ex-servicemen I Physically Handicapped candidate I First Graduate candidate

HOW TO APPLY: Application forms can be obtained: In person or by sending a Demand Draft for ₹ 750/- drawn in favor of "Bharath University", payable at Chennai, to the Dean-Admission, Bharath University. ■ Application forms can also be downloaded from our website and filled in forms should be sent to the University address along with DD of ₹ 750/-. Eligibility : As per UGC/AICTE norms.

BHARATH UNIVERSITY, 173, Agharam Road, Selaiyur Tambaram, Chennai 600 073. **Ph 044-22290247**

Corp. Off: 1, First Main Road, Kasturibai Nagar, Adyar, Chennai 600 020. **Ph 044-42115251 / 91-98410 64199**

Apply online : www.bharathuniv.ac.in

ADMISSION HELPLINE
1800-419-1441

Check us out on YouTube www.youtube.com/thebharathuniversity

BY REGISTRAR

Posted at Egmore RMS. Partrika Channel Registered News Magazine Posted on 3rd to 9th of Oct. 2026
SATTAKADIR - Tamil Law Journal /Monthly Oct. 2026 / Publication First Week of Every month.
Registration of News Papers for India, Reg. No. 62767/92
Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No.TN/PMG/CCR/WPP 636/2024-2026



மொரீசியஸ் நாட்டில் நடைபெற்ற 13ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டினை மொரீஷியஸ் துணைக் குடியரசுத் தலைவர் **மேதகு திரு.ஜீன் யுவன் ராடர்ட் ஹங்கிலி,** G.O.S.K., தொடக்கி வைத்து சிறப்புரையாற்றினார். உடன் மொரீஷியஸிற்கான இந்திய தூதர் **மேதகு அனுராக் வத்சவா, IFS.,** மாநாட்டுத் தலைவர் **டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத்,** மேனாள் துணைக் குடியரசுத் தலைவர் **டாக்டர் பரமசிவம் பிள்ளை வையாபுரி,** தமிழ்நாடு அமைச்சர் **மாண்புமிகு ஆ. ராஜ்மோகன்,** மொரீஷியஸ் அமைச்சர்கள் **டாக்டர் தர்மராஜன் நாகலிங்கம், திரு.கோவிந்த கின்னஸ், திரு.லட்சுமணய்யா பென்டய்யா, திரு.மகேந்திர கொண்டைய்யா, ஓஎஸ்கே., திரு.தனேஷ்வர் தம்ரி. டாக்டர் ராஜன் நரசிங்கன்.**

On behalf of SATTAKADIR, Published at 3/2, Swathiram Towers, Jupiter Campus,
3, Durgabai Deshmukh Road, R.A. Puram, Chennai - 600 028. Printed by I. Stephen,
Printed at Canaan Press Pvt. Ltd., 62/1, Peters Road, Royapettah, Chennai - 600 014.
Editor : Dr. V.R.S. Sampath